# நான் ஏன் இந்து அல்ல



அடையாளம்

காஞ்சா அய்லய்யா

# நான் ஏன் இந்து அல்ல

இந்துத்துவா பற்றிய ஒரு சூத்திர விமர்சனம்:
தத்துவம், பண்பாடு மற்றும் அரசியற் பொருளாதாரம்

காஞ்சா அய்லய்யா

SEELAN BOOKS
SIGNATURE
NORWAY

தமிழில்
மு. தங்கவேலு
ராஜ முருகுபாண்டியன்

அடையாளம்

Price : I Rs. 75

**NAAN YEAN INDHU ALLA (Tamil)**

Why I am not a Hindu ❍ A Sudra Critique of Hindutva Philosophy, Culture and Political Economy ❍ Author : Kancha Ilaiah ❍ © Kancha Ilaiah ❍ Translated by : Mu. Thangavelu, Raja Murugupandian ❍ First Edition in Tamil : January 2001 ❍ Pages : 184 ❍ Typeset by : Safa Graphics, Madurai 20. Ph. : 0452 522743 ❍ Published by : ADAIYALAM, H 15/193, II Floor, Karupur Rd., Puthanatham 621 310. Ph. 04332 73444, e mail : adaiyalam@yahoo.com ❍ Sole Distributors in Sri Lanka : Moondravathu Manithan, 37/14, Vauxhall Lane, Colombo 2. Ph. 302759, email : thirdman@rediff.com ❍ Cover Photo & Design : Kanchanai Srinivasan ❍ Printed by : Multi Craft, Chennai 4.

ISBN 81 7720 002 X

SEELAN BOOKS
SIGNATURE
NORWAY

எமது தாய்
காஞ்சா கட்டம்மாவிற்கு

# அடையாளம்

இந்தியத் துணைக்கண்டத்தில் பிறந்த மூன்று முக்கிய பார்ப்பனரல்லாத சிந்தனையாளர்களான மகாத்மா ஜோதிபா பூலே, பெரியார் ஈ.வே.ரா, டாக்டர் அம்பேத்கர் ஆகியோர் பார்ப்பனீய இந்துமதத்தையும் வருணாசிரமத்தையும் கண்டித்து வந்துள்ளனர். பார்ப்பன வேதங்களையும், இலக்கியங்களையும் விமர்சித்து வந்துள்ளனர்.

'பிறக்கும்போது இந்துவாய்ப் பிறந்தேன். இறக்கும்போது இந்துவாய்ச் சாகமாட்டேன்' எனச் சொன்ன அம்பேத்கர் பெரும் மக்கள் திரளோடு இந்து மதத்தைத் துறந்து புத்தமதத்தைத் தழுவினார்.

தம்மை 'உயர்' சாதி என அறிவித்துக் கொள்ளும் ஒரு சிறுபான்மையினர் இதர பெரும்பான்மையினரைச் சாதீய வன்முறைக்கும் தீண்டாமைக் கொடுமைக்கும் ஆளாக்கி, அதனையொட்டிய தத்துவமாகவும் நிறுவனமாகவும் பார்ப்பனீயமும் இந்து மதமும் வரலாற்றில் தடம் பதித்ததே இதுபோன்ற கண்டனங்களுக்குக் காரணம்.

'இந்தியாவை இந்துமயமாக்குவோம்' என்கிற முழக்கத்தோடு இந்துத்துவம் இங்கே கடந்த பத்தாண்டு காலமாக அரசியல் ரீதியாகவும் பண்பாட்டு ரீதியாகவும் தன்னை முன்நிறுத்திக் கொண்டு வந்துள்ளது உலகறிந்த விடயம்.

இதற்கெதிராக அறிவுத் தளத்தில் மேற்கொள்ளப்படும் முயற்சிகளைப் பலவீனப்படுத்தும் வகையில் ஆதிக்க சாதி அறிவாளிகளின் ஒருங்கிணைவு ஒன்றையும் நாம் இங்கு காண இயலுகிறது.

இந்நிலையில் இந்துப் பண்பாட்டைத் தலித்மயமாக்குவது மட்டுமே இந்தியச் சமூகத்தைச் சனநாயகப்படுத்துவதற்கான ஒரே வழி என்கிற சிந்தனையை முன்வைக்கிறார், தலித்-பகுஜன் சிந்தனையாளர்களில் முதல்வராய்த் திகழ்கிற அறிஞர் காஞ்சா அய்லய்யா.

உலகப் புகழ்பெற்ற சிந்தனையாளரான பெர்ட்ரண்ட் ரஸ்ஸலின் 'நான் ஏன் கிறித்தவன் அல்ல' என்கிற நூலின் தமிழாக்கத்தை அன்று பெரியார் அவர்கள் வெளியிட்டார். இன்றைய சூழலுக்கு மிகவும் தேவையான அய்லய்யாவின் 'நான் ஏன் இந்து அல்ல' என்னும் இந்நூலை உங்கள் முன் வைப்பதில் மகிழ்ச்சியடைகிறோம்.

பார்ப்பனீயப் பண்பாட்டுக் கூறுகளையும் தலித்-பகுஜன் பண்பாட்டுக் கூறுகளையும் பல்வேறு கோணங்களில் ஒப்பிடும் அய்லய்யாவின் பார்வை தமிழுக்குப் புதிய வெளிச்சம் தருவன. அவர் எழுப்பியுள்ள கேள்விகட்கு இங்குள்ள வாசகர், சிந்தனையாளர் மற்றும் எழுத்தாளர்களிடமிருந்து விமர்சனங்களை எதிர்பார்க்கிறோம்.

○ முனைவர் காஞ்சா அய்லய்யா உஸ்மானியா பல்கலைக்கழகத்தில் அரசியல் அறிவியல் கற்பிக்கும் பேராசிரியர். நாற்பத்து எட்டு வயதாகும் இவர் ஆந்திரப் பிரதேச சிவில் உரிமைக் குழுவின் தலைவர். 'கௌதம புத்தரின் அரசியல் தத்துவம்' என்னும் ஆய்வுக்காக முனைவர் பட்டம் பெற்றவர். 'நலுப்பு' என்ற தலித் பகுஜன் இதழின் நிறுவனர். தலித் மக்களின் முன்னேற்றத்திற்காகச் செயலாற்றி வருபவர். ஆங்கிலத்தில் பல்வேறு ஆய்வுக் கட்டுரைகள் எழுதியுள்ளார். சமீபத்தில் எழுதிய Spiritual Fascism and Civil Society என்கிற கட்டுரை ஆந்திரத்தில் பெரும் சர்ச்சைக்குள்ளானது. *Why I am not a Hindu* என்கிற நூல் தவிர, *God as a Political Philosopher: Buddha's Challenge to Brahminism* என்கிற நூலும் 'சாம்யா'வின் வெளியீடாக விரைவில் வரவிருக்கிறது.

*Dr. Kancha Ilaiah, Reader in Political Science, University College for Women, Koti 500 195, Andhar Pradesh.*

○ இந்நூலை தமிழில் மொழிபெயர்த்த பேராசிரியர் மு. தங்கவேலு புதுக்கோட்டை ஆயிங்குடியில் பிறந்தவர். முப்பது ஆண்டுகாலம் ஆங்கில இலக்கியம் கற்பித்தவர். அம்பேத்கர், பெரியார் கருத்தியலில் ஈடுபாடும் செயலூக்கமும் மிக்கவர்.

○ பேராசிரியர் ராஜ முருகுபாண்டியன் நாகப்பட்டினம் வட்டம் கிராமத்துமேட்டில் பிறந்தவர். வணிகவியல் பேராசிரியரான இவர், தற்போது 'தலித் தொழில்முனைவோர் சமூகப் பொருளாதார நிலை' என்னும் தலைப்பில் முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர். கவிஞர், விமர்சகர். ஏழு நூல்கள் எழுதியுள்ளார். ஒடுக்கப்பட்ட மக்களின் இயக்கங்களோடு நெருங்கிய தொடர்புடையவர்.

○ பேராசிரியர் அ. மார்க்ஸ் தமிழ்ச் சூழலுக்கு இந்நூலை அறிமுகம் செய்வதுடன் இம்மொழிபெயர்ப்பை செம்மைப்படுத்த பெரிதும் உதவினார். ஒடுக்கப்பட்ட மக்களுக்காக தொடர்ந்து பேசிவரும் இவரை வாசகர்கள் அனைவரும் அறிவர். ○

# பொருளடக்கம்


○ அறிமுகம் 9

○ ஏன் இந்த நூல் 23

○ நூன்முகம் 27

1. இளமைப் பருவ உருவாக்கங்கள் 33

2. திருமணம், சந்தை மற்றும் சமூக உறவுகள் 56

3. புதிய சத்திரியர்களின் எழுச்சியும்,
அதிகார உறவுகளின் மறுசீரமைப்பும் 74

4. சமகால இந்து மதம் 94

5. இந்துக் கடவுள்களும் நாமும் :
நமது பெண் தெய்வங்களும் இந்துக்களும் 113

6. இந்துக்களின் மரணமும் நம்முடைய மரணமும் 148

7. நமது குறிக்கோள்:
தலித் மயமாதல், இந்து மயமாதல் அல்ல 162

## அறிமுகம்

அ. மார்க்ஸ்

டாக்டர் காஞ்சா அய்லய்யா அவர்கள் இந்தியத் துணைக்கண்டம் முழுவதிலும் நன்கு அறியப்பட்ட ஒரு தலித் பகுஜன் சிந்தனையாளர். ஆந்திராவிலுள்ள உஸ்மானியா பல்கலைக் கழகத்தில் அரசியல் அறிவியல் துறையில் பேராசிரியராகப் பணிபுரிந்து வரும் அய்லய்யா, ஆய்வுக்கட்டுரைகள் தவிர 'ப்ரான்டியர்', 'எகனாமிக் அன்ட் பொலிடிகல் வீக்லி', 'இந்து' முதலான இதழ்களிலும் சமூகப் பிரச்சினைகள் குறித்து தலித்தியக் கண்ணோட்டத்தில் தொடர்ந்து எழுதி வருபவர். எழுத்துப் பணியோடு தலித் பகுஜன் விடுதலை இயக்கங்கள், மனித உரிமை இயக்கங்கள், தனித் தெலுங்கானா இயக்கம் ஆகியவற்றிலும் முன்னணியில் நின்று செயல்படக்கூடியவர். ஆந்திர மாநிலத்திலுள்ள மிகவும் பிற்படுத்தப்பட்ட சாதிகளில் ஒன்றாகிய 'குருமா' எனப்படும் ஆடு வளர்க்கும் சாதி ஒன்றில் பிறந்த அய்லய்யாவின் இந்நூல் 1996ல் ஆங்கிலத்தில் வெளிவந்தது. ஒரே ஆண்டிற்குள் இரு பதிப்புகள் வெளியிட வேண்டிய அளவிற்கு எல்லோரது கவனத்தையும் ஈர்த்த இந்நூல் இத்தனை விரைவில் தமிழில் வெளிவருவது மகிழ்ச்சிக்குரியது.

'நான் ஏன் கிறிஸ்துவனல்ல' என்கிற பெர்ட்ரன்ட் ரஸ்ஸலின் புகழ்பெற்ற நூல் பல ஆண்டுகட்கு முன்பே திராவிட கழகத்தாரால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது. கிறிஸ்தவ மதத்தில் பிறந்த ரஸ்ஸல் தன்னைக் கிறிஸ்தவன் அல்ல என அறிவித்துக் கொண்டார். அய்லய்யாவோ தனது பிறப்பே இந்து மதத்திற்குள் நிகழவில்லை என்கிறார். அதற்கு அவர் சொல்லும் காரணம் தனது பெற்றோர்கள் தம்மை இந்துவாக அறிந்திருக்கவில்லை என்பது. ஆம்! இந்தியத் துணைக்கண்டத்தில் வாழ்கிற பெரும்பான்மை மக்கள்

(பகுஜன் - பெரும்பான்மை மக்கள்) தம்மை இந்துவாக உணர வில்லை. அவர்கள் வணங்கும் கடவுளர் அவர்களின் வழிபாட்டு முறைகள், வாழ்க்கை மதிப்பீடுகள், சமூக அறங்கள் அன்றாட வாழ்க்கை அனுபவங்கள், பேசும்மொழி... என எந்த அம்சத்திலும் அவர்கள் இந்துக்கள் என்போரின் அடையாளங்களைக் கொண்டிருக்க வில்லை. கொண்டிருக்கவில்லை என்பதை விட நேரெதிரான அடையாளங்களைக் கொண்டிருந்தார்கள் என்பதுதான் இந்நூல் சொல்லும் சேதி.

இந்துக்கள் x தலித் பகுஜன்கள் என்கிற முரணில் இந்துக்கள் என்கிற பிரிவில் பார்ப்பனர், சத்திரியர், பனியா மற்றும் புதிய சத்திரியர்கள் ஆகியோரை உள்ளடக்குகிறார் அய்லய்யா. சூத்திரர்களுக் குள்ளே மேற்சாதியினராகத் தம்மைப்பிரித்து உணர்ந்து பண்பாட்டு ரீதியில் பார்ப்பனீயத்தை நோக்கி நகரக் கூடியவர்களைப் புதிய சத்திரியர்கள் என அவர் குறிப்பிடுகிறார். பனியா எனப்படும் வடநாட்டு வணிக சாதியினர் ஆந்திராவில் கோமுட்டிகள் எனச் சொல்லப் படுவதாகவும் அவர் குறிப்பிடுகிறார். சாதீயம் என்பது இந்தியத் துணைக்கண்டம் முழுமைக்குமான ஒரு பொது அடையாளமாக விளங்கிய போதிலும் சாதிகள் என்பன மாநிலத்திற்கு மாநிலம் வேறுபடுகின்றன. அனைத்திந்திய அளவில் ஒரே பெயரில் அழைக்கப் படக்கூடிய சாதியினராகப் பார்ப்பனர்கள் மட்டுமே உள்ளனர். ஒரே பெயரில் அழைக்கப்படாத போதிலும் தீண்டாமை அடிப்படையில் தலித்துகளையும் நாம் அனைத்திந்திய ரீதியில் அடையாளப்படுத்த முடியும். தமிழகத்தைப் பொருத்தமட்டில் இங்கே சத்திரியர்கள் கிடையாது. தமிழகத்தின் மிக முக்கிய சாதிகளில் ஒன்றாகிய வேளாளர்கள் வருண அடிப்படையில் சூத்திரர்களாகவே இந்து மதத்தால் கருதப்பட்டபோதிலும், தம்மை அவர்கள் பிற சூத்திரர் களிடமிருந்து வேறுபடுத்தி, சத் சூத்திரர்கள் என அழைத்துக் கொண்டு பிற உயர்சாதி இந்துக்களுடனேயே அடையாளம் கண்டு வந்துள்ளனர். அந்த வகையில் பார்க்கும்போது அய்லய்யாவால் புதிய சத்திரியர்கள் என அழைக்கப்படும் பிரிவினர்களின் தமிழ் இணையாக வேளாளர்களை நாம் குறிப்பிடலாம். எனவே பார்ப்பனர், வேளாளர் மற்றும் அதிக இந்துமயமான அடையாளங்களுடன் தம்மை இணைத்துக் கொள்கிற பிறமொழி பேசுகிற ரெட்டியார், கோமுட்டிகள், சௌராட்டிரர்கள் முதலானோரைத் தமிழ்ச் சூழலில் இந்துக்கள் என அய்லய்யாவின் வழிநின்று அழைப்பதற்கு நியாயமுண்டு.

பிற பிற்படுத்தப்பட்ட சாதியினர் எனச் சட்ட ரீதியில் வரையறுக்கப்பட்டுள்ள சூத்திர சாதியினரையும் (இதில் மிகவும்

பிற்படுத்தப்பட்டோரும் அடங்குவர்) பல்வேறு தலித் சாதியினரையும், பழங்குடியினரையும் தலித் பகுஜன்கள் என அழைக்கின்றார் அய்லய்யா. பகுஜன் என்னும் அடையாளம் எண்பதுகளின் மத்தியில் கன்ஷிராம் அவர்களால் முன்னிறுத்தப்பட்டது. தலித்துக்களையும் பிற சூத்திர சாதியினரையும் பிரிக்கக்கூடாது என்பது கன்ஷிராமின் கோட்பாடு. அய்லய்யாவும் அதனை ஏற்கிறார். எனினும் பகுஜன்களின் மொத்தப் பண்பாக அடையாளப்படுத்தக்கூடியது அவர்களது ஒதுக்கப்படுகிற தன்மைதான் என்கிற அடிப்படையில் தலித்து களையும் உள்ளடக்கிய பகுஜன்களை தலித் பகுஜன் என அழைக்க வேண்டுமென்பது அய்லய்யாவின் வாதம். தமிழ்ச் சூழலில் பிற்படுத்தப் பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் பறையர், பள்ளர், அருந்ததியர் முதலிய தலித்துகள், பழங்குடியினர் (ST) ஆகியோரை அய்லய்யாவின் வரையறையின் அடிப்படையில் தலித் பகுஜன்கள் என அழைக்கலாம்.

பெரியார் வாழ்ந்து கிட்டத்தட்ட அரை நூற்றாண்டு காலம் தீவிரமாகப் பகுத்தறிவுப் பிரச்சாரம் மேற்கொண்ட மண் நம்முடையது. இந்து மதத்தையும் இந்துக் கடவுளையும் தோலுரித்துப் பெரியாரும் அவரது இயக்கத்தினரும் மேற்கொண்ட பெரும் பிரச்சாரங்களையும், நடத்திய இயக்கங்களையும், வெளியிட்ட வெளியீடுகளையும் நாம் மறந்துவிடமுடியாது. அய்லய்யாவும் இதே போன்றதொரு பணியைத் தான் மேற்கொள்கிறார். எனினும் பார்ப்பனீய இந்து மதத்திற்கு எதிராக பகுத்தறிவு, கடவுள் மறுப்பு முதலான இலட்சியங்களை முன் வைக்காமல் நடைமுறையிலுள்ள வெகுமக்கள் பண்பாடு என்பதே எவ்வாறு இந்துமதத்திற்கு எதிராக உள்ளது என்பதைச் சுட்டிக் காட்டுவதோடு நிறுத்திக்கொள்கிறார் அய்லய்யா.

அன்றாட வாழ்வின் ஒவ்வொரு அம்சத்திலும் வெகுமக்கள் பண்பாடு என்பது இந்துப் பண்பாட்டிலிருந்து வேறுபட்டுள்ளது என்பதை மிகவும் எளிமையாகச் சொல்லிக் கொண்டே போகிறார் அவர். நாம் அன்றாடம் எதிர்கொள்ளும் நிகழ்ச்சிகளை அவர் கட்டுடைத்து, முரண்களை வெளிப்படுத்தும்போது நமக்கு வியப்பு மேலிடுகிறது. இந்துக் கடவுளின் ஆயுதந்தாங்கிய வன்முறையின் தோற்றத்தை வெகுமக்கள் வழிபடும் சிறு தெய்வங்களோடு ஒப்பிடும் அய்லய்யா இந்துக் கடவுளர் கையில் ஏந்திய விற்களும், சக்கரங்களும் வெகுஜனங்களை ஒடுக்கி அவர்களை இந்து மதப்படுத்தும்நோக்கத்திற் காகத்தான் என விளக்குகிறார். அவதாரக் கதைகளெல்லாம் அப்படித் தான். வாமன அவதாரம் வெகுமக்கள் தலைவனாகிய பாலி மன்னனை (மகாபலி)க் கொன்றொழிப்பதற்காக மேற்கொள்ளப்பட்டது.

இராமாயணக் கதையே தென்னிந்தியரைப் பார்ப்பனமயமாக்கிய கதைதான். இராமன் ஏந்திய வில் கொன்றொழித்ததெல்லாம் இந்துப் பார்ப்பனீயமயமாக்கலுக்கு எதிராக இருந்த திராவிட வெகுமக்களைத் தான் எனச் சொல்லும் அய்லய்யா, இராமாயண காலத்திற்குப்பின்புதான் தென்னிந்தியாவில் பார்ப்பனக் குடியேற்றம் பெரிய அளவில் மேற்கொள்ளப்பட்டது எனக்கூறுவது சிந்திக்கத்தக்கது.

கணவனின் காலடியில் அமர்ந்து கால் பிடித்துப் பணிவிடை செய்யும் பெண் கடவுளரை, வெகுமக்கள் மத்தியில் நீங்கள் சந்தித்ததுண்டா என வினவுகிறார் அய்லய்யா. வெகுமக்களின் பெண் கடவுளர் அவர்களுக்காகப் போராடி மாண்ட இனக்குழுத் தலைவியர். அவர்களைச் சுற்றிப் புனையப்பட்டுள்ள சிறு கதையாடல்களில் அவர்கள் பெண் பாத்திரங்களாகத் திகழ்ந்து கற்பைக் காப்பாற்றிக் கணவனுக்குச் சேவை செய்து மாண்டதாகக் கதைகள் உண்டா? சாவித்திரி கதையையும், நளாயினி கதையையும் நீங்கள் இந்து மரபில் மட்டுந்தான் காணமுடியும். சமண, பவுத்த, அவைதீக மரபுகளிலும் பெண்களின் மீது இத்தகைய பெண் பாத்திரக் கடமைகள் சுமத்தப் படுவது மிகக்குறைவு என்பதோடு நேரெதிரான பாத்திர வார்ப்புகளாக அவர்கள் சித்திரிக்கப்படுவதும் இங்கே சிந்திக்கத்தக்கது. கணவனே இல்லாத ஒரு வாழ்வைத் தேர்வு செய்த மணிமேகலையையும், கொடூரமான கணவனை மலை உச்சியிலிருந்து தள்ளிக்கொன்ற குண்டலகேசியையும் காவிய நாயகியராக ஏற்றுக்கொள்ளுமா இந்து மரபு? அவைதீக மரபில்தான் அது சாத்தியமாக இருந்தது. தலித்துகள் உள்ளிட்ட மரபுக்கும் சமண, பவுத்த, அவைதீக மரபுகளுக்குமுள்ள இத்தகைய ஒற்றுமைகள்தான் அயோத்திதாச பண்டிதர் முதலான தலித் அறிஞர் பெருமக்கள், பவுத்தர்கள்தான் பின்னர் பறையர்களாக ஆக்கப்பட்டனர் எனக் கருத்துரைப்பதற்கும் காரணமாயின.

வெகுமக்கள் அறம் (Bahujan morality) என்பது இந்து அறத்திலிருந்து வேறுபட்டது என அய்லய்யா சுட்டிக்காட்டுவது ஆழ்ந்து சிந்திக்க வேண்டிய ஒன்று. வேதம் அல்லது கடவுளின் அருள்வாக்கு என்பன போன்ற ஆதாரங்களின் (Authority) அடிப்படையில் என்றென்றைக்குமான அற மதிப்பீடுகளைப் பெருமதங்கள் உருவாக்குகின்றன. இத்தகைய அறங்கள் எல்லாம் பெண்கள் மற்றும் ஒடுக்கப்பட்ட வெகுமக்களுக்கு எதிராக உள்ளன என்பது வேறு கதை. வெகுமக்கள் இவ்வாறு வெளியிலிருந்து திணிக்கப்பட்ட அறமதிப்பீடுகளை நடைமுறையில் ஏற்றுக் கொள்வதில்லை. இதன் பொருள் வெகுமக்களுக்கு அற மதிப்பீடுகளே இல்லை என்பதல்ல. தமக்கான அற மதிப்பீடுகளை அவர்கள் உள்ளிருந்தே (Local) உருவாக்கிக் கொள்கின்றனர்.

கல்லானாலும் கணவன் என்கிற பேரறத்தைக் காட்டிலும் தேவை யானால் தாலியைக் கழற்றி எறிந்துவிட்டு வேறொருவரைத் திருமணம் செய்துகொண்டு வாழ்கிற சிற்றரங்களைத்தான் Ethics என்பர். எவ்விதமான வெளிவழிகாட்டல்களும் ஆதாரங்களும் (Authority) அடிப்படைகளும் இல்லாமல், அங்கே அறங்கள் உருவாக்கிக் கொள்ளப் படுகின்றன. பாவம், புண்ணியம், சுவர்க்கம், நரகம் போன்ற அற மதிப்பீடுகளும் அவைகளை நியாயப்படுத்துகிற பெருங்கதையாடல் களும் கூட வெகுமக்களிடம் கிடையாது. இவ்வுலக வாழ்வின் அடிப்படையிலேயே இந்த உழைக்கும் சாதியினரின் (Productive castes) அறங்கள் அமைகின்றன. வாழும் காலத்தில் சமூகத்திற்குப் பயனுடைய உழைக்கும் வாழ்வை வாழ்ந்தால் போதும். சுகவாழ்வு என்கிற வாழ்க்கைக் கண்ணோட்டம் உடையவர்களே பரலோக நாட்டமும் இகலோக வாழ்வில் தனிச்சொத்துக்களைக் குவித்துக் கொள்ளும் வெறியும் உடையவர்களாக இருப்பர்.

தலித் பகுஜன்கள் மத்தியில் தனிச்சொத்து என்கிற கண்ணோட்டமே இல்லை என்பது அய்லய்யா முன்வைக்கும் இன்னொரு கருத்து. எல்லாவற்றையும் பொதுவாகக் கண்டவர்கள் வெகுமக்கள். இனக்குழு வாழ்வின் இத்தகைய புராதனப் பொதுமைப் பண்பாடு குறித்து, மார்க்சியர்கள் விரிவாகப் பேசியுள்ளதை நாம் அறிவோம். தமிழகத்தில் வசித்துவந்த ஆதிப்பழங்குடி மக்களிடையே இருந்த இந்தப் பொதுமைப் பண்பை அழித்த திருப்பணியைச் செய்து முடித்தது பார்ப்பனீயம். படையெடுப்புகள் மற்றும் பாசன வசதி செய்துகொடுத்தல் என்கிற ரீதியில், பழங்குடி மக்களைத் தனது கட்டுக்குள் கொண்டு வந்த இந்து பார்ப்பனீய அரசுகள் செய்த முதல் காரியம், அம்மக்களின் நிலங்களைத் தனிச்சொத்து களாக்கிப் பார்ப்பன வேளாளக் குடும்பங்களுக்கோ, கோயில்களுக்கோ தாரை வார்த்ததுதான். பார்ப்பனர்களுக்கு இவ்வாறு வழங்கப்பட்ட நிலத்தைப் பிரம்மதேயம் அல்லது சதுர்வேதி மங்கலம் என்பர். தம் நிலங்களில் தங்கி உழைத்து அதன் விளை பொருட்களில் பெரும் பகுதியை இத்தகைய பார்ப்பனவேளாள உரிமையாளர்களுக்கு மேல்வாரமாக அளித்து, எஞ்சிய கொஞ்ச நஞ்சத்தைக் கீழ்வாரமாக அனுபவித்து, வறுமையில் உழல வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாயினர் இந்த மண்ணின் மைந்தர்கள்.

தமிழக வரலாற்றின் மிக முக்கியமான ஆவணங்களில் ஒன்றாகிய வேள்விக்குடிச் செப்பேடும் (கி.பி 6ம் நூ) இதனைத் தெளிவாகச் சொல்கிறது. செப்பேடு விரிக்கும் கதை இதுதான். நெடுஞ்சடையன் என்னும் பாண்டிய மன்னன் ஒருநாள், மதுரை நகரில் வலம் வரும்போது

*கொற்கைக் கிழான் நற்சிங்கன் என்னும் பார்ப்பனன் அவன் முன் வீழ்ந்து ஒரு முறையீட்டைச் சமர்ப்பிக்கிறான். நற்சிங்கனின் முன்னோன் ஒருவன் சங்ககாலப் பாண்டியன், ஒருவனுக்குச் செய்து கொடுத்த யாகம் ஒன்றிற்காக வேள்விக்குடி என்னும் ஊரைத் தானமாகப் பெற்றிருந் தானாம். பாண்டியனுக்குப் பின்னர் ஆட்சிக்கு வந்த களப்பிரர் என்னும் கலியரசர் அதனைப் பிடுங்கிக் கொண்டார்களாம். மீண்டும் ஆட்சிக்கு வந்த பாண்டியன், அந்த நிலங்களைத் திருப்பித்தரவேண்டும் என்பதுதான் நற்சிங்கனின் முறையீடு. நெடுஞ்சடையனும் அவ்வாறே நற்சிங்கனுக்கும் அவனைச் சேர்ந்த பார்ப்பனர்களுக்கும் வேள்விக் குடியைத் திருப்பித் தருகிறான். இச்செப்பேட்டில் நாம் கவனத்தில் கொள்ள வேண்டிய விஷயங்கள் இரண்டு.*

1. *செப்பேடுகளின் தொடக்கத்தில் எந்த மன்னனது காலத்தில் அது வழங்கப்படுகிறதோ, அவனது வம்சப் பெருமை அதில் சொல்லப்படும். பெரும்பாலும் இவை ஒரே மாதிரியாக இருக்கும். வேள்விக்குடிச் செப்பேட்டில் சொல்லப்படுகிற பாண்டியப் பெருமையைக் கவனியுங்கள்: பரவரைப் பாழ்படுத்தியது, குறு நாட்டவர் குலங் கெடுத்தது, செந்நிலங்களைச் செறு வென்றது, துலாபாரம், இரண்ய கர்ப்பம் முதலான இந்து யாகங்களைச் செய்தது, பார்ப்பனர்க்கு ஈந்தளித்தது, மகீதலம் பொது நீக்கி அரசாண்டது; பரவர், குறுநாட்டவர் முதலான பழங்குடி மக்களைப் பாழ்படுத்திக் குலங்கெடுத்து அவர்களது செந்நிலங்களைக் கைப்பற்றி, யாகம் செய்த பார்ப்பனர்களுக்கு ஈந்தளித்தது என்பதோடு பாண்டியப் பெருமை ஓயவில்லை. 'மகீதலம் பொதுநீக்கி' அரசாண்டார்கள். பொது நீக்குதல் என்றால் என்ன? அய்லய்யா சொல்வது போல் வெகு மக்களிடையே 'தனி' என்கிற உணர்வு கிடையாது. நிலம் உட்பட அனைத்தும் அவர்களுக்குப் பொதுதான். அந்தப் பொதுப் பண்பை அழித்துத் தனிவுடைமையை நிலைநாட்டியதுதான் தமிழ்ப் பெருமை. இவ்வாறு தமிழகத்தை ஒரு குடையின் கீழ் ஒன்றாக்கியதைத்தான் பாண்டிய - பல்லவ - சோழ ஒருங்கிணைப்பு என வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். இதைத்தான் தமிழ்க் காணியாட்சி முறை எனத் தமிழ்த் தேசிய அறிவாளிகள் பெருமை கொள்கின்றனர்.*
2. *செப்பேடு சொல்லும் வரலாற்றிலிருந்து ஒன்று தெளிவாகிறது. இவ்வாறு தனிச் சொத்துகளாகத் தாரை வார்க்கப்பட்ட நிலங்கள் களப்பிரர் காலத்தில் மீண்டும் கைப்பற்றப்பட்டுள்ளன.*

*களப்பிரர் காலத்தை, சோழர் காலம் குறித்து ஆய்வுகள் மேற்கொண்ட வரலாற்றாசிரியர் பர்ட்டன் ஸ்டெய்ன், மீண்டும்*

பழங்குடியினர் மேலெழுந்து ஆட்சியைக் கைப்பற்றிய காலம் எனக் கூறுவது நம் சிந்தையில் பதித்துக்கொள்ள வேண்டிய ஒன்று. பார்ப்பன வேளாள இந்து மேலாண்மையை வீழ்த்தி, மீண்டும் பழங்குடியினர் மற்றும் வெகுமக்கள் அரசாண்ட காலத்தைத்தான் இன்றுவரை பார்ப்பன வேளாள வரலாற்றாசிரியர்கள் இருண்ட காலம் எனத் தூற்றி வந்துள்ளனர்.

தமிழக ஒருங்கிணைப்பின் அரசியல் பொருளியல் பின்னணி இது. இதன் இன்னொரு பக்கமான கலாச்சார அரசியல் என்பது பழங்குடி வெகுமக்களின் வழிபாட்டு முறைகளை எல்லாம் உள்வாங்கி, செரித்து இந்துத் தமிழ்ப் பண்பாடாக மாற்றுவது என்பதுதான். பார்ப்பன வேளாள அறிவாளிகளும், புலவர்களும், வேத விற்பன்னர் களும் அரசோடு இணைந்து நின்று இந்தப் பணியை நிறைவேற்றினர். தமிழ்ப் புவிப்பரப்பு முழுவதும் சைவ-வைணவக் கோயில்களால் வலை பின்னப்பட்டு இணைக்கப்பட்டது. தேவார மூலவர்கள் தேனினும் இனிய தமிழ்ப் பாக்களைக் கொண்டு தமிழ்ப் புவிப்பரப்பை இணைத்தனர். சைவ சித்தாந்தம் என்கிற பெருந்தத்துவமும் உருவாக்கப்பட்டது. இத்தகைய் தமிழ்ப் பேரிணைப்பின் அரசியலும் பண்பாடும் வெகுமக்களின் மீதான வன்முறையாக வீழ்ந்ததை நாம் விளக்கத் தேவையில்லை. தமிழ்த் தேசியத்தின் 'தந்தை'யர்களில் ஒருவரான மறைமலை அடிகளார், தமிழ்ப் பண்பாட்டையே சைவ - வேளாளப் பண்பாடாகக் கண்டதன் பின்புலம் இதுதான்.

இந்த இடத்தில் ஒன்றை விவாதத்திற்காக முன்வைப்பது பொருந்தும். சமீபத்தில் கவிஞர் ஞானக்கூத்தனைச் சந்தித்து உரையாடியபோது அவர் ஒன்றைச் சொன்னார். பொது என்கிற சொல்லே தமிழில் கிடையாது. பாலி மொழியிலிருந்து (அதாவது சமண பவுத்த மரபினூடாக) வந்த சொல் அது என்றார் அவர். வேர்ச்சொல் விற்பன்னர்கள் தான் இதற்குப் பதிலளிக்க வேண்டும்.

இந்துமதம் இவ்வாறு பல்வேறு உள்நாட்டுப் பண்பாடுகளைத் தனக்குள் வாங்கிக்கொண்டதை அதனுடைய பன்மைத் தன்மை எனப்போற்றுவாரும் உளர். பன்மைத் தன்மை எனப் பொத்தாம் பொதுவாக எல்லாவற்றையும் சொல்லிவிட முடியாது. அந்த இணைவு கிடைத்தள இணைவா, செங்குத்து இணைவா என்பது முக்கியம். டெல்யூஸ் - கத்தாரி என்னும் நவீன சிந்தனையாளர்களின் வழி நின்று சொல்வதானால், கிடைத்தள வளர்ச்சியை 'அருகம்புல் வளர்ச்சி' எனலாம். அருகம்புல்லுக்கு மரங்களைப்போல் ஆணிவேர் கிடையாது. நடுமரம், இலைகள், காய், பூ என்றெல்லாம் படிநிலை வேறுபாடுகள் கிடையாது. அது ஒரு கிடைத்தள வளர்ச்சி; மையம் அற்ற அமைப்பு.

படும் இடங்களிளெல்லாம் வேர் பரப்பி வளரும் வளர்ச்சி. ஆணிவேர் ஒன்றைக் கண்டுபிடித்து அதனை அழித்தால், அந்தப் புல்வெளியை அழித்துவிட இயலாது. செங்குத்து வளர்ச்சி என்பது மையம் உறுதியாக அமைந்துள்ள ஒரு வளர்ச்சி. இதற்கு எடுத்துக்காட்டாக மரத்தைக் குறிப்பிடுவர். இந்து மத வளர்ச்சி என்பது செங்குத்து வளர்ச்சிக்கான ஒரு வகை மாதிரி. உள்வாங்கப்படுதல் என்பது படிநிலைத் தன்மையில் ஏற்றத் தாழ்வாக அமைகிறது. மாடு என்கிற இனக்குழுச் சின்னத்தை வணங்குகிற ஒரு பழங்குடியை இந்துமதம் உள்வாங்குவதாகக் கொள்வோம். மாட்டைச் சிவனின் வாகனமாக்கி அந்தப் பழங்குடியினருக்கு ஒரு சாதிப்பெயர் வழங்கப்பட்டு இந்துப் படிநிலை ஆக்கத்தின் கீழ் வரிசைகளில் ஒன்றில் அவர்கள் இருத்தப்படுவர். எல்லாவற்றிற்கும் மேலாக அய்லய்யா குறிப்பிடுகிற இந்து உயர்சாதியினர் வீற்றிருப்பர். எனவே உள்வாங்கப் பட்ட பின்பும் கூட வெகுமக்கள் இந்து மேல் சாதியினரிடமிருந்து அன்னியப்பட்டே நிற்பர். இதனை வித்தியாசங்களின் பன்மைத்தன்மை என்று சொல்லலாகாது. வித்தியாசங்களின் படிநிலைத் தன்மை என்றே குறிப்பிட வேண்டும்.

அய்லய்யா வலியுறுத்துகிற இன்னொரு முக்கிய கருத்து, இந்தியச் சூழலில் நவீனத்துவம் நுழைந்தது பற்றியது. மேலைச் சூழலைப் போல இங்கே நவீனத்துவம் தானாக உருக்கொள்ளவில்லை. காலனிய ஆட்சியாளர்கள் நவீன நிறுவனங்களை (பாராளுமன்றம், பள்ளிக்கூடம், மருத்துவமனை, நீதிமன்றம், காவல் துறை, அறிவியல் தொழில்நுட்பம் போன்றவற்றை) இங்கே அறிமுகப்படுத்துகின்றனர். நவீனத்துவத்திற்கு இரு கூறுகள் உண்டு. அவை :

1. மதநீக்கம் : மதத்தின் பிடியிலிருந்து சமூகத்தையும், நிறுவனங் களையும் விடுவித்தல். பகுத்தறிவாக்கம் நடைபெறுதல்.
2. மேலே குறிப்பிட்ட புதிய நிறுவனங்கள் மேலெழுதல்

காலனிய ஆட்சியை எதிர்த்த இந்து மேல்சாதியினர் நவீனத் துவத்தை எதிர்கொள்வதில் இரட்டை நிலையை எடுத்தனர். ஒரு பக்கம் நவீன நிறுவனங்களைத் தங்களின் நலனுக்குப் பயன்படுத்திக் கொள்ளுதல், கைப்பற்றிக் கொள்ளுதல். இன்னொரு பக்கம் காலனியத்திற்கு எதிராக இந்துத்துவத்தைக் காப்பது என்கிற நிலை எடுத்து, நவீனத்துவத்தின் இன்றியமையாத கூறாகிய மதநீக்கம் பகுத்தறிவாக்கம் என்பவற்றைத் தடுத்து நிறுத்துதல். எனவே இங்கே அறிமுகமான நவீனத்துவம் உண்மையில் ஒரு எதிர் நவீனத்துவமாகவே இருந்தது. அய்லய்யா இதனைப் பார்ப்பன-பனியா-சத்திரிய-புதிய

சத்திரிய சாதியினரின் கூட்டிணைவின் விளைபொருள் என்கிறார். இதன் விளைவாக நவீன நிறுவனங்களெல்லாம் பார்ப்பனீய மயமாக்கப் பட்டன என்றும் சொல்கிறார்.

நவீனத்துவத்தின் முக்கியக் கூறான Secularism என்கிற ஆங்கிலச் சொல்லுக்கு நமது இந்து அறிவாளிகள் பயன்படுத்துகிற மொழி பெயர்ப்பையும் நாம் இங்கே கவனித்தல் வேண்டும். மதச்சார்பின்மை, மதப்பொறை போன்ற சொற்கள் பயன் படுத்தப்படுகின்றன. பாரதீய சனதா கட்சி முதலான இந்துத்துவ அமைப்புகள் இதனை 'சர்வ மத சம்பவம்' எனக் கோட்பாடாக முன் வைக்கின்றன. மதங்களிடையே சமத்துவம் என்பதல்ல நிறுவனங் களை மதத்தின் பிடியிலிருந்து நீக்குதல் என்பதே மத நீக்கம். இந்தியச் சூழலில் இது இந்துமத நீக்கம். 'மதச்சகிப்புத்தன்மை' என்பது இன்னும் மோசமான ஒரு கருத்தாக்கம். இசுலாமியராக இருந்து தொலைந்தாலும் உங்களைச் சகித்துக் கொள்கிறோம் என்பதென்ன நியாயம்?

காலனீயத்திற்குப் பிந்திய நிறுவனங்களெல்லாம் மதக் கறைபடிந்து போயுள்ளன எனச் சொல்லும் அய்லய்யா பள்ளிக் கூடமும் கல்வியும் எப்படி இந்துத் தன்மையாக உள்ள தென்பதையும், வெகுமக்களின் குழந்தைகள் எவ்வாறு இதிலிருந்து அன்னியப் படவேண்டியுள்ளது என்பதையும் விரிவாக விளக்குகிறார். பிஞ்சு மனங்களில் இந்துப் பண்பாட்டை விதைக்கும் நிறுவனங்களாகவே பள்ளிகள் உள்ளன. சாதியப் பயிற்சியே இங்கு அளிக்கப்படுகிறது. சாதி மொழியே இதற்குக் கையாளப்படுகிறது என்கிறார் அய்லய்யா. அதென்ன சாதி மொழி? மொழி என்பது இங்கே மொழியாக இல்லை. அது மொழிகளாக உள்ளன என்பது அய்லய்யாவின் வாதம். தரப்படுத்தப்பட்ட பார்ப்பனத் தெலுங்கு என்பது வெகுமக்கள் பேசுகிற உற்பத்தியை மையமாகக் கொண்ட தெலுங்கில் இருந்து வேறுபட்டுள்ளது. எனவே வெகுமக்களின் குழந்தைகள் பள்ளிக்குச் சென்று பாடநூற்களை விரிக்கும்போது, அதை வேற்றுமொழிப் புத்தகம்போல உணர்கின்றனர். ஆங்கில நூற்களுக்கும் இந்தப் பார்ப்பனத் தெலுங்கு நூற்களுக்கும் பகுஜன் குழந்தைகளைப் பொருத்த மட்டில் வேறுபாடில்லை. ஆங்கிலப்புத்தகம் இருபத்தாறு எழுத்துக்களில் அச்சிடப்பட்டுள்ளது. இது அய்ம்பத்தாறு எழுத்துக் களில் உள்ளது; அவ்வளவுதான். இரண்டையும் அகராதியை வைத்துத் தான் புரிந்துகொள்ளவேண்டும் என்கிறார் அய்லய்யா.

அய்லய்யாவின் இக்கருத்து மிகைப்படுத்தப்பட்ட ஒன்றல்ல. மேலைநாடுகளில் மொழி வேறுபாடுகள் பள்ளி அளவில் ஏற்றுக்

கொள்ளப்பட்டுள்ளமைக்கு எடுத்துக்காட்டுகள் உண்டு. அமெரிக்கக் கருப்பர்களும் வெள்ளையர்கள் போலவே ஆங்கிலமொழி பேசினாலும், கருப்பர்கள் பேசுகிற ஆங்கிலம் தனித்துவமானது. இதை 'எபோனிக்ஸ்' என்று சொல்வார்கள். ஆனால் அமெரிக்க அரசு இதைத் தனி மொழியாக ஏற்பதில்லை என்பது குறிப்பிடத்தக்கது. எனினும் சில மாநிலங்களில் கருப்பின மக்களின் போராட்டங்களின் விளைவாக கருப்பர்கள் பெரும்பான்மையாக வசிக்கும் பகுதியிலுள்ள பள்ளிகளில் எபோனிக்ஸ் பாடமொழியாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. பாடநூற்களிலும் பாடப்பயிற்சியும் இம்மொழியிலேயே அமையும். அது மட்டுமல்ல கருப்புக் குழந்தைகளின் அறிவுக் கூர்மையைத் தேர்வு (I.Q test) செய்யவரும் அதிகாரிகள் கருப்பினத்தவராக இருக்க வேண்டும் எனவும் கூட சில மாநிலங்களில் விதிகள் உள்ளன.

பள்ளி என்பது பிள்ளைகளின் உருவாக்கத்தில் பெரும்பங்கு வகிக்கக்கூடிய ஒரு நிறுவனம். பிற்படுத்தப்பட்ட, ஒதுக்கப்பட்ட வெகுமக்களின் சூழலில் வளர்ந்த ஒரு குழந்தை, பள்ளியில் சேர்க்கப் படுகிறது எனக்கொள்வோம். பள்ளிக்கு வந்தவுடன் அக்குழந்தை இதுவரை தூர நின்று மட்டுமே பார்த்திருந்த ஒரு பிரிவினரின் உடல் அடையாளங்களை உடைய ஒரு ஆசிரியரைச் சந்திக்கிறது. அவர் அக்குழந்தை அதுவரை பேசிவந்த மொழியைத் தவறு என்கிறார்; கொச்சை என்கிறார். அக்குழந்தையின் பழக்கங்கள் பலவற்றை அவர் திருத்தப்பட வேண்டியவைகளாகக் குற்றஞ்சாட்டுகிறார். அக்குழந்தை யின் மனநிலை என்னவாக இருக்கும்? பச்சைக்குழந்தையின் வளரும் மனதில் இத்தகைய குற்ற உணர்வு பதிக்கப்பட்டால் அதன் வளர்ச்சி என்னவாகும்? என்றென்றும் அந்தக் குழந்தையை அடிமையாக வைத்திருக்கக்கூடிய சூழ்ச்சி அல்லவா இது?

பாடநூற்களில் எங்காவது விளிம்புநிலை மனிதர்களின் பண்பாடுகள் பேசப்பட்டதுண்டா? பொச்சம்மா, மைசம்மா, எல்லம்மா என்கிற எங்களின் கடவுளின் வரலாறுகள் சித்திரிக்கப்பட்டதுண்டா? ஏன் எங்களுக்குக் கதையாடல்கள் கிடையாதா? பெருங்கதை யாடல்களுக்கு மட்டுந்தான் உங்கள் பாடநூற்களில் இடமுண்டா? என்றெல்லாம் வினவுகின்றார் அய்லய்யா.

அய்லய்யாவின் இக்கேள்விகள் தமிழ்ச் சூழலுக்கு அப்படியே பொருந்தும் என்பதில் அய்யமில்லை. இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பே தமிழைச் செந்தமிழ் எனவும், கொடுந்தமிழ் எனவும் சாதி ரீதியாகப் பிரித்த பெரு மரபு நம்முடையது. ஒரு சாரார் பேசுகிற தமிழையே, இழிசனர் மொழி எனக் கேவலப்படுத்தியது அல்லவா நமது இலக்கணங்கள். சாதீய வரையறைகள் மற்றும் இலக்கணங்களின்

அடிப்படையிலேயே நமது இலக்கியங்களெல்லாம் இயற்றப்பட்டன. இதன் விளைவாகவே நமது மக்களின் மாபெரும் சிந்தனையாளன் ஈ.வே. ராமசாமி நமது இலக்கியங்கள் சாதி காப்பாற்றும் இலக்கியங்கள்; நமது மொழி சாதி காப்பாற்றும் மொழி என்று உரக்கக் கூவினான்.

இன்று தமிழ்வழிக்கல்வி குறித்து அதிகம் பேசப்படக்கூடிய சூழலில் இவை எல்லாம் சிந்திக்கத்தக்கன. ஆங்கிலத்திற்குப் பதிலாக தமிழை மாற்றீடு செய்தால் போதாது; அது வெகு மக்களின் தமிழாக இருக்க வேண்டும். அடிப்படை நூற்கள் தலித்துகளின் வெகுமக்களின் சொல்லாடல்களால், கதைப் பாடல்களால் நிரப்பப் படவேண்டும். அப்படிச் செய்யப்படாத நிலையில் இந்தச் சாதீயத் தமிழுக்குப் பதிலாக 'ட்விங்கிள் ட்விங்கிள் லிட்டில் ஸ்டா'ரே தேவலை என்பதை நாம் பெரியார் வழியில் நின்று சொல்லத் தயங்கக்கூடாது. நமது தாய்த் தமிழ்க் கல்வியாளர்கள் இதனைச் சிந்திப்பார்களா?

தரப்படுத்துதல் என்கிற பெயரில் மய்யங்களில் வீற்றிருந்து ஆட்சி செலுத்தக் கூடியவர்கள் தமது பண்பாட்டுக் கூறுகளை விளிம்பு நிலையினர் மீது திணிக்கும் ஆபத்தையும் அய்லய்யா சுட்டிக் காட்டுகிறார். 'பிராமண போஜன ஓட்டல்கள்' என்கிற பெயரில் பார்ப்பன உணவையும் சுவையையும் பொதுமைப்படுத்த மேற் கொள்ளப்பட்ட முயற்சியை அவர் அடையாளம் காட்டுகிறார். பெரியார் 'பிராமணாள் கபே' க்கு எதிராக நடத்திய போராட்டங்கள் நினைவுகூரத் தக்கன. பிராமணாள் என்கிற பெயர் அல்லது சொல் மட்டும் இங்கே மறுப்புக்குரியதல்ல. சுவை, விருப்பு ஆகிய தளங்களிலும் வெகுமக்களைக் கட்டுப்படுத்த நினைக்கும் ஒரு அரசியல் முயற்சியாக நாம் இதனை அணுக வேண்டி இருக்கிறது.

விருப்புக்களைக் கட்டுப்படுத்துதல் என்பதைப் பாசிசம் எப்போதும் ஒரு அரசியல் செயல்பாடாக மேற்கொண்டு வருகிறது. மாணவியர் ஜீன்ஸ் அணியக்கூடாது, புடவை அல்லது சுடிதார்கள் அணிய வேண்டும்; மாணவியர் காதலர் தின கொண்டாட்டங்களில் பங்கேற்கக்கூடாது என்றெல்லாம் இந்துத்துவ அமைப்புகள் நடவடிக்கைகளில் இறங்குவதை நாம் பார்க்க வேண்டும்.

இப்படிப் பல்வேறு கூறுகளை அடையாளங் காட்டிச் செல்கிறார் அய்லய்யா. அடையாளம் காட்டுவதோடு நிற்கக்கூடாது, அதற்கான தீர்வுகளையும் சொல்லியாக வேண்டும் என வற்புறுத்துவது தமிழ்ச் சூழலின் வழக்கம். எனது 'இந்துத்துவம்' நூல் குறித்தும் இத்தகைய விமர்சனங்கள் வைக்கப்பட்டன. அய்லய்யா சில அரசியல் தீர்வுகளையும்

முன் வைக்கிறார். சமூகத்தை இந்து மயமாக்குவது என்பது இந்துக்களின் செயல்பாடாக உள்ள நிலையில் சமூகத்தைத் தலித் மயமாக்குவது என்பதே வெகுமக்களின் அரசியற் செயல்பாடாக இருக்க முடியும் என்கிறார். இந்திய சமூகத்தை சனநாயகப்படுத்துவதன் அடையாளம் இதுவே என்பது அவர் கருத்து. இந்து மயப்பாட்டிற்கு எதிராகத் தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர், பிற்படுத்தப் பட்டோர், சிறு பான்மையினர் ஆகியோரின் அய்க்கிய முன்னணி மட்டுமே நமது ஒரே நம்பிக்கையாக உள்ளது என முடிக்கிறார் அய்லய்யா. பெண் களையும் இந்த முன்னணியில் இணைத்துக் கொள்ளலாம், ஆனால் உயர்சாதிப் பெண்கள் தமது இந்துத் தன்மையை விட்டொழித்தல் அவசியம் எனப் பிறிதோரிடத்தில் அவர் குறிப்பிடுகிறார்.

ஆறேழு ஆண்டுகட்கு முன்னதாக, தலித் அரசியல் ஆவணம் ஒன்றை நிறப்பிரிகையின் சார்பாக வெளியிட்டபோது, இதே தீர்வை நாங்களும் முன்மொழிந்துள்ளோம் என்பது குறிப்பிடத் தக்கது. தமது இழிவுத் தன்மையை விட்டொழித்த சனநாயக் சக்தி களையும் தோழமைச் சக்தியாக நாம் இணைத்துக்கொள்ள முடியும்.

எனினும் நடைமுறை அனுபவங்களின் அடிப்படையில் இந்தத் தீர்வின் சில அம்சங்களை விவாத்திற்குள்ளாக்க வேண்டியது அவசியமாக உள்ளது.

1. பகுஜன்கள் என்கிற ஒரே அடையாளத்தின் கீழ் தலித்துகளையும் இதர பிற்படுத்தப்பட்டோரையும் இணைப்பது என்பதில் சில பிரச்சினைகள் உள்ளன. அரசியல் ரீதியாக இதற்கொரு தேவை இருந்தாலும், பண்பாட்டு ரீதியாக இதற்குச் சில நியாயங்கள் இருந்தாலும், தலித்துகளும் பிற பிற்படுத்தப்பட்டோரும் ஒரு படித்தானவர்கள் அல்ல. தீண்டாமை இவ்விரு பிரிவினரையும் தனித்தனியாக மட்டுமல்ல எதிரெதிராகவும் பிரித்து வைத்துள்ளது. இரு சாரருமே பாப்பனீயத்தால் விளிம்புக்குத் தள்ளப்பட்டவர்கள். எனினும் பிற்படுத்தப்பட்ட மக்கள் சாதீயத்திற்குப் பலியானவர்கள். தலித்துகளோடு புவியியல் அடிப்படையிலும் வாழ்வியல் அடிப்படையிலும் நெருக்கமாக இருக்கக்கூடிய இவர்கள், தங்களிடம் படிந்து போயுள்ள சாதீயத்தின் விளைவாக, நேரடியாக தீண்டாமைக் கொடுமைகளை நிறைவேற்றுபவர்களாகவும், தலித் அரசியல் மேலெழுச்சியைக் கடுமையாக எதிர்ப்பவர்களாகவும் உள்ளனர். எனவே, பகுஜன் என்கிற கருத்தாக்கம் இன்று ஆட்டங்கண்டுள்ளது. இந்துக்களுக்கு இது உவப்பளிக்கக்கூடிய ஒன்று என்றாலும் அதற்காக இந்த நடைமுறை உண்மையை நாம்

புறக்கணித்துவிட இயலாது. தவிரவும் வித்தியாசமுள்ள இரு பிரிவுகளை வித்தியாச மற்றவர்களாகச் சித்திரிக்கும்போது அதனால் இழப்புக்குள்ளாகிறவர்கள் படி நிலையில் கீழே உள்ளவர்களே. அந்த வகையிலும் பகுஜன்கள் எனப் பொதுமைப் படுத்துவது தலித்துகளுக்கு எதிரானதாகவே அமையும். பகுஜன் என கன்ஷிராம் போல் தனியே சொல்லாமல், தலித் பகுஜன் என அய்லய்யா சொல்வது என்பதே ஓரடி முன் எடுத்து வைக்கும் முயற்சி என்றாலும், தலித் பகுஜன் என ஒற்றை அடையாளமாக அதனைச் சுருக்காமல் தலித் + பகுஜன் எனச் சொல்வதே சரியாக இருக்கும் என்பதை மீண்டும் அழுத்திச் சொல்வது அவசியம்.

2. பகுஜன்கள் என்கிற வரையறையில் தலித்துகள் மற்றும் பிற்படுத்தப் பட்டவர்களோடு நிறுத்திக்கொள்கிறார் அய்லய்யா. சிறுபான்மை யினரைப் பொருத்தமட்டில் அய்க்கிய முன்னணியில் சேர்த்துக் கொள்ளலாமே ஒழிய, பகுஜன்களாக அவர்களைக் கருத இயலாது என்பது அவரது கருத்து. இரண்டாண்டுகளுக்கு முன்பு அவரை நான் மதுரையில் சந்தித்து உரையாடியபோது விவாதம் மேலே தொடர இயலாமல் இந்த இடத்தில் நின்று போனது. இந்து என்கிற அடையாளத்திற்கு எதிராக உள்ளவர்களை எல்லாம் பகுஜன்கள் எனச் சொல்லவரும்போது, சிறுபான்மையினரை - குறிப்பாக இசுலாமியரை எவ்வாறு விலக்கி நிறுத்துவது? அல்லது விலக்கி நிறுத்துவதற்கு என்ன காரணம் சொல்வார் அய்லய்யா? என்ன இருந்தாலும் வேற்றுநாட்டு மதங்கள் என்கிற ரீதியில் தான் அவர் விளக்கமளித்தாக வேண்டும். தோற்றம் (Origin), சாரம் (Essence) ஆகிய இயங்காவியல் வரையறைகளை மனசுக்குள் பதித்துக்கொள்வதன் விளைவு இது. இவை இரண்டும் பாசிசக் கருத்தாக்கங்கள் என்பதையும் நாம் மறந்து விடலாகாது. தவிரவும் இந்துத்துவமும் கூட இந்த அடிப்படைகளிலேயே சிறுபான்மை யினரை விலக்கி நிறுத்துகிறது. யார் Original என்கிற கேள்வியினடியாக எழும் Originary violence எனும் தெரிதாவின் கருத்து இங்கே சிந்திக்கத்தக்கது. இசுலாமியரை நேசசக்திகளாகவே இந்நூல் முழுக்க அய்லய்யா அணுகியுள்ளார் என்பதில் அய்யமில்லை. எனினும் இந்துத்துவத்தை எதிர்க்கிற நாம் எந்த வகையிலும் பாசிசக் கூறுகளுக்கு இடங்கொடுத்துவிட முடியாது என்பதில் கவனமாக இருத்தல் அவசியம். மேலும் இந்நூலில் குறிப்பிடப்படுகிற தலித் பகுஜன் கடவுளர் எல்லாம் ஆந்திரச் சூழலில் வழக்கில் உள்ளவர்கள் என்பதையும் சிவன், விஷ்ணு முதலான இந்து கடவுளரின் ஒப்பீட்டளவிலான முக்கியத்

துவங்களிலும் கூட ஆந்திராவிற்கும் தமிழகத்திற்கும் வேறுபாடுகள் உள்ளதை மனதிற் கொள்ளுதல் வேண்டும்.

எல்லாவற்றையும் கணக்கிலெடுத்துப் பார்க்கும்போது அய்லய்யாவின் வெகுமக்கள்-பகுஜன் என்கிற கருத்தாக்கம் இந்துத் துவத்திற்கு எதிரான தலித்கள், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினரின் ஒரு தற்காலிகமான கூட்டணியாக மட்டுமே இருக்க முடியும். இந்துத்துவத்திற்கு எதிராக சேர்ந்துகுரல் கொடுக்கவேண்டிய அதே நேரத்தில் தீண்டாமைக்கு எதிராக தலித்துகள் பிற்படுத்தப்பட்டோரை எதிர்த்து நிற்க வேண்டிய அவசியத்தை நாம் மறந்துவிடலாகாது. தவிரவும் பிற்படுத்தப்பட்டவர்களைப் பொறுத்த மட்டில் தம்மை இந்து நீக்கம் / பார்ப்பனீய நீக்கம் செய்தல் என்பதன் முதற் செயற்பாடே, தீண்டாமையை விட்டொழிப்பதுதான் என்பதை நாம் அழுத்திச் சொல்லியாக வேண்டும். தீண்டாமை அழிக்கப்படாத நிலையில் பகுஜன்கள் என்கிற கருத்தாக்கம் சாத்தியமில்லை என்பதை நாம் கவனத்தில் கொள்வது அவசியம்.

நாட்டை இந்து மயமாக்கல் என்பதை மறைமுகமான செயல் திட்டமாகக் கூட இல்லாமல் வெளிப்படையான திட்டமாகவே அறிவித்து இந்துத்துவவாதிகள் செயற்பட்டுக் கொண்டுள்ள ஒரு சூழலில், உலகளவில் பாசிச சக்திகள் மேலெழுந்து வந்துகொண்டுள்ள ஒரு நிலையில் இந்தியத் துணைக்கண்டத்தைப் பொருத்தமட்டில் பாசிச எதிர்ப்பு என்பதையே இந்து நீக்கம் என்பதிலிருந்து தொடங்க வேண்டியதின் அவசியத்தை யாரும் மறுக்க இயலாது. இந்து நீக்கம் செய்தலை வற்புறுத்தும் இந்நூல் தமிழில் வெளிவருவதற்குக் காரணமான அடையாளம் வெளியீட்டாளரையும், மொழியாக்கித் தந்துள்ள பேராசிரியர்கள் இராஜ முருகுபாண்டியன், மு. தங்கவேலு ஆகியோரையும் மனதாரப் பாராட்டுகிறேன். ●

# ஏன் இந்த நூல்

***1950*** களில் நான் ஆந்திராவில் உள்ள தெலுங்கானா கிராமத்தில் பிறந்தேன். அறுபதுகளில் வளர்ந்தேன். இந்திய விடுதலைப் போராட்டத்தில் எங்கள் கிராமமும் கொந்தளிப்பாக இருந்தது. வரலாற்றுச் சிறப்புமிக்க தெலுங்கானா ஆயுதப்புரட்சியின் ஒரு அங்கமாகவும் அமைந்தது. சுதந்திர இந்தியாவின் முதல் தலைமுறையில் பிறந்த என்னுடைய இளமை அனுபவங்களும் அன்று மேலெழுந்த கலாச்சார முரண்பாடுகள் அமைந்த கதைகளால் நிரம்பின. அன்று முதல் இன்று வரை கிராமப்புற இந்தியா முழுவதுமாக மாறாமலேயே இருக்கிறது. அவ்வாறு மாற்றங்கள் ஏதேனும் நிகழ்ந்திருந்தால் அது மிகக் குறைந்ததாகும். நகர்ப்புற இந்தியா என்பது கிராமப்புற இந்தியாவின் நீட்சியாகும். ஆகையினால் கிராம இந்தியாவிற்கும் நகர இந்தியாவிற்கும் ஒரு கலாச்சாரத் தொடர்பு இருக்கிறது.

திடீரென்று தொண்ணூறுகளில் இந்தியாவில் இருக்கிற முஸ்லிம்கள், கிறித்தவர்கள், சீக்கியர்கள் அல்லாத எல்லோரும் இந்துக்கள் என்ற பொருளில், இந்துத்துவா என்ற வார்த்தை நமது காதுகளில் ஒலித்தது. நானும் எனது பெற்றோர்களும் உறவினர்களும், எமது சாதியினரும் இந்துக்கள் என்று சொல்லப்பட்டோம். இது எனக்கு உளறலாகப் பட்டது. நகர்ப்புற நடுத்தரக் குடும்பச் சூழ்நிலையில் காலையிலும் மாலையிலும் நான் படிக்கிற பத்திரிகைகள், நான் பார்க்கிற தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் அனைத்தும் என்னையும் இந்து என்று அறிவிக்கத் தூண்டுகின்றன. இல்லாவிட்டால் நான் சமூகத்திலிருந்தே புறக்கணிக்கப்பட்டுவிடும் சூழல் உள்ளது. நான் ஒரு குருமா குடும்பத்தில் பிறந்திருப்பதால் நான் எவ்வாறு இந்துக்கலாச்சாரத்திற்கு உரியவனானேன் என்பது புரியவில்லை. அரசும் அரசு சார்ந்த அமைப்பும் இந்துத்துவாவின் விளம்பர நிறுவனங்களாகவே மாறியுள்ளன. மேலும் சங்பரிவாரங்கள் ஒவ்வொரு நாளும் எங்களை இந்துக்கள் என்று நிர்பந்தப்படுத்துகின்றன. உண்மையில் இவர்கள் முன்வைக்கிற இந்தக் குங்குமப் பொட்டுக் கலாச்சாரத்தின் தோற்றமே எங்களை அலைக்கழிப்பதாய் உள்ளது.

இப்பொழுது என் முன் உள்ள பிரச்சினை, இந்துத் துவா பேசித் திரிவோர் சொல்லுகிறபடி நான் முஸ்லிம், கிறித்தவர், சீக்கியர் ஆகியோரை பகைவர்களாகக் கருதவேண்டும் என்பது அல்ல. பிரச்சினை என்னவென்றால் கீழ்நிலை சூத்திரர்கள், ஆதி சூத்திரர்கள் ஆகியோர் இந்துத்துவா அல்லது இந்துமதத்தை எப்படி அணுகுவ தென்பதே, நான் மட்டுமல்ல இந்திய தலித் பகுஜன்கள் அத்தனை பேரும் இளமையிலிருந்தே கலாச்சாரத்தின் பெயராலோ ஒரு மதம் என்கிற அடிப்படையிலோ இந்து என்ற வார்த்தையைக் கேள்விப் பட்டதேயில்லை. முஸ்லிம்கள், கிறித்தவர்கள், பார்ப்பனர்கள், பனியாக்கள் இவர்களிலிருந்து நாங்கள் வேறுபட்டவர்கள் என்று சொல்ல மட்டும் கேட்டிருக்கிறோம்.

இந்த நான்கு வகைகளில் பார்ப்பானும், பனியாவுமே முற்றிலும் வேறுபாடானவர்கள். முஸ்லிம்களுக்கும், கிறித்தவர்களுக்கும் எங்களுக்கும் சில பொதுவான வாழ்க்கை அம்சங்களுண்டு. நாங்கள் எல்லோரும் மாமிசம் சாப்பிடுகிறோம்; தொட்டுப்பழகுகிறோம்; முஸ்லிம்களுடன் பல கலாச்சார உறவுகளை வைத்திருக்கிறோம். பீர்லா என்ற முஸ்லிம் பண்டிகையில் நாங்கள் கலந்து கொண்டு, கொண்டாடுகிறோம். முஸ்லிம் நண்பர்கள் எங்களோடு வயலுக்கு வருகிறார்கள். பார்ப்பனன், பனியாவுடன்தான் நாங்கள் தொடர்பு இல்லாமலிருந்தோம். ஆனால் இன்று திடீரென்று பார்ப்பான், பனியா ஆகியவர்களோடு பொதுவான மதத்தொடர்புடையவர்கள் நாங்கள் என்று சொல்லப்படுகிறோம். இது சாதாரண விஷயம் அல்ல; அதிர்ச்சி தருகிற விஷயம்.

## அனுபவமே ஆய்வுச் சட்டகமாக

இந்தக் காரணத்தினால் தான் எங்களுக்கும் பார்ப்பன பனியா சத்திரியாக்களுக்கும் இடையில் உள்ள சமூக - பொருளாதார -கலாச்சார வேறுபாடுகள் குறித்து ஆய்வு செய்ய நினைத்தேன். வாழ்வின் பல்வேறு வளர்ச்சி நிலைகளிலும் அனுபவங்களிலும் வைத்துப் பார்த்தால் சமூக கலாச்சார வேறுபாடுகளை முழுமையாக அறிந்து கொள்ளக்கூடும். சமுதாய அமைப்புகளை ஒப்பிட்டு மதிப்பீடு செய்ய, தனி நபர் அனுபவங்கள் உதவக்கூடும். குழந்தைப் பருவம், குடும்ப வாழ்க்கை, சந்தை உறவுகள், ஆதிக்க உறவுகள், நாம் வணங்கும் கடவுளர் இவை எல்லாவற்றின் ஊடாகவும் வெளிப்படும் வித்தியாசங்களை நாம் கவனிக்கவேண்டும். தனி நபர் அனுபவம், உண்மை நிலையைத் தெளிவுபடக் காண்பிக்கிறது. இந்த உண்மை சமூக விஞ்ஞான ஆய்வுக்கு மையமானது. தனி நபர் அனுபவத்தைப்

பகுத்தாயும் இம்முறை, பெண்ணிய வாதிகளால் பயன்படுத்தப் பட்டிருக்கிறது. மேலும் இந்திய தலித் பகுஜன் சிந்தனையாளர்களான மகாத்மாபூலே, அண்ணல் அம்பேத்கர், ஈ.வே.ரா. ஆகியோரும் இந்த முறையைப் பயன்படுத்தியிருக்கிறார்கள். மேல் நாட்டினரின் ஆய்வு முறையை அப்படியே சார்ந்திருப்பதற்குப் பதிலாக இவர்களின் முறையைக் கொண்டு வரலாற்றைக் கட்டுடைத்து மறு ஆக்கம் செய்ய முடியும் என்று உணர்கிறேன். உண்மையில் சாத்தியமான சிறந்த ஆய்வு முறையாக இதையே கருதுகிறேன்.

எனினும் இந்துச் சமூகத்தில் இதுவும் கூட பிரச்சினைக் குரியதாகவே உள்ளது. தலித் பகுஜன்களும் இந்துக்களும் ஒரே கிராமத்தில் வாழலாம். ஆனால் இந்து மேல்சாதிக் கலாச்சாரத் திற்கும், தலித் பகுஜன் கலாச்சாரத்திற்கும் தொடர்பு ஏதும் இல்லை. தலித் பகுஜன்கள் முற்றிலுமாக இந்துக் கலாச்சாரத்திலிருந்து விலக்கப் பட்டுள்ளனர். எனினும் இந்த விஷயத்தில் நான் மிகவும் அதிர்ஷ்டசாலி. நான் உஸ்மானியா பல்கலைக்கழகத்தில் சேர்ந்த பொழுது பார்ப்பனப் பெண்ணியர்கள் பலர் எனக்கு நண்பர் களானார்கள். அவர்களோடு நீண்ட விவாதம் நடத்தியிருக்கிறேன். தலித் மற்றும் சிவில் உரிமை இயக்கங்களுடன் எனக்கு இருந்த தொடர்புகள், இந்த இரு கலாச்சாரங்களையும் நான் ஆழமாகப் புரிந்து கொள்ள உதவியாய் இருந்தது. ஆகையால் இந்தச் சிறு புத்தகத்தில் பல பொதுவான கருத்துக்களை ஆய்ந்து பிரச்சினைகளுக்குள்ளாக்கி இருக்கிறேன். நான் இங்கு ஒன்றைத் தெளிவாகச் சொல்ல விரும்பு கிறேன். இதை எழுதுவது சந்தேகப்படுகிற பார்ப்பனரைத் திருப்திப் படுத்த அல்ல. திறந்த மனம் உடைய எல்லோருக்காகவும் எழுதுகிறேன். பார்ப்பன, பனியா, புதிய சத்திரிய அறிஞர்களுக்கு என்னுடைய வேண்டுகோள் இதுதான். கடந்த மூவாயிரம் ஆண்டுகளாகத் தலித் பகுஜன்களுக்கு எதைக் கற்பிப்பது எப்படிக் கற்பிப்பது என்பதை மட்டும் தான் அறிந்திருக்கிறீர்கள். இப்பொழுது உங்கள் நலனுக்காகவும், இந்தப் பெரிய நாட்டின் நலனுக்காகவும் நாங்கள் சொல்ல இருப்பதைக் கூர்ந்து கவனிக்கவும், கற்றுக்கொள்ளவும் தயராக வேண்டும். புதிய கேள்விகளுக்குச் செவி சாய்க்க மறுப்பவர்களும், புதிய பதிலைக் கற்றுக்கொள்ள மறுக்கிறவர்களும் இனி நெடுநாள் நீடிக்க முடியாது.

# நூன்முகம்

தலித் பகுஜன்கள் மற்றும் சிவில் உரிமை இயக்கங்கள் ஆகியவற்றுடன் நான் அடிக்கடி தொடர்பு வைத்துக் கொண்டதன் விளைவாகவே இந்நூல் வெளிவருகிறது. அவர்கள் பல வழிகளில் தங்களுடைய பண்பாடு, பொருளாதாரம், அரசியல் பற்றி என்னிடம் எடுத்துக்கூறினார்கள். இதில் நான் செய்தது என்னவென்றால் அந்தக் கருத்துக்களை வகைப்படுத்தித் தந்திருக்கிறேன் என்பதே. என்னுடைய சொந்த அனுபவங்களைத் தவிர இந்நூலில் காணப்படும் கருத்துக்கள் எல்லாம் படிப்பறிவில்லாத, அரைகுறையாகப் படித்த, ஓரளவு படித்த தலித் பகுஜன் அறிவாளிகளிடமிருந்து பெற்றவை ஆகும்.

பல்வேறு சந்தர்ப்பங்களில் என்னுடைய நண்பர்களாக உள்ள மேல்சாதிப் பெண்களும், ஆண்களும் தங்கள் சாதிகளிலும், குடும்பங் களிலும் உள்ள சமூகப் பொருளாதார வாழ்க்கை முறை பற்றி விவாதித்திருக்கிறார்கள். இவ்விவகாரம் தலித் பகுஜன் பண்பாடு மற்றும் அரசியல் பொருளாதார நோக்கிலிருந்து மேல்சாதியினரின் பண்பாடு மற்றும் பொருளாதாரத்தை விமர்சனம் செய்வதற்கு பேருதவியாக இருந்தது. அந்த நண்பர்களுக்கெல்லாம் எனது நன்றி.

இந்நூலின் பிரதியை எழுதிமுடித்தவுடன் நண்பர்கள் சுசிதாரு, துக்கிராலா, வசந்தா மற்றும் மனோகர்ரெட்டி ஆகியோர் இதை நூல்வடிவமாக்கத் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டார்கள். உண்மையில் இதற்காக அவர்கள் நிறைய நேரம் செலவிட்டார்கள். இந்நூல் அவர்களின் தத்துப்பிள்ளை என்றே சொல்லலாம்.

'சத்யசோதத்' அமைப்பின் உறுப்பினர்கள் அனைவரும் எங்களுடைய அட்பா விவாதங்களில் (அட்பா : கிராமவாசிகள் தங்களுடைய பிரச்சினைகளைப் பேசி விவாதிக்கும் இடம்) பங்கெடுத்துக்கொண்டு எனது கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டு விமர்சனமும் செய்தார்கள். குறிப்பாக டாக்டர் எல். கிம் மற்றும் ஏ. ராமநாதன் ஆகியோருடைய திறனாய்வுகள் ஒரு சில அத்தியாயங்கள் செழுமைபெற உதவின. ராமாமெல்கோட், வீணாசத்ருகுணா, கே.லலிதா மற்றும் பரமதேப் ஆகிய 'அன்வேசி' அமைப்பைச் சேர்ந்தவர்களும் இப்பிரதியை வாசித்துப் பல பயனுள்ள ஆலோசனை களை வழங்கினார்கள். பார்ப்பனர் வாழ்க்கை முறைகளைப் பற்றி இந்நூலில் விவரிக்கப்பட்ட கருத்துக்களை லலிதா அவர்கள் தந்து உதவியது மிகவும் பயனுள்ளதாகும்.

என் அன்பு ராமா மற்றும் என் உறவினர் கிருஷ்ணகாந்த் இந்நூலை முதலில் தட்டச்சு செய்து கொடுத்தார்கள். உஸ்மானியா பல்கலைக் கழகத்தில் பணியாற்றும் ஜி.ராமலிங்கம் இதை கம்ப்யூட்டரில் அமைத்துக் கொடுத்தார். கம்ப்யூட்டரில் ஏதாவது சிக்கல் ஏற்படும்போது ஆர்.சிரிவட்கன் எங்களுக்கு உதவினார். அவரும் ஒரு அறிஞராக இருந்தபடியால் இந்நூலின் பிரதியை வாசித்துத் தன்னுடைய பயனுள்ள கருத்தையும் ஊக்கத்தையும் வழங்கினார். எனது மைத்துனி ஏ. பாரதி, சகோதரர் கட்டையா, சகோதரர் மகன் கே. நரேஷ் மற்றும் எம். சுரேந்தர் ஆகியோர் இந்நூலை எழுதப் பல வடிவங்களில் உதவினார்கள். அவர்களுக்கு என் நன்றி.

## சொற்கள், கருத்துக்கள் பற்றிய குறிப்பு

இந்த நூலில் நான் பயன்படுத்தியிருக்கிற சொற்கள் மற்றும் கருத்துக்கள் பற்றி சில சொல்ல விரும்புகிறேன். அட்டவணை சாதியினரையும் மற்றும் இதர பிற்படுத்தப்பட்ட சாதிகளையும் குறிக்க நான் அரிஜன் என்ற வார்த்தையையோ அல்லது கீழ்சாதி என்கிற வார்த்தையையோ உபயோகிக்கவில்லை. ஏனெனில், இம்மாதிரி வார்த்தைகள், உற்பத்தியில் ஈடுபட்டிருக்கும் சாதிகளைக் கீழ்மைப் படுத்துபவையாகும். தலித் பகுஜன் வரலாற்றில் தாழ்த்தப்பட்ட மற்றும் இதர பிற்படுத்தப்பட்டவர்களைக் குறிக்கப் பல வார்த்தைகள் பயன்படுத்தப் பட்டு வந்திருக்கின்றன.

நவீன சிந்தையாளர்களில் மகாத்மா ஜோதிபா பூலேதான் இந்த உற்பத்திசாதிகளைப் பற்றி முதன்முதலில் எழுதியவர். அவர் இவர்களைச் சூத்திரர்கள், ஆதி சூத்திரர்கள் என்று பகுக்கிறார். ஆனால் அந்தச் சொற்களை இப்போது பயன்படுத்துவதில் பிரச்சினை இருக்கிறது. அக்காலத்தில் சூத்திர மேல்சாதியினரையும் (நான் இந்நூலில் அவர்களைப் புதிய சத்திரியர்கள் என்று குறிப்பிடுகிறேன்) இதர பிற்படுத்தப்பட்டவர் களையும் பிரிக்கிற தெளிவான பிரிவு ஒன்றும் இல்லை. பார்ப்பன, சத்திரிய, வைசிய, சூத்திர என்ற பிரிவுகளுக்குள் அடங்காதவர்கள் 'சூத்திரர்கள்' எனவும் தீண்டத்தகாதவர்கள் என்று சொல்லப்படுபவர்கள் ஆதி - சூத்திரர் என்றும் அழைக்கப்பட்டார்கள். இவ்வகையான கருத்துருவாக்கத்திலும் பிரச்சினைகள் உள்ளன. பார்ப்பன எழுத்தாளர்கள் சூத்திரர் என்கிற வார்த்தையை இழிவான பொருளிலேயே பயன்படுத்தினார்கள். நம்மைப் பொருத்தமட்டில் அது சுயமரியாதையையும் அரசியல் உரிமை உணர்வையும் சுட்டிக் காட்டுகிற சொல்லாக இல்லை. எனினும் பார்ப்பனர்கள் நம்மை சண்டாளர்கள், மிலேச்சர்கள், ராட்சதர்கள் என்று வசைபாடிய சொற்களைக் காட்டிலும் பூலே பயன்படுத்திய சொல் எவ்வளவோ

தேவலைதான். ஆங்கில வார்த்தையில் தீண்டத்தகாதவர்கள் என்று குறிப்பிடுவதுகூட நமக்கு ஏற்புடையதாக இல்லை.

பல சமூகவியல் அறிஞர்கள் அட்டவணை சாதியினர்க்கு வெளியில் இருப்பவர்களைச் சாதி இந்துக்கள் என்று குறிப்பிட்டார்கள். இந்தச் சொல்லாக்கத்தில் பிற்பட்டவர்களையும் இணைக்கிற தந்திரம் உள்ளது. அன்றாட வாழ்வில் இதர பிற்படுத்தப்பட்ட சாதியினரும் தாழ்த்தப்பட்ட சாதியினரைப் போலவே மேல்சாதியினரால் ஒடுக்கப் பட்டவர்களாகவே உள்ளனர். இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் இந்து அமைப்பிற்கு உட்பட்டவர்களாக இருந்த போதிலும், அங்கே சமத்துவமில்லை. எனவே சாதி இந்து என்கிற சொல்லையும் நான் நிராகரிக்கிறேன்.

டாக்டர் அம்பேத்கர் இந்த சாதிகளைப்பற்றி எழுத ஆரம்பித்த காலத்தில் இந்திய பிரிட்டிஷ் அரசாங்கம் உழைக்கும் சாதிகளைக் குறிப்பிட ஒடுக்கப்பட்ட சாதிகள் என்ற சொல்லையே பயன் படுத்தினார்கள். உற்பத்தி சாதிகள் எல்லாவற்றையும் அம்பேத்கர் நீண்டகாலமாக ஒடுக்கப்பட்ட சாதிகள் என்றே அழைத்துவந்தார். குடியேற்ற ஆட்சியாளர்கள் தீண்டத்தகாத சாதிகளுக்கு இடஒதுக்கீடு வழங்க எண்ணி ஒரு அட்டவணையைத் தயாரித்தார்கள். அப்போது அம்பேத்கர் அவர்கள் அதே பொருளில் அட்டவணை சாதியினர் என்று பயன்படுத்தினார். இருந்தபோதிலும் அதுவும் தீண்டத்தகாதவர் எனப்பொருள்படுகிற சொல்லாயிற்று. எப்படியோ இதுபோன்ற அடிப்படையில் கூட மதச்சார்பற்ற சொல் ஒன்று இதர பிற்படுத்தப்பட்ட சாதியினரைக் குறிப்பிட உருவாகவில்லை.

மராத்திய இலக்கியத்தில் அட்டவணை சாதியினரைக் குறிக்கப் பயன்படுத்திய 'தலித்' என்ற வார்த்தைக்கு அண்ணல் அம்பேத்கர் அவர்கள் மெல்ல மெல்ல மாறினார். தலித் என்ற சொல் ஒடுக்கப் பட்ட, சுரண்டப்பட்ட மக்களைக் குறிக்கிற சொல்லாகும். இது மகாராஷ்ட்டிரா மக்களின் சொல் வழக்கிலிருந்து தோன்றியிருக்க வேண்டும். எழுபதுகளில் மகாராஷ்ட்ராவில் 'தலித் பாந்தர்' (தலித் சிறுத்தைகள்) இயக்கம் தோன்றிய பிறகு தான் தலித் என்கிற சொல் பரவலாக எல்லோராலும் பயன்படுத்தப்பட்டது. தீண்டத்தகாத சாதிகளைச் சேர்ந்துள்ள அனைவரையும் குறிக்கிற சொல்லாக தலித் என்றசொல் இருக்கிறது. ஆந்திரப்பிரதேசத்திலுள்ள 'தலித் மகா சபை' போன்ற அமைப்புகள் சமீபகாலத்தில் அட்டவணை சாதியினர், மலை சாதியினர், இதர பிற்படுத்தப்பட்ட மக்கள் அனைவரையும் குறிக்க தலித் என்ற வார்த்தையைப் பயன்படுத்தி வருகின்றனர். இந்தியப் பத்திரிகைகளும், பெரும்பான்மை மக்களும் இன்னும் இந்தச் சொல்லைப் பயன்படுத்தவில்லை.

இப்படியிருக்க 1984ல் பகுஜன் சமாஜ் கட்சி உருவானதிலிருந்து 'பகுஜன்' என்ற சொல் பரவலாக அறியப்பட்டிருக்கிறது. பகுஜன் சமாஜ் கட்சியின் தேசியத் தலைவர் திரு. கன்ஷிராம் அட்டவணை சாதியினர், மலைவாழ் மக்கள் உள்ளிட்ட இதர பிற்படுத்தப் பட்டப்பட்டவர்களையும் பிரித்துக் காட்டும் பகுஜன் என்கிற சொல் பெரும்பான்மையினரைக் குறிக்கும் என்றார். தலித் என்கிற சொல்லைப் பயன்படுத்த வேண்டாம் எனவும் அவர் கூறினார். அது தலித்துகளை இதர பிற்படுத்தப்பட்டவர்களிடமிருந்து பிரித்து விடும் என்பது அவர் கருத்து. இதில் பிரச்சினை என்னவெனில் பகுஜன் எனத் தனியாகச் சொல்லும் போது அந்தப் பெரும்பான்மை மக்களின் தன்மை என்னவென்று இந்தச் சொல் குறிப்பிட்டுக் காட்டவில்லை. இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற் காகவே நான் அட்டவணை சாதியினர் மற்றும் இதர பிற்படுத்தப் பட்டோர் அனைவரது ஒடுக்கப்பட்ட நிலையைக் குறிக்க 'தலித் - பகுஜன்' என்ற வார்த்தையைப் பயன்படுத்தத் தீர்மானித்தேன். கன்ஷிராம் செய்ததுபோல் பட்டியலில் கண்ட பழங்குடியினரும் (அதாவது மலைவாழ் சாதியினர்) இதில் சேர்த்துக் கொள்ளப் படலாம். ஆனால் அவர்கள் சாதி அமைப்பிற்கு முற்றிலும் அப்பாற்பட்டவர்கள் என்பதால் நான் இந்த நூலில் அவர்களைப் பற்றி விவாதிக்கவில்லை.

சுரண்டப்பட்டு ஒடுக்கப்பட்ட பெரும்பான்மையான வர்களைக் குறிக்க, தலித் பகுஜன் என்ற வார்த்தையை நான் இந்நூலில் கையாண்டு உள்ளேன். இப்படிக் கூறும்போது இந்தச் சாதிகளுக்குள் இருக்கிற முரண்பாடுகள் பற்றியும் நான் அறிவேன். அதே நேரத்தில் உற்பத்தி அறிவு சார்ந்த பொதுவான அம்சங்களைப் போன்று, பண்பாடு மற்றும் பொருளாதார அம்சங்களும் பொதுவானவையாக துணியில் இழைகள் போன்று பின்னிக்கிடக்கின்றன.

ஆகையால் சாதிய அடக்குமுறை சுரண்டல் இவைகளிலிருந்து விடுதலைபெற உழைப்பு சார்ந்த கலாச்சாரத்தை அடிப்படையாகக் கொண்ட தலித் பகுஜன்கள் ஒன்றுபட்ட சக்தியாக மாறவேண்டும் என்று நான் விரும்கிறேன். நீண்ட போராட்டத்தினூடாக பார்ப்பன சாதிகள் சாதி அற்றவர்களாகவும் வர்க்கமற்றவர்களாகவும் மாறி விடுவர். அதன்பிறகு நாம் சமத்துவ இந்தியாவை உருவாக்குவோம். எப்படியோ இந்நூலின் உபதலைப்பில் 'சூத்திரா' என்ற சொல்லைப் பயன்படுத்தியுள்ள காரணம் அவர்களில் ஒருவனாக இந்த விமர்சகன் உள்ளான் என வாசகர்கள் எளிதில் புரிந்து கொள்வதற்காகவே.

**காஞ்சா அய்லய்யா**

5 பிப்ரவரி 1995
ஐதராபாத்

# நான் ஏன் இந்து அல்ல

*அத்தியாயம் 1*

# இளமைப் பருவ உருவாக்கங்கள்

## நான் ஏன் இந்து அல்ல

நான் இந்துவாகப் பிறக்கவில்லை. அதற்கான எளிய காரணம், தாம் இந்துக்கள் என்பது எமது பெற்றோருக்குத் தெரியாததே. இதனால் நான் ஒரு முஸ்லிமாகவோ, ஒரு கிறித்தவனாகவோ, ஒரு பவுத்தனாகவோ, ஒரு சீக்கியனாகவோ அல்லது ஒரு பார்சியாகவோ பிறந்தேன் என்று அர்த்தமல்ல. தென்னிந்தியாவில் ஒரு பின் தங்கிய கிராமத்தில் வாழ்ந்த என்னுடைய படிப்பறிவில்லாத பெற்றோருக்குத் தாங்கள் எந்த மதத்தைச் சேர்ந்தவர்கள் என்பதே தெரியாது. ஏதாவது ஒரு கடவுளை வணங்கும், ஆலயங்களுக்குச் செல்லும் மத சம்பந்தமான திருவிழாக்களில் கலந்து கொள்ளும் மக்களோடு மக்களாக வாழ்கின்றபோதுதான், அந்த மக்கள் ஒரு மதத்தைச் சார்ந்தவர்கள் ஆகிறார்கள். என்னுடைய பெற்றோருக்கு உள்ள ஒரே அடையாளம் என்னவென்றால், அவர்கள் ஒரு சாதியைச் சார்ந்தவர்கள் என்பதுதான். அவர்கள் 'குருமா' சாதியைச் சார்ந்தவர்கள். அவர்களுடைய கடவுள்களும் 'திருவிழா'க்களும் அந்தச் சிறிய கிராமத்திற்கு மட்டுமே உரியது. அவர்களுக்குப் பொதுவாக மத சம்பந்தமான வேறு அடையாளங்கள் எதுவும் கிடையாது.

இப்படிக் கூறுவதனால் அவர்கள் பழங்குடி என்றும் நாகரீகக் குறைவானவர்கள் என்றும் பொருள்கொள்ள முடியாது. என்னுடைய முன்னோர்கள் 500 ஆண்டுகளுக்குமுன் அந்தச் சமவெளியில் வாழ்க்கையைத் தொடங்கியவர்கள். அந்தக் கிராமப் பொருளாதாரத்தில் ஒன்றி வாழ்ந்த அவர்கள் கிராமப் பஞ்சாயத்திற்கோ அல்லது மாநில நிர்வாகத்திற்கோ தேவையான வரிகளைச் செலுத்தி வந்தார்கள். ஆடு, மாடுகளை வளர்ப்பவர்களாக இருந்தபடியால் அவர்கள் 'புல்லரா' என்ற ஆடு வளர்ப்பு வரியைச் செலுத்திவந்தார்கள். நான் பிறப்பதற்கு முன் என் பெற்றோர் ஆடு வளர்ப்பதை விட்டுவிட்டு விவசாயத்தில் ஈடுபட்டார்கள். எனினும் வளர்ப்பு வரியும், நிலவரியும் செலுத்தி வந்தார்கள். ஆனால் அவர்கள் மத சம்பந்தமான வரி எதுவும் செலுத்தியதில்லை. அது மட்டுமின்றி எல்லாச் சாதியினரும் ஒன்று கூடும் ஆலயம் எதற்கும் அவர்கள் என்றும் சென்றதேயில்லை. உண்மையில் அந்தக் கிராமத்தில் கிராம மக்கள் அனைவரும் கூடி வணங்குகிற ஆலயம் எதுவும் இல்லை.

ஏதோ எங்களுடைய குடும்பம் மட்டும்தான் மத சம்பந்தமான நடவடிக்கைகளில் புறக்கணிக்கப்பட்டது என்பதல்ல. ஏனெனில் எங்கள் குடும்பம் எதிலும் புறக்கணிக்கப்படக்கூடிய குடும்பம் அல்ல. இரண்டு தலைமுறைகளாக எங்கள் குடும்பத்தினர் சாதித்தலைவர்களாக இருந்து வந்திருக்கிறார்கள். எனது தாயாரும் எனது பாட்டியும் (என் தகப்பனுடைய தாயார்) குருமாச் சாதியில் ஒரு முக்கியத் தலைக்கட்டாகவே இருந்து வந்துள்ளார்கள். அந்தக் கிராமப் பொருளாதாரத்தில் குருமாக்கள், கொல்லாக்கள், கௌடர்கள், காப்பூக்கள், சாலாக்கள், சக்காளிகள், மங்காளிகள், மாடிகாக்கள் ஆகிய சாதியினர்தான் எண்ணிக்கையில் பெரும்பான்மையினர். அந்தக் கிராமத்தின் பொருளாதாரம் இம்மக்களுடைய அன்றாட நடவடிக்கைகளின் ஊடாகவே இயங்கி வந்தது.

## இந்துக்களுக்கும் எங்களுக்கும் உள்ள கலாச்சார வேறுபாடுகள்

என்னுடைய குழந்தைப்பருவ அனுபவங்கள் எவ்வாறு அமைந்தன என்பதை இங்கே கூற விரும்புகிறேன். நான் முதன்முதலாக உலகியல் உணர்வு பெறுவதற்குக் காரணமாக இருந்தது என்னைச் சுற்றியிருந்த குருமா சமூக அமைப்பேயாகும். என்னுடைய நண்பர்கள், விளையாட்டுத் தோழர்கள், உறவினர்கள் எல்லோருமே குருமாச் சாதியினராகவே இருந்தார்கள். சில சமயம் எனது நண்பர்கள் வட்டம் கௌடா, காப்பு சாதி வரை நீண்டது. நாங்கள் நண்பர்கள். ஏனெனில் நாங்கள் எல்லோரும் ஆடு வளர்ப்பவர்களாக இருந்தோம். நாங்கள் கால்நடைகளை வயலுக்கு ஓட்டிச் சென்று அவைகள் மேயும் போது 'சிற்றகோன்' (எங்களது கிரிக்கெட்) 'கூலிலு' (கோலி) 'பொங்காடா' (ஒளிந்து விளையாடுதல்) முதலிய விளையாட்டுக்களை விளையாடுவோம். எதிர்பாராத விதமாக ஒரு கௌடா நண்பர் எங்கள் வீட்டிற்கு வந்துவிட்டால், அவரும் எங்களுடன் உண்பார். ஆனால் அவர் சிறிது தள்ளி இருந்தே உண்பார். நாங்கள் காபூச் சாதி வீடுகளுக்குச் செல்லும்போது அவர்கள் பெற்றோர் எங்களை சற்று தூரத்தில்வைத்தே உணவளிப்பார்கள். சாப்பிடும்போது நாங்கள் ஒருவரை ஒருவர் தொட்டுக் கொள்ளமாட்டோம். ஆனால் பிறகு ஒன்றாகவே விளையாடுவோம். ஒன்றாகவே ஆறு, ஓடைகளில் நீர்அருந்துவோம். கால்நடைகள் மேயும் இடங்களுக்கு மதிய உணவு எடுத்துச் சென்றால் சில நேரங்களில் ஒருவர் உணவை ஒருவர் தொடமுயலும்போது எனது பெற்றோர் விதித்த கட்டுப்பாடுகள் நினைவிற்கு வரவே எங்கள் சாதிகளைக் கேவலமாகத் திட்டிக்கொண்டு நாங்கள் தனித்திருந்து உணவு உண்போம். சிறிது நேரம் கழித்து நாங்கள் ஒன்றாகி விடுவோம்.

விவசாயம் கிராமத்தின் கூட்டு நடவடிக்கையாகும். பசுக்கள், எருதுகள், எருமைகள் போன்றவை பொதுவாக சாதிகளுக்குரிய சொத்தாகவே இருந்தன. இதுவே கிராமப் பொருளாதாரத்தின் மையமாகும். நாங்கள் கால்நடைகளோடு வாழ்ந்து வந்ததால் கால்நடைகள் இருக்குமிடங்கள் பல சாதியினரும் சந்திக்குமிடங் களாயின. நாங்கள் வளர்ந்தபோது பொதுவான இந்த வாழ்வும் உணர்வும் தொழிலையும் உற்பத்தியையும் மையமாகக் கொண்டு பிரிந்தன. நானும் மற்ற குருமா நண்பர்களும் பொதுவான கால்நடைகளை மேய்க்கும் நடவடிக்கைகளைத் தவிர்த்து, செம்மறி ஆடுகள் வளர்ப்பதில் பயிற்சி பெற்றோம். குருமாக்களுக்கும், கொல்லாக்களுக்கும் இதுவே தொழிலாகும். ஆனால் எனது கௌடா நண்பர்கள் கள் இறக்கும் தொழிலிலும், காபூ நண்பர்கள் உழவுத்தொழிலிலும் ஈடுபடுத்தப்பட்டார்கள்.

## இளைஞர்களுக்கு சாதித்தொழில் பயிற்சி

எங்களில் ஒவ்வொருவரும் எங்கள் சாதிக்குரிய மொழிகளை அறிந்து கொண்டோம். எனக்கு செம்மறியாடு, செம்மறியாடு வளர்த்தல் சம்பந்தமான குறிப்பிட்டசொற்கள் கற்பிக்கப்பட்டன. செம்மறியாடுகளில் பலவகையான போலிகோரி, புல்லாகோரி, நல்லாகோரி போன்ற பெயர்களை நான் கற்றுக்கொண்டேன். செம்மறியாடுகளைப் பாதிக்கின்ற வியாதிகள் பற்றியும், ஆடுகள் குட்டி போடும் போது எவ்வாறு பிரசவம் பார்ப்பது என்பது பற்றியும், குட்டிகளை எவ்வாறு பராமரிப்பது என்பது பற்றியும், ஆடுகள் வளர எந்தப் பச்சைப்புற்கள் சிறந்தவை என்றும் நான் அறிந்துகொண்டேன். வெள்ளாடுகள் இலைகளைத் தின்பனவாகையால் அவற்றிற்குத் தனிக்கவனம் தேவைப்பட்டது (அவைகள் புற்களைத் தின்பதில்லை). செம்மறியாடுகளும், வெள்ளாடுகளும் வியாதியால் பாதிக்கப்பட்டால் அவைகளுக்கு எவ்வகையான பச்சிலை மருந்துகள் கொடுப்பது என்றும் நாங்கள் தெரிந்து கொண்டோம். அந்த வியாதிகள் நரம்பு சம்பந்தமானதென்றால் நரம்புகள் பாதிக்கப்பட்ட இடத்தில் எவ்வாறு சூடான இரும்பால் சூடு போடுவது என்றும் தெரிந்து கொண்டோம். கடினமான கவனம் நிறைந்த வேலை என்னவெனில் செம்மறியாட்டின் உடலிலிருந்து அது காயப் படாமல் ரோமத்தைக் கத்தரிக்கும் வேலையாகும். கவனமாகக் கத்தரிக்கோலைப் பிடித்து ரோமத்தை வெட்டிஎடுக்கும்போது தோல் வெட்டுப்படாமல் செய்ய வேண்டும். இவையெல்லாம் ஆடு வளர்ப்பதற்கான நுணுக்கங்கள். இவை எங்களுக்குக் கவனமாகப் போதிக்கப்பட்டன.

## இளம் பெண்களுக்கான பயிற்சி

இளம் பெண்களுக்கு எவ்விதமான பயிற்சியளிக்கப்பட்டது? எனது சகோதரிகளானாலும் மற்றவர்களானாலும் எல்லோருக்கும் ஒரேவித பயிற்சியே அளிக்கப்பட்டது. மூத்த பெண் குழந்தைகள் மூன்று வயதினராக இருக்கும்போதே தமது தம்பி தங்கைகளை எவ்வாறு பராமரிப்பது என்று பயிற்றுவிக்கப்பட்டனர். மூன்று மாதக் குழந்தையைத் தூக்கி எடுக்க மிகுந்த கவனம் தேவை. அதிலும் அந்தக் காரியங்களில் ஈடுபடுவோர் மூன்று வயது பெண் குழந்தையாக இருந்தால் அவர்களுக்கு அதிகமான பயிற்சி தேவை. தாய்மார்கள் சிறு குழந்தைகளை வீட்டில் விட்டு விட்டு காலை நேரத்தில் வயலுக்கோ, செம்மறியாடுகளைக் கவனிப்பதற்கோ செல்லும் போது குழந்தையைப் பராமரிப்பது தாய்மார்களுக்குப் பெரிய உதவியாகும். மேலும் நெல்லைக் குத்தி அரிசியாக்குதல், மிளகாய் அரைத்தல், வீட்டைக் கூட்டிச்சுத்தமாக வைத்திருத்தல், சாப்பாட்டுப் பாத்திரங்களைச் சுத்தம் செய்தல் போன்ற வேலைகளும் கற்றுக் கொடுக்கப்பட்டன.

இவை தவிர ஒவ்வொரு குருமா சாதிப் பெண்ணும் தன் மகளுக்கு முள்ளில் சிக்கியிருக்கிற கம்பளிரோமத்தைப் பிரித்தெடுத்து எவ்வாறு நூலாக்குவது என்றும் (டாடுவடகடம்) சொல்லிக் கொடுக்கிறார். இந்த வேலைகள் எல்லாம் மிகவும் நுட்பமானவை. பன்னிரெண்டு, பதின்மூன்று வயதான (பருவமடையும் வயது) ஒவ்வொரு குருமாப் பெண்ணும் சமையற்கலையின் அடிப்படையான விஷயங்களை நன்கு கற்றிருக்க வேண்டும். அடுப்பு பற்றவைக்கத் தெரிய வேண்டும். அடுப்பு மூன்று கற்களால் ஆனது. அதன் ஒரு பக்கம் நீண்டிருக்கும். அந்தப் பகுதியில் 'வோத்' எனப்படும் ஒரு பானையில் தண்ணீர் கொதித்துக் கொண்டிருக்கும். அடுப்பின் முக்கிய பகுதியில் சமையல் செய்யும்போது வோத் கவிழ்ந்துவிடாமல் கவனமாகச் செயல் படவேண்டும். குருமாப் பெண்கள் 'குராடு' என்னும் ஒரு வகையான உணவு சமைப்பதைக் கற்றுக்கொள்கிறார்கள். குராடு என்பது சோறு வடித்தபிறகு மிஞ்சிய கஞ்சியை லேசாகப் புளிக்க வைத்து, அரிசியைச் சமைக்கும் போது தண்ணீருக்குப் பதிலாகப் பயன் படுத்துவதாகும். குராடு உடலுக்கு நல்லது. அத்துடன் அது உடலில் இருக்கும் தீய ஆவிகளை விரட்டுகிறது. குருமா மற்றும் இதர தலித் பகுஜன் சாதிகளில் இது ஒரு முக்கிய உணவு. ஒவ்வொரு பெண்ணும் இந்த சமையல் முறைகளை இளமையிலேயே கற்றுக்கொள்கிறார்கள். நகர்ப்புறப் பெண்கள் துணிகளை வெளுத்து சுத்தம் செய்யக் கற்றுக்கொள்ள வேண்டும். ஆனால் கிராமப்புறப் பெண்கள் இதைக்

கற்றுக் கொள்வதில்லை. ஏனெனில் இது வண்ணாரப் பெண்களுக்குரிய வேலை. 'சக்காளி' (வண்ணான்) குடும்பப் பெண்கள் ஒவ்வொருவரும் இதைச் செய்கிறார்கள். ஒவ்வொரு வகையான துணிகளையும் எவ்வாறு வெளுப்பது என்று அவர்களுக்குக் கற்றுக்கொடுக்கப்படுகிறது.

இந்தக் குடும்பத்தில் பிறந்த பெண்களுக்கு உழவு சாலில் எப்படி விதை விதைப்பது என்பதும் குனிந்து நின்று நடவு நடுவது என்பதும் நடவு நட்டுக் கொண்டே பின்புறமாகச் சேற்றில் விழாமல் நகர்வது எப்படி என்பதும் கற்றுக் கொடுக்கப்படுகிறது. அனுபவம் வாய்ந்த பெரியவர்கள் இதைக் கற்றுக்கொடுக்கிறார்கள். இளமை யானவர்கள் இதைக் கற்றுக்கொண்டு திறமையாகச் செய்வதில் பெருமையடைகிறார்கள்.

## பாலியல் உறவுகள்

பாலியல் நடவடிக்கைகள் மற்றும் பழக்கங்கள் பற்றி இளைஞர்களுக்குப் போதிப்பது குடும்பத்தின் ஒரு பகுதியாகும். ஒழுக்கமான பெண்கள் பற்றியும் ஒழுக்கமில்லாத பெண்கள் பற்றியும், அவர்களுடைய வாழ்க்கை முறை பற்றியும், கணவன்மார்களுடனும் மற்றவர்களுடனும் அவர்களுடைய உறவுகள் பற்றியும் வயதானப் பெண்கள் கூடிப் பேசுவதை இளம் பெண்கள் காது கொடுத்துக் கேட்கிறார்கள். ஒரு தந்தை தன் வாழ்வு பற்றியோ தான் மற்ற பெண்களுடன் கொண்டிருந்த உறவு பற்றியோ தன் குழந்தைகளுக்கு முன் பேசத் தயங்குவதில்லை. தகப்பனைவிட தாயே குழந்தைகளிடம் அதிகமான தொடர்புடையவளாக இருக்கிறாள். கோழி தன் குஞ்சுகளைக் காப்பதுபோல் தாய் தன் குழந்தைகளைப் பேணி வளர்க்கிறாள். தன்னுடன் வயலுக்கு அழைத்துச் சென்று சிறு சிறுவேலைகளைக் கொடுக்கிறாள். வயலுக்குச் செல்லும் போது தனது குழந்தைகளுடன் அவர்களின் பிரச்சினைகளைக் குறிப்பாக, பெண் குழந்தைகளின் பிரச்சினைகளைப் பகிர்ந்து கொள்கிறார். வாழ்வின் எல்லா அம்சங்களையும் குழந்தைகளுடன் பேசுவது ஒன்றும் இங்கு வழக்கத்திற்கு முரணானது அல்ல.

ஒரு தலித் பகுஜன் பெண் தன் கணவனல்லாத வேறொரு ஆணுடன் தொடர்பு வைத்திருந்தால் அது ரகசியமானதாக இருப்பதில்லை. அந்தக் கிராமம் (வாடா) முழுதும் அதுபற்றி விவாதிக்கப்படுகிறது. குடும்பத்திலுள்ள குழந்தைகளும் அவற்றைத் தெரிந்து கொள்கின்றனர். குறிப்பாகப் பெற்றோர்கள் தமக்குள் சண்டையிட்டுக் கொள்ளும்போது அனைத்தும், வாழ்வின் எல்லா அம்சங்களும் வெளிப்பட்டு விடுகின்றன. குழந்தைகளுக்கு வீடு என்பது

இன்பமும் துன்பமும் கலந்த ஒரு இடமாகும். எல்லாம் வெளிப் படையாகவே நிகழ்கிறது. ஆண் குழந்தைகள் பெண் பற்றியும், பாலியல் பற்றியும், தன்னுடைய நண்பர்கள் மூலம் கால்நடைகள் மேய்க்கு மிடங்களில் தெரிந்து கொள்கிறார்கள். பாலியல் உறவுகள் பற்றிய சோதனைகள் வயல் காட்டிலேயே நிகழ்த்தப்படுகின்றன. வாழ்வின் இன்ப, துன்பங்கள் அனைத்தும் இளமையிலேயே கற்றுக் கொள்ளப்படுகின்றன. நல்லொழுக்கம், தீயொழுக்கம் பற்றிய எல்லாக் கருத்துக்களும் விவாதிக்கப்படுகின்றன. இவ்வகையான ஒழுக்கங்கள் எல்லாம் ஏதோ கடவுளால் கற்பிக்கப்பட்ட அல்லது புனித நூற்களில் போதிக்கப்பட்ட ஒழுக்கங்கள் அல்ல. எல்லாம் குடும்ப அமைதியையும் ஒற்றுமையையும் மையமாகக் கொண்டவை யாகும்.

## சாதிய மொழி

சாதிய மொழி தனக்கான இலக்கணத்தோடு அமைந்துள்ளது. அந்த இலக்கணம் ரொம்பவும் நெகிழ்ச்சியுடையதாகும். உற்பத்தியை அடித்தளமாகக்கொண்டு வடிவமைக்கப்பட்டது. எழுத்தின் உதவியின்றித் தானாக வளர்ந்த இம்மொழி, தரமான பார்ப்பன தெலுங்கைவிட எந்த விதத்திலும் குறைவானதல்ல. குழந்தைகளின் மொழியனுபவம் பொருள்கள், பறவைகள், பிராணிகள், மரங்கள், பூச்சிகள் போன்ற அவைகளைச் சுற்றியிருக்கின்ற பொருள்களின் பெயர்களைத் தெரிந்து கொள்வதிலிருந்து ஆரம்பமாகிறது. உயிருள்ள தோ, உயிரற்றதோ எல்லாப் பொருளுக்கும் ஒரு பெயர் உண்டு. பல பொருள்களுக்குப் பார்ப்பனர் வழக்கில் சொற்களே கிடையாது. எங்களது பெயர் உருவாக்கத்தைப் பார்ப்பன மொழியால் அறிந்து கொள்ளமுடியாது. எழுத்து மூலமாக அல்லாமல் வாய்மொழி வாயிலாக அவை திரும்பத் திரும்பக் கற்பிக்கப்படுகிறது. பயன்பாட்டை அடிப்படையாகக் கொண்டது இம்மொழி.

ஒவ்வொரு சாதியும் உற்பத்தி நடவடிக்கைகளில் இருந்து உருவானதாகும். மொழியும் உற்பத்தியை மையமாகக்கொண்டே உருவானதாகும். குருமாக்களுக்கென்று தனித்த சொல் வழக்கு உண்டு. அது போன்றே லம்பாடா, இருக்காலா, கோயா போன்ற சாதியினருக்கும் தனித்தனியே சொல் வழக்குகள் உண்டு. குருமாக்கள் செம்மறியாடு, வெள்ளாடு, மரங்கள், செடிகள் போன்றவற்றின் பெயர்களோடு ரோமம் வெட்டுகிற கருவிகள், கம்பளி நெய்கிற கருவிகள் போன்றவற்றின் பெயர்களையும் தெரிந்து வைத்திருக்கிறார்கள். கள் இறக்கும் தொழில் தொடர்பான சொற்கள் எல்லாவற்றையும் ஒரு

கௌடா கற்றுக் கொள்கிறார். தனது சாதித் தொழிலை மற்றவர்களுக்கு விளக்குவதற்கு ஒருவன் பெற்றுள்ள திறமையானது மந்திரம் ஓதும் போது பல கடவுள்களின் பெயர்களை ஓதுவதற்கு ஒரு பார்ப்பனன் பெற்றுள்ள நளினங்களைவிட அதிகமானது. இதிலிருக்கிற முரண்பாடு என்னவென்றால் ஒரு கடவுளுடைய அல்லது பல கடவுள்களுடைய பெயர்களை மனப்பாடம் செய்து ஒப்புவிப்பது என்பது ஒரு அறிவாற்றலாகக் கருதப்படுகிறது. அதே நேரத்தில் உற்பத்தி சம்பந்தமான சொற்களையும், உற்பத்தி தொடர்புடைய கருவிகளையும் கற்றிருப்பதை அறிவுடமையாக அங்கீகரிப்பதில்லை. பார்ப்பனர்கள் தம்மை உதாரணமாகக் கொண்டே அறிவை வரையறுத்துள்ளார்கள். ஆனால் ஒவ்வொரு சாதியும் அதனதன் அறிவுப் பெட்டகத்தையும் சொற்களஞ்சியத்தையும் கொண்டுள்ளது என்பதே உண்மை. ஒவ்வொரு சாதியும் அதற்கே உரிய தனித்துவமான உணர்வுகளைக் கொண்டுள்ளன. தனிநபர்கள் என்ற முறையில் நம்மைப் பற்றியும் நமது சுற்றுப்புறத்தைப் பற்றியும் நமது உற்பத்தி குறித்தும் மறு உற்பத்தி பற்றியும் உணர்வு உடையவர்களாகவே நாம் இருக்கிறோம். இந்த உணர்வுக்கும் மதத்திற்கும் எந்தத் தொடர்பும் கிடையாது. மொழி என்பது குறிப்பான இந்த உணர்வின் வெளிப்பாடாகவும், கருத்துப் பரிமாற்றத்திற்கான சமுதாய சாதனமாகவுமே இருக்கிறது.

### எங்கள் தெய்வங்கள் மற்றும் உணர்வுகள்

மேல் உலக உணர்வு, தெய்வீகத்தன்மை, ஆன்மிகம் ஆகியவை எங்களை இந்துக்களிடமிருந்து மேலும் பிரித்தது. எங்கள் சாதிக் குழந்தைகளுக்குக் கடவுள் உணர்வு (ஜேஜா) என்பன நிலா உருவத்தில் அறிமுகப் படுத்தப்பட்டன. குழந்தைகள் வளரும்போது பொச்சம்மா, பொலிமீரம்மா, கட்டமைசம்மா, கட்டமராஜு, பொத்தராஜு போன்ற தெய்வங்களின் பெயர்களையும் தெரிந்து கொள்கிறார்கள். தலித் பகுஜன்கள் மத்தியில் கோவில் பற்றிய கருத்து குறிப்பிட்ட இடத்திலோ அல்லது குறிப்பிட்ட வடிவத்திலோ இல்லை. எல்லா ஆண் பெண் கடவுள்களும் எல்லா இடங்களிலும், எல்லா வடிவங்களிலும் இருப்பதாகவே அவர்கள் கருதுகிறார்கள். எல்லா தலித் பகுஜன் குழந்தைகளும் இள வயதிலேயே இந்த தெய்வங்களைப் பற்றித் தெரிந்து கொள்கிறார்கள். பொன்னாறு, சின்னபாண்டுக, பெட்ட பாண்டுக போன்ற திருவிழாவின் போது நிகழும் சாதிக்கூட்டங்களில் எல்லாக் குழந்தைகளும் கலந்து கொள்கிறார்கள். பொச்சம்மா கோபமாக இருப்பதால்தான் பெரியம்மை வருகிறது என்றும், பொலிமீரம்மா கோபமாக இருப்பதால்தான் மழை தாமதமாக

வருகிறதென்றும் ஒவ்வொரு குழந்தையும் நம்புகிறது. கிராமத்துக் குளம் நிரம்புவதும், நிரம்பாமல் இருப்பதும் கட்டமைசம்மாவின் இரக்கத்தைப் பொறுத்தது. பொத்தராஜு கோபத்தினால் தான் தானியங்களும் பயிர்களும் களவு போகின்றன. குருமாக்களுக்கு, வெள்ளாடுகளும் செம்மறியாடுகளும் நலமாக இருப்பது பீரப்பா என்ற தெய்வத்தின் வாழ்த்தைப் பொறுத்தது. இவையெல்லாம் சாதிக்கே உரிய தெய்வங்கள்.

சாதிக்கு மட்டுமே உரிய தெய்வங்களும் கிராமத்திற்கே பொதுவான தெய்வங்களும் உண்டு. இருந்தும் எங்களுக்கும் ஆவி, ஆன்மா பற்றிய நம்பிக்கைகள் உண்டு. உயிரோடு இருந்தபோது நம் மூதாதைகளுக்கு நல்ல உணவு அளிக்காவிடில் பேய் உருவத்தில் வந்து நம்மோடு வாழ்வார்கள் என்பது ஒரு நம்பிக்கை. சொர்க்கம், நரகம் என்பன இங்கு கிடையாது. இறந்தவர்கள் வானத்தில் எங்கோ வாழ்வதாக ஒரு உணர்வு. தலித் பகுஜன் ஆவி என்பது ஒரு இந்து ஆவி அல்ல. ஏனெனில் இந்து ஆண் வழித் தெய்வங்கள் எங்களுக்குக் கிடையாது.

நாங்கள் பள்ளிக்குச் செல்லுகிற வரையில் எங்களுக்கு பிரம்மா, விஷ்ணு, ஈஸ்வரன் ஆகியன பற்றி எதுவுமே தெரியாது. நாங்கள் முதன் முறையாக அவைகளைப் பற்றிக் கேட்டவுடன் அவைகள் எங்களுக்கு அல்லா, இயேசு போன்று புதியதாகத் தோன்றின. புத்தர் பற்றி எங்களுக்கு எதுவும் தெரியாது. பிறகுதான் புத்தர் என்பவர் பார்ப்பனர்களுடைய யாகம், பலியிடல் போன்ற சடங்குகளுக்கு எதிராக தலித் பகுஜன்களைத் திரட்டியவர் என்று அறிந்தோம்.

பார்ப்பன, பனியா, சத்திரியக் குழந்தைகள் பேசும் மொழி மற்றும் அவர்களுடைய சமூக உறவுகள், தொடர்புகள் எல்லாம் இந்துக் கலாச்சாரத்தின் ஒரு பகுதியாகவே கருதப்படுகின்றன. அவை எங்களுக்குப் புறம்பான அன்னிய கலாச்சாரமேயாகும். பார்ப்பனக் குழந்தைகள் வயலுக்குப் போவதற்கோ, கால்நடைகளை மேய்ப்பதற்கோ, பயிர்களைக் காப்பதற்கோ கற்பிக்கப் படுவதில்லை என்பதை நான் பின்னாளில் தெரிந்து கொண்டேன். ஆனால் அவர்கள் இளமையிலேயே பள்ளிக்குச் செல்ல கற்பிக்கப்படுகின்றனர். மரபு வழிப்பட்ட ஒரு பார்ப்பனன் தன்னுடைய குழந்தைகளைத் தொடுவதில்லை. குழந்தை வளர்ப்பு மனைவிக்கு மட்டுமே உரிய சுமை. குழந்தையைக் குளிப் பாட்டுவது அசிங்கமான காரியம் என்று அது தாயிடம் விடப்படுகிறது. தாய் குழந்தையைப் பராமரிக்கும் போது தந்தை அடுப்படியில் மனைவிக்கு உதவியாக வேலை செய்வாரா? இல்லை. அடுப்படியும் ஒரு அசிங்கமான இடமே.

அவர் அங்கேயும் நுழைய மாட்டார். இவ்விதம் பார்ப்பனக் கருத்தாக்கங்களான தூய்மை, தீட்டு என்பன அவர்களது வீட்டிலேயே நடைமுறையில் உள்ளன. நமது உடல் உழைப்பு தொடர்புடைய சொற்களஞ்சியத்திற்கு மாற்றாக பார்ப்பனர்கள் வேதம், ராமாயணம், மகாபாரதம், புராணம் முதலிய வார்த்தைகளைக் கற்றுக் கொள்கிறார்கள். இளவயதிலேயே அவர்கள் பிரம்மா, விஷ்ணு, ராம, கிருஷ்ணா, லெட்சுமி, சரஸ்வதி, சீதா, சாவித்திரி முதலிய பெயர்களைக் கேட்கிறார்கள். அவர்களுடைய குழந்தைகளுக்கு இந்தக் கடவுள்களுடைய சாகசங்கள் அதாவது கொலை செய்தல் பற்றி,போதிக்கப்படுகிறது. பெண் கடவுள்களின் பெண்மை பற்றியும் போதிக்கப்படுகிறது. உதாரணமாக, விஷ்ணு ஒரு பாம்பின் மீது படுத்திருக்கும் போது லெட்சுமி அவரின் கால்களை அழுத்திக் கொண்டிருப்பதாகக் கற்பிக்கப்படுகிறது.

பார்ப்பனக் குடும்பத்திலும் பொச்சம்மா, மைசம்மா, எல்லம்மா போன்ற தெய்வங்களைப் பற்றிப் பேசுவார்கள். ஆனால் பிரம்மா, விஷ்ணு, மகேசன் போன்றோருக்குக் காட்டும் மரியாதையை நமது தெய்வங்களிடத்திலே காட்டுவதில்லை. பொச்சம்மா, மைசம்மா என்பவை அவர்களுக்கு சூத்திர தேவதைகள். தூய்மையற்ற கெட்ட காரியங்களில் தான் இந்தத் தெய்வங்கள் சக்திவாய்ந்தவர்கள் என்பது அவர்களின் கருத்து. லெட்சுமி, சரஸ்வதிக்குள்ள மரியாதை பொச்சம்மாவுக்கு இல்லை. ஏனெனில் அவர்கள் இருவரும் லட்சிய புருஷன்களின் லட்சிய மனைவிகள். மைசம்மா மற்றும் பொச்சம்மாவின் கணவன் பெயர் யாருக்கும் தெரியாது. பார்ப்பனன் வீட்டில் பெரியம்மை நோய் வந்தால் அவன் பொச்சம்மாவின் பெயரைச் சொல்லிப் பிரார்த்தனை செய்கிறான். ஆனால் இகழ்ச்சியாகவேப் பிரார்த்திக்கிறான். அதற்குக் காரணம் அவை சூத்திர தெய்வங்கள் என்பதேயாகும். பார்ப்பன, பனியா குழந்தைகளுக்கு பொச்சம்மா, மைசம்மா, எல்லம்மா போன்ற பெயர்களைச் சூட்டுவது இல்லை. அதேசமயம் தலித் பகுஜன் குடும்பங்களில் பொச்சம்மா, மைசம்மா, எல்லம்மா போன்ற பெயர்கள் மரியாதைக்கு உரியவர்களாக உள்ளன. கணவன் இல்லாத தெய்வங்களைத் தலித் பகுஜன்கள் யாரும் இழிவாகப் பேசுவது இல்லை. ஏனெனில் எமது கிராமங்களில் கணவனை இழந்த பல விதவைகள் மரியாதைக்கு உரியவைகளாக இருக்கிறார்கள். அவர்கள் தொழில் திறமையும், பிறரிடத்தில் அவர்கள் பழகும் விதமும் அவர்களுக்கான மரியாதையை உருவாக்கியுள்ளன. எங்கள் கிராமத்தில் பல இளம் விதவைகள் மரியாதைக்கு உரியவர்களாகவும் விவசாயம் சம்பந்தப்பட்ட வேலைகளில் குழுத்தலைவிகளாகவும் உள்ளனர். விதவைகள் தலித் பகுஜன் சமூகத்தில் புறக்கணிக்கப்படுவதில்லை.

பொச்சம்மாவிற்கும் மக்களுக்கும் இடையே பூசாரி யாரும் கிடையாது. எங்கள் தெய்வங்களை வழிபட பூசாரியோ புரோகிதரோ தேவையே இல்லை. குழந்தைகளாக இருக்கும்போதே பெரியம்மை, காய்ச்சல் போன்ற நோய்களுக்கு நாங்கள் பலியாகாமல் இருக்கும்படி அந்த அம்மனை வேண்டிக்கொள்வது வழக்கம். இந்தக் கடவுளுக்கு எங்களுடைய் மொழி தெரியாதென்றோ அல்லது கடவுள்களிடத்தில் சமஸ்கிருத மொழியில் பேச ஒரு புரோகிதன் தேவை என்றோ நாங்கள் கருதியதில்லை. எங்கள் முன்னோர்களைப் போன்றே நாங்களும் இந்த தெய்வங்களிடத்தில் எங்கள் மொழியிலேயே வழிபட்டு வருகிறோம். இந்தத் தெய்வங்களுக்கும் எங்களுக்கும் இதுவே நெருக்கமான தொடர்புக்குக் காரணமாக உள்ளது.

ஒரு இந்துக்குடும்பம் என்பது படிநிலையான ஏற்றத் தாழ்வைக் கொண்டது. பெண்கள் ஆண்களுக்குக் கீழ்ப்படிய வேண்டும். குழந்தைகள் பெரியோர்களுக்குக் கீழ்ப்படிய வேண்டும். குடும்பத்தில் ஆணாக இருப்பதென்பதும் வயதில் மூத்தவராக இருப்பதென்பதும் அதிகாரத்திற்கு வழிவகுக்கின்றன. பார்ப்பனக் குழந்தைகள் சூத்திரத் தொழில் என்று கூறும் உற்பத்தி தொடர்பான வேலைகளில் ஈடுபடாதிருக்கும்படிக் கற்பிக்கப்படுகிறார்கள். அதுபோலவே தலித் பகுஜன் சாதிக் குழந்தை களுடன் அவர்கள் நட்பு கொள்வதும் கண்டனத்திற்குரியது. மேல் சாதியினர் தலித் பகுஜன்களை அசிங்கமானவர்கள் என்கிறார்கள். சூத்திரன் என்பது ஒரு இழிவான சொல். சண்டாளன் என்பது அதை விடவும் கேவலமான சொல். ஆதிக்க சாதிக் குழந்தைகள் தலித் பகுஜன் குழந்தைகளிலிருந்து வேறுபட்டு வாழும்படி கற்பிக்கப்படுகின்றன. இந்த மனிதாபிமனமற்ற தன்மை இளமையிலேயே உருவாகிவிடுகிறது. தலித் பகுஜன்களை வெறுப்பது அவர்கள் உணர்வின் ஒரு அம்சமாகிவிடுகிறது.

ஆண் பெண் பாலியல் உறவு பற்றி விவாதிப்பது இந்துக் குடும்பங்களில் தடை செய்யப்படுகிறது. தாய் தன்னுடைய பாலியல் அனுபவம் பற்றித் தன் மகளிடத்தில் பேசுவதேயில்லை. தாயின் மீது தந்தை செலுத்துகிற வன்முறை குறித்துப் பார்ப்பன, பனியா குடும்பங்களில் விவாதிக்கவே முடியாது. இந்த நிலை தலித் பகுஜன் குடும்பங்களில் இல்லை. இங்கே தந்தை தன் குழந்தைகளின் முன்னிலையிலேயே தாயாரைத் திட்டுகிறார். அதே நேரத்தில் தாயாரும் எதிர்வாதம் செய்கிறாள். இவற்றிற்குக் குழந்தைகள் சாட்சிகளாக இருக்கிறார்கள். ஆனால் இந்துக் குடும்பங்களிலோ தந்தை, தாயை எப்படி வேண்டு மானலும் திட்டலாம். அதற்கு, தாய் எந்த மறுப்பும் சொல்ல மாட்டாள். மனைவி என்பவள் எல்லாக்

கொடுமைகளையும் சகித்துக் கொள்ள வேண்டும். எவ்வளவுக்கெவ்வளவு சகிப்புத் தன்மையுடைய வளாக இருக்கிறாளோ அவ்வளவுக்கவ்வளவு அவள் பாராட்டப் படுகிறாள். மேலும் பார்ப்பனர்கள் தங்கள் குழந்தைகளுக்கு 'மடி'யின் அவசியத்தைப் பற்றி கற்றுக்கொடுக்கிறார்கள். மடி என்பது சமையல் செய்யும் போது நனைந்த துணியைத் தூய்மையின் அடையாளமாகக் கட்டிக்கொள்ளுதல். ஒவ்வொரு பெண்ணும் குடும்பத்திலுள்ள ஆண்களின் சுவைக்கு ஏற்ப சமையல் செய்ய வேண்டும். பார்ப்பன உணவில் பத்துப் பனிரெண்டு வகையான காய்கறிகளுடன் சமையல் செய்து வைக்க வேண்டும். இது தான் 'பிராமண போஜனம்' எனப் படுவது. ஒவ்வொரு பார்ப்பனப் பெண்ணும் கடவுளுக்கு இணையான தன் கணவனுக்குப் பெருந்தீனியைப் படைக்க வேண்டும். கணவனுக்குப் படைப்பது கடவுளுக்குப் படைப் பதைப் போல முக்கியமானது என அவளுக்குக் கற்பிக்கப்படுகிறது. இந்துக் குடும்பங்களில் கடவுளும் ஆண்களும் சமமானவராகவே கருதப்படுகின்றனர். ஆனால் எமது தலித் பகுஜன் குடும்பங்களில் இந்நிலை முற்றிலும் எதிரானது.

## மாடிகாக்களும் இந்துக்களும்

மாடிகாக்களை இந்துத்துவவாதிகள் தங்கள் மதத்தின் ஒரு பகுதியாகச் சொல்கிறார்கள். எங்கள் கிராமத்திலிருக்கும் நாற்பது மாடிகாக் குடும்பங்களும் கௌடா குடும்பங்களுக்குப் பக்கத்திலேயே வசிக்கிறார்கள். இந்த இரண்டு சாதியினரும் எந்த வகையிலும் ஒருவரோடு ஒருவர் தீண்டுகிற உறவு கொள்வதில்லை. எனது குழந்தைப் பருவத்தில் இந்த சாதியைச் சார்ந்த நண்பர்கள் யாரும் எனக்கு இல்லை. என்னை விட வயதில் இளைய மாடிகா சாதியினர் பண்ணையில் வேலை செய்பவர்களாக இருந்தார்கள். ஆனால் அவர்கள் குடும்பமும் கலாச்சாரமும் எங்களைப் போன்றதாகவே இருக்கின்றன. எங்களுக்கும் அவர்களுக்கும் என்ன வேறுபாடென்றால், மாடிகாக்கள் இளமையிலிருந்தே எப்பொழுதும் பயந்த சுபாவத்துடனும் பணிவாகவும் இருக்குமாறு வற்புறுத்தப்படுகிறார்கள். இளையவர் முதல் முதியவர் வரை எல்லா 'மேல்' சாதியாரையும் அய்யா, பச்சன் என்று அழைக்கும்படியாகக் கற்பிக்கப்படுகிறார்கள். ஐந்து வயதில் பண்ணையில் வேலை செய்யும்போது அவர்கள் ஆடு மாடுகளை மேய்க்கவும், பயிர்களைக் காக்கவும் கற்பிக்கப்படுகிறார்கள். அவர்களது குழந்தைப்பருவம் எங்களது குழந்தைப் பருவத்தைவிடக் கரடுமுரடானது. ஆனால் ஒரு சில விசயங்களில் அவர்கள் எங்களைவிடவும் திறமையானவர்களாகவும் அறிவாளிகளாகவும் இருக்கிறார்கள். ஆடு மாடுகளின் தோலை உரிக்கவும் அவற்றைப்

பதப்படுத்திப் பண்ணைகளுக்குத் தேவையான கருவிகளைச் செய்யவும் காலணிகளைச் செய்யவும் கற்றிருக்கிறார்கள். எங்களைவிடவும் தப்படிப்பதில் அவர்கள் திறமையானவர்கள். பார்ப்பன மற்றும் கோமுட்டி நிலப்பிரபுகளுக்கு முன் மாடிகாக்கள் குழந்தைப் பருவத்திலிருந்தே இது போன்ற தொழில் செய்து பணிவுடன் நடந்து கொள்ள கற்பிக்கப்பட்டார்கள். அன்றாட வாழ்க்கைச் சீவனத்திற்கே அவர்கள் பெரும் போராட்டத்தைச் சந்திக்க வேண்டியிருந்தது. நிலப்பிரபுக்கள், பார்ப்பனர்கள், கோமுட்டிகள் முன் பணிந்து நிற்கும் படியாக இருந்தது.

சக்காளி, மங்காளி குழந்தைகளுக்கும் இதே நிலைதான் இருந்து வந்தது. வீட்டிற்குள் இவர்கள் எல்லோரும் சமமாக உண்டு, குடித்து, புகைத்து வாழ்ந்து வந்தார்கள். இளமையிலிருந்தே அவர்கள் சமத்துவமாகப் பழகி வந்தார்கள். தாய் தந்தையர், தம் குழந்தைகளுக்கு இவற்றைக் கல்வியின் ஒரு அம்சமாகவே கற்பித்தார்கள். சமத்துவம் ஒழுக்கம் என்பதெல்லாம் பெற்றோர்களுக்கு ஒருவிதமாகவும் குழந்தைகளுக்கு வேறுவிதமாகவும் இருக்கவில்லை. இருந்தபோதும் ஆதிக்க சாதியினர் முன் நடுங்கி ஒடுங்க வேண்டும் என்று பெற்றோர்களே தம் குழந்தைகளுக்குப் போதித்தார்கள். இதனால் மாடிகா, சக்காளி, மங்காளி சாதியைச் சார்ந்த பெற்றோர்கள் மேல் சாதியினரிடம் அதிக மதிப்பும் உண்மையான அன்பும் வைத்திருக்கிறார்கள் என்பது அல்ல. மேல் சாதி நிலவுடைமையாளர்களும் பார்ப்பன மற்றும் பனியாக்களும் தங்களை வேலையிலிருந்து நீக்கிவிடுவார்கள் என்ற பயத்திலே தான் அப்படி நடந்துகொண்டார்கள். மகனே அந்த தேவடியா மகனிடம் கவனமாக நடந்து கொள். பயப்படுவது போல நடி. இல்லாவிட்டால் அவன் நம் வயிற்றிலடிப்பான் என்று சொல்வார்கள். இளமையிலிருந்தே பணிவாக இருப்பதைப்போல் நடிப்பது என்பது பிற்காலத்தில் வாழ்வின் ஒரு அம்சமாகவே மாறிவிடுகிறது. காந்தி ஏழையாக நடித்ததைப் போல இவர்கள் பயப்படுவதாக நடிக்கிறார்கள். இப்படி மேல் சாதியினரைக் கண்டு பயப்படுகிற தோரணை உள்ளத்திலும் ஊறிவிடுகிறது. ஒவ்வொரு தலித் பகுஜன் குடும்பத்திலும் சமத்துவத்தைப் போதிக்கிற அதே நேரத்தில் சமுதாயத்திலுள்ள ஏற்றத்தாழ்வுகள் குறித்தும் கற்றுக் கொடுக்கப்படுகிறது. இல்லாவிடில் பயங்கரமான விளைவுகளை தலித் பகுஜன்கள் சந்திக்க நேரிடும். சாதி ரீதியாக மாடிகாக்கள் தீண்டத் தகாதவர்களாக ஆக்கப்பட்டிருக் கிறார்கள் என்பதும், பொருளாதார ரீதியாகத் தாழ்ந்து உள்ளார்கள் என்பதும் தவிர மற்ற அனைத்து அம்சங்களிலும் குருமா, கௌடா போன்ற மேல்சாதியினரிடமிருந்து அவர்கள் அதிகம் வேறுபடவில்லை.

மற்ற சாதியினரிடம் உள்ள மத உணர்வை விடவும் தலித் பகுஜன்களின் மத உணர்வு குறைவாக உள்ள குருமா, கௌடா, காபூ, சாலா போன்ற சாதியினரிடம் ஏழெட்டு கடவுள்கள் உள்ளன. ஆனால் மாடிகாக்களிடம் ஒன்று இரண்டு கடவுள்கள் தான் உண்டு. எல்லா சந்தர்ப்பங்களிலும் மாடிகாக்கள் தப்படிக்கிறார்கள். ஆனால் எல்லோருடனும் சேர்ந்துதான் தங்களுடைய குல தெய்வமாகிய எல்லம்மா (தலித் பகுஜன்களின் தேவதை) திருவிழாவைக் கொண்டாடு கிறார்கள். அவர்களிடம் சொர்க்கம், நரகம் என்கிற நம்பிக்கை கிடையாது. ஒவ்வொரு நாளும் அன்றாட உணவுக்குச் சம்பாதிப்பதே அவர்களுக்குப் போராட்டமாக உள்ளது. அவர்களுக்கு உணவு கிடைக்கும் நாள் சொர்க்கமாகவும், உணவு கிடைக்காத நாட்கள் நரகமாகவும் உள்ளன.

இந்த சாதிகளுக்கெல்லாம் தெரியாதது என்று ஏதாவது உண்டென்றால் அது புத்தகம் படிப்பது, கோயிலுக்குப் போவது, பக்திப்பாடல் பாடுவது அல்லது சந்தியா வந்தனம் செய்வது போன்றவை தான். பகவத்கீதை இந்து மத நூல் என்று சொல்லப்படுகிறது. ஆனால் அந்தப் புத்தகத்தை நாங்கள் யாரும் வாசித்ததில்லை. எங்கள் வீடுகளில் அது நுழைந்ததே கிடையாது. பகவத்கீதை எங்களுக்கு அன்னியமான நூல். இந்து மதமும் பார்ப்பனர்களும் நாங்கள் கல்வி கற்காதவாறு பார்த்துக்கொண்டார்கள். இருந்தபோதும் நவீன கல்விமுறையும் டாக்டர்அம்பேத்கர் அவர்களின் இட ஒதுக்கீட்டுக் கொள்கையும் எங்களின் ஒரு சிறு பகுதியினரைக் கல்வி கற்றவர்களாக ஆக்கின. மத சம்பந்தமான நூல்களை நாங்கள் அறியாமலிருப்பதற்கு இதுவே காரணமாகும். மேலும் மூர்த்தி வழிபாட்டை ஆதாரமாகக் கொண்ட பார்ப்பனப் பூசாரிகளை மையமாகக் கொண்டு செயல்படுகிற கோயில்களில் தலித் பகுஜன் சாதியைச் சார்ந்த சிறுவர், இளைஞர், முதியோர் அனைவரும் செல்ல அனுமதி மறுக்கப் பட்டிருந்தது. இன்று சில கீழ் சாதியினர் கோயிலுக்குள் வழிபட அனுமதிக்கப்பட்டிருந்தாலும் அவர்கள் என்றும் இந்தக் கடவுளரை நேசித்ததில்லை.

## பள்ளிக்கல்வி

முதல் தலைமுறையினராக தலித் பகுஜன்கள் சிலேட்டையும் குச்சியையும் பார்த்தபோது காட்டிலிருந்து நேரடியாகப் பள்ளிக்குள் குதித்ததைப் போலிருந்தது. அங்கேயும்கூட இந்துக்களுக்கும் எங்களுக்கும் பொதுவானதாக என்ன இருந்தது? பார்ப்பன, பனியாக் குழந்தைகளே பள்ளிக்குள்ளும் முன்னுரிமை பெற்றவர்களாக

இருந்தார்கள். அவர்கள் நல்ல உணவு உண்டு நல்ல உடை உடுத்தியிருந்தார்கள். ஒரே கிராமத்தில் அவர்கள் பிறந்தவர்களாக இருந்தாலும் வேறுவிதமான கலாச்சார முடையவர்களாக இருந்தார்கள். எங்கள் உணவுப் பழக்கமும் அவர்கள் உணவுப்பழக்கமும் ஒன்றானதல்ல. தலித் பகுஜன் குழந்தைகளுக்கு நல்ல உணவு என்றால் அது கறியும் மீனுமேயாகும். நாங்கள் அதை விரும்பிச் சாப்பிடுகிறோம். பார்ப்பன, பனியா குழந்தைகளுக்கு மீன், மாமிசம் பற்றிய பேச்சு கூட வாந்தி எடுப்பது போலிருக்கிறது. மாடிகாக்களுக்கும் முஸ்லிம் களுக்கும் மாட்டிறைச்சி விருப்பமான உணவு. அது எங்களுக்கும் மறுக்கப் பட்டிருந்தாலும் பார்ப்பன பனியாக்களைப் போன்று அதை நாங்கள் வெறுத்ததில்லை. இந்த வேறுபாடுகள் தனிநபர் விருப்பு வெறுப்பு சார்ந்த வேறுபாடுகள் அல்ல. ஒவ்வொருவருடைய சாதி ரீதியிலான வளர்ப்பு முறையின் விளைவே இந்த வேறுபாடாகும்.

எங்கள் பள்ளி ஆசிரியர்களும் எங்கள் ஒவ்வொருவரையும் சாதியை அடிப்படையாகக் கொண்டே அணுகினர். பார்ப்பன ஆசிரியராக இருந்தால் அவர் எங்களை வெறுப்பார். எங்கள் முகத்திற்கு எதிரிலேயே எங்களைத் திட்டுவார். இது கலியுகம். அதனால்தான் உங்களைப் போன்ற சூத்திரர்களுக்கு நான் பாடம் சொல்லிக்கொடுக்கும் படியாக நிர்ப்பந்திக்கப் பட்டிருக்கிறேன் என்பார். அவருடைய கருத்துப் படி நாங்கள் உதவாக்கரைகள். அந்த 'புத்திசாலி' ஆசிரியர் நாங்கள் வயல் வேலை செய்கிற 'சவுதாரி'க் குடும்பத்திலிருந்து வருவதாக எங்கள் முன்னேயே குறிப்பிடுவார். அவர் கருத்துப்படி வயலில் வேலை செய்வது அசிங்கமானது, இழிவானது. பைத்தியக்காரர்கள் மட்டும் தான் அசிங்கம் நிறைந்த சேற்று நிலத்தில் வேலை செய்வார்கள். அவ்வாறு சேறு படிந்தவர்களாக நாங்கள் இருந்தது நல்லது என்றே இப்போது கருதுகிறோம். ஏனெனில் சேறுகலந்த இடமே உணவின் பிறப்பிடம். அங்கிருந்து தான் உழைக்கும் மக்களுக்கான கருத்துக்கள் பிறந்தன.

அந்த ஆசிரியனின் கருத்துப்படி யார் உயர்வானவர்கள்? பார்ப்பன, பனியா மற்றும் மேல்சாதி நிலப்பிரபுக்களின் குடும்பத் திலிருந்து வருகிற குழந்தைகளே உயர்ந்தவர்கள். எப்படியெனில் அவர்கள் அசுத்தமான வயல் வேலைகள் செய்வது இல்லை. அவர்கள் முகத்தை சுத்தமாகக் கழுவி, துவைத்த தூய்மையான ஆடை அணிந்து, எண்ணெய் தடவி, தலையைச் சீவி பளிச்சென்று பள்ளிக்கு வருவார்கள். அவர்களனைவரும் பள்ளிக்குச் செருப்பணிந்து வந்தார்கள். நாங்கள் கால்நடைகளை வளர்க்கிறோம். ஆனால் எங்கள் குழந்தைகள் அணிந்து வர செருப்புகள் இல்லை. நாங்கள் ஏதும் அறியாதவர்

களாகவும், அசிங்கமானவர்களாகவும் சுத்தமில்லாதவர் களாகவும் புறக்கணிக்கப்பட்டதற்கு இவையெல்லாம் காரணங்களாகும். இந்த உணர்வு ஆசிரியர்களிடம் மட்டுமல்லாமல் மேல் சாதி மாணவர்களிடமும் இருந்தது.

நாங்கள் உயர் வகுப்புகளுக்குச் சென்றபோது பாடப்புத்தகங் களில் போதிக்கப்பட்ட கதைகளில் ஒன்று கூட எங்கள் வீடுகளில் நாங்கள் கேள்வியுறாதவைகளே. இராமன், கிருஷ்ணன் கதைகளும், புராணக் கவிதைகளும், இராமாயணம், மகாபாரதம் ஆகிய இதிகாசங்களும் எங்கள் பாடத்திட்டத்தில் திரும்பத்திரும்ப வந்தன. பள்ளிக்கூடம் தொடங்கி கல்லூரி வரை இதே நிலை நீடித்தது. எங்கள் தெலுங்குப் பாடபுத்தகம் முழுவதிலும் இந்தக் கதைகளே நிரம்பியிருந்தன. பார்ப்பன பனியாக் குழந்தைகளைப் பொருத்தமட்டில் குழந்தைப் பருவப் பாடங்கள், கதைகள் என்ற முறையில் அல்லாமல் அவர்கள் வணங்குகிற கடவுள்கள் என்ற முறையிலும் அவை பிரபலமானவை. ஆண் குழந்தைகளுக்கு ஆண் கடவுள்களின் பெயர்களையும், பெண் குழந்தைகளுக்குப் பெண் கடவுள்களின் பெயர்களையும் வைத்திருந்தார்கள். இவை எல்லாம் எந்த அளவிற்கு எமக்கு அந்நியமாக இருந்தது என்பது இன்னும் எனக்கு நினைவிலுள்ளது. இந்தக் கடவுள்களின் பெயர்கள் கூட எங்கள் கிராமத்து மக்களுக்குத் தெரியாது. ஷேக்ஸ்பியர் என்ற பெயர் எப்படி எங்களுக்கு அந்நியமோ, அப்படித்தான் காளிதாசன் பெயரும் எங்களுக்கு அந்நியமானது. ஒரு பெயர் தெலுங்கு மொழியிலும் மற்றது அன்னிய மொழியிலும் பாடப்புத்தகத்தில் இடம் பெற்றிருந்தது என்பதுதான் ஒரே வேறுபாடு. பார்ப்பன பனியாக் குழந்தைகளின் நிலைமை வேறு.

பாடப்புத்தகத்தில் இருந்த மொழிக்கும் நாங்கள் வீட்டில் பேசுகிற மொழிக்கும் வேறுபாடு இருந்தது. அடிப்படையான வார்த்தைகள் கூட வேறுபட்டதாக இருந்தன. பாடப் புத்தகத்தில் இடம்பெற்ற மொழி பார்ப்பனத் தெலுங்கு. நாங்கள் பேசும் மொழி உற்பத்தியை அடிப் படையாகக் கொண்ட மக்கள் தெலுங்கு. சுருங்கச் சொல்வதெனில் தெலுங்குப் புத்தகத்திலிருக்கும் தெலுங்கிற்கும் எங்கள் தெலுங்கிற்கும் நிறைய வேறுபாடுகள் உள்ளன. ஏறக்குறைய ஆங்கிலத்திற்கும், தெலுங்கிற்கும் உள்ள வேறுபாடு அளவிற்கு இங்கும் உண்டு. பேச்சு வழக்கில் மட்டுமல்ல, மொழியிலேயே இந்த வேறுபாடு இருந்தது. இன்றுவரையில் உற்பத்தி சார்ந்த கருத்துப் பரிமாற்ற மொழியிலுள்ள பாடப் புத்தகங்கள் ஏதும் தெலுங்கில் நான் பார்த்தது இல்லை. பொச்சம்மா, பொத்தராஜு, கட்டம்சம்மா,

காலமராஜ் அல்லது பீரப்பா போன்ற தெய்வங்களின் பெயர்கள் பாடப் புத்தகங்களில் வந்ததேயில்லை. எங்களோடு தொடர்புடைய கடவுள்களுக்கு கதைகள் இல்லாமல் இல்லை. நாங்கள் கதைகள் இல்லாமல் இருந்திருந்தால் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக எப்படி வாழ்ந்திருக்க முடியும்?. தலித் பகுஜன் கதைசொல்லிகளிடம் இக்கதைகளைக் கேட்டால், கேட்பவர்கள் மெய்மறந்து நின்று விடுவார்கள். ஆனால் இவற்றை எழுதுவதற்கு தலித் பகுஜன்களில் எழுத்தாளர்களே இல்லை. எங்கள் கதைகள் எழுதப்பட்டிருந்தால் அல்லவா பாடநூல்களில் இடம் பெற்றிருக்கும்? பெரும்பாலான எழுத்தாளர்கள் பார்ப்பனர்களாக உள்ளனர். பார்ப்பனர்களின் கருத்துப்படி நம்முடைய கடவுள்களின் பெயர்கள் சொல்வதற்குக் கூட தகுதியற்றவையாக இருக்கின்றன.

தேசிய நீரோட்டத்துத் தெலுங்குக் கவிஞர்களில் ஒருவர் கூட தலித் பகுஜன் மக்களின் கலாச்சாரத்தைப் பிரதிபலிக்கும் இந்தக் கடவுள்களின் கதைகளைப் பற்றிப் பேசுவது கிடையாது. மக்கள் எதைப் பேசுகிறார்கள் எப்படிப் பேசுகிறார்கள் என்பதைப்பற்றி அவர்கள் கவிதைகளில் சிந்தித்ததேயில்லை. இந்துக் குடும்பங்களில் பிறந்து கவிஞர்களாகவும், எழுத்தாளர்களாகவும், நாத்திகர்களாகவும், பகுத்தறிவாளர்களாகவும் மாறியவர்கள் கூட துரதிர்ஷ்டவசமாக ஒடுக்கப்பட்ட தலித் பகுஜன் மக்களின் கலாச்சாரப் பண்பாட்டுக் கூறுகளைத் தங்கள் படைப்புகளில் பிரதிபலிக்கவேயில்லை. புரட்சிகர அமைப்பைச் சார்ந்த தலைவர்களின் பெயர்கள் கூட எங்களுக்கு அன்னியமாகத்தான் தோன்றின. எம் மக்களுடைய கதைகள் ஒருபோதும் அவர்களது படைப்புகளின் மையக் கருத்தாக அமைந்ததேயில்லை. எல்லையா, புல்லைய்யா, புச்சய்யா, புச்சம்மா, லெட்சம்மா என்று எத்தனையோ பெயர்கள், கதைகளுண்டு. ஆனால் அவர்கள் இவற்றைக் கண்டு கொள்வதே இல்லை.

புரோகிதர்கள், புராணங்களைப் புகழ்ந்து எழுதினார்கள். கம்யூனிஸ்ட் மற்றும் பகுத்தறிவாளர்களோ இந்தப் புராணங்கள் பற்றி திறனாய்வு செய்தார்கள். ஆனால் எங்களுக்கும் இதயம் இருக்கிறது என்பதையும், அந்த இதயம் தன்னைப்பற்றிப் பேசவேண்டும் என்று நினைக்கிறது என்பதையும் யாரும் எண்ணிப் பார்க்கவில்லை. பொச்சம்மா, மைசம்மா, பொத்தராஜு போன்ற கடவுள்களைப் பற்றிப் பேச வேண்டும் என்று கூட யாரும் நினைத்ததில்லை. கம்யூனிஸ்ட்டுகளும் பகுத்தறிவாளர்களும்கூட புரோகித மொழியிலேயே பேசியும் எழுதியும் வந்தார்கள். அவர்களுடைய கலாச்சாரம் அடிப்படையிலேயே சமஸ்கிருத மயமாக்கப் பட்டது. நாங்கள் அந்தக் கலாச்சாரத்

தின் அங்கமல்ல. நல்லதற்கோ கெட்டதற்கோ யாரும் எங்களைப் பற்றி பேசவில்லை. எங்கள் மொழியும் ஒரு மொழி என்று அவர்கள் உணர்ந்ததேயில்லை. ஆனால் அந்த மொழிதான் எமது சமூகத்தில் உள்ள எல்லோராலும் புரிந்து கொள்ளப்படுகிறது. அது எந்தவிதத்திலும் குறையுடையதல்ல. அதைப் பேசுகிற மக்கள் தான் லட்சக்கணக்கில், கோடிக்கணக்கில் உள்ளனர். அதே சமயத்தில் இந்து மேல்சாதியினர் குறுகிய எண்ணிக்கையில் தான் உள்ளனர் என்பதையும் மனதில் கொள்ளவேண்டும். எமது பெற்றோர் இந்த அமைதியான வன்முறை பற்றிய சதியை அறிந்திருந்தார்கள் என்றால் எப்போதோ எல்லா இந்துக்களையும் சுருட்டை ஊதுவது போல ஊதித்தள்ளி யிருப்பார்கள். ஆனால் இந்த உணர்வே எங்களுக்கு மழுங்கடிக்கப் பட்டுவிட்டது. நாங்கள், எங்கள் கலாச்சாரம் என்கிற உணர்வே எங்கள் சிந்தனையில் எழவிடவில்லை.

குழந்தைப் பருவம் தான் ஒருவனது உருவாக்கத்தில் முக்கிய பங்கு வகிக்கிறது. ஆனால் எங்களுடைய குழந்தைப் பருவங்களோ இத்தகைய நடவடிக்கைகளால் சிதைக்கப்பட்டன. எங்களது உணர்வுகளை அடக்கி வைத்தார்கள். தன்னுணர்வு பெற்றுவிடாதபடி நாங்கள் அடக்கி ஒடுக்கப்பட்டோம். நூற்றுக்கணக்கான தலை முறைகளாக எழுத்து வாசனையே எங்கள் வீடுகளில் நுழைந்து விடாமல் தடுத்துவிட்டார்கள். அதனால் எங்கள் வாழ்க்கை முறை எங்களுடைய உணர்வுகளை முளையிலேயே கிள்ளி எறிந்துவிட்டன. இந்திய விடுதலைக்குப் பிறகு எங்களுக்குப் பள்ளிக்கூடங்கள் திறக்கப்பட்டன. ஒன்றை மட்டும் என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. பள்ளி ஆசிரியர்களும் பாடப் புத்தகங்களும் அதன் மொழியும் எங்களுக்கு எதிரானதாகவே இருந்தன. எங்கள் வீடுகளில் ஒரு பண்பாடும் பள்ளிகளில் வேறொரு பண்பாடும் இருந்தன. எங்களுடைய பண்பாடு தலித் பண்பாடு. பள்ளியிலிருந்த பண்பாடோ இந்துப் பண்பாடு. இந்த இரண்டுக்கும் இடையே யிருந்த இடைவெளி எண்ணிலடங்காது. ஒன்றின் தாக்கம் மற்றொன்றில் வேரூன்ற வழியே இல்லை. உண்மையில் இந்த இரண்டு பண்பாடுகளும் இரண்டு துருவங்களாகவே இருந்தன.

மில்டனுடைய இழந்த சொர்க்கம் அல்லது மீண்ட சொர்க்கம், ஷேக்ஸ்பியரின் ஒத்தெல்லோ அல்லது மாக்பெத், வேர்ட்ஸ்வொர்த்துடைய இங்கிலாந்தின் இயற்கை பற்றிய கவிதைகள் போன்றவை இடம் பெறும் ஆங்கிலப் பாடப் புத்தகத்திற்கும், காளிதாசனுடைய மேகசந்தேசம், பொம்மரா பொட்டன்னாவின் பாகவதம் அல்லது நன்னய திக்கன்னாவின் மகாபாரதம் ஆகியவைகளைச் சொல்லும் ஒரு தெலுங்குப் பாடநூலுக்கும் என்ன வேறுபாடு? ஒரு பாடநூல் இருபத்தாறு எழுத்துக்களிலும்,

மற்றொரு பாடநூல் ஐம்பத்தாறு எழுத்துக்களிலும் எழுதப் பட்டிருக்கின்றன என்பதைத் தவிர இரண்டின் உள்ளடக்கங்களும் எங்களிடமிருந்து அந்நியமாகவே இருந்தன. அந்தக் கதைகளில், கவிதைகளில் எங்கள் வாழ்க்கை பிரதிபலிக்க வில்லை. எங்களுடைய குடும்ப அமைப்புகளை நாங்கள் அங்கே காணமுடியவில்லை. இவை இரண்டிலுமே எங்களுக்குப் பழக்கப் பட்ட வார்த்தைகள் எதையும் நாங்கள் பார்க்க முடிந்ததில்லை. அகராதி (Dictionary) ஒன்றின் உதவியின்றி இரண்டிலுமே நாங்கள் எதையும் புரிந்து கொள்ள முடியவில்லை. அது ரோமானிய எழுத்துக்களால் எழுதப்பட்ட கிரேக்கமாகவோ, லத்தீனாகவோ அல்லது தெலுங்கில் எழுதப்பட்ட சமஸ்கிருதமாகவோ இருக்கலாம். நம்மைப் பொருத்தமட்டில் என்ன வேறுபாடு?

அவர்களுடைய ஆண் குழந்தைகள் உபநயனத்தின் (பூநூல் அணிதல்) மூலம், தாம் இந்துக்கள் ஆனதைப் பற்றி இதர மாணவர் களிடம் பெருமை பேசினார்கள். உபநயனத்திற்குப் பிறகு பூ நூல் அவர்கள் உடலில் தொங்குகிறது. அது முதல் அவர்கள் இரு பிறப்பாளர் என்று அறியப்படுகிறார்கள். அதனால் அவர்கள் எல்லோரையும் விட உயர்ந்தவர்கள் என்றும் எல்லோரையும் விடத் தூய்மையானவர்கள் என்றும் கருதப்பட்டார்கள். ஆனால் நாங்கள் மட்டும் ஒரே பிறப்பாளர் களாக இருந்து வருகிறோம். உபநயனத்தைப் பற்றிக் கேள்விப் பட்டதும் நாங்களும் பூ நூல் அணிய விரும்பினோம். தனது பனிரெண்டாவது வயதில் பசவர் தன் பூ நூலைக் கழற்றி எறிந்ததைப் போல பலர் பிற்காலத்தில் பூ நூலைக் கழற்றிச் சேற்றில் எறிந்திருப்பார்கள் என்பது வேறு விஷயம். ஆனால் உண்மை என்னவென்றால், ஏழு அல்லது எட்டு வயதில் நாங்கள் செல்லப் பிள்ளைகளாக இருந்த போது ஒரு புரோகிதர் எங்களை இந்து மதத்தில் சேர்க்க வந்திருப்பாரே யானால் நாங்களும் நம்பிக்கையோடு அதில் சேர்ந்திருப்போம். அது மாத்திரமன்று; பார்ப்பன பனியா மற்றுமுள்ள ஆதிக்க சாதிக் குடும்பங்களில் நான்கு வயதிலேயே குழந்தைகளுக்குக் கல்வி கற்றுத் தரப்பட்டது என்றும் அதுவே ஒரு விழாவாகக் கொண்டாடப்பட்டது என்றும் அறிந்த போது நாங்கள் எவ்வளவு வேதனைப் பட்டிருப்போம்?

பழங்காலத்தில் பூ நூல் சடங்கிற்குப் பிறகு மேல் சாதியினர் தங்களது ஆண் குழந்தைகளைக் குருகுலத்திற்கு (பார்ப்பனப் பள்ளி) அனுப்பினார்கள். இப்போது அவர்கள் தங்கள் குழந்தைகளை ஆங்கிலப் பள்ளிகளுக்கு அனுப்புகிறார்கள். இந்த ஆங்கிலப் பள்ளிகளை விடுதலைப் போராட்டக் காலத்தில் இதே இந்துக்கள் கடுமையாக எதிர்த்தார்கள். தொண்ணூறுகளில் இந்துத்துவவாதிகள் இப் பள்ளிகளை இந்துத்துவத்திற்கு எதிரானவை என்று வெகுவாகக்

கண்டித்தார்கள். உபநயனம் முடிந்தபிறகு அந்த ஆங்கிலப் பள்ளிகளுக்கு மட்டுமே தங்கள் குழந்தைகளை இப்போது அனுப்புகிறார்கள். இந்துக்கள் ஆங்கிலத்தை எதிர்த்துக் கொண்டே தங்கள் குழந்தைகளை ஆங்கிலப்பள்ளிகளுக்கு அனுப்புகிறார்கள். தெலுங்குவழியில் கல்வி புகட்டும் பள்ளிகளில் இந்து வேதங்களின் ஆதிக்கத்தை எதிர்க்க நாம் இன்னும் உணர்வு பெறவில்லை. புராணங்களையும் இதிகாசங்களையும் போதிக்கும் பள்ளிகளுக்கே நமது குழந்தைகளை அனுப்பும்படி நேர்கிறது. இதற்கு மாற்று வழி இல்லை. இது ஒரு முரண்பாடு; ஆனாலும் நாம் இது போலவே பல முரண்பாடுகளுடன் வாழ்ந்து வருகிறோம்.

இந்து ஆண்களுக்கும் பெண்களுக்கும் குழந்தையாயிருக்கும் போதே திருமணம் செய்துவிடுவார்கள் என்று கேள்விப்பட்ட போது குழந்தைத் திருமணம் எமது வழக்கத்திலும் இருந்ததால் இந்த நடைமுறைகள் சரிதானென்று கருதினோம். ஆனால் பாடப் புத்தகங்களில் கணவனை இழந்த பெண்கள் விதவைகளாக இருக்க வேண்டும்; அவர்கள் தலையை மொட்டையடித்து வெண்மையான ஆடைதான் உடுத்த வேண்டும் என்று படித்தபோது அது எங்களுக்கு விசித்திரமாகப்பட்டது. எங்கள் குடும்பங்களில் மாமியார் கொடுமையால் அவதியுற்ற பெண்கள் மிகச் சுலபமாக மணவிலக்கு பெற முடிந்தது. ஒரு சில நாட்களில் அவர்களுக்கு இரண்டாவது திருமணம் ஒரு சிறப்பான விருந்தோடும், பானத்தோடும் கொண்டாடப்படும். அது போலவே மணவிலக்கின் போதும் விருந்தும் பானமும் வழங்கப்படும். பொறுப்பற்ற கணவனிடமிருந்து ஒரு பெண் மணவிலக்கு கோருவது அங்கீகரிக்கப்பட்ட சமூக வழக்கமாகும். என்னுடைய குழந்தைப் பருவத்தில் சாவித்திரி கதையை நான் வாசித்திருக்கிறேன். சாவித்திரி தன் கணவன் இறந்ததை எதிர்த்து எமதர்மராஜனுடன் போராடுகிறாள். ஏனெனில் கணவன் இறந்துவிட்டால் தாம் விதவையாகிவிட நேருமே என்றுதான். எமது பெண்கள் சாவித்திரி போல போராட வேண்டியதில்லையே என்று நினைத்து நான் மகிழ்ச்சியடைந்தேன்.

அதுபோலவே, இந்துப் பெண்கள் இறந்த கணவருடன் தாமும் இறக்க வேண்டும் (உடன்கட்டை ஏறுதல்) என்று நாங்கள் படித்தபோது, எமது பெண்கள் அவ்வாறு இறக்க வேண்டியதில்லை என்று நான் இன்னும் மகிழ்ச்சியடைந்தேன். அவ்வாறு போதிக்கிற மதத்தைச் சேர்ந்தவர்கள் அல்ல நாங்கள் என்று மிக்க மகிழ்ந்தேன். ஏனெனில் திடீரென்று என் தந்தை இறக்க நேர்ந்தால் என் தாயும் இறக்க வேண்டியிருக்காது. அவள் விரும்பினால் எனக்கு இன்னொரு தந்தையைத் தேட வேண்டியிருக்கும்; அவ்வளவு தான். சதி எனப்படும் உடன்கட்டையேறுதல் பற்றிக் கதை கதையாகச் சொல்லும் சரித்திரப்

பாடங்களையும் தெலுங்குப் பாடங்களையும் சதியில் மாய்ந்த பெண்கள் பற்றியும் படிக்கிறோம். ஆனால் கணவன் இறந்த பிறகும் உயிருடன் இருந்து தனியாகப் பாடுபட்டு உழைத்து தமது குழந்தைகளை வளர்த்து பெரியவர்களாக்கி அவர்களுக்குத் திருமணமும் செய்து வைத்த எங்கள் பெண்களைப்பற்றி வரலாற்றில் இலக்கியத்தில் ஏதாவது ஒரு பாடம் உண்டா? மணவிலக்குப் பெறமுடியாமல் போராடி இறுதியாக மணவிலக்கு பெற்ற பெண்களைப் பற்றி ஒரு பாடம்கூடக் கிடையாது. ஒவ்வொரு கணவனும் மோசமானவனாக, கொடியவனாக இருந்ததால் தங்கள் மகள்களுக்கு மூன்று நான்கு திருமணங்கள் செய்து அவற்றுக்காகப் போராடிய பெற்றோர்களைப் பற்றி ஒரு பாடம் கூட இல்லை. தங்கள் மகள்களை நட்டாற்றில் விட விரும்பாத தைரியமான பெற்றோர்கள் இருந்தார்கள் என்று ஒரு பாடநூல்கூட நீதி சொன்னதில்லை. எனவே பாடநூலில் கூறப்படும் ஒழுக்கத்திற்கும் நமது வாழ்வில் காணப்படும் உயிருள்ள ஒழுக்கத்திற்கும் எந்தத் தொடர்பும் இல்லை.

எல்லாக் கதைகளிலும் பாடங்களிலும் இலட்சிய ஆண் பெண் பற்றியும், நம்மிடமிருந்து வேறுபட்ட அவர்களின் பண்பாடுகளைப் பற்றியும் படிக்கிறோம். இந்துப்பிரதிகள் வேதம் படித்தவனையே அறிவாளி என்கிறது. நண்பர்களாக இருந்தாலும் உறவினர்களாக இருந்தாலும் அவர்களைக் கொல்கிறவனை வீரன் என்கிறது. இராமாயணத்திலும், மகாபாரதத்திலும் அறிவும், வீரமும் இவ்வாறே விளக்கப்படுகின்றன. ஆனால் நமது உண்மை வாழ்க்கையில் அறிவாளி என்பவன் சமூக நடவடிக்கைகளில் ஈடுபடுகிறவனாக செம்மறியாடு வளர்க்கத்தெரிந்தவனாக, கயிறு திரிக்கத் தெரிந்தவனாக, கால்நடைகள் மற்றும் மனிதர்களின் நோயை அறிந்து சொல்பவனாக இருக்கிறான். வீரன் என்பவன் புலிகளோடும், சிங்கங்களோடும், பாம்புகளோடும், காட்டெருமைகளோடும் போராடுகிறவனாகவும் அடர்ந்த காடுகளில் பயணம் செய்பவனாகவும் ஆற்றைக் கடந்து தொலைந்த வெள்ளாடுகளையும் செம்மறியாடுகளையும் கண்டுபிடித்துத் தருபவனாகவும் இருக்கிறான்.

## இந்து இலட்சியங்களும் எமது இலட்சியங்களும்

பார்ப்பன வீடுகளிலும், குடும்பங்களிலும் புகழப்படும் வீரர்கள், வீராங்கனைகள் எவரும் மனித சமுதாயத்தில் வாழ்ந்தவர்கள் அல்ல. ஏனெனில் உண்மையான வீரனோ, வீராங்கனையோ உருவாகக்கூடிய சமூக, பொருளாதாரச் சூழ்நிலையிலிருந்து பார்ப்பனர் வாழ்க்கை முற்றிலும் விலகியுள்ளது. அவர்களுடைய சமுதாய அமைப்பில் சுலோகங்களையும் மந்திரங்களையும் தெளிவாக எழுதுவதே

முக்கியமானதாகக் கருதப்படுகிறது. இராமாயணம், மகாபாரதம், பகவத்கீதை போன்றவற்றை மனப்பாடம் செய்வதையே ஒரு மிகப் பெரும் சாதனையாக அவர்கள் கருதுகிறார்கள். பெண் என்பவள் கணவனிடம் பக்தியாக நடந்து கொள்பவளாகவும், தூய்மையாக சமைத்துத் தருபவளாகவும், பெண்ணாகப் பிறந்துவிட்டோமே என்று மனதில் குற்ற உணர்ச்சி உடையவளாகவும் இருக்கிறாள். பார்ப்பனப் பண்பாட்டில் எதிர்மறைக் கதாநாயகர்களையே வீரனாக, வீராங்கனையாகப் போற்றிப் புகழ்கிறார்கள். உதாரணமாக தன்னுடைய சொந்தங்களைக் கொல்பனையே வீரன் என அர்ச்சுனனுக்கு கிருஷ்ணன் போதிப்பதைச் சொல்லலாம். கதைகளில் தனிச் சொத்துடைமை உருவாவது நியாயப்படுத்தப்படுகிறது. மகாபாரதக் கதை முழுதும் உற்பத்தியில் ஈடுபடாத ஒரு சிறுபான்மையினரிடம் நிலம் தனிச் சொத்துரிமையாகக் குவிவதையே குறிக்கிறது.

சூத்திர சமூகத்தில் முற்றிலும் இது மாறுபட்டுள்ளது. இலட்சியக் கதாநாயகர்கள் தோன்றக்கூடிய எதார்த்த வாழ்க்கைச் சூழல்கள் பல இங்கு உண்டு. இயற்கையோடு இணைந்த அவர்களுடைய அன்றாட வாழ்விலிருந்து இந்தக் கதாநாயகர்கள் உருவாகிறார்கள். எக்காரணத் திற்காகவும் உறவினர்களைக் கொல்லுகிறவன், கொலைக் குற்றம் புரிகிற கொடியவனாகவே சித்திரிக்கப்படுகிறான். கொலையை ஆதரிக்கிறவன் வெறுக்கத்தக்க பேயே அன்றி அவன் கடவுள் அல்ல. ஒரு பொச்சம் மாவோ, ஒரு கட்டமைசம்மாவோ அல்லது ஒரு பீரப்பாவோ யாரையோ கொன்றார்கள் என்பதற்காக அவர்கள் வீர மாதாவாகவோ வீரராகவோ வழிபடப்படவில்லை. அவர்கள் பசியிலிருந்தும் வியாதியிலிருந்தும் நம்மைக் காப்பாற்றுகிறார்கள் என்பதற்காகவே அவர்கள் கடவுள்களா னார்கள். இந்து ஒழுக்கம் என்பது எங்களுடைய வாழ்முறையிலிருந்து வேறுபட்டது. தன்னைவிட மூத்த ஆண்கள் மற்றும் பெண்கள் முன்பு உணவருந்தாதவள், நீர் குடிக்காதவள்தான் இலட்சியப் பெண் என்று இந்துப் பண்பாடு கொண்டாடுகிறது. ஒரு ஆண் தொடர்ந்து புகை பிடிப்பவனாகவோ, மோசமான குடிகாரனாகவோ இருக்கலாம், ஆனால் பெண்கள் குடிக்கவோ, புகைக்கவோ கூடாது. மாறாக, தலித் பகுஜன் பெண்கள் ஆண்களோடு சேர்ந்து கள்ளோ அல்லது வேறு வகையான மதுவோ அருந்துகிறார்கள். வீட்டிலும் வயல்களிலும் சுருட்டு புகைக்கிறார்கள். தலித் பகுஜன் பெண்கள் குறைந்த பட்சம் கருத்தளவிலாவது ஆண்களுக்குச் சமமானவர்கள் என்று தம்மைக் கருதுகிறார்கள்.

எல்லோரும் இந்துக்கள் என்று சொல்கிறவர்கள் இவற்றில் எந்தப் பண்பாடு இந்துப் பண்பாடு என்று கூறவேண்டும். எந்த மதிப்பீடுகளை,

எந்த ஒழுக்கங்களை அவர்கள் சரியானதென்று தூக்கிப்பிடிக்க விரும்புகிறார்கள்? மேல்சாதி இந்துக்களுடைய சமத்துவமற்ற மனிதத் தன்மையற்ற கலாச்சார மதிப்பீடா? அல்லது நம்முடைய கலாச்சார மதிப்பீடா? இன்றைய சமுதாயத்தின் இலட்சியம் என்ன? நம்முடைய குழந்தைகளுக்கு இன்று நாம் எதைக் கற்பிக்கலாம்? இந்துக்கள் கற்பித்ததை நாம் அவர்களுக்குக் கற்பிக்கலாமா? அல்லது இந்த நாட்டின் பெரும்பான்மையான தலித் பகுஜன் மக்கள் எதை விரும்புகிறார்களோ அதைக் கற்பிக்கலாமா? நல்ல ஆசிரியன் என்பவன் எவன்? உண்மையில் வீரன் என்பவன் யார்? ஒருவன் பல்வேறு பயிர்களை உற்பத்தி செய்கிறான். சிங்கங்களையும் புலிகளையும் எதிர்கொள்கிறான். வேறொருவன் நண்பர்களையும் உறவினர்களையும் கொல்கிறான். இதில் எது தர்மம்? எது அதர்மம்? மேல்சாதியினர் சிந்திப்பது தர்மமாகவும் மற்றவர்கள் சிந்திப்பது எல்லாம் அதர்மமாகவும் மாறுமா? எங்கே தொடங்குவது? எங்கே முடிப்பது? நம்முடைய வரலாற்றை நாமே உருவாக்குவோம். போராட்டம் என்பது நமது தொடக்கமாக இருக்கட்டும். சமூக மாற்றம் என்பது அதன் முடிவாக அமையட்டும்.

பார்ப்பன பனியாக்கள் உற்பத்தி சாராத, சடங்குசார்ந்த வாழ்க்கையையே உயர்ந்த வாழ்க்கை என்றும், மிகப் பெரும்பாலான தலித் பகுஜன்களின் சடங்குகளற்ற உழைப்பு சார்ந்த வாழ்க்கையைக் கீழ்த் தரமானதென்றும் கருதுகிறார்கள். இந்தத் தத்துவம் இரண்டு சமுதாயக் குழந்தைகளையும் வெவ்வேறு வகையாக உருவாக்குகிறது. பார்ப்பன பனியா மேல் சாதிக் குழந்தைகள், தாங்கள் உயர்ந்த இனத்தவர் என்றும் சிறந்த வளர்ப்பு என்றும் எண்ணுகிறார்கள். இந்த சிந்தனை தொடர்ந்து பிரச்சாரம் செய்யப் பட்டதால் நம்முடைய உணர்வுகளிலும் இது உண்மையாய் இருக்குமோ என்கிற எண்ணத்தை ஏற்படுத்திவிடுகிறது. இவ்வாறே நம்முடைய சமூகத்தில் பார்ப்பனியம் தன்னுடைய சமூக - பொருளாதார ஆதிக்கத்தை உருவாக்கிக்கொண்டு விட்டது. நம்முடைய பெற்றோருக்கும் அவர்களது முன்னோர்களுக்கும் கல்வி மறுக்கப்பட்டதால் நம்முடைய நிலையைக் குறித்து நாம் சிந்திக்க முடியாதபடி தன்னுணர்வு அற்றவர்களாக ஆக்கப்பட்டோம். அதனால் ஐயர், ஐயங்கார் என்ற பெயர்களுடன் ஊர் சுற்றித் திரிந்த பார்ப்பனர்கள் என்ன சமூக மதிப்பீடுகளைப் பரிந்துரைத்தார்களோ அதை ஏற்றுக் கொண்டு நம்முடைய பெற்றோர்கள் அவற்றையே நமக்கும் விட்டுச் சென்றுவிட்டார்கள். இதன் விளைவாக எவ்வளவோ திறமை களிலிருந்தும் நாம் குழந்தைப் பருவம் முதல் பயந்தாங் கொள்ளிகளாக ஆக்கப்பட்டு விட்டோம். பலமானவர்களாகவும், சக்திவாய்ந்தவர்

களாகவும் இருந்த மனிதர்களைப் பார்ப்பனியம் வலுவிழக்கச் செய்ததால் ஏற்பட்ட அச்ச உணர்வு தலைமுறை தலைமுறையாக நம்மைப் பாதித்துவிட்டது. எல்லா தலித் பகுஜன்களும் எல்லா வற்றையும் தலைகீழாகப் பார்க்கவேண்டியிருக்கிறது.

பார்ப்பன, பனியா கோயில்கள் மட்டும் அல்ல, அந்தக் கோயில்களில் உட்கார்ந்து கொண்டும், தூங்கிக்கொண்டும் இருக்கிற கடவுள்களும் அடிப்படையில் நமக்கு எதிரானவையே. நம்முடைய கிராமத்துக்குள்ளேயே பார்ப்பன, பனியா வீடுகள் இருந்தன. ஆனால் அந்த வீடுகள் நமக்கு எதிரான ஒரு கலாச்சாரத்தின் மையமாயிருந்தன.

பார்ப்பன, பனியாக்கள் நம்முடைய கலாச்சாரத்தைக் கொன்று அதன் பிணங்களின் மீது நடந்து சென்றார்கள். மற்றவர்களுடைய நன்மைக்காக எல்லாவற்றையும் உற்பத்தி செய்த நம்முடைய பெற்றோர்கள் பட்டினி கிடக்கும்போது பார்ப்பன பனியாக்கள் உண்டு கொழுத்தார்கள். நம்முடைய குழந்தைகள் தேசீயப் பொருளா தாரத்திற்கு வலுவூட்டிக்கொண்டிருக்கும்போது அவர்களுடைய குழந்தைகள் வெறும் சாப்பாட்டு மன்னர்களாகவே இருந்தார்கள். அவர்களுடைய வாழ்வின் நோக்கம் உலகியல் வாழ்விற்கே எதிரானதாக இருந்தும்கூட, அவர்கள் நம் பெற்றோர்களிடம் திரும்பத் திரும்ப நீங்கள் உபயோக மற்றவர்கள் என்று சொல்லிக் கொண்டிருந்தார்கள். வாழ்வின் இந்த நிலைகளை எல்லாம் கடந்து, விரிந்து பரந்த உலகத்தை அறியத் தக்க கல்வியைக் கற்று நம்முடைய குழந்தைப் பருவத்தைப் பற்றியும் அதன் வளர்ப்புமுறை பற்றியும் நாம் சிந்திக்கிற போது அது நமது உள்ளத்தில் எரிகின்ற கோபத்தையும் சொல்லொணாத் துயரத்தையுமே உருவாக்குகின்றது.

SEELAN BOOKS SIGNATURE NORWAY

### அத்தியாயம் 2

## திருமணம், சந்தை மற்றும் சமூக உறவுகள்

இந்துக் குடும்பங்களைப் போலவே நம்முடைய குடும்பங்களிலும் திருமணம் என்பது ஒரு முக்கிய நிகழ்ச்சியாகும். ஆனால் நடைமுறையில் எமது திருமணங்கள் பார்ப்பன, பனியா திருமணங்களிலிருந்து வேறுபட்டுள்ளன. எங்களுக்குத் திருமணம் என்பது உலகியல் நடப்பு. அது பொருளுற்பத்திக்கும் மறுஉற்பத்திக்குமான ஆதாரமாக உள்ளது. ஆணும் பெண்ணும் இல்லாமல் எப்படிக் குழந்தை பிறக்கும் என்ற நம்முடைய பழமொழியிலிருந்தே இது தெளிவாகத் தெரியும் (ஜண்டா லீன்டி பண்டா பண்டாடி) இந்துக்களுக்குத் திருமணம் என்பது உற்பத்தி நடவடிக்கைகளிலிருந்து விலகிய ஒரு புனிதமான சடங்கு ஆகும். குழந்தை பெற்றுக் கொள்வதுகூட மோட்சத்திற்குச் செல்வதற்கான சடங்குகளைச் செய்வதற்கு ஒரு மகனை உற்பத்தி செய்யும் நடவடிக்கை தான். ஈமக்கிரியைகள் செய்வது புரோகிதர் சொல்லும்படி நிகழ்த்துகிற சாதாரணச் சடங்கு அல்ல, அது மோட்சத்திற்குச் செல்லும் வழிமுறை. புரோகிதர் இதுபோன்ற சந்தர்ப்பங்களில், அதாவது கல்யாணம் மற்றும் இறப்பு சமயத்தில் தான் இந்துக்களின் வீடுகளுக்கு வருகிறார். எனவே புரோகிதர் சடங்குகளைச் செய்யும் போது பார்ப்பன இந்து வாழ்வின் பகுதியாகவே ஆகிறது. தலித் பகுஜன் குடும்பங்களில் இந்த நிலை முற்றிலும் இல்லை.

குருமா குடும்பங்களில் திருமணம் என்பது சாதியிலிருக்கிற எல்லோர் முன்னிலையிலும் மேற்கொள்கிற ஒரு ஒப்பந்தமாகிறது. இதில் ஆணுக்குத் தருகிற விலையோ அல்லது பெண்ணுக்குத் தருகிற விலையோ (வரதட்சணை) முக்கிய இடத்தை வகிப்பதில்லை. காலப் போக்கில் குழந்தைத் திருமணம் வழக்கமாகிவிட்டது என்ற போதிலும் பீரப்பாவின் கதைப்படி காதல் திருமணம் தான் குருமாக்களின் சாதியக் கோட்பாடாக உள்ளது. காதல் திருமணம் என்கிற சாதிய வழக்கத்தைக் காப்பாற்ற பீரப்பா தன்னுடைய மாமாவுடன் ஒரு பெரும் போராட்டத்தை நடத்தினார். இருந்தபோதும் இந்த சாதிய வழக்கங்கள் நலிந்துவிட்டன. காதல் திருமணம் என்பது குருமாக்கள் மத்தியில் முற்றிலும் மறைந்துவிட்டது. காதல் திருமணம் குழந்தைத் திருமண வழக்கத்திற்குத் தாழ்ந்துவிட்டதே இன்றைய நிலை. திருமணத்தின் போது உழைக்கிற ஒவ்வொரு சாதியினரும்

பயன்படுத்துகிற கருவிகளைக் கூர்ந்து கவனித்தால் உற்பத்தியே திருமணத்தில் முக்கிய அம்சமாக அமைந்துள்ளது விளங்கும். திருமணத்தின் போது அவர்கள் அரிசி, மஞ்சள் முதலிய வற்றைப் பயன்படுத்துகிறார்கள். ஆனால் அதே நேரத்தில் கம்பளி ஆடைகள், கத்தரிக்கோல்கள், பல்வேறுபட்ட மர இலைகள் ஆகியவற்றையும் பயன்படுத்துகிறார்கள். அது ஒரு விவசாயக் குடும்பமாக இருந்ததால் விவசாயச் சம்பந்தமுடைய கருவிகள் அந்தத் திருமணச் சடங்கில் முக்கியமான அங்கம் வகிக்கின்றன.

## புரோகிதமும் மக்களும்

திருமணம் மற்றும் சாவு போன்ற சந்தர்ப்பங்களில் தான் புரோகிதர் தலித் பகுஜன்களோடு தொடர்பு கொள்கிறார். மற்ற நேரங்களில் அவர் எந்தக் காரியத்திற்கும் வருவது இல்லை. அந்த மக்கள் பேசுகின்ற மொழியிலும் அவர் பேசுவது இல்லை. அவர் ஓதுகின்ற மந்திரங்களில் ஒரு வார்த்தை கூட யாருக்கும் புரிவதில்லை. தன்னுடைய மதத்தின் ஒரு அங்கமாக இந்த மக்களை நினைக்கிற புரோகிதர், மக்களுக்கும் கடவுளுக்கும் உள்ள உறவைப் பற்றி மக்கள் மொழியில் அவர்களிடம் விளக்கிக்கூறவேண்டும். இந்தச் சந்திப்பின் போது புரோகிதர் தமக்குக் கல்வியறிவு ஊட்ட வந்தார் என்று தலித் பகுஜன் மக்கள் எண்ணுவதில்லை. அவர் முணுமுணுக்கும் ஒவ்வொரு மந்திரச் சொல்லும் புரியாதபடியினால் அவர் சபிக்கிறாரா வாழ்த்துகிறாரா என்றுகூட அறிய முடிவதில்லை. ஆனால் ஒன்று மட்டும் புரிகிறது. ஒவ்வொரு மந்திரத்தையும் ஓதி முடிக்கும்போது அவர் எங்களிடம் பணம் பறிக்கிறார் என்பது தான் அது. மந்திரத்தை 'சமர்ப்பயாமி' என்றும் 'ஸ்வாகா' என்றும் சொல்லி அவர் முடிக்கிறார். அதாவது ஒருவன் தன்னிடம் உள்ளவைகளையெல்லாம் கொடுத்துவிட வேண்டும் என்றும் பெற்றுக்கொண்டவன் அவற்றை விழுங்கிவிட வேண்டும் என்றும் பொருள். ஒவ்வொரு திருமணமும் புரோகிதருக்குக் கொடுக்க வேண்டிய தட்சணை குறித்த சண்டையில்தான் முடிவடைகிறது. புரோகிதர் அரிசி, காய்கறிகள், புளி, தேங்காய், முந்திரி பருப்பு மற்றும் பான்பீடா போன்றவைகளையெல்லாம் தட்சணையாகப் பெறுகிறார். இதில் என்ன கொடுமையெனில் முந்திரிப் பருப்பு, பான்பீடா போன்றவைகள் ஏழைகள் வாழ்வில் என்றும் பயன்படுத்தாத பொருள்களாகும். இவற்றையெல்லாம் பெற்றுக் கொண்ட பிறகும் அந்த புரோகிதர் திருப்தியடைந்து விடுவதில்லை. மேலும் ரொக்கமாக குறிப்பிட்ட அளவு பணத்தைக் கேட்டுப் பெறுகிறார். திருமண வீட்டாரின் பொருளாதார நிலை குறித்து அவர் கவலைப்படுவதே இல்லை. அவர் கேட்பதைக் கொடுத்தேயாக வேண்டும். இந்தக் குடும்பங்களில் திருமணநாளின் போது ஏற்படுகிற பிரச்சினை

வரதட்சனை பற்றியது அல்ல. புரோகிதருக்கான தட்சணை கொடுப்பதேயாகும். புரோகிதரை அழைப்பது தொல்லையை அழைப்ப தாகிவிடுகிறது.

திருமணப் பந்தலைச் சுற்றி நிற்கிற மக்கள் பெரும்பாலானவர்கள் மெலிந்த வெளிறிய ஒடுங்கிய தோற்றம் உடையவர்களாக இருப்பார்கள். அவர்களில் பலர் பல நாட்களாகப் பட்டினி கிடப்பவர்களாகவும் இருப்பார்கள். உடை கந்தலாக இருக்கும். இருந்தபோதும் திருமண நாளன்று கடன் வாங்கியோ அல்லது சேமித்து வைத்த காசைக் கொண்டோ புத்தாடை வாங்கி உடுத்தி வருவார்கள். இவ்வாறு நல்ல உடையணிந்து வந்தாலும் கூட புரோகிதர் அவர்களை அலட்சியமாகவே நோக்குகிறார். புரோகிதருடைய அளவிற்கதிகமாக வளர்ந்துவிட்ட தொந்தியையும், உழைக்காமலும் உடற்பயிற்சி செய்யாமலும் கொழுப்பேறி ஆங்காங்கே தொங்கிக் கொண்டிருக்கிற சதையையும், எண்ணெய் வழியும் தோலும் மழிக்கப்பட்ட தலையையும் (முடிவெடிட்டுகிறவர் புரோகிதரின் தலையை மழிக்கும்போது மட்டும் தொடலாம். மற்ற நேரங்களில் அவரைத் தொட அனுமதியில்லை) பார்க்கும்போது திருமணம் நடத்துகிற தலித் பகுஜன்களின் ரத்ததையும் உழைப்பையும் உறிஞ்சியவர் போலத் தோன்றும். இந்து மதத்தில் இருக்கிற சாதி என்கிற அமைப்பு மட்டும் இதற்குக் காரணமல்ல. தலித் பகுஜன் மக்களைத் தங்களுடைய இந்து மதத்திற்கு வெளியே இருப்பவர்களாக நினைத்திருப்பதே இந்நிலைக்கு முக்கிய காரணமாக இருக்கிறது. புரோகிதர் அந்த மக்களைத் தான் வணங்கும் தெய்வத்தின் குழந்தைகள் என்று நினைப்பதில்லை. அவர் ஏன் தலித் பகுஜன்களை வெளியாளாகக் கருதுகிறார் என்றால் அவருடைய மந்திரத்தின் பார்வையாளராக உள்ள எல்லோரையும் அவர் எதிரியாகவே கருதுகிறார். அவர்களைத் தட்சணை தருகிற ஒரு பொருளாகத்தான் அவர் பார்க்கிறார். மேலும் அவர்கள் எல்லோரையும் கீழ்ப்படிதல் கற்பிக்கப்பட வேண்டிய நாய்கள் என்றே அவருடைய பார்வை அமைந்திருக்கிறது.

புரோகிதருக்கும் மக்களுக்கும் உள்ள தொடர்பு என்பது எள்ளவும் ஆன்மீகம் சார்ந்தது அல்ல. "கடவுளின் ஒளியைத் தரிசிப்பதற்காகக் கண்கள் திறந்துவிடப்பட வேண்டியவர்கள்" என்பதாக மக்களைப் புரோகிதர்கள் அணுகுவதில்லை. மாறாகத் தனது சதியைப் புரிந்து கொண்டு விடுவானோ என்று அவனது கண்ணைத் தோண்டி எடுக்கக் கூடியவனாகவே புரோகிதன் உள்ளான். சுருக்கமாகச் சொல்வதெனில் புரோகிதருக்கும் மக்களுக்கும் இடையே இருக்கிற உறவு சுரண்டுகிறவனுக்கும் சுரண்டப்படுவோருக்கும் இருக்கிற

உறவேயாகும். இது நிலவுடைமை சமூகத்தில் நிலப்பிரபுவிற்கும் அடிமைக்கும் இருக்கிற உறவைவிட மோசமானது. அங்கே கூட நிலப்பிரபும் முதலாளியும் பேசுகிற பேச்சு அடிமைகளுக்கும் கூலிகளுக்கும் புரிகிறது. உழைப்பவன் நலமோடு இருந்தால்தான் அவன் உழைப்பைச் சுரண்ட முடியும் என்பது நிலப்பிரபுக்கும் முதலாளிக்கும் தெரிகிறது. அந்தக் கருணைகூட புரோகிதரிடத்தில் இல்லை என்பதைத் தலித் பகுஜன் வாழ்விலிருந்து அறியமுடிகிறது.

புரோகிதருக்கும் மக்களுக்குமிடையே நிலவுகிற இந்த மனிதாபிமானமற்ற உறவு வெறும் பொருளாதாரச் சுரண்டலோடு நின்று விடுவதில்லை. இன்னும் ஆழமான சமுதாயப் பரிமாணங்களையும் அது கொண்டிருக்கிறது. தலித் பகுஜன் மக்களை ஆன்மாவற்றவர் களாகவும் தன்னுணர்வு அற்றவர்களாகவும் தான் நம்புகிற கடவுளுக்கு நெருக்கமற்றவர்களாகவும் வைத்திருப்பது புரோகிதருடைய நலனுக்கு உகந்ததாக இருக்கிறது. அவர் சொல்லுகிற மந்திரங்களின் ஒவ்வொரு வார்த்தையும் சமஸ்கிருதத்தில் இருப்பதால்அவர் மணமக்களைப் பார்த்து தான் சொல்லுகிறபடியெல்லாம் நடக்க வேண்டும்என்று கூறுகிறார். ஒவ்வொரு பொருளாகக் கொண்டு வரும்படி கேட்கிறார். பிறகு உட்காரும்படியும் நிற்கும்படியும் அந்த எரியும் நெருப்பைச் சுற்றி ஏழு அடி நடக்கும்படியும் செய்கிறார். தலித் பகுஜன் மக்களையும் இந்துக்கள் என்று இந்துத்துவவாதிகள் சொன்னபோதிலும் இன்றைய நாளில் கூட இப்படி ஓதப்படுகிற மந்திரங்களுக்கு என்ன பொருள் என்று தலித் பகுஜன்களுக்குத் தெரியாது. இருந்தும்கூட இது பரம்பரை பரம்பரையாகத் தொடர்கிறது. அந்தத் திருமணத்திற்கு வந்திருந்த எல்லோரும் புரோகிதரின் காலைத் தொட்டு வணங்குவதோடு திருமணச் சடங்கு முடிவடைகிறது. இந்த வெட்கக்கேடான செயலை எவரும் விரும்பிச் செய்வது இல்லை. அது தந்திரமாக, அதே சமயத்தில் வற்புறுத்திச் செய்யப்படாததைப் போல சூழ்ச்சியால் மேற்கொள்ளப் படுகிறது. தலித் பகுஜன்கள் எல்லோரும் புரோகிதர் சொற்படி நடக்க வேண்டியவர்களாக ஆகிறார்கள். அங்கு யாராவது புரோகிதரின் காலில் விழ எதிர்ப்பு தெரிவித்தால் பக்கத்திலிருக்கிற பெரியவர்களிடம் கூறி அவர்கள் அடக்கிவைக்கப்படுகிறார்கள். அந்தக் கலகக்காரர்களை அடக்கிவைக்கப் பயன்படுகிற வார்த்தைகள் 'பாவம்' 'கலகம்' என்பன. இது கடவுளுக்கு விரோதமானதென்றும் புரோகிதர் கூறுகிறார். முதியவர்கள் இவ்வாறே இளைஞர்களை அடக்கி வைக்கிறார்கள். இப்படியாக ஒரு சமுதாயம் முழுமையாகப் பணிவுள்ளவர்களாகவும் பயமுள்ளவர்களாகவும் ஆக்கப்படுகிறது.

தலித் பகுஜன்களில் திருமணமானவர்களின் வாழ்க்கை இந்துமத கிரகஸ்தர்களைப் போன்றது இல்லை. புரோகிதர் திருமணத்தின்போது சமஸ்கிருதத்தில் மீண்டும் மீண்டும் கூறுகிற மூன்று வார்த்தைகள் (ஆர்த்திஜா, காமிஜா, தர்மிஜா - இதன் பொருள் யாவருக்கும் புரிவதில்லை) தலித் பகுஜன்களைப் பொருத்தமட்டில் எந்தப் பொருளும் அற்றவை. நான் முன்பு கூறியதைப் போல் தலித் பகுஜன் திருமணம் என்பது உணவு உற்பத்தி, குழந்தை பெறுதல் போன்றவற்றிற்காகவே குடும்பமாக இணையும் நோக்குடையது.

இந்து சமயம் கூட்டுப் பொருளாதார நடவடிக்கைகளுக்கு ஏற்றவாறு தம் மக்களை ஒன்றிணைக்கவில்லை. புரோகிதர் குடும்பமும் அவரைச் சார்ந்த மற்றவர்களும் தலித் மக்களுடன் உற்பத்தி நடவடிக்கை களில் ஈடுபடுவது இல்லை. தலித் பகுஜன்கள் இந்துக்களைப் போல பாலியல் இன்பங்களை அனுபவிப்பது இயலாது. வாத்ஸ்யாயனரின் காமசூத்திராவில் சொல்லப்பட்டது போன்ற முறைகளைத் தலித் பகுஜன்கள் கடைப்பிடிக்க இயலாதபடி அவர்கள் வாழ்வு உள்ளது. முதலில் நமது மக்களின் பொருளாதார வாழ்வு எவ்வாறு உள்ளது என்பது பற்றிப் பேசுவோம். பெரும்பாலான தலித்துக்கள் கிராமப்புறக் குடிசைகளிலும் நகர்ப்புறச் சேரிகளிலும் வாழ்கிறார்கள். இதுவே கிராமப்புற இந்தியாவாகும். இதுவே மக்கள் பண்பாட்டிற்கும் பொருளாதாரத்திற்கும் அடித்தளமாகும்.

## உற்பத்தி

தலித் பகுஜன் மக்கள் அதிகாலையில் கோழிகூவும்போது எழும்புகிறார்கள். ஆண்கள் நேரடியாக விவசாய வேலைக்குப் போகிறார்கள். பெண்கள் வீட்டு வேலைகளைக் கவனிக்கத் தொடங்குகிறார்கள். அந்த நேரத்தில் குளிப்பதற்கும் பிரார்த்தனை செய்வதற்கும் அவர்களுக்கு வாய்ப்பு இல்லை. ஆண்மகன் கால்நடைக் கொட்டிலை சுத்தம்செய்து அவைகளுக்குத் தீனிபோடுகிறான். குருமாசாதி ஆண்கள் வீட்டில் தூங்குவது என்பது, அரிதாகவே உள்ளது. தன்னுடைய செம்மறியாட்டு மந்தை எங்கே உள்ளதோ அதுவே அவன் வாழ்விடம். அதிகாலையில் எழுந்து அந்தச் செம்மறியாட்டுக் கூட்டத்தில் தன்னுடைய ஆடுகளைத் தனியே பிரித்தெடுத்து, பின்னர் குட்டிகளைத் திறந்துவிட்டு அவைகளுக்குத் தாய் ஆட்டிடம் பாலூட்டி விட்டு, பிறகு நோயுற்றுள்ள ஆடுகளைக் கண்டுபிடித்து அவைகளுக்கு மருந்து போடுகிறான். ஒரு கௌடா சாதி ஆண் காலையில் எழுந்து தனது மரம் ஏறும் ஆடைகளை அணிந்துகொண்டு, கள் இறக்க தோப்பிற்குப் போய்விடுகிறான். ஒரு

குருமா தன் ஆடுகள் ஒவ்வொன்றையும் தெரிந்துவைத்திருப்பதைப் போலவே, ஒரு கௌடா தான் கள் இறக்கும் மரம் ஒவ்வொன்றையும் தெரிந்து வைத்திருக்கிறான். அதிகாலையில் சூரிய உதயத்தின் போது ஒரு கௌடா கள் இறக்க முதல் மரத்தில் ஏறுகிறான். மரத்தின் உச்சியிலிருந்து கொண்டே சூரிய உதயத்தின் இயற்கை அழகை ரசிக்கிறான். மரத்தில் அமர்ந்து கொண்டு அழகாக அதன் பாளையைச் சீவி, கள் இறக்குகிறான். அந்த நேரம் கள் குடிப்பதற்கு ஏற்ற நேரம் அல்ல. கள் வடிந்திருப்பதைக் கவனிக்க வேண்டிய நேரம்.

மாலாக்களும், மாடிகாக்களும் படுக்கையில் இருந்து எழுந்து தோல்களைச் சுத்தப்படுத்தவும், செருப்பு தைப்பதற்கு ஏற்ப அவற்றைப் பதப்படுத்தவும் தொடங்குகிறார்கள். பெரும்பாலான இடங்களில் அதற்குப் பிறகு அவர்கள் தங்கள் முதலாளிகளின் வயல்களில் வேலை செய்கிறார்கள்.

இந்தக் குடும்பங்களில் உள்ளவர்கள் செய்யவேண்டிய வேலைகளை காலையிலேயே அவர்களின் எஜமானர்கள் தீர்மானிக்கிறார்கள். பெண்கள் கால்நடைக்ளின் கொட்டில்களையும் எஜமானர்களின் வீட்டைச் சுற்றியும் சுத்தம் செய்யவேண்டும். வீட்டின் உள்ளே அவர்கள் சென்று சுத்தம் செய்வதில்லை. வீட்டின் பின்புறம் பார்த்தால் சமையல் பாத்திரங்கள் சுத்தம் செய்யப்படாமல் கிடக்கும். குழந்தைகள் பசியோடு உணவிற்காகக் காத்துக்கொண்டிருப்பார்கள். எனவே அவசரம் அவசரமாக அனைத்து வேலைகளையும் செய்தாக வேண்டும். இத்தகைய சூழலில் அவர்கள் கடவுள்களைப்பற்றி நினைக்கவோ அல்லது பிரார்த்தனை செய்யவோ நேரமும் இருப்பதில்லை. பிறகு அவர்கள் அம்பாலி என்ற கஞ்சியைச் சமைக்கிறார்கள். இதுதான் தீண்டப்படாத ஏழைகளின் உணவு. குருமா வீட்டிலோ கௌடா வீட்டிலோ இருப்பதுபோல ஒரே ஒரு கறியும்கூட இங்கே தொட்டுக் கொள்ள இருக்காது. வெறும் கஞ்சியைத் தயாரித்துக் குடிக்கிறார்கள். இதை ஒரு சாப்பாடு என்றே சொல்லமுடியாது. அவசர அவசரமாகக் கஞ்சியைக் குடித்துவிட்டு, வீட்டு வேலைகளைக் கவனித்துவிட்டு, பொழுது புலர்வதற்குள் அவர்கள் வயல்களுக்குச் சென்றுவிட வேண்டும். எல்லா தலித் பகுஜன் ஆண்களும் பெண்களும் இப்படித்தான் நடந்துகொள்ள வேண்டும். அவர்களது வேலை பிரார்த்தனையுடனோ அல்லது நீராடி முடித்தவுடனோ தொடங்குவதில்லை. இந்துக்கள் செய்யும் சூரியவந்தனம் (அதிகாலை வேண்டுதல்) தலித் பகுஜன்களின் வாழ்வில் ஓர் அங்கமாக என்றுமே இருந்ததில்லை. மற்றொருபுறம், பார்ப்பன, பனியா, சத்திரிய இந்து என்பவன் காலையில் எழுந்து

குளிர்ந்த நீரில் குளித்து, ஈரத் துணியை இடுப்பில் அணிந்து கொண்டே கீதையைப் படிக்க ஆரம்பித்து விடுகிறான். அது கடவுளுக்கு உகந்தது என்று அவன் நம்புகிறான். கடவுளிடத்தில் உணவுக்காகவும், அறிவுக்காகவும் நலத்திற்காகவும் வேண்டுகிறான். கடவுள் என்பவர் அவர்கள் கேட்கும் அனைத்தையும் கொடுக்கவல்ல பொலிகாளை போன்றவர். கடினமான சிக்கலான வேலைகளையெல்லாம் அவரே கவனித்துக் கொள்வார். எனவே புரோகிதர் அனைத்து வேலைகளையும் கடவுளிடமே விட்டுவிடுகிறார்.

ஒரு தெலுங்குக் கவிஞன் கூறியதைப்போல இந்து சித்தாந்தத்தில் கடவுள் என்பவன் இந்துவினுடைய மனதில் அமர்ந்துகொண்டு அவனது இதயத்தை இயங்கச் செய்கிறான். பூவில் அமர்ந்துகொண்டு வண்ணத்தைக் கொடுக்கிறான். வானத்தில் இருந்துகொண்டு மழை பொழியச் செய்கிறான். நீரோடைகளை ஓடச் செய்கிறான். மலைகளை வளரச் செய்கிறான். கடல்களை மாற்றுகிறான். ஒரு இந்து வேண்டுதலின் போதும் தியானத்தின்போதும் கடவுளிடம் தொடர்பு கொண்டு பேசுகிறான். இந்த வேண்டுதல் முடிந்தபிறகு தான் கட்டியிருந்த ஈரமான ஆடையை அகற்றிவிட்டு பட்டாடையை அணிந்து கொள்கிறான். பட்டாடை அணிவதாய் ஒரு தலித் பகுஜன் கனவுகூடக் காண முடியாது.

### சமையல்

ஒரு தலித் பகுஜன் பெண் காலையில் எழுந்தவுடன் சமைப்பதற்குத் தண்ணீர்கொண்டு வருகிறார். வீட்டையும் வாசலையும், ஆட்டுக் கொட்டிலையும் சுத்தம் செய்கிறார். அடுப்பைப் பற்றவைத்து குராடுத் தண்ணீரை ஊற்றிச் சமையல் பாத்திரத்தினை வைக்கிறார். பிறகு சிரமப்பட்டு அடுப்பை எரித்து அன்றைய உணவைச் சமைத்து எடுக்கிறார். ஒரு இந்துப் பெண்ணைப்போல சமையலறைக்குச் செல்லும்முன் கடவுளை வணங்குவதோ, குளித்து ஈர உடையுடன் இருக்கும் 'மடி' யைப் பற்றி நினைப்பதோ கிடையாது. ஒரு இந்துப்பெண் காலைப் பலகாரம் செய்யும் முன் குளித்து ஈர உடையுடன் இருக்க வேண்டும். மடித்தூய்மை ஒரு முக்கிய நடைமுறையாகும். தலித் பெண்ணுக்கு சமையல் என்பது புனிதமான ஒன்றல்ல. அது மனித உடலுக்கு உணவளிக்கிற நடவடிக்கை மட்டுமே. ஆனால் ஒரு இந்துப்பெண் கடவுள் பெயராலேயே சமையல் செய்கிறாள். கடவுள் பெயராலேயே அதைப் படைக்கிறாள். தலித் பெண்ணுக்குச் சோறும் கறியும் மோரும் இருந்தால் அன்று சிறப்பான உணவு. இந்துப் பெண்ணோ கடவுள் பெயரால் பலகாரம், பாயாசம், பலவகையான

(குறைந்தது ஒரு டஜன்) கறிகள், தாளித்த தயிர், புளிச்சாதம், சாம்பார், ரசம் போன்றவைகள் அனைத்தும் இடம்பெறும் வண்ணம் சமைக்கிறாள். இவை கடவுளுக்குப் படைக்கும் உணவு என்ற கவனத்தோடு சமைக்கப்படுகிறது. ஆனால் நமது வீடுகளில் இவ்வளவு உணவுக்கு வாய்ப்பே இல்லை. இவ்வாறான தெய்வீக உணவின் அம்சங்களைப் பார்ப்பன உணவு விடுதிகளில் பார்க்கலாம். இவைகளையெல்லாம் செரிக்கவைப்பதும், உடலை நலமுடன் கவனித்துக்கொள்வதும் கடவுளின் கடமை. பெருந்தீனி தின்பவர்களைப் பாதுகாப்பதும் அதனால் ஏற்படும் வியாதிகளைக் குணப்படுத்துவதும் தான் கடவுளின் வேலை. அதனால்தான் சமையல் காரியங்கள் எல்லாம் பிரார்த்தனைக்குப்பிறகு தொடங்கப்படுகின்றன. புரோகிதருக்கும் கடவுளுக்கும் உள்ள தொடர்பு கடவுளுக்கும் பெருந்தீனி தின்பவனுக்குமான உறவாகிவிடுகிறது. ஆனால் தலித் பகுஜன் குடும்பங்களில் இந்நிலை முற்றிலும் மாறுபட்டது.

ஒரு தலித் பெண் சோறு சமைத்தவுடன் தனது சிறு குழந்தைகளுக்கு ஊட்டிவிடுகிறாள். தன் பசியை அடக்க, தானும் சிறிதளவு உண்ணுகிறாள். பின் வயலில் வேலை செய்யும் தன் கணவனுக்கு உணவு எடுத்துச் செல்கிறாள். நிலத்தை உழுவது, விதைப்பது, தண்ணீர் பாய்ச்சுவது முதலிய வேலைகளை ஆணும் பெண்ணும் சேர்ந்தே செய்கின்றனர். அங்கே ஆண், பெண் வேறுபாடுகள் இன்றி கூட்டாக உழைக்கிறார்கள். சில வேலைகளைப் பகிர்ந்து ஆண்களுக்கான வேலையாகவும், சில வேலைகளைப் பெண்களுக்கானதாகவும் பிரித்துக் கொண்டு செய்கிறார்கள். உடல் உழைப்பையே அடிப்படையாகக் கொண்ட வேலைகளில் தெய்வீகத்தன்மை ஒன்றும் கிடையாது. தெய்வீகக் கதைகளைப்போல ஆண் பெண்ணைவிட உயர்ந்தவன் என்கிற கதையாடல் இங்கே கிடையாது. அந்த அளவில் இந்து ஆண் பெண் உறவைவிட, உழைக்கும் மக்களாகிய தலித் பகுஜன்களிடம் காணப்படும் உறவு சிக்கலற்றது, ஜனநாயகத்தன்மையுடையது. குறைந்த அளவே ஆதிக்கம் உடையது.

## பெண்கள் மற்றும் ஆண்களின் அதிகார எல்லைகள்

குருமா, கொல்லா, கௌடா, மாலா, மாடிகா போன்ற சாதிகளில் ஆண்களுக்கென்று ஒதுக்கப்பட்ட வேலையை ஆண்களும் பெண்களுக் கேற்ற வேலையைப் பெண்களும் செய்கிறார்கள். உதாரணமாகக் குருமாக் குடும்பங்களில் செம்மறியாடு மேய்த்தல், அவற்றை அடைத்து வைத்தல், உரோமம் வெட்டுதல், ஆடுமாடுகளிடம் பால் கறப்பது போன்றவைகளை ஆண்கள் செய்கிறார்கள். ஆட்டு உரோமத்தை

நூலாகத்திரித்தல் மற்றும் அவற்றைச் சமுக்காளமாக மாற்றுகிற வேலைகளைப் பெண்களே செய்கிறார்கள். தானியங்கள் வீட்டுக்கு வருகிற நேரம், செம்மறியாடுகள் குட்டிகளை ஈனுகின்ற நேரம், கள் இறக்கும் நேரம், காலணிகள் தயாரிக்கும் நேரம் இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் ஆண்களும் பெண்களும் இணைந்து ஒத்துழைப்புடன் செயலாற்றுகிறார்கள். இருவருமே அதற்கு உரிமை பாராட்டி செயலாற்றுகிறார்கள். ஆனால் ஒரு இந்துப் பெண் சமைப்பது, குடும்பத்தை நிர்வகிப்பது, குழந்தைகளைப் பேணுதல் ஆகிய அனைத்தையும் கடவுளின் பெயராலும் ஆண்மகனின் பெயராலும் தான் செய்கிறாள். தான் செய்கிற எந்த ஒரு வேலைக்கும் அவள் உரிமை கொண்டாட முடியாது. அவளது இருப்பே ஆண்கள் விதித்திருக்கிற கோட்பாட்டை ஏற்று நடந்து கொள்வதில்தான் உள்ளது.

இந்தச் சமூகத்தில் ஆண் அசாதாரண வலிமையுடையவனாகவும், பெண் அசாதாரண பலகீனமானவளாகவும் இருக்கிறாள். வழக்கமாக பெண்கள் செய்கிற வேலைகளைத் தவிர்த்து நாற்று நடுதல், களை எடுத்தல், நிலத்தை உழுதல் போன்ற வேலைகளையும் தேவை வரும்போது செய்கிறாள். ஆண்கள் இல்லாத சமயம் ஒரு குருமாப் பெண் ஆடு மேய்க்கிற வேலையையும் செய்கிறாள். ஆனால் ஒரு பார்ப்பனப் பெண் எப்படியிருந்தாலும் புரோகிதர் வேலையைச் செய்யமுடியாது. ஒரு தலித் பகுஜன் பெண் தனது சாதியிலும் அதன் இயங்கு தளத்திலும் தனது அரசியல், பொருளியல் மற்றும் சமூக இருப்பை உறுதி செய்ய முடியும். ஒரு பார்ப்பனப் பெண் அப்படிச் செயல்பட முடியாது. தலித் பகுஜன்கள் உற்பத்தி சார்ந்த தொழிலைச் செய்யும் போது அதில் ஒரு தத்துவம் அடங்கியுள்ளது. அது இந்துத் துவத்திலிருந்து வேறுபட்டது. மேலும் அது ஒரு தெய்வீகத் தத்துவமும் அல்ல. அது இவ்வுலக மானுடத் தத்துவம். அது மேலுலகிற்கோ மேலுலக வாழ்வுக்கோ தொடர்புடையதல்ல. அது உலகியல் நடைமுறைக்கேற்றது. இம் மண்ணுலகிற்குரியது. இது இளமை முதல் கற்பிக்கப்படுகிறது. வருங்கால வாழ்க்கைக்கு அது வழிகாட்டியாகவும் அமைந்துவிடுகிறது. எங்களுடைய இந்தத் தத்துவத்தை ஒரே வாக்கியத்தில் கூறிவிடலாம். அதைப் பார்ப்பன பனியாக்களும் புரிந்துகொள்ளமுடியும். ஆனால் அதை அவர்கள் ஒரு பொருட்டாகக் கருதுவதில்லை. ஏன், அதை அவர்கள் காதால் கேட்கக் கூட விரும்புவ தில்லை. ஏனெனில் பார்ப்பன பனியாக்களின் தத்துவம் தெய்வீகமானது. தலித் பகுஜன் தத்துவத்திற்கு எதிரானது. தலித் பகுஜன் தத்துவம் இது தான்: "கை வேலை செய்யாவிடில் வாய் உண்ண முடியாது" என்பதே அது. கை என்பது வில்லையும்

அம்பையும் வைத்திருக்கிற ராமனுடைய கையையோ, சக்கரத்தை வைத்திருக்கும் விஷ்ணு, கிருஷ்ணனுடைய கைகளையோ குறிப்பது அல்ல. அது நிலத்தை உழுவதற்குக் கலப்பையைப் பிடித்திருக்கும் கையையும், கலப்பை செல்லும் வழியில் விதை விதைக்கும் கையையும் அந்த விதை நாற்றாக வளர்ந்து பலன்தர உழைக்கின்ற கையையுமே குறிக்கும்.

உழைக்கும் சாதியினராகிய இந்த மக்களுக்குப் பகவத்கீதை என்ற இந்துத்துவ நூல் ஒன்று தமக்கு எதிரான கோட்பாட்டுடன் இருக்கிறது என்பதே தெரியாது. கடமையைச் செய், ஆனால் பலனை எதிர் பார்க்காதே என்று பகவத்கீதையின் வாசகம் சொல்வது அவர்களுக்குத் தெரியாது. இவ்வாசகத்தை வெளிநாட்டினர் ஒருவர் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்திருக்காவிட்டால் நான் கூட இதை அறிந்திருக்க முடியாது. ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அந்த மக்களிடமிருந்து தட்சணையைக் கரந்துசெல்கிற அந்தப் புரோகிதர் கூட கீதையிலுள்ள வாசகங்களைப் பற்றி அவர்களுக்கு எடுத்துக் கூறுவதில்லை. மக்கள் உழைக்க வேண்டுமே தவிர அதன் பயனைப் பெறக்கூடாது என்ற ஒரு கோட்பாட்டை அது நிலை நாட்டுகிறது என்றால் அந்த உழைப்பின் பயன் யாருக்குக் கிடைக்க வேண்டும் என்று அது வலியுறுத்துகிறது? உழைக்கிற மக்களை உறிஞ்சிக் கொழுப்பதற் கென்றே இந்துத்துவா பல நிறுவனங்களை உருவாக்கியுள்ளது. உடல் உழைப்பு கேவலமானது; அது கூடாது என்று கூறுகிற புரோகிதக் கூட்டம் ஒரு பக்கம் தலித்துகளின் உழைப்பைச் சுரண்டிக்கொண்டு போகிறது. அடுத்து புரோகிதரல்லாத வியாபாரிகளாயிருக்கிற பனியாக்கூட்டம் மூலமாகவும் தலித் மக்களுடைய உழைப்பு சுரண்டப் படுகிறது. எவ்வாறு வியாபாரம் என்பது சுரண்டக்கூடியதாக உள்ளது?

## பனியாப் பொருளாதாரம்

ஒவ்வொரு கிராமத்திலும் சிறு எண்ணிக்கையிலான பனியாக்-குடும்பங்கள் உள்ளன. அவர்கள் 'கோமுட்டி'கள் அல்லது 'சவுக்கார்'கள் எனப்படுகின்றனர். இந்தப் பனியக் குடும்பங்களில் சடங்குகள் என்பன கிட்டத்தட்ட பார்ப்பன குடும்பத்தைப் போலவே காணப் படுகின்றன. இந்தக் குடும்பங்கள் முற்றிலும் எமது குடும்பத்திலிருந்து வேறுபட்டவை. ஆன்மீகத்தில் பனியாக்கள் பார்ப்பனர்களுக்கு மிகவும் நெருக்கமானவர்களாக உள்ளனர். அவர்களது குழந்தை வளர்ப்பும் அவர்கள் குழந்தைகளுக்குச் சொல்லிக்கொடுக்கிற கதைகளும், வாழ்க்கை முறையும் ஏறக்குறைய பார்ப்பனக் குழந்தைகளோடு ஒத்த தன்மையுடையதாகவே இருக்கின்றன. ஒரு பார்ப்பன ஆண்

குழந்தையைப் போலவே பனியா ஆண் குழந்தைக்கும் உபநயனச் சடங்கு (பூ நூல் அணிவது) நடத்தப்படுகிறது. பார்ப்பனப் பெண் குழந்தையைப் போன்றே பனியாப் பெண் குழந்தையும் சமையல் செய்யவும், சமையலில் பலவகையான உணவு தயாரிக்கவும் அதையும் மடித்தூய்மையுடன் செய்யவும் கற்றுக்கொள்ளவேண்டும். பனியாக் கதைகளில் பெருந்தீனி தின்னும் கடவுளாகவும் கொள்ளைக் காரனாகவும் செல்வத்தைச் சேர்த்துவைக்கும் கருமியாகவுமிருக்கிற குபேரன் என்பவனின் கதையே மிக முக்கியமானதாகும். திருமணத்திற்குப் பிறகு ஒரு பனியா வியாபாரத்தைத் தொடங்கி யாக வேண்டும். வியாபாரம் பற்றிய கலைகள் குழந்தைப் பருவத்திலிருந்தே கற்றுத் தரப்படுகின்றன. குழந்தைத் திருமணமும் இங்கு உண்டு.

ஒரு பனியா என்பவர் உட்கார்ந்த நிலையிலிருக்கும் ஒரு தெய்வீக ஞானி. அன்றாடம் அவர் மணிக்கணக்கில் மக்களோடு வியாபாரத் தொடர்புடையவராக இருக்கிறார். அவருடைய வீடு மக்கள் வந்து போக ஏற்றவாறு ஊரின் மத்தியில் அமைந்திருக்கும். வியாபாரம் செய்ய ஏற்றவாறு அந்த வீடு வடிவமைக்கப்பட்டிருக்கும். வீட்டின் ஒரு பகுதியில் கடையும் அவற்றில் பல பொருட்களும் இருக்கும். தானியங்கள், பயறு வகைகள், காய்கறிகள் போன்ற மக்கள் உற்பத்தி செய்யும் பொருள்கள் அனைத்தையும் பனியா வாங்கி விற்கிறார். துணிவகைகள், வாசனைப்பொருட்கள், எண்ணெய் போன்றவைகளும் அவரிடம் கிடைக்கும். சுருங்கச் சொன்னால் ஒரு பனியா என்பவர் எல்லாப் பொருள்களையும் சேகரிக்கிறவராகவும் பின் அவற்றை வினியோக்கிறவராகவும் இருக்கிறார். தலித் பகுஜன்களிடம் அவர் பொருளை வாங்குகிறவராகவும் விற்கிறவராகவும் இருக்கிற படியால் புரோகிதரைப் போல் அல்லது தலித் பகுஜன்கள் பேசும் மொழியிலேயே அவர்களுக்குப் புரியும்படி ஒவ்வொருவராக அழைத்து, கும்பலாகப் பேசாமல் தனித் தனியே பேசி வியாபாரம் செய்கிறார். புரோகிதரைப்போல் அவர் சமஸ்கிருதத்தில் பேசுவது இல்லை. ஏனெனில் வியாபாரத்திற்கு ஏற்றது மக்கள் பேசுகிற மொழியேயாகும். அவ்வாறு பேசி வியாபாரம் செய்தால்தான் தன்னுடைய பணம் பன்மடங்கு பெருகும் என்பது அவருக்குப் புரியும். வாடிக்கையாளர்கள் பல மொழிகளில் பேசுபவர்களாக இருப்பார்கள். ஒவ்வொருவரிடமும் அவரது மொழியில் பேசி வியாபாரம் செய்கிறார்கள். சுருக்கமாகச் சொல்வதெனில் மக்களுடைய உணர்வுகளைத் தன் வியாபார நிமித்தம் ஒரு பனியா புரிந்து வைத்திருக்கிறார்.

உடலமைப்பைப் பொறுத்த வரையில் பனியா பானையைப் போல் தொந்தி உடைய ஒரு தடியான ஆள். உடற்பயிற்சி செய்யாமலும் உழைக்காமலும் இருப்பதால் ஆங்காங்கே அவருடைய உடலில் சதைகள் தொங்கிக் கொண்டு இருக்கும். மார்பில் ஒரு முப்புரி நூல் தொங்கும், நெற்றியில் நாமம் இருக்கும். உடலமைப்பில் அவர் வாடிக்கையாளரிடமிருந்து வேறுபட்டவராக இருப்பார். வசதியற்றவர்களாக இருப்பதால் உடல்மெலிந்து, சரியான ஆடை உடுத்தமுடியாதபடி அவர்கள் இருப்பார்கள். பனியா சவுக்காரோ தன்னைத் தெய்வீகமாகக் காட்டிக்கொள்ள, அரைகுறையாக ஆடையணிந்திருப்பார். எனினும் ஆயிரக்கணக்கான ரூபாய் மதிப்புடையவைகளையே அவர் அணிந்திருப்பார். கழுத்தைச் சுற்றிலும் ஒரு தங்கச் சங்கிலியும் பட்டு வஸ்திரமும் இருக்கும்.

பனியாப் பெண்ணும், பார்ப்பனப் பெண்ணைப் போன்றே கிராமத்திலிருக்கிற எல்லாப் பெண்களிலிருந்தும் முற்றிலும் வேறுபட்டவராவார். இருப்பினும் பார்ப்பனப் பெண்ணிலிருந்து பனியாப் பெண் இரண்டு விதங்களில் மாறுபடுகிறார். பார்ப்பனப்பெண் தெய்வீகச் சமையலில் கைதேர்ந்தவளாக இருக்கிறாள். பனியாப் பெண்ணோ வியாபாரத்தை மையமாகக் கொண்ட வீட்டின் ஒரு அங்கமாகத் திகழ்கிறாள். அவர் தமது கடைக்கு மக்களை இழுப்பதற்காகத் தலித் பெண்களோடு தொடர்பு வைத்துக்கொண்டு ஒவ்வொருவருடனும் தனித்தனியாக உறவை வளர்த்துக் கொள்கிறாள். அவர்களுடைய பரிமாற்றங்கள் மற்றவர்கள் அறியாதவாறு நிகழ்கின்றன. திறமையாகவும் அதே நேரத்தில் தந்திரமாகவும் ஒரு பனியாப் பெண் தன் வாடிக்கையாளராகவுள்ள பெண்களுடன் தொடர்பு வைத்துக்கொள்கிறாள். அவளுடைய கணவன் ஆண் வாடிக்கையாளர்களுடன் தொடர்பு கொண்டுள்ளார். அவர்கள் சொல்லுகிற பொய் அவர்கள் கையாளும் ஏமாற்று வேலைகள் எல்லாம் சேர்ந்து இங்கே ஒரு குறிப்பிடத்தக்க இந்துச் சந்தை முறையையே உருவாக்கியுள்ளது.

இந்த இந்துச்சந்தை உறவுகள் பல தனித்துவமான வடிவங்களைக் கொண்டுள்ளன. இந்துத் தன்மையற்ற (நிலப்பிரபுத்துவ அல்லது முதலாளித்துவ) சந்தை, குறிப்பாக மேற்கத்திய சந்தை தரமானது. ஒரு வியாபாரியோ, வியாபாரம் செய்கிற பெண்ணோ, வாங்கிய விலை குறித்துப் பொய் சொல்ல மாட்டார்கள். பொய் என்பது உபரி மதிப்பின் ஒரு பகுதியாக இருக்காது. அதாவது பொய்யைச் சொல்லி இலாபம் சம்பாதிக்க மாட்டார்கள். ஆனால் ஒரு இந்து பனியா சந்தையில் பொய் என்பது புனிதத்தன்மையின் ஒரு அம்சமாகவும்,

சந்தைக் கலாச்சாரத்தின் ஒரு அங்கமாகவும் திட்டமிடப்படுகிறது. ஒரு பனியா வாடிக்கையாளர்களை ஏமாற்றுவது, தனது லாபத்தைப் பற்றி பொய்சொல்வது ஒரு புறம் இருக்க, தான் என்றுமே இந்து தர்மத்திற்குக் கட்டுப்பட்டு வியாபாரம் செய்வதாகக் கூறுகிறான். வாங்கும்போது கூட்டி அளந்தாலும் விற்கும் போது குறைத்து அளந்தாலும் அவர் தனது இந்து ஒழுக்கத்தை விட்டுவிட மாட்டார். அவர் விற்கும் பொருள்களின் தரத்தை மிகைப் படுத்திக் கூறினாலும் வாங்கும் பொருள்களின் தரத்தைக் குறைத்து மதிப்பிட்டாலும் அவர் இந்து ஒழுக்க வட்டத்திற்குள்ளேயே வியாபாரம் செய்வதாகக் கூறுவார். ஒரு பனியா தீவிர இந்துத் துவவாதியாக இருக்கிறான். அவன் விற்கும் பொருள்களின் விலைகள் சாதிகளுக்கேற்றவாறு கூடவோ குறையவோ செய்யும். உதாரணமாக ஒரு மாடிகா கொடுக்கும் தானியத்திற்குக் குறைந்த விலையையும், ஒரு ரெட்டியார் கொடுக்கும்அதே தானியத்திற்கு அதிக விலையையும் பனியா கொடுக்கிறான். ஒடுக்கப்பட்ட சாதியினரிடமிருந்து பொருள்களை வாங்கும்போது குறைவான விலையையும், விற்கும் போது அதிகமான விலையையும் பனியா நிர்ணயிக்கிறான். கிராமத்துச் சந்தைகளின் சாலைகள் எல்லாம் ஒரே இடத்தைச் சென்றடையும். அது தான் சவுகாரின் வீடு.

குறிப்பிட்ட சாதி உற்பத்தியாளர்களுக்கு அவர்களுக்கேயுரிய சந்தைகள் இல்லை என்று கூற முடியாது. அவர்களுக்கும் சந்தைகள் உண்டு. அவை இந்துப் பனியா சந்தைக்கு வெளியில் வாங்குபவரையும் விற்கிறவரையும் கொண்டுள்ளன. பனியாக்கள் இந்துக் கள் பயன்படுத்தாத பொருட்களை வியாபாரம் செய்வ தில்லை. மாட்டிறைச்சி மற்றும்இதர இறைச்சி வணிகங்கள் இந்துக்களுக்குரியதல்ல. அவ்வாறே செருப்புகள், எருதின் கழுத்தில் போடும் பெல்ட், தோலால் ஆன சாட்டை, கடிவாளம் போன்றவைகளும் இந்துக்களின் வியாபாரத்திற்கு உரியவை அல்ல. இவற்றையெல்லாம் வாங்குவதும் விற்பதும் தலித் பகுஜன் சந்தையின் ஒரு பகுதியாகும். இந்தச் சந்தைகளில் ஈடுபடுகிறவர்கள் அனைவரும் தலித் பகுஜன்கள், கிறித்தவர்கள், முஸ்லிம்கள் ஆவர். இவை தெய்வீகத் தன்மைக்கு அப்பாற்பட்டு செயல்படுகின்ற 'மதம் சாராச் சந்தைகள்' ஆகும். இங்கே தெய்வக் கோட்பாடு ஏதும் இல்லாததால் விலைப்பட்டியல்கள் நேரடியாகவும் சந்தை நடைமுறைகள் வெளிப்படையாகவும் இருக்கும்.

சில நேரங்களில் விற்கிறவர், வாங்குகிறவரின் பொருளாதார நிலையை அறிந்து இரக்கம் காட்டுகிறார். தவணை முறையில் பணத்தைப்

பெற்றுக் கொள்கிறார். வேறு வார்த்தைகளில் சொல்வதெனில் இந்த இந்துவல்லாத சந்தையில் வாங்குகிறவர்களும், விற்கிறவர்களும் சமூக, பொருளாதார அடிப்படையில் தொடர்புடையவர்களாகவே உள்ளனர். இப்படிச் சொல்வதால் பனியாச் சந்தையின் பாதிப்பு இங்கே முற்றிலுமாக இல்லை என்று பொருளல்ல. சவுகார் இந்த சந்தைத் தொடர்புகளில் ஒரு முன்மாதிரியாக இருக்கிறார். ஆனால் முக்கியமான வித்தியாசம் என்னவெனில் சமூக அளவிலும், அரசியல் அளவிலும் இம்மக்கள் பரஸ்பரம் நெருக்கமான உறவுகளைக் கொண்டிருக்கிறார்கள். இந்துக்களல்லாத வியாபாரிகள் தோற்றத்தில் சாதாரணமானவர்களாக இருப்பதால் இத்தகைய உறவுக்கு வாய்ப்புகளுள்ளன. அவர்களுடைய வாழ்க்கை முறையும்கூட பெரும் பான்மையான தலித் பகுஜன்களிடமிருந்து வேறுபடாதவாறும் உள்ளது.

## ஆண் - பெண் உறவுகள்

ஆண் பெண் உறவுகள் தலித் பகுஜன் குடும்பங்களிலும் இந்துக் குடும்பங்களிலும் ஒரே மாதிரியானதா? அதிலும் பல வகையான வேறுபாடுகள் உள்ளன என்பது என் கருத்து. ஆண் பெண்ணின் குடும்ப உறவுகள் அவர்களது இளமைக்காலத்து உருவாக்கத்தைப் பொருத்தே அமைகின்றன. தலித் பகுஜன்களுக்கும் இந்துக்களுக்குமிடையே காம உணர்வு குறித்த கருத்து முற்றிலும் எதிரெதிரானதாக உள்ளது. இருவகைக் குடும்பங்களிலும் திருமணத்தின்போது புரோகிதர் காம இச்சையைப் பற்றிக் கூறுகிறார். தலித் பகுஜன் ஆண் பெண்களுக்கும், பார்ப்பன பனியா ஆண் பெண்களுக்கும் இந்தக் கருத்து முதலில் புதுமையானதாக இருக்கும். நடைமுறை மற்றும் தத்துவார்த்த ரீதியாகப் பார்க்கிறபோது அவசியமான வேறுபாடுகள் சில இருவருக்கும் இடையே உள்ளன. இருந்தபோதும் இந்த இரண்டு குடும்பங்களைச் சார்ந்தவர்களுக்குமிடையே அனுபவம் கல்வி போன்றவை முற்றிலும் வேறுபட்டவை. தலித் பகுஜன் தம்பதியர் தங்களுடைய பாலியல் விருப்பங்கள், பாலியல் அனுபவங்கள் ஆகியவைகளைத் தங்களுடைய பெற்றோர்கள், உறவினர்கள், நண்பர்கள் போன்றோரின் அனுபவங்களிலிருந்து கேட்டுக் கொள்கிறார்கள். ஆனால் தலித் பகுஜன் கடவுள்கள் குறித்த கதைகளில் காமம் சார்ந்த வர்ணனைகள் முற்றிலும் இல்லை. அவர்களின் பொச்சம்மா, மாரம்மா, மைசம்மா, பொத்தராஜு, மல்லையா ஆகியோருடைய பாலியல் வாழ்வு பற்றி அவர்கள் ஒன்றும் அறிந்திருக்க மாட்டார்கள். இவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு கதை இருக்கிறது. தலித் பகுஜன் இளைஞர்களும் இதைத் தெரிந்துள்ளனர். இருந்தும்கூட

இந்தக் கடவுளர்களின் கதைகளில் ஒன்றில்கூட காமம் ஒரு முக்கியப் பொருளாக இருந்ததில்லை. பார்ப்பன பனியாக்கள் மனிதர்களின் பாலுணர்வு நடவடிக்கைகளைப் பற்றிப் பேச தடை விதித்திருக்கிறார்கள். பெண்கள் வீட்டிற்குள் முடக்கி வைக்கப்பட்டுள்ளதால், ஆணும் - பெண்ணும் எதிர்கொள்வதற்கான வாய்ப்புகள் குறைந்து விடுகின்றன. இதன் விளைவாக மேல் சாதியினரும் தலித் பகுஜன்களும் கூட உறவுகொள்ள முடியாதபடி உள்ளது. சமூக தளத்திலும் அன்றாட வாழ்க்கையிலும் காணக் கிடைக்காத பாலியல் கதையாடல்களைத் தெய்வீகத் தளத்தில் தேடத் தொடங்கி விடுகின்றனர். இந்த முரண்பாட்டை ஒருவன் புரிந்து கொள்ள வேண்டுமானால் இந்துக் கடவுள்களின் பாலியல் இன்ப விளையாட்டுக்களைப்பற்றித் தெரிந்து கொள்ளவேண்டும்.

இந்துக் கடவுள்களின் கதைகளில் பாலியல் விளையாட்டுகள் பற்றிய வர்ணனைகள் நிரம்பிக் கிடக்கின்றன. இவை குறித்த மிகவும் புகழ்வாய்ந்தக் கதைகள் இந்துக்கள் மத்தியில் உள்ளன. கிருஷ்ணன் - ராதா, வர்தினி-ப்ரவரக்யா, சங்கரன்-பார்வதி போன்றவைகள் நன்கு அறியப்பட்ட உதாரணங்களாகும். இதில் ராதா-கிருஷ்ணன் கதை பிரசித்தி பெற்ற ஒன்று. மிகவும் கட்டுப்பாடுகள் நிறைந்த பார்ப்பனக் குடும்பங்களில் இளம் பெண்கள் அவனை வழிபட அனுமதிக்கப் படுவதோடு, ஆணாதிக்கம் மிகுந்த காமலீலை புரியும் கிருஷ்ணனை ஒரு பெண் வரவழைத்துத் தன்னுடைய காதலனாக ஆக்கிக்கொள்ளவும் அனுமதிக்கப்படுகிறாள். இன்ப விளையாட்டில் கரை கண்ட அவனைப் பல வடிவங்களில் பொம்மைகளாகவும் சிலைகளாகவும் படங் களாகவும் வண்ண வண்ணக் கோலங்களுடன் வைத்து வணங்கு கிறார்கள்; ஆபரணங்களாக அணிந்து கொள்கிறார்கள். பகவத்கீதையைத் தவிர்த்து ஏராளமாக உள்ள பிற இந்துக் கதைகளில் கிருஷ்ணனின் லீலை நிரம்பிக் கிடக்கிறது. ஆண் பெண் உறவு நிலைகள் பற்றி இந்துக்கள் மத்தியில் புகழ் வாய்ந்த நூல் வாத்ஸ்யாயனரின் காம சூத்திரம் ஆகும். அறுபத்து நான்கு வகையான பாலியல் உறவு நிலைகளை இந்நூல் குறிப்பிடுகிறது. ஒரு பார்ப்பனக் குடும்பச் சூழலில் இந்த அறுபத்திநான்கு கலைகளையும் முயன்று பார்ப்பதற்கு சாத்தியக் கூறுகள் இல்லா திருக்கலாம். எனினும் இந்தக் கலைகள் தெய்வீகமானவை என்று இவற்றைப் பல இந்துக் கோயில்களில் சிற்பமாகச் செதுக்கியுள்ளார்கள்.

ஆண் பெண் உறவுகள் தலித் பகுஜன் குடும்பங்களில் முற்றிலும் வேறாக உள்ளன. பாலியல் உறவுகள் கலைவடிவில் முன் வைக்கப்- படுவதில்லை. அதற்காக அவர்கள் காதலை அடிப்படையாகக்

கொண்ட பாடல்களைப் பாடுவதே இல்லை என்று கூறமுடியாது. அவர்கள் தம்மைச் சுற்றியுள்ள மனிதர்களின் காதலைப் பாடுகிறார்கள். அவர்களின் கதைகள் மதச்சார்பற்றவை. இந்துக் குடும்ப வாழ்க்கைக்கும் தலித் குடும்ப வாழ்க்கைக்கும் உள்ள முக்கிய வேற்றுமை என்னவென்றால் இந்துக்கள் பாலியல் உறவைத் தெய்வீக நடவடிக்கையாகக் கருதுகிறார்கள். தலித் பகுஜன்களுக்கோ பாலியல் உறவு உற்பத்தியின் ஒரு பகுதியாக இருக்கிறது. அவர்களுக்கு ஓய்வோ விடுமுறையோ இல்லை. பாலியல் இன்பங்களைக் கலையாகவும் புனிதமாகவும் அனுபவிக்கும் படியாக நேரம் வாய்ப்பதில்லை. சில சாதிகளிடத்தில் கணவன் மனைவி உறவு என்பது நொடிப் பொழுதுகளில் முடிந்துவிடுகிறது. உதாரணமாக குருமா குடும்பங்களில் ஆண்கள் பகலில் தங்கள் ஆடுகளுடன் காடுகளுக்குச் சென்று விடுகிறார்கள். இரவு நேரங்களில் ஆட்டுக் கிடைகளிடையே ஆண்கள் படுத்து உறங்கி விடுகிறார்கள். குடும்ப வேலைகள் அனைத்தையும் பெண்ணே செய்துவிடுகிறாள். கடைக்குச் சென்று பொருள்களை வாங்குவது, குழந்தைகளைப் பராமரிப்பது, கம்பளம் நெய்வது, வேலை இல்லாதபோது வயல்வேலைக்குச் சென்று வருமானத்தைப் பெருக்குவது ஆகிய பணிகள் பெண்கள் ஏற்றுக் கொண்டவைகளாகும். இந்த நடவடிக்கைகள் அனைத்தும் சமூக நடவடிக்கைகளாக இருக்கின்றன. இப்படியான வாழ்க்கை முறை தலித் பகுஜன் குடும்ப உறவுகளில் புனிதத்துவத்துக்கோ இன்ப விளை யாட்டிற்கோ அதிக முக்கியத்துவம் தர முடியாததாய் உள்ளது. சில நேரம் தன் மனைவியை நடு இரவில் சந்தித்துவிட்டு, பிறகு ஆட்டுக் கிடைக்குச் செல்லும் ஆண்களை இங்கே காணலாம்.

சுருக்கமாகச் சொல்வதென்றால் தலித் பகுஜன் ஆண் பெண் உறவு இயற்கைக்கு மாறானதல்ல. எழுத்தறிவில்லாததாலும் ஆன்மீகத் தொடர்பு இல்லாததாலும்ஆண் பெண் உறவு என்பது சூழ்ச்சியற்ற தாகவும், சுரண்டலற்றதாகவும் உள்ளது. மனிதத்தன்மை என்பது இன்னும் அங்கே வாழ்ந்து கொண்டிருக்கிறது. இந்து சமூகத்தில் காணப்படுகிற ஆதிக்க உறவு தலித் பகுஜன் சமூகத்தில் இல்லை. பாலியல் உறவு உடல் தேவையாக மட்டும் இருக்கிறது; காவிய சுகமளிப்பதாக இல்லை. வரையறுக்கப்படாத இந்தக் காதல் தலித் பகுஜன்கள் மத்தியில் தனது இயற்கைத் தன்மையைத் தக்கவைத்துக் கொண்டுள்ளது. இந்துக்களின் ஆண் பெண் உறவுகள் ஏமாற்று தலுக்கும் சூழ்ச்சிக்கும் உட்பட்டது. தலித் பகுஜன் உறவு கள்ளங் கபடமற்றது.

தெய்வீகத் தன்மை வாய்ந்த உறவைவிட இயற்கையான உறவு உறுதியானதாக இருக்கிறது. அந்த உணர்வு தனித்துவமானது.

புறச்சக்திகளுடைய உருவாக்கத்தால் வருகின்ற பயத்தோடு கூடிய உறவிலிருந்து இது வேறுபட்டது. உலகிலேயே இந்தியாவிலுள்ள தலித் பகுஜன்கள் மட்டும் தான் மதத்தின் இறுக்கமான வரையறைக்கு அப்பாற்பட்ட சமூக வாழ்க்கை வாழ்ந்து வருகிறார்கள். உதாரணமாக, அவர்களுடைய திருமண ஒப்பந்தத்தை எடுத்துக் கொள்ளலாம். அது அடிப்படையில் மனிதர்களுக்கு இடையிலான ஒப்பந்தம். அது தந்தைவழிச் சமூக அமைப்பின் எல்லைகளுக்கு உட்பட்டதாக இருந்தபோதிலும் பெண்களுக்கு வழங்கப்பட்ட கூடுதலான உரிமைகளை ஏற்கிறது. ஆண் பெண் இருவரும் ஒருவரை ஒருவர் மதிக்காதபோது அந்த உடன்பாடு முறிந்து மணவிலக்கில் முடிகிறது. மணவிலக்கிற்குப் பிறகு ஆணோ, பெண்ணோ தன் முயற்சியாலோ, தன் பெற்றோர் முயற்சியாலோ வேறொரு துணையுடன் புதிய உடன்பாட்டைச் செய்துகொள்ள உரிமையுண்டு. இத்தகைய உரிமைகள் இருப்பதால் ஒரு மனைவி தன் கணவரை கடவுளாகக் கருத வேண்டியதில்லை. எனவே ஒரு தலித் பகுஜன் பெண் தன் கணவனுக்குக் காலை மாலை பாதபூஜை செய்ய வேண்டியது இல்லை. தன்னைவிட உயர்வானவனாக கடவுளைப் போலக் கருத வேண்டியது இல்லை. சக மனிதனாக நடத்த அவளுக்கு உரிமை உண்டு. குடும்பத் தகராறின் போது வார்த்தைக்கு வார்த்தை பேசுவதும், திட்டுக்குப் பதில் திட்டுவதும் சமுதாய நடைமுறை. தந்தைவழிக் குடும்ப அமைப்புதான் என்றாலும் கூடுதலான சனநாயக நெறிமுறைகள் தலித் பகுஜன்களிடத்தில் உண்டு.

தலித் பகுஜன் பெற்றோர்களும் ஆண் மகனையே விரும்புகிறார்கள் என்றாலும் அது இந்துக்களுடைய கருத்துக்கு முரணானது. முன்பே கூறியது போல தலித் பகுஜன் மக்களிடையே மகன் என்பவன் தன் தந்தையைச் சொர்க்கத்துக்கு அழைத்துப் போகிற தெய்வக் கடமையைச் செய்பவன் அல்ல. தலித் பகுஜன் குடும்பத்தில் மகன் என்பவன் அதிகமான உற்பத்தி சக்தி வாய்ந்தவனாக மதிக்கப்படுகிறான். இது விஞ்ஞானத்திற்குப் புறம்பான ஒரு சிந்தனை. அவர்களது வளர்ச்சி முறையும் வாழ்க்கை நிலையும் அவர்களை இப்படி யோசிக்க வைக்கிறது. தலித் பகுஜன் ஆளுமை என்பது பொருள்முதல்வாதத்திற்கும் ஆன்மவாதத்திற்கும் இடையில் உள்ளது. ஆனால் இந்து ஆளுமை என்பது இழிந்துவரும் ஆன்மீகமாக உள்ளது. இத்தகைய இழிந்த ஆன்மீகத்தில் திருமணம், சந்தை, ஆண் பெண் தன்மைகள் ஆகியன விஞ்ஞானத்திற்கும் பகுத்தறிவுக்கும் ஒவ்வாததாக இருக்கின்றன. இந்துக்களின் வாழ்க்கை பற்றிய மதிப்பீடு

மற்றவர்களுடைய ஆன்மீக சமத்துவத்தைச் சகித்துக்கொள்ளாத நபர்களையே உருவாக்குகிறது. அன்றாட வாழ்வில் இந்துக்குடும்பம் என்பது மனிதாயத் தளத்தில் இயங்குவது இல்லை. அது தெய்வீக உணர்வால் இயக்கப்படும் ஒரு கூட்டு நடிவடிக்கையாகும். பெரும் பான்மை மனிதர்களை தன்னுள் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஆன்மீக நிறுவன அமைப்பாக அது இல்லை. தலித் பகுஜன் ஆன்மீகம் மதத்திற்கு அப்பாற்பட்டது; ஆனால் மனிதத்தன்மை உடையது.

இந்துத்துவா தனது ஆன்மீக எல்லைக்குள் மனித சமூகத்தை ஈர்க்கக்கூடிய மனித உறவுகளை வளர்த்து இருந்தால் அது உலக மதமாக புத்த மார்க்கத்துக்கும், இஸ்லாமிய, கிறித்தவ மதங்களுக்கும் முன்பாகவே மாறியிருக்கும். இந்துக் குடும்ப அமைப்பு மக்களைத் தன்பால் ஈர்ப்பதற்குப் பதிலாக அவர்களை விலக்கி வைத்தது. தலித் பகுஜன்கள் இந்து வரையறைக்குள் நுழையமுடியாதபடி அவர்களைச் சொர்க்கத்துக்குத் தகுதியற்றவர்களாகக் கருதியது. வீடு பேறு அடைதலையும் ஆன்மீகத் தன்மையையும் இந்துத்துவா பார்ப்பன பனியா சத்திரியர்களுக்கான தனிநபர் சொத்தாக மாற்றியது. மற்ற சூத்திர சாதிகள் (கம்மா, ரெட்டிகள், வேலமா (ஆந்திரா) மராத்தா, பட்டேல், ஜாட், ராஜ்புத் பூமிகார் (வடஇந்தியா) முதலியோர் மெல்ல மெல்ல புதிய சத்திரியர்களாக மாறி இந்துத்துவத்துக்குள் நுழைந்து கொண்டிருக்கிறார்கள்.

*அத்தியாயம் 3*

# புதிய சத்திரியர்களின் எழுச்சியும் அதிகார உறவுகளின் மறுசீரமைப்பும்

ஒவ்வொரு கிராமமும் அரசியல் அதிகார மையமாக உள்ளது. அரசியல் அதிகாரம் என்பது நுண்ணிய அளவிலும் பேரளவிலேயும் இயங்குகின்றது. ஆனால் அந்த நடவடிக்கைகளை நாம் உணர்ந்து கொள்ள இயலாதவாறு நமது உணர்வு கட்டமைக்கப்பட்டுள்ளது. நான் முன் அத்தியாயங்களில் குறிப்பிட்டதைப் போல மனித வாழ்வின் ஒவ்வொரு தளத்திலும், அதாவது இளமை உருவாக்கம், ஆண் பெண் உறவுகள், குடும்ப அமைப்பு, சந்தை உறவுகள்அனைத்திலும் இந்து மற்றும் தலித் பகுஜன் ஆகியோருடைய வாழ்க்கைப்போக்குகள் ஒன்றுக்கொன்று வேறுபட்டவையாக உள்ளன. இந்த வேறுபாடுகள் தலித் பகுஜன்களின் அரசியல் உருவாக்கத்தின் மீது பெரும் சமூகப் பொருளாதாரத் தாக்கங்களை உருவாக்குகின்றன.

## சாதியும் அதிகாரமும்

அரசியல் அதிகாரம் சத்திரியர்களுக்கும், அவர்களுக்கு அமைச்சர் களாயிருந்து ஆலோசனை வழங்குகிற பார்ப்பனர்களுக்கும் மட்டுமே என்று கடந்த கால இந்துக்கோட்பாடு கூறுகிறது. ஆனால் இது முழுமையான புரிதல் அல்ல. அரசு தொடர்புடைய நிறுவனங்களை மட்டுமே வைத்துக்கொண்டு அதிகார உறவுகள் பற்றி விவாதிக்க முடியாது. தலித் பகுஜன்கள் ஒரு குறிப்பிட்ட அதிகார வரம்புக்கு உட்பட்டே வாழவேண்டி உள்ளது. எல்லாவற்றிற்கும் முதலாவதாக, சாதி அமைப்பே ஒரு வகையான அதிகார உறவுகளை நிலைநாட்டுகிறது. மாலாக்களும் - மாடிகாக்களும் குழந்தைப் பருத்திலிருந்தே கீழ்ப்படிந்து நடக்கவும் சொல்வதைக் கேட்கவும் கற்பிக்கப்படுகிறார்கள். பேசுவதும் ஆணையிடுவதும் அவர்களுக்குரியதல்ல. ஒவ்வொருவனுடைய சாதித் தகுதிக்கு ஏற்பவே கட்டளையிடவோ கீழ்ப்படியவோ கற்றுத்தரப் படுகிறது. ஒருவன் கீழ்ச் சாதிக்காரன் எனில் அவன் அதிகப் பணிவுடைய வனாகவும், ஒருவன் மேல் சாதிக்காரன் எனில் அவனுடைய பேச்சும் செயலும் அதிகாரத் தோரணை உடையதாகவும் இருப்பதைக் காணலாம். உதாரணமாக, குருமா சாதியை எடுத்துக் கொள்ளலாம். அது ஒரு இடை நிலைச் சாதியாகும். குருமாக்கள் மாலா, மாடிகா, சக்காளி போன்றவர்கள் மீது அதிகாரம் செலுத்தலாம். வயது வித்தியாசம் இன்றி தலித்துக்களை மரியாதைக் குறைவாக வாடா போடா என்று

மேல் சாதியினர் அழைக்கலாம். இவ்வாறு அழைப்பதே ஒரு அதிகார உறவை நிர்ணயிக்கிறது. அதே சமயத்தில் தமக்கு மேல் சாதியினரிடம் இதற்கு மாறாக குருமாக்கள் பணிந்து நடந்து கொள்வார்கள். அனைத்து ஆதிக்கச் சாதியினரும் தலித் மக்களை அவமானப்படுத்துவதற்குத் தமக்கு உரிமையிருக்கிறது என்று கருதுகிறார்கள். சாதிகளுக்கு இடையே உள்ள அதிகார உறவுகள் தலித் மக்களுடைய சுயமரியாதையைச் சிதைக்கும் அளவிற்கு அமைக்கப்பட்டு இருக்கின்றன.

தென்னிந்தியக் கிராமங்களில் எல்லாம் (வட இந்தியாவுக்கும் இது பொருந்தும்) ஆட்சியதிகாரத்தைக் கையில் வைத்திருந்த சத்திரிய வகுப்பினர் செயலற்றுப் போனதும், சூத்திர மேல்சாதியினர் புதிய சத்திரியர்களாக உருவாகி வருகிறார்கள். ஆந்திராவில் ரெட்டிகள், வேலமாக்கள், கம்மாக்கள் போன்ற சூத்திர சாதியினர் தாங்களும் இந்து சமயத்தைச் சார்ந்தவர்கள் என்று கூறிக்கொண்டு மற்றவர்களை அவமானப்படுத்தத் தொடங்கியுள்ளனர். ஆனால் இந்துக் கோட்பாட்டின் அடிப்படையில் அவர்கள் இருபிறப்பாளர்களல்லர். எனினும் இன்றைய நிலையில் தங்களைப் புராதன சத்திரியர்களாகக் கருதிக்கொண்டு அதற்குரிய அரசியல் அதிகாரத்தை நிலைநாட்ட முயல்கின்றனர்.

## புதிய சத்திரியர்களின் உணர்வுகள்

இந்தப் புதிய சத்திரியர்கள் தங்களை இந்து ஆன்மீகத்தின் ஒரு அங்கம் என்றே நம்பிக் கொண்டு இருக்கிறார்கள். இந்துத்துவத்தின் ஆதரவாளர்களாக மாறி வருகிறார்கள். பார்ப்பன பனியாக்கள் நமது உறவுகளைச் சூழ்ச்சியின் மூலமாகத் தமக்கு ஏற்றவாறு மாற்றியதுபோல புதிய சத்திரியர்கள் தம்மைப் புராதன சத்திரியர்கள் என்று சொல்லிக்கொள்வதன் மூலம் இந்துத்துவ சக்திகளோடு சேர்ந்து பல்வேறு துறைகளில் அதிகார உறவுகளைத் தமக்குச் சாதகமாக்கிக் கொள்ளுகிறார்கள். இந்துத்துவா எப்போதும் சிலரைச் சேர்த்துக்கொள்வதற்கும், சில பேரை விலக்கிக்கொள்வதற்கும் ஏற்ற கொள்கைகளையே நம்புகிறது. பார்ப்பன பனியாக்கள் புதிய சத்திரியர்களை மெதுவாகத் தம் பக்கம் சேர்த்துக் கொண்டு அவர்களுக்கும் கீழ்ப்பட்ட சாதியினரைப் புறக்கணிக்கின்றனர். அதிகார உறவுகளை ஏற்படுத்திக் கொள்வதிலும், தங்கள் மேலாதிக்கத்தை நிலைநாட்டிக்கொள்வதிலும், முனைந்து செயல்பட்டு விளை நிலங்களைத் தாங்கள் கையகப்படுத்திக்கொள்ளவும், மற்றவர்களைத் திட்டமிட்டு ஒதுக்கவும் நவீன சத்திரியர்கள் முனைந்துள்ளனர். விவசாய உற்பத்தி முறையில் அவர்கள் இன்றும் ஆழ வேரோடி இருப்பதென்பது இவற்றைச் சாத்தியமாக்குவதற்கு எளிதாக உள்ளது.

இந்தப் புதிய சத்திரியர்களில் கூட சில குடும்பங்கள் ஏழைகளாக உள்ளனர். அன்றாட வாழ்வில் அவர்கள் தலித் பகுஜன்களோடு தொடர்புடையவர்களாக உள்ளவாறு சாதி அமைப்பு உள்ளது.

இந்தக் குடும்பங்கள் பார்ப்பன பனியாக்களுக்கும் கீழே உள்ள சாதிகளுக்கும் இணைப்புப்பாலமாகச் செயல்படுகின்றன. புதிய சத்திரியர்களுடைய அரசியலதிகாரம் இவ்வாறு ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு கணமும் நடைமுறைப்படுத்தப்படுகிறது. புதிய சத்திரியர்கள் ஒவ்வொரு நாளும் தலித் பகுஜன்களை வயல்வெளிகளிலும் வீடுகளிலும் எதிர்கொள்கிறார்கள். இந்தத் தொடர்புமுறை அவர்களுக்குள் சமத்துவமற்ற நிலை நீடித்திருப்பதற்கு உதவுகிறது. பார்ப்பன பனியாக்கள் மிகக்குறைந்த சந்தர்ப்பங்களில் தான் தலித் பகுஜன்களோடு நேரடியான தொடர்புடையவர்களாக இருக்கிறார்கள். புதிய சத்திரியர்கள் திடீரென்று உருவானதன் விளைவாக நவீனத்துவத்தின் பாதிப்பு கிராமங்களில் பார்ப்பனீயத்தைச் சிதைக்க முடியாதவாறு செய்து விட்டது. இவ்விதமாய்ப் புதிய சத்திரியர்கள் பார்ப்பனீயத்தை அழிவிலிருந்து காப்பாற்றி பார்ப்பனீயம் மேலும் வலுப்பெறுவதற்கு உதவியிருக்கிறார்கள். இவ்வாறு அவர்கள் வேர்களற்ற சமூக சக்தியாக உருவாகிக் கொண்டிருக்கிறார்கள். தாம் வேர் கொண்டுள்ள பொச்சம்மா, மைசம்மா கலாச்சாரத்தை நிராகரிக்கிறார்கள். அதே நேரத்தில் பார்ப்பனீயம் இவர்களுக்கு இருபிறப்பாளர்கள் என்கிற கௌரவத்தை மறுக்கிறது. இவ்வாறு பார்ப்பனீயம் அவர்களை விலக்கி வைத்தாலும் புதிய சத்திரியர்கள் பார்ப்பனீயத்துடனும் இந்துத்துவத்துடனும் தங்களைத் தீவிரமாக இணைத்துக் கொள்ளத் தவறுவதில்லை. தலித் பகுஜன் உள் அமைப்புகள் உருவாக்கி வைத்துள்ள சனநாயக உறவுகளை அழிப்பதே இந்த இந்துத்துவத்தின் நோக்கமாக உள்ளது.

உண்மையில் புதிய சத்திரியர்கள் தங்களுக்கென ஒரு புதிய பண்பாட்டுத் தகுதியைப் பெற விரும்புகிறார்கள். அவர்களுடைய ஆண் குழந்தைகளை ஒரு செயற்கைத்தனமான போர்க் கலாச்சாரத்திற்கு உரியவர்களாய் வளர்க்கிறார்கள். இதன் காரணமாக அவர்கள் பெயருக்குப் பின்னால் ரெட்டி, ராவ், பட்டேல் போன்ற சாதிப் பெயரைச் சேர்த்துக் கொள்கின்றனர். பொருளாதார அரசியலாதிக்கத்தை உருவாக்கிக்கொள்ள இவர்கள் குடும்பங்களிலேயே வலியுறுத்தப் படுகின்றனர். தங்களுடைய இந்த இரட்டை நிலையின் இன்னொரு பக்கமாக அவர்களுடைய பெண்கள் பார்ப்பன கலாச்சார நிலைகளை ஏற்கும்படி நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். உதாரணமாக, குளித்து முடித்து மடிசார்கட்டி ஈர உடையுடனே சடங்கு சம்பிரதாயங்களில்

இப்பெண்களும் ஈடுபடத் தொடங்கியுள்ளனர். புதிய சத்திரியரின் மனைவி தன் கணவனை மரியாதையாக நீங்கள் என்று அழைக்கிறாள். அதே சமயத்தில் கணவன் தன் மனைவியை ஒருமையில் கீழ்த்தரமாக 'ஏண்டி, ஏமி' என்று தான் அழைக்கிறான். உடலுழைப்பில் ஈடுபடுவர்களை எவ்வாறு இழிவானவர்கள் என்று பார்ப்பனியம் கருதுகிறதோ, அவ்வாறே அது பெண்களையும் கேவலமாகக் கருதுகிறது. பெண்கள் ஒரு பணிவான இன்பப்பொருளாக மட்டுமே நடத்தப்படுகிறார்கள். குழந்தைகள் பல்வேறு வகையான சைவ, அசைவ உணவு தயாரிக்க கற்றுக் கொடுக்கப்படுகிறார்கள். சமையலிலும் சாப்பாட்டிலும் சடங்குத் தன்மை நுழைய ஆரம்பித்து விட்டது. அன்றாடப் பூசை அவர்களின் வாழ்வியல் முறையாக மாறியிருக்கிறது. தாம் உடலுழைப்பிலிருந்து ஒதுங்கிக் கொண்டு தலித் பகுஜன்களை வேலைசெய்ய வைப்பது என்கிற நிலையைப் புதிய சத்திரியர்கள் மேற்கொள்கின்றனர்.

புதிய சத்திரியர்களுடைய நோக்கம் மனித உறவுகளைத் தலித் மயமாக்குவதோ, ஜனநாயகமாக்குவதோ அல்ல. மாறாக, பார்ப்பனீய மயமாக்கவே முயலுகிறார்கள். அவர்களுடைய கலாச்சாரத்தைத் தலித் மயமாக்கினால் அவர்கள் தொழில், பண்பாடு முற்றிலும் வேறுபட்டதாக இருக்கும். உற்பத்தி சார்ந்த துறைகளிலிருந்து தமது தொடர்புகளைத் துண்டித்துக் கொண்டிருக்க மாட்டார்கள். சமூகத்தில் இந்தப் பிரிவினர் தான் நிலத்திற்கும் அரசியல் அதிகாரத்திற்கும் உள்ள தொடர்பைப் புரிந்து வைத்திருக்கிறார்கள். ஆகையினால் குழந்தைப்பருவம் முதல் புதிய சத்திரியர்களுக்கு நிலத்திலும் அரசியல் அதிகாரத்திலும் ஆதிக்கம் செலுத்துவதற்குக் கற்பிக்கப்படுகிறது. பார்ப்பனீய 'கௌடில்யனிசம்' இதற்கு உதவுகிறது. சிவில் சமூகத்தில் கூட அவர்களுடைய ஆதிக்கத்தை அன்றாட நடவடிக்கைகளில் காணலாம். ஒன்றை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். புதிய சத்திரியர்கள் அரசியல் அதிகாரத்தை அடைவதையே வாழ்க்கையின் குறிக்கோளாகக் கருதுகிறார்கள். இருப்பினும் அவர்களுடைய விவசாயப் பின்னணி, இரு பிறப்பாளராக அங்கீகரிக்கப் படாத ஆன்மீக நிலை இவற்றின் விளைவான ஊசலாடும் போக்கு அவர்களை சனநாயகத்திற்கும் சர்வாதிகாரத் திற்கும் இடையிலுள்ள அரசியலில் நிறுத்தியுள்ளது.

### தலித் பகுஜன் தந்தை வழிச் சனநாயகம்

தலித் பகுஜன்களின் அரசியல் உறவுகள் அது குடும்பங்களுக்கு உள்ளானாலும் அல்லது சமூகத்திலானாலும் அடிப்படையில்

சனநாயகத்தன்மை உடையது. பெற்றோர், குழந்தைகளின் உறவுமுறை கூட சனநாயகத்தன்மை உடையதே. இதனைத் தந்தைவழிச் சனநாயகம் எனலாம். தலித் பகுஜன் வீடென்பது அந்தரங்கமான ஒன்றல்ல. தலித் பகுஜன் உணர்வுகளில் தனி நபருடையது என்ற கருத்துக்கே இட மில்லை. இந்தச் சாதிகளுக்கு வீடு என்பது தனிநபர் சொத்தல்ல. அது சமூகத்தின் அங்கம். இது ஏற்றுக் கொள்ளப்பட்ட நடைமுறை. மனைவியைக் கணவன் அடிப்பது என்பது எல்லா சாதிகளிலும் காணப்படும் ஆணாதிக்க நடைமுறை. ஆனால் அடிபட்ட மனைவி சத்தம் போட்டுக் கொண்டு கணவனைத் திட்டி, கூடுமானால் கணவனையே திருப்பி அடிப்பதன் மூலம் அந்தத் தாக்குதலை எல்லோருக்கும் வெளிப்படுத்துவது என்பது தலித் பகுஜன் சமூகத்தில் தான் முடியும். கணவன் மனைவி சண்டையைத் தமது சாதிப் பஞ்சாயத்துக்கு எடுத்துச் செல்லவும் தலித் பகுஜன்களுக்கு உரிமை உண்டு. இது போன்ற பஞ்சாயத்துக்கள் எல்லோருக்கும் தெரியும்படி திறந்தவெளியில் நடக்கிறது. அவர்களுக்குத் தக்க தீர்ப்பு வழங்குவதில் அங்கு கூடியிருக்கும் அத்துணை பேருக்கும் உரிமை உண்டு.

தலித் பகுஜன் சட்டமென்பது அதிகாரத்திலிருந்து உருவானதல்ல. அது சமுதாயத்திலிருந்து தோன்றுகிறது. திறந்தவெளியில் அது செயல்படும் முறையே அநீதியைத் தடுக்க உதவுகிறது. அந்தரங்கம் என்கிற கருத்தாக்கமே இல்லாததால் எல்லாவற் றையும் வெளிப்படையாகப் பேச முடிகிறது. வெளிப்படையாகப் பிரச்சினை விவாதிக்கப்படுவதால் அது அநீதிக்கு எதிராகச் செயல்படுகிறது. இரகசியத்திற்கு இங்கு இடமில்லையாதலால் ஒவ்வொரு காரணகாரியமும் விவாதிக்கப்படுகிறது. இதனால் வன்முறைக்கே இடமில்லை என்று கூறமுடியாது. வன்முறை என்று வருகிறபோது தலித் பகுஜன் மக்கள் அதில் தலையிட்டுத் தடுக்க முடிகிறது.

கிராமப் பஞ்சாயத்தில் பெண்கள் கூடி தங்களுக்கு இழைக்கப் பட்ட அநீதிக்கு எதிராக வாதிட்டு நியாயம் பெற முடிகிறது. இயல்பிலேயே பிரச்சினைகளைத் தீர்த்துவைக்கிற ஆற்றல் உடையவர்களாகப் பெண்கள் இருக்கிறார்கள். தலித் பகுஜன் பஞ்சாயத்து தனித்த சிறப்புடையது. அதன் நீதிக் கோட்பாடு தனி மனித நலன் சார்ந்ததல்ல. சமூக நலன் சார்ந்தது. இதுவே தலித் பகுஜன் வாழ்வின் ஆதாரம். 'அம்மாலக்கால முச்சாத்துலு' எனப்படும் அம்மாக்களும் அக்காக்களும் கூடி விவாதிக்கும் பெண்களின் விவாதம் இங்கே குறிப்பிடப்பட வேண்டிய ஒன்று. வெளிப்படையாக மேற்கொள்ளப்படும் இவ் விவாதங்கள் அரசியல் மற்றும் நீதிப்

பரிமாணங்களோடு உள்ளன. பிரச்சினைகளுக்குப் பெண்ணிய நோக்கிலான ஒரு கருத்தொருமிப்பு இதன் மூலம் உருவாக்கப்படுகிறது. தலித் பகுஜன் பஞ்சாயத்துக்களையும் அம்மாலக்கால முச்சாத்துலு களையும் கவனமாக ஆராய்ந்தால், தலித் பகுஜன் சட்டம் என்பது அந்தரங்கம் x பொது என்கிற முரணை ஏற்றுக் கொள்வதில்லை என்பது புலப்படும். அதன் நீதிக் கோட்பாடு 'அந்தரங்கத்தை' ஏற்பதில்லை. தலித் பகுஜன்களின் வாழ்க்கையே இதற்கு ஆதாரமாக உள்ளது. அம்மாலக்கால முச்சாத்துலு தொடர்ந்து விவாதங்களை நடத்தி வருகிறது. காலை, மாலை, கிராமம், வயல்வெளி என எல்லாக் காலங்களிலும் இடங்களிலும் இந்த விவாதங்கள் தொடர்கின்றன.

தனிநபர் சார்ந்த அந்தரங்க உறவு என்பதே தலித் பகுஜன் வாழ்வில் கிடையாது. எல்லா தனி நபர் உறவுகளும் சமூக - அரசியல் பரிமாணங்களுக்கு உட்பட்டதேயாகும். 'நான்' என்கிற கருத்தாக்கத்தின் அடிப்படையில் அல்லாமல் 'நாம்' என்கிற அடிப்படையில் சமூகப் பிணைப்புகள் உருவாக்கப்படுகின்றன. 'நான்' என்று அவர்கள் சொல்வதென்பது மேற் சாதியினர் சொல்கிற பொருளில் அல்ல. 'நம்முடைய அம்மா' 'நம்முடைய வீடு' 'நம்முடைய வயல்' என்று தான் ஒரு தலித் பகுஜன் குறிப்பிடுகிறான். தனி நபர் என்பவர் இங்கே மொத்தத்தின் ஒரு அங்கம். சாதிய அமைப்பு என்பது தனி நபரின் சுயாட்சியை அனுமதிப்பதில்லை. வெளிப்படையாக இயங்கும் ஒரு அகன்ற மொத்தத்தின் அங்கமே அவன்.

தலித் பகுஜன்களின் தனிமனிதக் கோட்பாடு என்பது எதிர்மறை 'விருப்புறுதி'யை வெளிப்படுத்துவது ஆகும். என்னுடையது என்று எதுவும் இல்லை. எல்லாம் நம்முடையவைகளே. தனிநபர் ஏதாவது எதிர்கருத்தைத் தெரிவித்தால், சமூகம் அந்தத் தனி நபரைத் தனது வரையறைக்குள் கொண்டு வந்துவிடுகிறது. ஒவ்வொரு தலித் பகுஜன் குடும்பமும், சாதியும் சமூகத்திற்காகவே உள்ளது. இந்தச் சமூகம் இன்னும் முழுமையாக வளர்ச்சியடைவில்லை என்பதில் அய்யமில்லை. பெரும்பாலான தலித் பகுஜன்கள் உணர்வு மட்டத்தில் பொது வுடைமைக்கும் தனிவுடைமைக்கும் இடையில் போராடிக் கொண்டிருக் கிறார்கள். சாதிப் படிநிலை வரிசை முக்கியத்துவம் பெற்றிருப்பதால் தனிநபர் சொத்துரிமை உயர்வானதாகக் கருதப்படுகிறது. உதாரணமாக, தனிச் சொத்து என்கிற கருத்தாக்கம் மாடிகா, மாலாக்களிடையே மிகவும் குறைவாகவே உள்ளது. வருங்காலத்திற்குச் சேமிக்க வேண்டும் என்கின்ற உணர்வே தலித்துக்களிடம் இல்லை. பெரும்பாலான அட்டவணை சாதியினர் மலைவாழ்மக்களைப் போலவே சொத்துக்கள் குறித்த கருத்தைக் கொண்டிருக்கிறார்கள். எல்லாம் பொதுவானது

என்கிற கருத்தே அது. தலித்துக்கள் எதைப் பெற்றாலும், உதாரணமாக ஒரு செத்த மாடு கிடைத்தாலோ அல்லது ஓர் ஆட்டை வெட்டினாலோ கூட அதன் இறைச்சியை எல்லோரும் சமமாகப் பகிர்ந்து கொள்கிறார்கள். ஆயிரக்கணக்கான வீடுகள் இருந்தாலும் பொருள் பங்கீடு என்பது சம அளவிலானது. பூகுலு, குப்பாலு, பால்லு என்று இது அழைக்கப்படும். அதிகமாக உழைப்பவர்களுக்கும் கூட சம அளவிலான பங்கீடே தரப்படும்.

குடியேற்றக் காலத்திற்குப் பிறகு ஆங்கிலேயே ஆட்சியில் அரசு தாழ்த்தப்பட்ட மக்களுக்குச் சில உதவிகள் செய்து அவர்கள் சொத்து சேர்க்க வழிகோலியது. எனினும் அது மிகச் சொற்பமானது. ஆனால் அந்தச் சொத்துக்கள் கூட குறுகிய காலத்தில் பொதுச்சொத்தாக மாறிவிட்டன. அரசு நிறுவனங்களும் உயர்சாதியினரும் தாழ்த்தப் பட்டவரிடையே காணப்படும் இத்தகைய பறிகொடுப்புக் கலாச்சாரத்தை (நிலத்தை இழத்தல்) ஊதாரித்தனம் என்று விமர்சிக்கிறார்கள். அவர்களுக்கு ஏதும் கொடுக்கக்கூடாது. ஏனெனில் அவற்றைப் பாதுகாக்க அவர்களுக்குத் தெரியவில்லை என்று மேல்சாதியினர் ஏளனம் செய்கிறாார்கள். கீழ்ச்சாதி, சோம்பேறி, நாய்கள் என இழிவாய்ப் பேசுகின்றனர். ஆனால் இந்த மேல்சாதி மதிப்பீடு முற்றிலும் தவறானது. தலித் மக்களுக்கு ஒரு சிறப்பான கலாச்சாரப் பாரம்பரியம் உண்டு. சொத்தில்தான் அதிகாரம் இருக்கிறது என்று என்றுமே அவர்கள் நம்பியதில்லை. மேல்சாதியினரின் இக்கண்டனம் தலித் பகுஜன் கோட்பாட்டைத் தலைகீழாகப் புரிந்து கொண்டதன் விளைவே. ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகத் தனிச்சொத்து என்பது பற்றி எந்த அக்கறையும் இல்லாமல் வாழ்ந்த ஒரு சமுதாயம் தனக்குக் கொடையாக வழங்கப்பட்ட சொத்தை விரைவாக இழந்து நிற்பது இயல்புதான். இது அவர்களது பலவீனம் அல்ல; பலம். இந்தத் தத்துவத்தின் அடிப்படையில்தான் இந்தியாவின் வருங்காலமே இருக்கிறது.

## பார்ப்பன ஆணாதிக்க மரபு

புதிய சத்திரியர்களிலிருந்து தொடங்கி மேலே போகப் போக சாதீயப்படி நிலைகளில் அதிகாரம், சொத்து, தனிச்சொத்து, பொதுச்சொத்து போன்றவை பற்றிய கருத்துக்கள் பெரிதும் மாறிவிடுகின்றன. புதிய சத்திரியர்கள் மெல்ல மெல்ல தமது சாதியப் பஞ்சாயத்து முறையைக் கைகழுவிவிட்டனர். அதுபோலவே குடும்பத்தில் உயர்வு தாழ்வு என்ற எண்ணம் மெல்ல உருவாகி வருகிறது. மதச்சார்பற்ற நிலையிலிருந்து ஆன்மீகத்தை நோக்கி

அவர்களின் குடும்பங்கள் போய்க் கொண்டிருப்பதால், அதிகாரம் சம்பந்தமான அவர்களுடைய கருத்து தெய்வீகத்தை மையமாகக் கொண்டுள்ளது. அதனால் மனிதர்களுக்கான முக்கியத்துவம் குறையத் தொடங்கி விட்டது. அவர்களுடைய குடும்பங்கள் ஆன்மீகம், பார்ப்பனமயமாக்கப் பட்ட பெண் தன்மை ஆகியற்றை நோக்கிப் போய்க் கொண்டிருப்பதால் ஒரு புறத்தில் மதச்சார்பற்றதாகவும் மறுபுறத்தில் தெய்வீகத்தன்மை யுடையதாகவும், இரண்டுங்கெட்டான் நிலையிலுள்ள ஆணாதிக்கத்தோடு அமைந்துள்ளன. புதிய சத்திரியர்கள் ஆண் ஆதிக்கம் மிகுந்தவர்களாகவும் பார்ப்பனீய, சாதிக்கோட்பாட்டிற்கு மிகுந்த பொருத்தம் உடையவர்களாகவும் உள்ளனர். அதே சமயத்தில் எப்படியாவது பார்ப்பனர்களையும், பனியாக்களையும் அரசியல் ஆதிக்கத்திலிருந்தும், பொருளாதாரத் துறையிலிருந்தும் அவர்கள் ஒழித்துக்கட்டவே பார்க்கின்றனர்.

1947க்குப் பிறகு எல்லா மட்டத்திலும் குறிப்பாக அரசியலிலும் தொழில் நுட்பத் துறையிலும் பார்ப்பன பனியாக்களே ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர். பார்ப்பன பனியாக்களுடன் கருத்தொற்றுமை கொண்ட புதிய சத்திரியர்களின் சமூக அமைப்பு இதற்கு இணையாகத் தோன்றியது. இது அகில இந்தியத் தன்மையுடன் செயல்படுகிறது. பழைய சத்திரியர்கள் வீழ்ச்சியடைந்ததைக் கண்டு புதிய சத்திரியர்கள் தங்களது அரசியல் பொருளாதார ஆதிக்கத்தைப் பலவழிகளிலும் உருவாக்கிக்கொண்டார்கள். 1990ல் மேற்கொள்ளப்பட்ட மண்டல் பரிந்துரை அமலாக்கம் தலித் பகுஜன்களுக்குச் சாதகமானதாக இருந்ததால் புதிய சத்திரியர்கள் தங்கள் அதிகாரத்தை நிலைநிறுத்திக் கொள்ள இந்துத்துவத்தோடு அய்க்கியமானார்கள். பார்ப்பன பனியாக்களும் தங்களுடைய அதிகாரத்தையும், அரசியல் பொருளாதார ஆதிக்கத்தையும் நிலைநிறுத்திக் கொள்ள புதிய சத்திரியர்களோடு உறவு வைத்துக் கொண்டு, தங்களுடைய ஆன்மீகத்திலிருந்து அவர்கள் முற்றிலும் விலகிவிடாதவாறு கவனித்துக் கொண்டனர்.

பார்ப்பன - பனியா - புதிய சத்திரியர்களின் உறவு இந்தியச் சமூகத்தின் நவீனத்துவமாக அடையாளப்படுத்தப்பட்டது. இத்தகைய இந்துத்துவமாக்கப்பட்ட நவீனம் என்பது வரலாற்றில் ஒரு எதிர்மறையான வளர்ச்சி. அது தலித் பகுஜன் எழுச்சிக்கு எதிரான கோட்பாடு. அன்னிய ஆதிக்கத்திற்குப் பிறகு தோன்றிய இந்துத்துவா உண்மையில் ஒரு பார்ப்பனீய நவீனத்துவமாகும். அது மிகத் தந்திரமாக வேலை செய்து பார்ப்பன, பனியா, புதிய சத்திரியர்களின் அதிகாரத்தை உறுதிப்படுத்துகிறது. இதன் வரலாற்று நோக்கம் யாதெனில், இந்தியாவின் சனநாயக அடித்தளத்தை உருவாக்கக்கூடிய

மதச்சார்பற்ற தலித்துக்களின் அரசியல் எழுச்சியை முற்றிலுமாக ஒழிக்கவேண்டும் என்பதேயாகும். இந்த மூன்று சாதிகளின் கட்டமைப்பு (பார்ப்பன + பனியா + புதிய சத்திரியர்) மதச்சார்பற்ற தளத்தில் நின்று சனநாயக சக்திகளை எதிர்கொள்ளத் தயாராக இல்லை. எனவே இம்மேல்சாதிக் கூட்டு, அரசியல் அதிகாரத்தோடு ஆன்மீகத்தையும் கலக்கிறது. அவ்வாறு கலப்பதென்பது தமது சாதிய மேலாதிக்கத்தையும் ஆணாதிக்கத்தையும் அதிகாரப் பூர்வமாக உறுதிப்படுத்திக்கொள்ள உதவுகிறது. ஏதேச் சாதிகார ஆணாதிக்கச் சமூக உருவாக்கத்திற்கு இது பொருத்தமாக உள்ளது. பார்ப்பன அதிகாரம் புதிய பாசிச வடிவமாக வெளிப்படுகிறது. அதேசமயத்தில் பழைய பார்ப்பனிய மதிப்பீடுகளுக்கு உயிரூட்டுவதன் மூலம் அரசையும் அதன் நிறுவனங்களையும் தனது கட்டுப் பாட்டிற்குள் வைத்துக் கொள்ள முயல்கிறது.

அதிகார உறவுகளின் அடிப்படையில் பார்த்தால் பார்ப்பனக் குடும்ப அமைப்பு என்பது ஜனநாயகத்திற்கு விரோதமானது. முன்பே குறிப்பிட்டதைப் போல பார்ப்பனீயத்தின் ஆன்மீக, தெய்வீகக் கோட்பாடே சனநாயகத்திற்கு விரோதமாகும். அதன் கடவுளர்களின் கோட்பாடும் அவர்களுக்கிடையே உள்ள தொடர்புகளும் ஆணாதிக்கத்தில் உருவானது. பிரம்மாவுக்கும் சரஸ்வதிக்கும், விஷ்ணுவிற்கும் லெட்சுமிக்கும், சிவனுக்கும் பார்வதிக்கும் மற்றுமுள்ள ஆண் பெண் கடவுளர்களுக்குமிடையே காணப்படும் உறவுகளில் இருந்து இது தெளிவாகும். பார்ப்பனர்களின் பண்பாட்டுக் கூறுகளை அடிப்படையாக வைத்தே இந்து ஆண் பெண் கடவுளர்கள் உருவாக்கப்பட்டுள்ளனர்.

ஒரு பார்ப்பனக் குடும்பம் என்பது ஆணாதிக்க தந்தைவழிக் குடும்பக்கோட்பாட்டின் பிரதிபலிப்பு எனலாம். தந்தையாகிய ஆண்மகனே குடும்பத்தில் ஆதிக்கம் செலுத்துகிறான். இது அவனுடைய தனிப்பட்ட திறமையால் உருவானதல்ல. ஆன்மீகத்தின் பேரில் ஆணே உயர்வானவன் என்ற கருத்தைத் தொடர்ந்து வலியுறுத்தி ஆணாதிக்கத்தை நிலைநிறுத்துவதற்கான செயல்பாடுகளிலிருந்து வந்ததாகும். ஆண் கடவுளர்களைச் சர்வசக்தி வாய்ந்தவர்களாக காட்டுவதன் மூலம் குடும்பத்திலுள்ளவர்களின் உணர்வுகள் ஆணாதிக்கத்திற்குச் சாதகமாய் மாற்றப்படுகின்றன. ஆண் கடவுளரின் ஆற்றல் என்பது அவர்கள் செய்த தியாகச் செயற்பாடுகளின் அடிப்படையில் உருவாவதாகச் சொல்லாமல் அந்தக் கடவுள்கள் பிறரை எவ்வாறு ஏமாற்றி, வஞ்சித்து, தோற்கடித்துக் கொலை செய்கின்றன என்று எடுத்துக்காட்டுவதன் மூலம் வலியுறுத்தப்

படுகிறது. ஆணாதிக்கக் கடவுள்களின் மாதிரியிலேயே குடும்பத்திலும் ஆணாதிக்கம் நடைமுறைப்படுத்தப்படுகிறது. தந்தை ஆன்மீகத்தின் அடையாளமாய் இருக்கிறான். அவன் உற்பத்தியில் ஈடுபடாதவனாக இருக்கலாம். ஆனால் அவன் சொல்வதையே குழந்தைகளும் பெண்களும் கேட்டாக வேண்டும். இவ்வாறான எதிர்மறை உறவுகளையே இந்துப் பார்ப்பனீயம் உருவாக்கி நிலைநிறுத்தியுள்ளது. அது உற்பத்தியைப் புறக்கணிக்கிறது. ஆன்மீகத்தை உயர்த்திக் காட்டுகிறது. அதன் முக்கிய இலக்கு தெய்வீகத்தோடு தொடர்பு கொள்வதே. அந்த தெய்வீகத்தைக்கூட தத்தம் மொழிகளில் வணங்கமுடியாதபடி மற்றவர்களை அது ஒதுக்குகிறது. பார்ப்பனீயம் மனிதர்களை மட்டும் விலக்கி வைக்கவில்லை மொழியையும் விலக்கிவைத்திருக்கிறது; கேவலப் படுத்துகிறது.

வேறுவிதமாகப் பார்த்தால் பார்ப்பன ஆணாதிக்கம் இருவகையான மனநிலைகளால் இயக்கப்படுகிறது. ஒருபுறம் எல்லாவற்றிலும் கட்டுப்பாட்டை உருவாக்கக்கூடிய சூழ்ச்சியால் நிரம்பிய ஆண் மனதைப் படைக்கிறது. மறுபுறம் கட்டுப்பாட்டை ஏற்கக்கூடிய ஆதிக்கத்திற்கு உட்படக்கூடிய பெண் மனதைப் படைக்கிறது. இதைக் கேள்விகேட்பதோ விவாதத்திற்கு உட்படுத்து வதோ இயலாது. அதன் வரலாறு என்பது மந்திரத்தை ஒப்புவித்த வரலாறு தான். இயற்கையோடும் உற்பத்திக்கருவிகளோடும் உற்பத்திச் சக்திகளோடும் தொடர்புகொள்வதைப் பார்ப்பன மனம் தடை செய்கிறது. மனிதர்கள் இயற்கையுடனோ மற்ற மனிதர்களுடனோ தொடர்பு கொள்ளக் கூடாதவர்களாகக் கருதப்படுகிறார்கள். அவர்கள் 'மறுஉலகோடு' மட்டுமே தொடர்பு கொள்ளவேண்டும். இது மனிதத் தன்மையையே மறுப்பதாகும். இந்து மனிதன் ஆன்மீகத்தைத் தமது சொத்தாகக் கருதுவதன் மூலம் இந்த மறுப்பை உச்ச நிலைக்குக் கொண்டு செல்கிறான். பார்ப்பனஆணின் இந்த மனநிலை தன் குடும்பத்திற்குள் பெண்களையும் சமூகத்தில் தலித் பகுஜன்களையும் மறுப்பதாகி விடுகிறது.

இத்தகைய காரணங்களே ஒரு பார்ப்பனப்பெண் பாலியல் இன்பம் தருகிறவளாகவும், சமையல் செய்து தருகிறவளாகவும் ஆணுக்குச் சேவை செய்கிறவளாகவும் கருதப்படவைக்கிறது. அவர் களுடைய 'விருப்புறுதி' முற்றிலுமாக ஆண்களின் 'இருப்பிற்குள்' உள்வாங்கப்படுகிறது. அவர்களுக்குப் புரோகிதராகக் கூட உரிமை இல்லை. இந்து மதத்தில் கடவுள் என்பவன் அந்தரங்கமானவன். வழிபாடு என்பதும் அந்தரங்கமானது; குடும்பமும் அந்தரங்கமானது,

மற்றும் மனைவியும் குழந்தைகளும் தனிவுடைமையானவர்கள். இத்தகைய கோட்பாட்டைப் பனியாக்கள் தங்கள் தொழிலிலும் கடைப்பிடிக்கிறார்கள். அவர்களுடைய குடும்பமும் பார்ப்பன மயமானது; ஆணாதிக்கம் உடையது. தங்களுடைய வியாபாரத்தையும் சந்தையையும் நிலைக்கச் செய்ய இத்தகைய சூழ்ச்சியே உருவான பார்ப்பனக் கோட்பாட்டைப் பின்பற்றுகிறார்கள். இங்கே மறுபடியும் 'அந்தரங்கம்' 'தனியுரிமை' என்கிற கோட்பாடுகளே ஆட்சி செலுத்துகின்றன. வியாபாரம் என்பது புரோகிதத்தைப் போல அந்தரங்கமானது. வியாபாரம் என்பது பனியாவின் தனியுரிமை. புரோகிதம் என்பது பார்ப்பனரின் தனியுரிமை. இதே கருத்தியலின் அடிப்படையில் தான் பழைய சத்திரியர்கள் அரசதிகாரத்தையே தங்களுடைய தனிச் சொத்தாக வைத்திருந்தார்கள்.

பழைய சத்திரியர்கள் தெய்வீக ஆணாதிக்கக் கோட்பாட்டையே நடைமுறைப்படுத்தினார்கள். அவற்றை அரசதிகாரத்திலேயும், போர்க் கலைகளிலும், நிர்வாகத்திலும், நீதித்துறையிலும் புகுத்தினார்கள். எல்லா வகையான அரசியல் செயல்பாடுகளும் தனிவுடைமையாகவே செயல் பட்டன. ஒரு பார்ப்பனன் அரசியலதிகாரத்தை மட்டுமின்றி, ஆன்மீக அதிகாரங்களையும் கொண்டிருந்தான். பனியா பொருளாதார அதிகாரங்களையும் கொண்டிருந்தான். தலித் பகுஜன்களோ எந்த ஒரு அதிகாரத்தையும் பெறாதவர்களாக ஆக்கப்பட்டிருந்தார்கள். இதற்கான காரணம் என்னவெனில், ஒரு நிறுவனத்தை நிர்வகிக்கிறவனது சாதிக்கு மேலிருக்கிற அத்தனை சாதியினரும் அதன் அதிகாரத்தில் உரிமை எடுத்துக் கொண்டார்கள். ஆனால் ஆட்சியதிகாரம் மட்டும் சத்திரியர்கள் வசமிருந்தது. குடியேற்ற ஆட்சிக்குப்பிறகு பார்ப்பனர்கள் தங்களின் சனாதனக் கோட்பாட்டிற்கு மாறாகத் திட்டமிட்டு சத்திரியர்களை ஒழித்துக்கட்டிவிட்டு அரசியலதிகாரத்தையும் பொருளாதார அதிகாரத்தையும் தங்களுடைய ஏகபோக உரிமைகளாக்கிக் கொண்டார்கள். பனியாக்களின் (தொழில், வியாபாரம்) எல்லைக் குள்ளும் பெரிய அளவில் அவர்கள் நுழைந்துவிட்டார்கள். அதே சமயத்தில் நவீனமயமாக்கப்பட்டிருந்த ஆலயங்களுக்குச் சொந்தமான ஏராளமான சொத்துக்களும், புரோகிதத் தொழிலும் பார்ப்பனர்களின் கட்டுப்பாட்டிலேயே இன்னும் இருந்து வருகின்றன. முஸ்லிம்களின் ஆட்சிக்கு முந்திய பழைய நிலையையும், ஆங்கிலேயர் ஆட்சிக்குப் பிறகு உள்ள பார்ப்பனர் நிலையையும் ஒப்பிடும் போது பார்ப்பனீயம் தனது அதிகாரத்தை எல்லாத் துறைகளிலேயும் நீக்கமற அதிகரித்துள்ளது. பார்ப்பனர்களின் இந்த வளர்ச்சி மதச்சார்பற்ற,

நவீன சோசலிச இந்தியாவிற்கு எதிரானதாக இருக்கிறது. எனவே நவீன மதச்சார்பற்ற இந்தியா உருவாக வேண்டுமானால் ஆகக் கீழ்நிலையிலிருக்கிற தலித் மக்களுடைய அரசியலதிகாரத்தால்தான் முடியும். அவர்களுக்குத்தான் எது அரசியல் என்பதும் எது பொதுநலம் என்பதும் புரியும். ஆனால் தொடர்ந்து அந்த வாய்ப்புகள் தலித் பகுஜன் மக்களுக்கு மறுக்கப்பட்டு வருகின்றன. இந்து பார்ப்பன ஆணாதிக்கத்தோடு இங்கு நிலவும் மற்றொரு ஆணாதிக்கத்தை ஒப்பிட்டுப்பார்த்தால் நிலைமை மிகவும் தெளிவாகத் தெரியும்.

## ஒப்பீடு: தலித் பகுஜன் ஆணாதிக்கமும் இந்து பார்ப்பன ஆணாதிக்கமும்

தலித் பகுஜன் தந்தை வழிச்சமூகம் பார்ப்பன தந்தை வழிச் சமூகத்திற்கு முற்றிலும் எதிரானது. இங்கேயும் ஆண் பெண்ணை விட உயர்ந்தவன் என்றும், பெண் ஆணைவிடத் தாழ்ந்தவர் என்றும் கருத்து நிலவுகிறது. ஆனால், இது பார்ப்பன ஆணாதிக்கத்தோடு ஒப்பிடும்போது பெருத்த வேறுபாட்டுடன் காணப்படுகிறது. தலித் பகுஜன் ஆணாதிக்கத்தில் பெண் என்பவர் உற்பத்திக்கும் மறு உற்பத்திக்குமான முகவராகிறார். குடும்பத்திலும் வயலிலும் ஆண் பெண் ஆகியோருக்குரிய வேலைகள் முழுமையாகப் பிரித்துக்காட்டப் படுவதில்லை. பெண் வயல் வேலைக்குச் செல்லும்போது ஆண்தான் வீட்டில் சமையல் வேலைகளைச் செய்கிறார். அதுபோன்றே ஆண் இல்லாத நேரங்களில் பெண்ணே ஆண் செய்ய வேண்டிய வேலையைச் செய்கிறார். சமைக்கும் போதும் அல்லது வயலில் வேலைசெய்யும் போதும் அல்லது சாதிக்குரிய தொழில் செய்யும்போதும் ஆண் பெண் என்ற வேறுபாட்டிற்கு இடமே இல்லை. தொழில் திறமை, நிபுணத்துவம் என்பது இருவருக்கும் பொதுவானது. தோல் சம்பந்தப்பட்ட வேலைகளில் மாலா, மாடிகா சாதிகளிலுள்ள ஆண்களைப் போன்றே பெண்களும் திறமையானவர்களாக உள்ளனர். அதே போல சக்காலிப் பெண்கள் தம் சாதி ஆண்களைப் போலவே துணி வெளுப்பதில் திறமையானவர்களாக இருக்கிறார்கள். குருமா, கொல்லா ஆண்களைப்போன்றே அப்பெண்களும் ஆடு வளர்ப்பதில் திறமையானவர்களாக இருக்கிறார்கள். இந்தச் சாதிகளிடத்தில் அறிவு அல்லது திறமை என்பது ஆண் பெண் இருவருக்கும் பொதுவானது. எண்ணங்களின் அடிப்படையிலும் உடலியல் அடிப் படையிலும் பாலின வேறுபாட்டைச் சொல்லி யாரும் யாரையும் ஆளுகை செய்வதில்லை.

குழந்தைகள் ஆண்களின் சொத்தாகக் கருதப்படுவதால், தலித் பகுஜன் சாதியிலும் கூட பெண்கள் குழந்தைகள் மீது ஆதிக்கம் செலுத்த முடிவதில்லை என்பது உண்மைதான். அதே சமயத்தில் பெண்கள் தம் வீட்டிலும், அம்மாலக்காலா மற்றும் வயல் வேலைகளினூடான விவாதங்களிலும் அரசியலதிகாரத்தைப் பெற்றிருக்கிறார்கள். தலித் பகுஜன் பெண்கள் சமுதாய மரியாதை உடையவர்களாகவும், குழந்தைகளிடத்து நேசம் உடையவர்களாகவும் இருக்கிறார்கள். ஏராளமான வழக்குகளில் மணவிலக்கு பெற்ற பெண், குழந்தைகளைத் தன்னுடன் அழைத்துச் செல்ல உரிமை பெற்றிருக்கிறாள். தலித் பகுஜன் குடும்பங்களில் பல பெண்கள் சமூகத்தில் முக்கியமானவராக இருந்து எல்லா குடும்பங்களுக் கிடையிலான உறவைப் பலப்படுத்துகிறார்; கண்காணிக்கிறார். குழந்தைகளுக்கு உரிய பயிற்சி கொடுத்து தன் விருப்பப்படி வளர்க்கிறார். இதன் பொருள் தலித் பகுஜன் பெண்களும் அவர்கள் உருவாக்குகிற பெண்கள் சார்ந்த அரசியல் சமூகமும் ஆணாதிக்கச் சிந்தனைகளுக்கும் நடைமுறைகளுக்கும் அப்பாற்பட்டது என்பதல்ல. பெண்கள் தங்கள் பெண் குழந்தைகளுக்குப் பெண்மைக்குரிய ஒழுக்கத்தையும், ஆண் குழந்தைகளுக்கு ஆண்களுக்குரிய ஒழுக்கத்தையும் போதிக்கிறார்கள். இது ஆணாதிக்கத்திற்குச் சார்புடையதாகவே இருக்கிறது. ஆனால் பார்ப்பன - பனியா - புதிய சத்திரிய சாதிகளுடன் ஒப்பிடும்போது தலித் பகுஜன் ஆண் பெண் உறவுகள் பெரும்பாலும் சனநாயகப் போக்குடையவையாக இருக்கின்றன. இதனால் மேல் சாதிகள் என்போரைவிட தலித் பகுஜன் பெண்கள் சுலபமாக எதிர்ப்புகளைச் சந்திக்கக்கூடியவர்களாகவும், தம்மீது ஆணாதிக்கம் திணித்துள்ள பல தடைகளைச் சுலபமாக மீறக்கூடியவர்களாகவும் உள்ளனர். இதற்கு உதாரணமாக 1992ல் ஆந்திராவில் நடந்த குடிப்பழக்கத்திற்கு எதிரான இயக்கப் போராட்டத்தைக் கூறலாம். தலித் பகுஜன் ஆணாதிக்கம் ஒரு அமைப்பற்ற ஆணாதிக்கமாக உள்ளது. இந்த ஆணாதிக்கத்தை மாற்றுக் கலாச்சார அல்லது எதிர்க்கலாச்சார இயக்கத்தின் மூலமாக ஒழித்துக்கட்டி விடலாம். பார்ப்பன ஆணாதிக்கத்தை அவ்வளவு சுலபமாக ஒழித்துக் கட்டிவிட முடியாது. பார்ப்பன ஆணாதிக்கம் என்பது ஆன்மீக அதிகாரத்திலிருந்து வரையறுக்கப்பட்டதாக இருக்கிறது. எனவே அது எளிதில் பாசிசமாக மாறக்கூடிய தன்மை உடையது.

## இந்து அரசியல் நிறுவனங்களும், தலித் பகுஜன்களும்

சிவில் சமூக அரசியல் அமைப்புகளுக்கும் மேலாக, அரசு நிறுவனங்களிலும் கிராம நிர்வாகங்களிலும் இந்து அரசியலதிகாரம்

தலைதூக்கத் தொடங்கியுள்ளது. இந்த அமைப்புகளில் தலித் பகுஜன் சாதியினர் அதிகாரத்திற்கு வந்துவிடாதபடி திட்டமிட்டுத் தடுக்கப் படுகின்றனர். கிராம அளவில் அரசியல், பொருளாதார அதிகாரம் மூன்று முக்கியமான நிறுவனங்களோடு தொடர்புடையதாக இருக்கிறது. ஒன்று காவல்துறை; இரண்டு நிர்வாகத்துறை; மூன்று வருவாய்த் துறை. கிராமப் பஞ்சாயத்துகள் இப்போது முக்கியத்துவம் வாய்ந்தவையாக மாறிவருகின்றன. இந்தக் கிராமப் பஞ்சாயத்துக்களில் கூட எல்லாப் பதவிகளும் பார்ப்பனர்களுக்கும் (பட்டேல்-பட்வாரி) புதிய சத்தியர்களுக்குமே ஒதுக்கப்படுகின்றன. இந்த நிறுவனங்களை நிர்வகிக்க தலித் பகுஜன்கள் உரிமையில்லாதவர்களாக ஆக்கப்பட்டு விட்டார்கள். என்றைக்குக் கிராமப்பஞ்சாயத்திற்கு அதிகாரங்கள் மாறியதோ, அன்றைக்கே பார்ப்பனர்கள் அதில் சர்வாதிகாரம் செலுத்தத் தொடங்கிவிட்டார்கள். தலித் பகுஜன்கள் அந்நிர்வாகங்களிலிருந்து ஒதுக்கப்பட்டு விட்டதால் அந்தச் சமூகப் பெண்களும் இயல்பாகவே ஒதுக்கப்பட்டவர்களாக ஆகிவிட்டார்கள். எந்த வாய்ப்பும் அவர்களுக்கு வழங்கப்படுவதில்லை. இந்து அதிகாரக் கண்ணோட்டத்தின்படி மேல் சாதிப்பெண்கள் கூட இந்தப் பதவிகளுக்குத் தகுதியற்றவர்களாக ஆக்கப்பட்டுவிட்டார்கள். இவ்வாறாக இந்த அமைப்புகள் எல்லாம் மேல்சாதி ஆண்களின் தனியுடைமையாகிவிட்டன. கிராமப் பஞ்சாயத்திலும் உள்ளாட்சி அதிகாரங்களிலும் 30 சதவீத இடஒதுக்கீடு பெண்களுக்கு வழங்க வேண்டும் என தற்போது முடிவெடுத் துள்ளார்கள். இதனால் கிராமப்புற நிர்வாகங்களில் பெண்களும் இடம் பெறுவார்கள். ஆனால் அது பெண்களின் நிலையில் எந்தவித மாற்றத்தையும் கொண்டுவராது. கிராமப்புறப் பெண்களின் கல்வியறிவு, ஏழ்மை இவற்றைக் கூர்ந்து கவனித்தால் இந்த அதிகாரம் என்பது அலங்காரமானது மட்டுமே என்று கூறலாம்.

பூ மாலையில் இருக்கிற நூலைப்போல இந்துத்துவா எல்லா அமைப்புகளிலும் ஊடாக நுழைந்து அவற்றை மேல்சாதியினரின் தனியுடைமையாக்கி விடுகிறது. இந்துக்களின் ஆணாதிக்கக் குடும்ப வாழ்க்கையானாலும், பட்டேல், பட்வாரி அமைப்பாக இருந்தாலும், அடிப்படை சனநாயகத்தை அதிகாரத்தோடு இணைத்த பஞ்சாயத்துக் களானாலும் எல்லாவற்றையும் மேல்சாதிக்காரனின் சர்வதிகாரப் போக்கின் களமாக மாற்றியிருக்கிறது இந்துத்துவா. தேர்தல்கள் என்பன பார்ப்பன-பனியா-புதிய சத்திரியர்களின் கையில் அதிகாரத்தை நிலைக்க வைக்கப் பயன்படும் அமைப்பாகவே உள்ளன. பனியாக்கள் பொதுவாகவே சந்தையை மையமாக வைத்தே செயல்படுகிறார்கள். உபரியை உறிஞ்சுவதில் பனியாக்களுக்கும் அதிகாரத்தில் இருப்பவர் களுக்கும் நெருக்கமான உறவு நீடிக்கிறது.

விடுதலைக்குப் பிறகு பார்ப்பனர்கள் தங்கள் தந்திரத்தை அரசியல் நிறுவனங்களில் செலுத்தி, தங்களுடைய அதிகாரத்தை நிலைநிறுத்தி, தங்களின் ஆன்மீக எல்லையை அரசியல் தளம் வரை விரிவுபடுத்திக்கொண்டார்கள். தேசிய அளவில் எல்லா அமைப்பு களிலும் பார்ப்பனர்களே சர்வாதிகாரம் செலுத்தி வருகிறார்கள். மிகவும் அதிகாரமுடைய பதவி கிராமங்களில் பட்வாரி எனப்படும் வருவாய் அதிகாரியாகும். அப்பதவியை இன்றளவும் பார்ப்பனர்களே தங்களுடைய தனிவுடைமையாக வைத்துள்ளனர். சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்கக்கூடிய அமைப்புகள் புதிய சத்திரியர்களின் ஆதிக்கத்தில் இருக்கின்றன. சாதியால் பிளவுபட்டுக் கிடக்கும் கிராம சமுதாயத்தில் இதன் மூலம் புதிய சத்திரியர்களுள் சகல அதிகாரமும் படைத்தவர்கள் ஆகின்றனர். அவர்கள் தங்களுடைய அதிகாரத்தைப் பயன்படுத்தி, எல்லா நிலங்களையும் கையகப்படுத்தித் தங்கள் கையில் வைத்துள்ளார்கள். என்றாலும் புதிய சத்திரியர்களின் அரசியலதிகாரம் பார்ப்பன பனியாக்களின் மேலாண்மையைக் குறைக்கவில்லை.

நான் முன்பே குறிப்பிட்டதைப்போல, சாதீயச் சக்திகளிடையே உருவாகியுள்ள அரசியல் பொருளாதார ஆன்மீக இணைப்பு அகில இந்திய அளவிலான ஒரு மேற்சாதி ஆதிக்கத்தை அடையாளப்படுத்துகின்றது. இவர்களே விடுதலைக்குப்பிறகு எல்லா நிலைகளிலும் அதிகாரத்தைக் கையகப்படுத்திக்கொண்டார்கள். பட்டேல், பட்வாரி தொடங்கி கிராம நிறுவனம் தாலுகா அலுவலகங்கள், மாவட்ட ஆட்சியாளர் அலுவலகம், மாநில, மத்திய செயலகங்கள், நகராட்சிகள், சட்டமன்றம், பாராளுமன்றம் போன்ற அனைத்து அமைப்புகளிலும் மேல்சாதி ஆதிக்கமே நிலவுகிறது. இவைகளில் பெரும்பாலானவற்றைத் தலைமை தாங்கி நடத்துகிறவர்கள் பார்ப்பனர்களே. சட்டம் இயற்றுவதிலும், வரலாற்றைப் பார்ப்பனியக் கண்ணோட்டத்தோடு திரித்து எழுதுவதிலும் புதிய சத்திரியர்கள் பார்ப்பனர்களின் மேலாண்மையை ஏற்றுக் கொண்டு அவர்களோடு இணைந்து செயல்பட்டார்கள்.

ஆங்கிலேயே ஆட்சிக்கு எதிராக உருவான தேசீய இயக்கங்கள், அரசியல் கட்சிகள், சமூக அமைப்புகள் ஆகிய அனைத்திலும் ஆதிக்கம் செலுத்தியவர்கள் பார்ப்பனர்களே. பார்ப்பனர்களுக்கே எல்லா அமைப்புளிலும் முக்கியத்துவம் தரப்பட்டது. இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உருவான போது அங்கேயும் மேல்சாதிஆதிக்கமே நிரம்பியிருந்தது. ஆங்கில ஏகாதிபத்தியம் மேல்சாதிக்காரர்களுக்குச் சாதகமாக இருந்தது. அரசியல்கட்சிகள், சமூக அமைப்புகள் அனைத்திலும் ஆதிக்கம்

செலுத்திவந்த ஆதிக்க சாதியினர் ஆங்கிலேயர்களின் போக்கிற்கு இணங்க நடந்துகொண்டார்கள். ஒருபுறம் ஏகாதிபத்தியத்தை எதிர்ப்பது போலவும், தேசிய நலனில் அக்கறையுடன் நடந்து கொள்வது போலவும் மறுபுறம் ஆங்கிலேயர்களின் கைக்கூலிகளாகவும் ஆதிக்க சாதியினர் இரட்டை வேடம் போட்டனர்.

மேல்சாதி ஆதிக்கத்தில் இவர்கள் இருப்பதுதான் தனது நலனுக்கு உகந்தது என ஆங்கில அரசும் தெரிந்து கொண்டது. எனவே இந்நிலையை அவர்கள் ஊக்குவித்தனர். எனினும் ஆங்கில அரசு வலதுசாரிக் கருத்தியலுக்கு ஆதரவாகவும், இடது சாரிக் கருத்தியலுக்கு எதிராகவும் இருந்தது. ஆங்கிலேயர்கள் விரும்பியிருந்தால் பார்ப்பனீயத் திற்கு எதிரான ஒரு சமூக அமைப்பை இங்கே எளிதில் உருவாக்கி யிருக்கலாம். ஆனாலும் பார்ப்பன 'பத்ரலோக்கு'களும் ஆங்கிலேயர் களும் தங்கள் அதிகாரத்தை நிலைநிறுத்திக்கொள்ளவே விரும்பி னார்கள். சனநாயக அறிவுஜீவிகளாக இன்றளவிலும் அழைக்கப்படுகிற ராசாராம் மோகன்ராய், ரவீந்திரநாத் தாகூர், ரானடே, காந்தி மற்றும் நேரு போன்றவர்கள் எல்லாம் ஆங்கில அரசால் வளர்த்துவிடப் பட்டவர்களே. அறிந்தோ அறியாமலோ ஆங்கிலேயர்கள் 'பார்ப்பனீய தகுதி, திறமைக்கோட்பாட்டிற்கு ' அடித்தளம் அமைத்துக் கொடுத்து, விடுதலை இந்தியாவில் பார்ப்பனர்கள் அதிகாரத்திற்கு வருவதற்கு வித்திட்டார்கள்.

## தலித் பகுஜன் எழுச்சிகள்

அதே சமயத்தில் பிரிட்டிஷ் அரசாங்கம் தலித் பகுஜன்கள் ஒருங்கிணைவதற்கான அடித்தளத்தையும் உருவாக்கிக் கொடுத்தது. தலித் பகுஜன் அறிஞர்கள் மகாராஷ்டிரத்தைப் போல ஆங்காங்கே பார்ப்பனீய எதிர்ப்பியக்கக் கருத்தியல்களோடு கிளர்ந்தெழுந்தனர். மகாத்மா ஜோதிபா பூலே பார்ப்பன எதிர்ப்பியக்கத்தின் முன்னோடியாவர். தேசிய அளவில் சாதி எதிர்ப்புப் புரட்சியை ஏற்படுத்தியவர் டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் ஆவார். இவர்களே சாதி எதிர்ப்புப் புரட்சிகர சக்திகளின் முன்னோடிகளாவர். கல்வியறிவுப் பரவலின் காரணமாகத் தோன்றிய பார்ப்பன எதிர்ப்பு, சாதி எதிர்ப்புச் சக்திகள் பார்ப்பன சமஸ்கிருதக் கோட்பாட்டிற்கு எதிரான மாற்றுக் கருத்தியல்களை உருவாக்கின. அம்பேத்கருடைய சாதி எதிர்ப்புத் தத்துவம் இந்துமதத்தையும் பார்ப்பன அதிகாரத்தையும் தாக்கிச் சிதறடித்தது. மூவாயிரம் ஆண்டுகால இந்திய வரலாற்றில் டாக்டர் அம்பேத்கர்தான் முதல் சிந்தனையாளர். ஒரு 'மகர்'

குடும்பத்தில் தோன்றிய அவர் தலித் பகுஜன் மக்களின் எண்ணத்தில் புரட்சிகரச் சிந்தனையைத் தோற்றுவித்தார்.

சாதியால் அடிமைப்பட்டுக்கிடக்கும் இந்தியாவில் சாதியை ஒழிக்க உதவியர் அவர். காந்தியின் பித்தலாட்டங்களுக்கு எதிராக, அம்பேத்கர் கௌதமபுத்தரின் கோட்பாடுகளை ஆதரித்தார். பார்ப்பன ராமராஜ்ஜியக் கோட்பாடுகளின் மூலம் அதிகாரத்தை மெதுவாக அதே சமயத்தில் உறுதியாக அடையமுடியும் என்று காந்தி நம்பினார். பார்ப்பன - பனியா - புதிய சத்திரியர்களின் தலைமையில் இயங்கும் எந்த அரசியல் சக்திகளோடும் இணையாமல் தனித்துவமான உயிர்ப்புமிகு அறிவு ஜீவிகளின் அரசியல் அமைப்பை உருவாக்கிய அம்பேத்கர் இந்துத்துவாவின் அடித்தளத்தை ஆட்டங்காணச் செய்தார்.

இங்கே அதிகமாகப் பேசப்பட்ட இந்திய 'மாடல்' பொதுவுடைமைப் புரட்சிக்கு எதிராக அம்பேத்கருடைய புரட்சியை நாம் எவ்வாறு மதிப்பிடுவது? முதலாளித்துவ ஐரோப்பாவில் தோன்றிய வற்றிலேயே மார்க்சீயம் என்னும் தத்துவம்தான் ஆகச் சிறந்த புரட்சிகரமான தத்துவம் என்று உலக அளவில் அறியப்பட்டது. காலனி ஆட்சி மட்டும் இந்தியாவில் பார்ப்பனீய எதிர்ப்பு தலித் பகுஜன் அறிஞர்களை உருவாக்கி, அவர்களும் மார்க்சீயக் கோட்பாட்டை ஏற்றுக் கொண்டிருப்பார்களானால், இந்தியா தலித் பகுஜன்களின் சோசலிசப் புரட்சியை இந்நேரம் முடித்திருக்கலாம். இந்துத்துவா நேற்றைய மதமாக மாறியிருக்கும். பார்ப்பனியக் கருத்தியல்கள் காலங் கடந்தவையாகியிருக்கும். ஆனால் பார்ப்பனர்களின் நல்ல காலம் காலனிய ஆட்சி, இந்துத்துவமும் பார்ப்பனியமும் வளர உதவியதோடு அல்லாமல், பார்ப்பனியக் கருத்தியல்களைக் கொண்ட வைதீக மேல்சாதியினரின் வளர்ச்சிக்குப் பேரளவு ஆதரவு காட்டியது. இந்தச் சூழலில் மிகவும் புரட்சிக் கோட்பட்டான மார்க்சீயம், மிகவும் பிற்போக்கு சக்திகளான பார்ப்பன - பனியா - புதிய சத்திரியர்களின் கையில் சிக்கியது. புரட்சிகர அமைப்புக்குள் இருந்த பார்ப்பன சக்திகளுக்கும் வெளியே பூர்ஷ்வா இந்துத்துவ அரசியல் நிறுவனங்களில் இருந்த பார்ப்பன சக்திகளுக்குமான உறவு புரட்சியைத் தாமதப் படுத்தியது மட்டுமல்லாமல், புரட்சியை அடக்கியும் வைத்தது. கம்யூனிஸ்ட்டுகளுக்கும் கம்யூனிஸ்ட் அல்லாத பார்ப்பனர்களுக்குமான உறவு மட்டும் மிகவும் நெருக்கமானதாக இருந்து வந்துள்ளது. எதிரெதிராக இருக்க வேண்டிய சக்திகள் நட்போடு இருந்தன. அவைகளே அரசியல் நிகழ்வுகளைத் தீர்மானித்தன. எண்பது தொண்ணூறுகளில் அம்பேத்கரின் கொள்கைகளில் இருந்து எழுச்சிபெற்ற தலித் பகுஜன் அறிஞர்கள் பார்ப்பன சக்திகளுக்கு

எதிராகப் புதிய திசைவழியில் சென்று எல்லாத் துறைகளிலும் அதிகாரத்தைக் கைப்பற்றும் முயற்சியில் ஈடுபட்டார்கள். விடுதலைக்குப் பிறகு ஏற்பட்ட இந்த வளர்ச்சி அதிகார உறவுகளை முற்றிலும் எதிர்பாராத வகையில் மாற்றியமைக்கக் கூடியதாக உள்ளது. அதற்கான நடைமுறைகள் 1990ல் உருவான மண்டல் போராட்டத்தின் போது தொடங்கப்பட்டன. மண்டல் குழு அறிக்கை அமுலாக்கத்திற்கு ஆதரவான மற்றும் எதிரான போராட்டங்கள் அகில இந்திய அளவில் சாதிப் போராட்டங்களுக்கான வழியைத் திறந்து வைத்தன. இந்துத்துவ அமைப்புகளும் சங்பரிவார் போன்ற கூட்டங்களும் இந்தப் போராட்டத்தைத் தமக்கெதிரான போராட்டம் என்று உணர்ந்தார்கள். இந்த மண்டல் போராட்டம் பார்ப்பன இந்துத்துவத்தை மெல்ல அழிக்கக்கூடிய தலித் மயமாக்குதலுக்கு ஒரு முன்னோட்டமாகும். இப்படியிருக்க இந்தச் சூழ்நிலையை உணர்ந்து கொண்ட பார்ப்பனர்கள் உடனடியாகத் திரண்டு இந்த சாதியப் போராட்டத்தை மதக் கலவரமாக, திசை திருப்பிவிட்டார்கள். இந்தத் திசை திருப்பலின் விளைவே 1992 டிசம்பரில் நடைபெற்ற பாபர் மசூதி இடிப்பாகும். இந்த 'பத்ரலோக்' சக்திகள் தான் சங்பரிவார் அமைப்புக்குப் பலவழிகளிலும் உதவிக்கொண்டும் அவற்றை வழி நடத்திக் கொண்டும் இந்துத்துவத்தைப் பலப்படுத்திக் கொண்டும் உள்ளனர்.

விடுதலைக்குப் பிந்திய இந்தியாவில் காங்கிரஸ் சனநாயக ஆட்சி என்ற பெயரில் இந்துக்கள் டெல்லியிலும் இதர மாநிலங்களிலும் ஆட்சிக்கு வந்தார்கள். பாராளுமன்ற சனநாயம் என்பது உண்மையில் பார்ப்பனிய சனநாயகமாக மாறியது. குறுகிய காலத்திற்குள்ளேயே ஆங்கில அதிகார வர்க்கம் பார்ப்பன அதிகார வர்க்கமாக மாறியது. இந்தப் பார்ப்பன சக்திகள் எழுந்துவரும் உலகளாவிய முதலாளித் துவத்திற்கு ஏற்பத் தன்னை மாற்றிக் கொண்டன. சமஸ்கிருத மயமாக்கப் பட்ட தங்கள் வாழ்க்கை முறையை ஆங்கில மயமாக்கிக் கொண்டார்கள். அரை முதலாளித்துவ, அதே சமயத்தில் பார்ப்பன மயமான புதிய வாழ்க்கை முறைக்கு மாறிக்கொண்டார்கள். இவ்வாறு ஆங்கில மயமானது பார்ப்பனர்களின் சாதீய அதிகாரத்தை எவ்விதத்திலும் குறைத்து விடவில்லை. இந்தியாவிலுள்ள எல்லாவிதமான மேல்நிலை அதிகார மையங்களும் பார்ப்பனமயமாயின. அதிகாரங்கள் பெருமளவு விரிவுபடுத்தப்பட்டன. ஆங்கில மயமாதலின் விளைவாக அவர்களில் ஒருசிலர் உலகப்பொருளாதார அமைப்போடு தம்மை இணைத்துக் கொண்டனர். இத்தகையப் பார்ப்பனப் படிப்பாளிகள் அடிப்படையில் கிராமப் பொருளாதார வளர்ச்சி குறித்து கவலைப் படவில்லை. ஏனென்றால் கிராமப் பொருளாதார மாற்றம் என்பது தலித் பகுஜன்கள் புதிய சமூக சக்தியாக எழுச்சிபெற வழி வகுக்கும்.

ஆங்கிலமயப்பட்ட பார்ப்பன வகுப்பினர்கள் சமுதாய வளர்ச்சிக்கு எதிரான சக்திகளாகவும் உள்ளனர்.

இந்து பார்ப்பன வகுப்பினர் அரசியல்கட்சிகள், நிர்வாக அதிகாரிகள், தொழில் அமைப்புகள், நீதிமன்றங்கள், மருத்துவமனைகள், பல்கலைக்கழகங்கள் போன்ற பல்வேறு அதிகார மையங்களிலிருந்து கொண்டு புதிய சத்திரியர்களுடன் நெருக்கமான உறவை ஏற்படுத்திக் கொண்டார்கள். புதிய சத்திரியர்கள் மெல்ல ஒரு 'குலக்' வர்க்கமாக உருவெடுத்தார்கள். இவர்கள் பார்ப்பனர்களுக்கும் உழைக்கும் சாதியினருக்கும் இடையில் ஒரு பாலமாக இருந்து பழமை நிலையைப் பாதுகாக்க உதவினார்கள். உழைக்கும் சாதியினரோ மேலும் மேலும் விளிம்புகளுக்குத் தள்ளப்பட்டனர். புதிய சத்திரியர்களின் நிலை என்பது வரலாற்று ரீதியாகப் பிற்போக்காக இருப்பதோடு, வளர்ந்துவரும் புதிய சனநாயகச் செயல்பாட்டிற்கு எதிரானதாகவும் ஆபத்தானதாகவும் இருக்கிறது. பார்ப்பன பனியாக்கள் தங்கள் அதிகாரத்தை நிலைநிறுத்திக் கொள்ள புதிய சத்திரியர்கள் உதவிகரமாக இருக்கிறார்கள். அதனால் அதிகாரத்தின் ஒரு சிறுபகுதி புதிய சத்திரியர்களுக்கும் கிடைக்கின்றது. இது தலித் பகுஜன்களின் புரட்சிகர சனநாயக உணர்வை மழுங்கடிக்கிறது. தலித் பகுஜன்கள் உலகளாவிய கருத்தியலைப் பெற்றிருக் கிறார்கள் (அம்பேத்கரியம் மற்றும் மார்க்சியம்). அதன் மூலம் அவர்கள் சாதியத்தையும் பூர்ஷ்வா வர்க்கத்தையும் பார்ப்பனியத்தையும் தூக்கி எறிவார்கள். உணர்வு பூர்வமான தலித் பகுஜன் அமைப்புகள்தான் மெல்ல வளர்ந்து படிப்படியாக சாதியற்ற சமூகத்தை உருவாக்கி, உற்பத்தி சாதனங்களை சமூகமயமாக்கி இறுதியாக மனிதத்தன்மையுடைய சோசலிச இந்தியாவை உருவாக்க முடியும்.

பண்டைக் காலங்களில் பார்ப்பன சக்திகள் சூத்திரர்களாய் இருந்த சத்திரியர்களோடு கூட்டு சேர்ந்து கொண்டு இத்தகைய புரட்சிகளைத் தடுத்தனர். பவுத்த சமணப் புரட்சிகள் எவ்வாறு அழிக்கப்பட்டன என்பது எல்லோருக்கும் தெரியும். இதனால் சமூக மாற்றங்கள் பல நூற்றாண்டுகளுக்குத் தள்ளிப்போடப்பட்டன. சென்ற நூற்றாண்டில் பார்ப்பன எதிர்ப்புப் போராட்டங்களை நடத்திய தென்னிந்திய தலித் பகுஜன்கள் கூட தற்போது அனேகமாகப் பார்ப்பனியத்தால் உள்வாங்கப் பட்டு விட்டார்கள். வரலாற்றின் இந்தப் புள்ளியில் (1990ல் மண்டல் போராட்டம், 1993ல் உத்திரபிரதேசத் தேர்தல்) பார்ப்பனியத்தை விமர்சிக்கத்தக்க மேல்சாதி அறிஞர்கள் என்று ஒருவர் கூட இல்லாதது மிகப் பெரிய சோகம். புதிய சத்திரியர்கள்

இதுவரை தாங்கள் பெற்றுவந்த அதிகாரத்தை நிலைநிறுத்திக் கொள்ள பார்ப்பனீயம் ஒரு கருவி என்று கருதி அதன் வழியே அதிகாரத்தைக் கைப்பற்ற நினைக்கிறார்கள். அரசியலில் தங்களில் பலர் முதலமைச்சர் களாகவும், ஜனாதிபதியாகவும் (நீலம் சஞ்சீவரெட்டி) ஆகும் அளவிற்கு வந்துவிட்டதால் வருங்காலத்தில் பிரதமர் பதவியையும் கைப்பற்ற வாய்ப்பு இருப்பதாகக் கருதுகிறார்கள். அது சாத்தியமானால் கூட அவர்கள் பார்ப்பனியக் கருத்தியலோடுதான் இயங்க முடியமேயொழிய வேறொன்றும் செய்ய இயலாது. பார்ப்பன பனியாக்களிடத்திலேயே அரசியலதிகாரம் குவிந்துகிடப்பதால் அவர்கள் மற்றவர்களை அடிமைத்தனத்திலிருந்து விடுதலை செய்யப்போவது இல்லை. புதிய சத்திரியர்கள் இந்த ஆதிக்கக் கருத்தியலை என்றுமே புரிந்து கொண்டது இல்லை. உதாரணமாக, புதிய சத்திரியர்களை உள்வாங்கத் தயாராக இருக்கும் பார்ப்பனீய அமைப்பு அவர்களை இந்துக்கோயில்களில் புரோகிதராக அனுமதிக்குமா?

அதே நேரத்தில் சமூகப் பொருளாதார அமைப்பிற்குப் புதிய சத்திரியர்கள் செய்த நாசவேலைகள் ஏராளம். அவர்கள் இந்துத் துவத்தின் தூண்களாகிக் கொண்டிருக்கிறார்கள், நவீன பாசிசத்திற்குத் துணை போகிறவர்கள். சாதிக்கு எதிரான தலித் பகுஜன் இயக்கம் புதிய சத்திரியர்களை எவ்வாறு எதிர்கொள்வது என்பது சங்கடமானதாக இருக்கிறது. அவர்களை (பார்ப்பன) எதிரிகளின் கூடாரத்திலிருக்கும் எதிரிகள் என்பதா அல்லது பார்ப்பனர் அல்லாதவர் என அவர்களைத் தாக்காமல் விட்டுவிடுவதா? 1990 மண்டல் எதிர்ப்புப் போராட்டத்திலும், 1993 உ.பி. தேர்தலிலும் புதிய சத்திரியர்களின் நிலைமையைப் பார்த்தபிறகு தலித் பகுஜன் இயக்கத்தினர் புதிய சத்திரியர்கள் பார்ப்பன இந்துத்துவத்தோடு இருப்பதை அம்பலப்படுத்த வேண்டும் என்றுதான் தோன்றுகிறது. இந்தியாவில் தலித் பகுஜன் சனநாயகத்தை நிலைநிறுத்தும் போராட்டத்தில் இந்து பார்ப்பன - பனியா கூட்டம் நமக்கு எதிரிகளாக இருக்கின்றன. இந்த சக்திகளை எதிர்ப்பதற்கு தாழ்த்தப் பட்ட அட்டவணை சாதியினர், மலைவாழ் மக்கள், மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள், சிறுபான்மையோர் அடங்கிய கூட்டமைப்பு தான் ஒரே நம்பிக்கையாகத் தெரிகிறது. இவர்கள் தங்களிடம் உள்ள முரண்பாடுகளைக் களைந்து, நட்புடன் இணைந்து செயல்படவேண்டும். தங்களுக்குள் உரசல் வராதவாறு இந்த இணைவு அமைய வேண்டும்.

## அத்தியாயம் 4

# சமகால இந்து மதம்

விடுதலைக்குப் பின்பு ஏற்பட்ட வளர்ச்சி நமக்கும் இந்துக்களுக்கும் இடையே இருந்த உறவுகளை மாற்றியிருக்கிறதா? அரை நிலப்பிரபுத்துவ, அரை முதலாளியச் சமூகத்திற்குள் படிப் படியாக நிறுவப்பட்ட சமத்துவக் கண்ணோட்டங்கள் இந்துக் களுக்கும் நமக்குமுள்ள சமூகப் பொருளாதார உறவுகளை மாற்றி அமைந்துள்ளனவா?

## சாதியும் கல்லூரிக் கல்வியும்

கல்வி நிறுவனங்களினூடாக எனது போராட்டங்கள் தொடர்ந்த போதுதான் மாநிலம், தேசம் மற்றும் உலக அளவிலான அமைப்புகள் என்பன எங்களுடைய கிராம அமைப்புகளை விட மிகப்பெரியவை என்று அறிந்தேன். மேற்படிப்புக்கு நான் தள்ளிவிடப்பட்ட போது ஒவ்வொரு நிலையிலும் கல்வி எனக்கு அன்னியமாக இருந்தது. மேலும் மேலும் அது பார்ப்பனிய மயமாகவும் ஆங்கிலமயமாகவும் இருந்தது. அடிப்படையில் எனது கல்வி தெலுங்கு வழியிலானது. தெலுங்குப் பாடப்புத்தகங்கள் மற்றும் வரலாற்றுப் பாடங்கள் அனைத்தும் பார்ப்பனக் கதைகளைக் கொண்டவையாக இருந்தன. ஏன் கணக்குப் பாடம் கூட பார்ப்பன வரையறைக்குள் தான் சொல்லிக் கொடுக்கப்பட்டது. பாடப்புத்தகத்திலிருந்த கடவுள்கள் கூட பார்ப்பனக் கடவுள்களாக இருந்தார்கள். வீர புருசர்களாக சித்திரிக்கப்பட்ட மனிதர்கள் கூட பார்ப்பனப் பாரம்பரியத்திலிருந்தோ அல்லது சத்திரியப் பாரம்பரியத்திலிருந்தோ வந்தவர்களாக இருந்தார்கள். வரலாற்றுப் புத்தகம் முழுக்க சத்திரியர்களின் கதைகளே ஆக்கிரமித் திருந்தன. அவர்களின் காதலையும் சண்டையையும் பற்றித்தான் படித்தோம். தலித் பகுஜன்களின் வாழ்க்கை இன்று வரை பாடத் திட்டத்தில் இடம்பெறவில்லை. நாமெல்லாம் வரலாற்றிலிருந்து புறக்கணிக்கப்பட்டு விட்டோம். உண்மையில் நம்முடையது ஒரு வரலாறே அல்ல என்பதுதான்அவர்களின் கண்ணோட்டம்.

நான் பி.ஏ., வகுப்பில் சேர்ந்தபோது தெலுங்கு மொழியிலிருந்து ஆங்கில மொழியில் கற்பதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டேன். அங்கு இன்னும் பல மாற்றங்களும் நிகழ்ந்தன. பாடப்புத்தகத்தின் உள்ளடக்கம் கூட மாறியிருந்தது. பார்ப்பனிய வடிவம் ஐரோப்பிய வடிவமாக

மாறியது. ஐரோப்பிய முறை - அது மதமாக இருக்கலாம்; அல்லது சமுதாயமாக; அரசியலாக எதுவாக இருந்தபோதிலும் பார்ப்பனியத்திலிருந்து முற்றிலும் வேறுபட்ட உலகையே அது எனக்குக் காட்டியது. நம்முடைய சாதிபற்றியும் கலாச்சாரம் பற்றியும் பார்ப்பனியப் பாடங்கள் திட்டமிட்டு மௌனம் சாதித்தபோது, ஆங்கிலப்பாடங்கள் அதற்கு எதிர்மாறாக இருந்தன. அவைகள் ஐரோப்பாவில் இருக்கிற வர்க்கங்கள் பற்றிக் குறிப்பிட்டன. ஏழை பணக்கார வர்க்கங்களின் கலாச்சாரம் குறித்துப் பேசின. ஆங்கிலப் பாடப்புத்தகம் டிக்கன்ஸ் போன்ற எழுத்தாளர்களை எங்களுக்கு அறிமுகப்படுத்தியது. அரசியல் அறிவியல் பாடத்தில் பல்வேறு வர்க்கங்களின் பண்பாடும், விடுதலை குறித்த கருத்துக்களும், சமத்துவம் மற்றும் சமத்துவமின்மை போன்ற கருத்துக்களும் இடம் பெற்றிருந்தன.

பின்னோக்கிப் பார்க்கும்போது ஆங்கிலப் பாட நூற்களிலிருந்து தெளிவாவது என்னவெனில், வர்க்கச் சமுதாயங்களில் அங்கும் கூட முரண்பாடுகள் இருந்த போதிலும் நமது இருப்பை மவுனமாக்கும் சதி என்பது சாதியச் சமுதாயங்களைவிட அங்கு குறைவு என்பது தான். தெலுங்குப் பாடப்புத்தகத்தில் அடக்கி வைக்கப்பட்ட மௌனம் இடியைப் போல பயங்கரமானது. கொள்கையளவிலும் கோட்பாட்டளவிலும் சாதிவெறியைப் பின்பற்றி வரும் சமூகம் தன்னுடைய மனிதத் தன்மையற்ற போக்கைப் பற்றி மௌனம் சாதிக்கிறது. எல்லா இலக்கியங்களும் இந்தச் சாதியக் கலாச்சாரத்தைப் புகழ்ந்து பாடுவதும் தலித் பகுஜன்களின் கலாச்சாரத்தைக் கண்டிப்பதும்தான் ஆச்சரியமாக இருக்கிறது. தென்னிந்தியாவில் உயர் கல்வி வாய்ப்புப் பெற்ற தலித் பகுஜன் சமூகத்தில் எனது தலைமுறை இரண்டாவது தலைமுறையாகும். இந்த உயர்கல்வி அமைப்புகளில் நான் ஆதிக்க சாதி ஆசிரியர்களையே எதிர்கொள்ள வேண்டி இருந்தது. எவ்வளவு பெரிய முற்போக்குச் சிந்தனையாளர்களாக இருந்தாலும், இடதுசாரிகளாக இருந்த போதிலும் எனது ஆசிரியர்கள் எல்லோரும் சாதிவேறுபாடு பற்றிப் பேசும்போது மௌனம் சாதித்தார்கள். ஏனெனில் அவர்களே சாதிவெறியர்களாக இருந்தார்கள். பார்ப்பனக் கலாச்சாரம் அவர்களுடைய வாழ்க்கையைக் கட்டமைப்பது குறித்து அவர்கள் கவலைகொள்ளவில்லை. இந்துக் கலாச்சாரத்தை அவர்கள் ஒரு ஒற்றைத் தன்மையான கலாச்சாரமாகக் கருதினார்கள். அதை அவர்கள் விமர்சனம் செய்யும்போது கூட இந்துக் கலாச்சாரத்திற்கு எதிரான கலாச்சாரம், தலித் பகுஜன் கலாச்சாரம் என்பதை உணராமல் இந்துக் கலாச்சாரமே எல்லோருக்குமான கலாச்சாரம் என்று பார்த்தார்கள்.

சமத்துவக் கோட்பாடுகள் குறித்து அவர்கள் அறிந்திருந்த போதிலும் அய்லய்யா, எல்லையா, மல்லையா அல்லது பேரய்யா போன்ற பெயருடையவர்கள் உயர்கல்வி நிறுவனங்களில் நுழையும் போது அதை அவர்கள் வரவேற்கத் தயாராக இல்லை. அவர்களில் பலர் நாங்கள் மேல்நிலைக்கல்விக்கே தகுதியற்றவர்கள் என்று கருதினார்கள். அத்துடன் நாங்கள் அங்கே வருவதானது கல்வியின் தரத்தைக் குறைத்துவிடும் என்றும் நம்பினார்கள். இந்து ஆசிரியர்களின் கருத்துப்படி நாங்கள் பல்கலைக்கழகத்தில் இடம்பெறவே தகுதியற்றவர்கள். இன்னும் சிலர் எங்களுக்கு நல்ல கூலியையும் நல்ல வாழ்க்கையையும் கொடுத்து, கிராமப்புறப் பொருளாதாரத்திற்கு உள்ளேயே வைத்திருக்க வேண்டும் என்றும் விவாதித்தார்கள். கிராம விவசாயப் பொருளாதாரம் தான் எங்களுக்கு உரியது என்றும் கல்வி நிலையங்களில் எங்களைப் புகுத்திக் கல்வியின் தரத்தைக் குறைப்பதற்குப் பதிலாக எங்களுக்கு எங்களுடைய சூழ்நிலையிலேயே புதிய வாழ்க்கை வழங்கப்படவேண்டும் என்றும் கூறினார்கள். அவர்களுடைய கருத்துப்படி நாங்கள் தெலுங்கிலோ ஆங்கிலத்திலோ புலமை பெற முடியாது. அது உண்மை தான். ஏனென்றால் இரண்டுமே எங்களுடைய கலாச்சாரத்தைப் பிரதிபலிப்பது இல்லை. இரண்டு மொழிகளும் எங்களுக்கு அன்னிய மொழிகளே. அந்த அன்னியத்தன்மை இரு மொழிகளிலும் சம அளவில் வெளிப்படுகிறது. தவிரவும் கல்வியின் முழுநோக்கமும் பொருத்தமற்றதாக இருக்கிறது. அறிவுக்கோ, திறமைக்கோ இந்தக் கல்வியமைப்பில் இடமில்லை. இன்னும் சொல்வதென்றால் இந்தக் கல்வியமைப்பு எங்களுடைய அறிவை மழுங்கடித்து விட்டது. எங்களுடைய மொழித்திறமை, கிராமிய மக்கள் பேசும் சொற்களஞ்சியங்கள் போன்றவை கண்டு கொள்ளப்படுவதில்லை. நாங்கள் எங்களுக்கு எதிரான, ஆங்கில மயமாக்கப்பட்ட பார்ப்பனீய வகுப்பறைகளில் உட்கார்ந்திருக்கிறோம். எங்களுடைய பெற்றோர்களின் உபரியை உறிஞ்சி உருவாக்கப்பட்ட வகுப்பறைகள் இவை.

## பார்ப்பன சிவில் சமூகம்

நகர மையங்களுக்கு நாங்கள் வந்தபோது, வளர்ந்து வரும் நகரங்களில் எத்தகைய அதிகார மையங்களையும் சிவில் சமூக நிறுவனங்களையும் நாங்கள் எதிர்கொண்டோம்? உணவு விடுதிக்குள் நுழைந்தபோது முதலாளித்துவக் குறியீடாய் இருக்க வேண்டிய உணவு விடுதியின் தோற்றம் பார்ப்பனமயமாய் இருந்தது கண்டு வியந்தோம். 'பிராமண உணவு விடுதி' என அங்கே பெயர்ப் பலகைகள் வைக்கப்பட்டிருந்தன. உணவும் கூட பார்ப்பன சுவைக்கு ஏற்ப

தயாரிக்கப்பட்டதாவே இருந்தது. அசைவ உணவுக்கடைகள் கூட சத்திரிய அரசர்கள் பெயரிலோ அல்லது பார்ப்பன பனியா தேசியத் தலைவர்கள் பெயரிலோதான் இருந்தன. இன்று வரை எந்த நகரத்திலும் மாலா, மாடிகா ஓட்டல்கள் இருந்து அங்கே அவரவர் ருசிக்கு ஏற்ப மாட்டிறைச்சி உட்பட எல்லா வகையான அசைவ உணவுகளும் கிடைப்பது இல்லை. நமது ருசிக்கேற்ப உணவு அளிக்கக்கூடிய குருமா, கவுடா, ஓட்டல் ஒன்றுகூட நான் பார்த்த தில்லை. பார்ப்பன பனியா ருசியே எல்லோருக்குமான ருசியாக மாற்றப்பட்டிருந்தது. எல்லா உணவு விடுதிகளின் பெயர்களும் அங்கு மாட்டப்பட்டிருந்த காலண்டர்களும் இந்துக் கடவுள்களின் பெயர்களும் படங்களுமாகவே இருந்தன. பிரம்மா, விஷ்ணு, சரஸ்வதி, லெட்சுமி, சிவன் போன்ற படங்கள் இருக்கும். எந்தக் கடைகளிலும் தலித் பகுஜன் கடவுளர்களின் படங்கள் இடம்பெற வில்லை. நாங்கள் அங்கு வந்து பார்த்ததும் பொது இடங்களில் எங்களுடைய கலாச்சாரத்திற்கு இடமில்லை என்பதை உணர்ந்து கொண்டோம். எங்களுடைய மக்கள் பொச்சம்மா பற்றி பேசினால் கிண்டலும் கேலியும் செய்யப்படுவோம் என்று புரிந்துகொண்டார்கள். நகர்ப்புறங்களில் தலித் பகுஜன் மக்கள் தம்மைச் சிறுபான்மை யினராகவே உணர்ந்துகொண்டார்கள்.

இந்த நகர்ப்புற மையங்களில் இந்துக்கள் பயன்படுத்தாத பொருட்களைத் தலித் பகுஜன்கள் விற்கிறார்கள். ஆனால் அவ்வாறு விற்பவர்கள் மிகக்குறைவானவர்களே. தலித் பகுஜன் ஜாதிகளில் ஒன்றான ஷாலா (நெசவாளர்) என்ற சாதியினர் துணி வியாபாரம் செய்கிறார்கள். பனியாமயமாயிருக்கும் சந்தையில் அவர்கள் தொடர்ந்து தொழில் செய்ய வேண்டுமானால் சமஸ்க்கிருதமயமாவதுதான் ஒரே வழி. எனவே அவர்களும் சமஸ்கிருதமயமானார்கள். பூ நூலை அணிந்து கொண்டு தாங்களும் இருபிறப்பாளர்கள் என்று பாசாங்கு செய்தார்கள். ஆந்திராவில் அவர்களுடைய முன்னேற்றத்திற்குக் காரணமாய் இருந்த பொட்லூரி வீர பிரம்மம் போன்றவர்களுடைய படத்தைத் தங்களுடைய வீட்டில் தொங்கவிடப் பயந்தார்கள். நகர்ப்புறச் சந்தைகளில் கூட சாதித்தொழில் உறவுகள் தொடர்ந்து நடைமுறையில் இருந்து வருகின்றன. ஷாலாக்கள் துணி விற்கும் சில்லறை வியாபாரிகளாக உள்ளனர். ஆனால் துணியை மொத்தமாக விற்பனை செய்பவர்கள் பனியாக்கள்தான்.

பார்ப்பனர்கள் தமது சமூகப் பொருளாதார அரசியலதிகாரத்தை நகர்ப்புறக் கோயில்களுக்கும், கல்வி நிலையங்களுக்கும், பொது நிர்வாக அமைப்புகளுக்கும் விரிவாக்கியபோது புரோகிதர், பட்வாரி

போன்ற வேலைகளைத் தாங்கள் மட்டுமே வைத்துக் கொண்டார்கள். தாசில்தார், போலிஸ் இன்ஸ்பெக்டர், கலெக்டர், காவல் துறை கண்காணிப்பாளர் இவர்கள் அனைவரும் பார்ப்பனர்கள் என்பது வெளிப்படையான விசயம். இவர்கள் தங்களின் நேரடியான மற்றும் சட்டவிரோதமான வருவாயைக் கொண்டு நகர்ப்புறத்திலுள்ள சொத்துக்களை வாங்கிக் குவித்தார்கள். புதிய சத்திரியர்கள் அதிகார அமைப்பில் கீழ்மட்டப் பதவிகளை ஆக்கிரமித்துக் கொண்டார்கள். இங்கும் அங்குமாய் ஒரு சில தலித் அதிகாரிகள் இருந்தார்கள். அதுவும் கூட டாக்டர் அம்பேத்கர் அவர்கள் வாங்கித் தந்த இட ஒதுக்கீட்டின் மூலம்தான் நிகழ்ந்தது. தலித் அலுவலர்கள் மீது அலுவலகத்தில் தீண்டாமை கடைபிடிக்கப்பட்டது. இத்தகைய அலுவலர்களே எங்களைப் போன்றவர்களுக்கு உணர்வு ஊற்றுக் களாகத் திகழ்ந்தார்கள். அவர்கள் எங்களுடைய உள்ளங்களில் நம்பிக்கையூட்டும் வினாக்களை எழுப்பினார்கள். நாம் ஏன் அவர்களைப் போல் ஆகமுடியாது என்று எங்களைச் சிந்திக்கச் செய்தார்கள். நாங்கள் மாணவர்களாய் இருந்தபோது மகாத்மா பூலே பற்றியோ டாக்டர் அம்பேத்கர் பற்றியோ யாரும் சொல்லவேயில்லை. எங்களுக்கெல்லாம் காந்தி, சுபாஷ், நேரு போன்றவர்களைப் பற்றித்தான் கூறினார்கள். இல்லாவிட்டால் மேல்நாட்டுச் சிந்தனையாளர்கள் பற்றிச் சொல்லிக் கொடுத்தார்கள். இவர்களுடைய வாழ்க்கையும் கோட்பாடுகளும் எங்களுக்கு எந்தவிதத்திலும் தொடர்புடையவை அல்ல. தேசிய இயக்கம் என்பது குடியேற்ற எஜமானர்களை எதிர்த்துப் பார்ப்பன பனியாக்கள் நடத்திய சண்டை போன்றே சித்திரிக்கப்பட்டது. ஆங்கிலேயரை இந்தியாவிலிருந்து வெளியேற்றுவதில் தலித் பகுஜன்கள் முக்கியப் பங்கு வகித்தார்கள் என்பதை எந்த இடத்திலும் யாரும் குறிப்பிட்டு எங்களுக்குச் சொல்லவில்லை.

## சுதந்திரத்திற்குப் பிந்திய அரசியல் கட்சிகள்

விடுதலைக்குப்பிந்திய இந்திய அரசியல் கட்சிகள் பற்றித் தெரிந்து கொள்வது மிக முக்கியமானது. எங்கள் கல்லூரி நாட்களில் லிபரல் டெமாக்ரடிக் கட்சி; அடுத்தது கம்யூனிஸ்ட் கட்சி என்கிற இரண்டு சிந்தனை முறைகள் இருந்ததைத்தான் நாங்கள் அறிவோம். காங்கிரஸ்தான் ஜனநாயக அரசியல் கருத்துக்களைக் கூறிவந்த முக்கிய அரசியல் கட்சி. அதுவும் திட்டமிட்டு மேல் சாதியினருடைய நலனில் அக்கறை கொண்ட 'பத்ரலோக்' கட்சியாக உருவாக்கப்பட்டது. அரசின் வருமானங்களை இந்துக்கள் உறிஞ்சிக்கொண்டிருந்த அதே நேரத்தில் காங்கிரஸ், தலித் பகுஜன் நலன்கள் குறித்துப்பேசி வந்தது. காங்கிரஸ் கட்சிக்குள் இருந்த மேல்சாதியினருக்கும்

தலித் பகுஜன்களுக்குமான உறவு ராமனுக்கும் அனுமனுக்கும் இடையில் உள்ள உறவாக இருந்தது. அனுமன் தென்னிந்திய தேசியத் தலைவனான ராவணனை எதிர்த்த ராமனுடைய படையில் சேர்ந்த தலித் ஆவான். ராமனுடைய பேரரசுக்காக அவன் இரவு பகலாக உழைத்தான்; போராடினான். இருந்தும்கூட அனுமன் நிர்வாகத்தில் ஒதுக்கப் பட்டவனாகவும், ஏவல் புரிவோனாகவுமே நடத்தப்பட்டான். (ராமராஜ்ஜியம் என்பது தலித்துகளுக்கும் பெண்களுக்கும் எதிரானது) இதைப்போலத்தான் காங்கிரசில் இருந்த தலித் பகுஜன்கள் அதிகார வரிசையில் ஆகக்கடைசியில் ஏவல் புரிபவர்களாக இருந்தார்கள். அவர்களது முக்கியமான வேலை மக்களைத் திரட்டுவது, மேல்சாதி காங்கிரஸ்காரர்களுடைய கூட்டங்களுக்கு விளம்பர ஏற்பாடு செய்வது, காங்கிரஸ் கொடியை சுமந்து சென்று ஊர் ஊராக நோட்டீஸ் ஒட்டுவது, காங்கிரஸ் மேல்சாதித் தலைவர்களுடைய உருவங்களைப் படம்பிடிக்க புகைப்படக்காரர்களை ஏற்பாடு செய்வது ஆகியவைதான். ஒரு சாதாரண சராசரி காங்கிரஸ் மேல்சாதிக்காரனின் நோக்கம் தாழ்த்தப்பட்டவர்களை நம்பிக்கைக்குரிய அனுமன்களாக ஆக்குவதே யாகும். அதே சமயத்தில் அம்பேத்கரியம் ஒரு சிறிய உணர்வு மிக்க தலித் பகுஜன்களைத் தனி சிறிய அரசியல் சக்தியாக உருவாக்கியிருந்தது. எனினும் பெரும்பாலானவர்கள் அனுமன்களாகவே இருந்தார்கள். வேறு நோக்கங்களுக்காகக் காங்கிரஸ் நிர்வாகம் இவர்களுக்கு வழங்கக்கூடிய சின்னச் சின்ன நன்மைகளைக் கருதி இவ்வாறு இவர்கள் அனுமன்களாகவே தொடர்ந்தனர்.

இவ்விதமாக, இன்றைய அரசியல் நடைமுறைகள் அன்றைய இராமராஜ்ஜியப் பாணியில் வார்க்கப்பட்டது. காங்கிரசுக்கட்சி தன்னை ஒரு தாராள சனநாயகக் கட்சியாகக் காட்டிக்கொண்டாலும், உண்மையில் அது இந்துத்துவத் தன்மையிலேயே செயல்பட ஆரம்பித்தது. காங்கிரஸ் மேல் சாதித் தலைவர்கள் இந்துவாகவே வாழ்ந்தார்கள். பார்ப்பன காங்கிரசு தலைவர் ஒருவர் இருந்தால், அவரின் ஒரு உறவினர் கோயிலில் புரோகிதராகவும் மற்றவர் அரசு உத்தியோகத்திலும் இருப்பார். இவர்கள் பல்வேறு நிலைகளில் பொதுவான நோக்கம் உடையவர்களாகவே இருந்தார்கள். அவர்கள் தொடர்பு முழுமையானது. அவர்கள் இந்த அமைப்பைத் தம் விருப்பத்திற்கு ஏற்ப தகவமைத்துக் கொண்டார்கள். அவர்கள் வாழ்க்கை முழுக்க முழுக்க நவீனப்படுத்தப்பட்ட இந்து வாழ்க்கை யாகவே இருந்தது. ஆனால் அவர்களைப் பின்பற்றி இந்த இந்துமயமாக்கப்பட்ட அரசியலில் சேர முயன்ற தலித் பகுஜன்கள் என்றுமே சமமானவர்களாகக் கருதப்படவில்லை. ஜனநாயகக் கட்சியாக ஐம்பதாண்டுகாலம் இந்நாட்டை ஆண்ட காங்கிரசுக்கட்சி

சமத்துவமற்ற சாதி உறவுகளை எவ்வகையிலும் மாற்றியமைக்க முயலவில்லை. காங்கிரசுக்குள்ளே இருந்த இந்து மேல் சாதியினருக்கும் இந்துக்கள் அல்லாத தலித் பகுஜன்களுக்கும் இருந்த இடைவெளி சரிக்கட்டப்படவில்லை. இவர்களுக்கிடையேயான உறவு பரஸ்பரம் அவநம்பிக்கையோடும் எதிர்ப்போடும் தொடர்ந்தது. இந்த இடைவெளி வெறும் கருத்து வேறுபாடுகளின் விளைவு அல்ல. தலித் பகுஜன்களின் கலாச்சாரமும் மதமும் வேறானது என்று எண்ணியதன் விளைவாகவே இந்துத் தலைவர்கள் அவர்களை அன்னியமாக நடத்தினார்கள்.

மேல்மட்டக் காங்கிரஸ் தலைவர்கள் கட்சியின் மூலம் சொத்தையும் சமூக அந்தஸ்தையும் பெற்றனர். மிக மிகச் சில தலித் பகுஜன்களால் சொத்து சேர்க்க முடிந்தாலும் அவர்களால் இந்துக் கட்டமைப்பில் இடம்பெற இயலவில்லை. கட்சியின் மேல் மட்டங்களில் அவர்களின் நிலை மிகவும் கீழானதாகவே இருந்தது. ஒரு வசதியான மாலா, மாடிகா சாதியைச் சேர்ந்தவருக்கும் ஒரு வசதியான மேற்சாதிக்காரருக்குமான உறவு என்பது ஒரு ஏழை 'மேற்' சாதியானுக்கும் ஒரு ஏழை தலித் பகுஜனுக்கும் இடையிலான உறவைப் போன்றே இருந்தது. ஏழையாக இருந்தாலும் ஒரு 'மேற்' சாதிக்காரன் தன்னை மேலானவனாகவே கருதிக் கொள்கிறான். பணக்கார மேற்சாதியானும் அப்படித்தான் நினைத்துக் கொள்கிறான். பணம் சேர்ப்பதன் மூலமாகவே ஒரு தலித் பகுஜனின் அந்தஸ்து என்பது உயர்ந்துவிடுவதில்லை. பணக்கார வர்க்கத்திற்குள்ளும் சாதீய வேறுபாடுகள் தொடரவே செய்கின்றன. சமுதாய அளவிலும் அறிவு ஜீவிகள் மத்தியிலும் அடித்தளம் அமைத்திருந்த கம்யூனிஸ்ட் இயக்கம் மற்றொரு பேரியக்கமாகும். கம்யூனிஸ்ட்டுகள் என்ன பிரச்சாரம் செய்தார்கள் என்றால், மக்கள் கடலைப்போன்றவர்கள் என்றும், அரசியல் இயக்கங்கள் கடல் அலைகளைப் போன்றது என்றும், தலைவர்கள் அலையில் நுரைபோன்றவர்கள் என்றும் கூறினார்கள். சீன கம்யூனிசத் தலைவர் சூ என் லாய் கூறிய கருத்து இது. கருத்தளவில் கம்யூனிஸ்ட்டுகள் தம்மை மக்களின் ஒரு அங்கமாக காட்டி, தாம் மக்களிடம் இருந்து வேறுபடவில்லை என்று நிறுவ முயற்சித்தார்கள். ஆனால் உண்மையில் தலித் பகுஜன் மக்கள் கம்யூனிசத் தலைமையிலிருந்து மூன்று வகைகளில் வேறுபட்டவர்களாகவே இருந்துவந்தார்கள்.

ஒன்று: கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமை மேல்சாதி வசமாக குறிப்பாக ப்பார்ப்பனர்கள் கையில் இருந்தது. இரண்டு: அவர்கள் அன்றாட வ்ாழ்வில் இந்துக்களாகவே வாழ்ந்து வந்தார்கள்.

மூன்றாவதாக கட்சியிலிருந்தவர்கள் பெரும்பாலனவர்கள் ஏழையாகவே இருப்பார்கள். ஆனால் தலைவர்களோ பணக்காரப் பின்னணியிலிருந்து உருவானார்கள். கம்யூனிஸ்ட் கட்சியில் மக்கள் கூட்டம் என்பது தலித் பகுஜன் கூட்டமாகவே இருந்தது. இருந்தும் அவர்கள் தலைமைக்கு அழைக்கப்படவே இல்லை. பார்ப்பனரல்லாத இயக்கம் செல்வாக்குப் பெற்றிருந்த ஆந்திராவிலும் கேரளாவிலும் கூட இந்நிலையே இருந்தது. ஆந்திராவில் பதிய சத்திரியர்களும் பார்ப்பனர்களுமான கிரி பிரசாத்ராவ், தேவுலபள்ளி வெங்கடேஸ்வரராவ் போன்றவர்கள் தலைவர்களாகவும், தலித் பகுஜன்கள் கட்சியின் அடித்தளமாக (அதாவது கடலாக)வும் இருந்தார்கள். கேரளாவில் பொது மக்களிடம் கொடூரமாக நடந்துகொண்ட நம்பூதிரிகளே தலைவர்கள் ஆனார்கள். அங்கேயும் அடித்தள அணிகள் தலித் பகுஜன்களாகவே இருந்தார்கள். இன்னொரு சிறந்த உதாரணம் மேற்கு வங்கம். இங்கே வசதியான வங்காள பத்ரலோக் பாபுக்கள் தலைவர்களாக இருந்தார்கள். அவர்கள் தம்மை ஒத்தவர்களைக் கட்சியில் சேர்க்க முயற்சிக்கவே இல்லை. அங்கேயும் கடலாக இருந்தவர்கள் தலித் பகுஜன்களே. இவ்வாறு நாடு முழுவதும் பார்ப்பனர்கள் எல்லோரும் தலைவர்கள் ஆனார்கள். எல்லா அரசியல் இயக்கங்களிலும் இதே நிலை இருந்தது. கம்யூனிஸ்ட் இயக்கமும் இரண்டு குழுக்களாகத்தான் செயல்பட்டது. மேல் சாதித் தலைவர்கள் ஒரு குழுவாகவும், தலித் பகுஜன் மக்கள் தொண்டர்களாகவும் கட்சி உறுப்பினர்களாகவும் இரண்டு அடுக்காகச் செயல்பட்டார்கள். டாக்டர் அம்பேத்கர்தான் இந்த உண்மையை முதன் முதலில் அறிந்துகொண்டு செயல்பட்டவர்.

கம்யூனிஸ்ட் மேல்சாதியினர் இந்து வாழ்க்கை முறையைக் கைவிட்டனரா? நிச்சயமாக இல்லை. அவர்களுடைய சமூக உறவுகள் அவர்களின் சாதி வட்டத்திலேயே தொடர்ந்தன. திருமணங்கள் சாதி வட்டத்திலேயே நடந்தன. நண்பர்கள் கூட சொந்தச் சாதியினராகவே இருந்தார்கள். அவர்கள் என்றுமே தாங்கள் இந்து மதத்திற்கு எதிரானவர்கள் என்று அறிவித்ததே இல்லை. அவர்கள் என்றுமே இந்துக்கடவுள்களை விமர்சனம் செய்தது கிடையாது. உதாரணமாக, எல்லா இந்துக் கடவுள்களும் பிரம்மா, விஷ்ணு தொடங்கி தசாவதாரம் வரை தலித் பகுஜன்களுக்கு எதிராக ஆயுதம் தாங்கிய கடவுள்களாக இருந்தார்கள். தலித் பகுஜன் மக்களுக்கு எதிரான அமைப்பையும் உருவாக்கினார்கள்.

இந்தியக் கம்யூனிச இலக்கியங்கள் எதுவும் இந்தக் கடவுள்களை விமர்சனம் செய்ததே இல்லை. கம்யூனிஸ்ட் அறிவாளிகள்

எல்லாம் பார்ப்பனர்களாக இருந்தபடியால் அவர்கள் இந்துக் கடவுள்களில் இருந்தும் கலாச்சாரங்களில் இருந்தும் என்றுமே விலகியது கிடையாது. மாற்றுக் கலாச்சாரம் குறித்து கம்யூனிஸ்ட்டுகள் பேசியபோதும் கூட, அந்த மாற்றுக் கலாச்சாரம் இந்து வாழ்க்கை முறையிலிருந்து விலகியதில்லை. இது இந்தியக் கம்யூனிஸ்ட்டுக்கே உரிய தனித்த குணமாகும். கட்சியின் பார்ப்பனத் தலைமையின் விளைவு இது. சாதாரண பார்ப்பன பனியாக்களைப் போல் நாங்கள் கோவில்களுக்குப் போவதில்லையே என்று சொல்லலாம். ஆனால் அவர்களது மையக்கமிட்டியே இந்து மேலாண்மையின் ஒரு மையமாகத்தானே இருக்கின்றது. மார்க்ஸ், எங்கல்ஸ், லெனின் போன்றவர்களை 'கம்யூனிஸ்ட் கடவுளர்'களாக அவர்கள் மாற்றி விட்டார்கள். இந்தக் கடவுள்களின் கோட்பாடுகளைப் பயன்படுத்தி ஒடுக்கப்பட்ட மக்கள் தம் பிரச்சினைகளுக்கான தீர்வுகளைக் கண்டுபிடித்துக் கொள்ளவேண்டும். அவர்கள் இந்தக் கம்யூனிச இயக்கத்தில் தன்னம்பிக்கை உடைய தலைவர்களாக அவர்கள் உருவாக அனுமதிக்கப்படவில்லை. தலித் பகுஜன் மக்களிடம் காணப்படும் தன்னம்பிக்கையைத் தகர்ப்பதே பார்ப்பன இந்துக்களின் சூழ்ச்சியாகும். அதையே கம்யூனிஸ்ட்டுகளும் செய்தனர்.

தாராள சனநாயக இந்துத் தலைவர்களானாலும் சரி, கம்யூனிஸ்ட் தலைவர்களானாலும் சரி தலித் பகுஜன் பற்றிய அவர்களுடைய தத்துவப்பார்வை ஒரே விதமாக பழைமை இந்துத்துவச் சக்திகளைப் போலவே இருந்தது. தலித் பகுஜன்கள் அதிகாரத்தைக் கையிலெடுக்கத் தகுதியற்றவர்கள் என்றே இந்துத் தலைவர்களும் கம்யூனிஸ்ட்டுகளும் கருதுகிறார்கள். தலித் பகுஜன் சாதியினர் தலைவராக இருந்து மேல் சாதியினருக்கு வழிகாட்டமுடியாது என்றும் நம்புகிறார்கள். சூத்திரக் கடவுள் எனப்படுவோர் இந்துக்கடவுள்களுக்கு முற்றிலும் மாறுபட்டவர்கள் என்பது இவர்களுக்குப் புலப்படுவது இல்லை. ஒரு பெரிய மக்கள் கூட்டத்தின், உற்பத்திக் கலாச்சாரத்தின் வெளிப்பாடுகள் தான் தலித் பகுஜன் கடவுள்கள் என்பது அவர்களுக்குப் புரிவது இல்லை. உதாரணமாகக் கட்டமைசம்மா என்பது ஏரிப்பாசனத்தைக் கண்டு பிடித்த கடவுள். பொச்சம்மா எல்லா வியாதிகளுக்கும் மூலிகை மருந்து கண்டுபிடித்தவர். பீரப்பா ஆடுவளர்க்கும் கலையைக் கண்டவர். பொத்திராஜ் வயல்களைப் பாதுகாப்பவர். ஏனாடி இரும்பு தொழில் வேலை தெரிந்தவர். ஒரு கம்யூனிஸ்ட் தலைவன் என்பவன் சுரண்டுகிற வனுக்கும், சுரண்டப்படுகிறவனுக்கும் இடையில் இருக்கிற கலாச்சார முரண்பாடுகளை நன்கு தெரிந்திருக்க வேண்டும். ஆனால் இந்தியக் கம்யூனிச இயக்கத் தலைவர்கள் உழைக்கும் மக்களின் கலாச்சாரங்களைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும் என என்றுமே முயன்றதில்லை.

உற்பத்தியையே அடிப்படையாகக்கொண்ட தலித் பகுஜன்களின் கலாச்சாரத்தைக் கண்டு கம்யூனிஸ்ட்டுகள் பெரிதும் பயந்தார்கள். ஏனெனில் இந்த சக்திகள் ஒன்று சேர்ந்தால் தங்களுடைய தலைமைக்கு ஆபத்து ஏற்பட்டுவிடுமே என்கிற அச்சம்தான்.

## விடுதலைக்குப்பின் பல்கலைக்கழகங்கள்

1990 ல் இருந்தே இந்து சாதியினருக்கும் தலித் பகுஜன் சாதியினருக்கும் இடையேயிருந்த முரண்பட்ட கலாச்சார வேறுபாட்டைக் கூர்மையாக அறிய முடிந்தது. பல்கலைக்கழகங்களில் பார்ப்பனர்களும் புதிய சத்திரியர்களும் மட்டுமே அதிகாரம் பெற்றிருந்தார்கள். ஒரு சில பல்கலைக்கழகங்களில் பார்ப்பனர்களே எல்லாவற்றையும் கட்டுப்படுத்தினார்கள். மருத்துவம், பொறியியல், விஞ்ஞான ஆராய்ச்சி, சமூக அறிவியல் ஆராய்ச்சி மற்றும் கலைத்துறைகள் போன்ற அனைத்துத் துறைகளிலும் உள்ள மேல்சாதி ஆசியர்களுக்கும், ஆசிரியர் அல்லாத அலுவலர்களுக்கும் மற்றும் தலித் பகுஜன் மாணவர்களுக்கும் இடையே உள்ள கலாச்சார வேறுபாடுகள் துல்லியமாக வேறுபட்டிருந்தன.

நான் உஸ்மானியா பல்கலைக்கழகத்தில் ஆசிரியராகப் பணியாற்றத் தொடங்கியபோது விஞ்ஞானக்கல்வியும் மேலைநாட்டு அறிவும் எந்த வகையிலும் இந்துக்களைப் பகுத்தறிவாளர்களாக மாற்றவில்லை என்பதை உணர்ந்தேன். நவீன விஞ்ஞானம் அவர்களிடம் எந்தவிதத் தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை. இதற்குக்காரணம் அவர்கள் என்றுமே உற்பத்தித் தளங்களில் வாழ்ந்ததில்லை என்பதேயாகும். சாதாரணத் தொழில் செய்கிற இந்தியன் பெற்றிருக்கிற வாழ்க்கை அனுபவங்கள் கூட இந்த அறிவு ஜீவிகளுக்கு இருந்தது இல்லை. ஆகையால் உழைப்பிலிருந்து கிடைக்கும் அறிவுத் திரட்சியை அவர்கள் புரிந்து கொள்ளவில்லை. தலித் பகுஜன் சாதியிலிருந்து வரும் இளைஞர்கள் தகுதி குறைந்தவர்கள் என்றும் அவர்கள் பல்கலைக் கழகங்களில் ஆசிரியராகப் பணியாற்ற தகுதி யற்றவர்கள் என்றும் 1990களில் கூட (மண்டல் இயக்கம் நடைபெற்ற போது) அவர்களால் வாதிட முடிந்தது. உற்பத்தியில் ஈடுபட்டிருக்கிற மக்களிடமே அறிவு உள்ளது என்றும், அதுவே புதிய படைப் பாக்கத்திற்கு ஆதாரமாக அமைகிறது என்பதும் பகுத்தறிவற்ற ஒரு சராசரி இந்து ஆசிரியனுக்குப் புரிவதே இல்லை என்பது எங்களுக்கு வியப்பை அளித்தது. ஆனால் ஒப்பீட்டளவில் ஒரு தலித் பகுஜன் ஆசிரியர் பகுத்தறிவு உடையவராக இருந்தார். ஏனெனில் அவர் தகுதிக் கோட்பாட்டை நம்புவதில்லை. தொழிலிருந்தே உண்மையான தகுதி பிறக்கிறது. இந்து வாழ்க்கைக் கோட்பாடோ எல்லாவற்றிலும்

எதிர்மறையான பகுத்தறிவற்ற மதிப்பீடுகளை உருவாக்குகிறது. அதனால் மேல்சாதியினருடைய புத்தக அறிவு தலித் பகுஜன்களின் உழைப்பு சார்ந்த அறிவைவிட உயர்வானது என்று தலைகீழாக நினைக்கும் மேல் சாதிக்காரனை எப்போதும் திருத்த முடியாது. பார்ப்பன அறிவுக் கோட்பாடுகள் எல்லாம் புத்தகத்தை மையமாகக் கொண்டவை; வேதத்தை அடிப்படையாகக் கொண்டிருப்பவையல்ல. மேல் சாதியினர் படிப்பதும் ஓதுவதும்தான் அறிவு என்று கருதுகிறார்கள். இந்த முறையில் எல்லா உயர்கல்வி அமைப்புக்களையும் பாடங்களை மனப்பாடம் செய்யும் மையங்களாக மாற்றி இருக்கிறார்கள்.

பார்ப்பனர்களின் பெற்றோர்களும் தாத்தா பாட்டிமார்களும் தலித் பகுஜன்களை மனிதர்களாகவே மதித்தது இல்லை. நிலத்தில் உழுவது கேவலமானது என்றும், களை எடுப்பது அற்பத்தனமானது என்றும், கால்நடை மேய்ப்பது சண்டாளர்களின் அசிங்கத் தொழில் என்றும் கருதி நடத்தி வந்தனர். அவர்கள் சந்ததியினர் விஞ்ஞானம் படித்த பிறகாவது இந்தக் கருத்துக்கள் மாறியிருக்கின்றனவா? இல்லையே. ஒரு சராசரி இந்து, குறிப்பாக பார்ப்பனன் தன்னுடைய முன்னோர்களுடைய வேதம் ஓதுதலையே விஞ்ஞானம் என்றும் கலை என்றும் கருதுகிறான். இந்த ஆசிரியர்கள் வகுப்பறையில் உரையாடல் நடத்த துணிவு இல்லாதவர்களாகவே இருந்தார்கள். கலந்துரையாடும் முறை இந்துக்களுடைய பாரம்பரியத்திலேயே இல்லை. ஆய்வு மனப்பான்மையோ, விவாதிக்கும் தன்மையோ சோதனை செய்து அறியும் தன்மையோ ஒரு இந்துவிடம் இருந்ததே இல்லை. சோதனை செய்வது, இவர்களை ஏற்பது, பிரச்சினைகளைச் சந்திப்பது ஆகிய யாவும் உண்மையில் உழைப்பில் இருந்து வரும் உணர்வாகும். நிலத்தை உழுவது, செங்கல் தூக்குவது, துணி நெய்வது, காலணி செய்வது, முடிவெட்டுவது போன்ற உழைப்பிலிருந்து தான் வாழ்க்கையை அறிந்து கொள்ள முடியும். ஒரு படித்த இந்து எந்த நிறுவனத்தில் பணிபுரிந்தாலும் இது போன்ற உழைப்பைப் பற்றி மனதளவில்கூட எண்ணிப் பார்ப்பதில்லை.

பிரச்சினைகளை எதிர்கொண்டு சோதித்தறியும் ஆற்றலற்றவன். ஒரு தனிமனிதனாக இருந்தால் அதனால் ஏற்படும் இழப்பை ஒரு சமூகம் பொறுத்துக் கொள்ளலாம். ஆனால் சமூகத்தில் ஆதிக்கம் செய்யும் சாதிப் பிரிவுகளைச் சேர்ந்த அனைவருமே அப்படி இருந்தால் அதனால் ஏற்படும் இழப்புகளை உழைக்கும் மக்கள் தாங்கிக் கொண்டிருக்க முடியாது. இடர்களை ஏற்கும் பெரும்பான்மையோர் ஏழைகளாகவும், இடர்களை ஏற்காத தலைவர்கள் சொகுசாகவும்

வசதியாகவும் வாழ்கிறார்கள். இவ்விதமாக சோதித்தறிதலின் எல்லாவிதமான இடர்களையும் ஏற்றுக்கொண்டவர்கள் தலித் பகுஜன்களே. அறிவியல் என்பது ஒவ்வொரு தலித் பகுஜன் வீட்டிலும் பல வழிகளில் அவனது உழைப்பிலும் வாழ்விலும் நடைமுறையில் உள்ளது. ஆனால் அதே நேரத்தில் இந்துக்களின் வீடுகளில் பல விதமான நவீன எலக்ட்ரானிக் கருவிகள் எல்லாம் இருந்த போதிலும் விஞ்ஞான மனோநிலை வளரவேயில்லை. உதாரணமாகப் பார்ப்பனப் படிப்பாளியின் மனம் சாதிவிட்டு சாதியில் செய்கிற திருமணம் இந்தியர்களின் உடல் நலத்திற்கும் அறிவு வளர்ச்சிக்கும் ஏற்றது என்கிற எளிய உண்மையை ஒப்புக்கொள்வதில்லை. ஒரு இந்து, குறிப்பாகப் பார்ப்பனன் இயற்கையோடு சேர்ந்த வாழ்க்கை அனுபவம் தங்களுக்குக் குறைந்து கொண்டு வருகிறது என்பதைப் புரிந்து கொள்ள மாட்டான். விவசாய உற்பத்தி நடவடிக்கையில் இருந்து பார்ப்பனர்கள் விலகியிருப்பதே இதற்குக் காரணம். நகர்மயமாதல் அதிகரித்து வரும் இந்நாட்களில் பார்ப்பனர்கள் நகர்ப்புறங்களில் குவிந்து வருகின்றனர். அவர்களுடைய சமுதாய உறவுகள் ஒதுக்கப்பட்ட நகர்ப்புற குடியிருப்புக்களுக்கு உள்ளேயே இருக்கின்றன. இந்த தனித்து வாழ்கிற வாழ்நிலையிலிருந்து விடுபட வேண்டுமானால் உழைக்கிற சாதி மக்களுடன் அவர்கள் நெருங்கிப் பழகவேண்டும். பார்ப்பனர்கள் இதை எண்ணிக்கூடப் பார்த்திருக்கமாட்டார்கள். ஒரு சராசரி பார்ப்பன பனியாவின் மனமானது முழுமையாக இந்து முட்டாள் தனத்தால் மூடிக் கிடக்கிறது.

ஒரு தலித் பகுஜன் மனமானது இதற்கு முற்றிலும் எதிரானது. மூவாயிரம் ஆண்டுகளாக அவர்கள் படிப்பதற்குக் கடுமையான எதிர்ப்பு இருந்துவந்தும் கூட அவர்களின் முதல் சந்ததியினர் கல்விகற்றபோது ஆசிரியர்கள், மருத்துவர்கள், பொறியியல் அறிஞர்கள், நிர்வாகிகள் ஆகியோரின் திறமை, முன்னேற்றம் என்பன நம்பமுடியாத அளவிற்கு இருந்தது. பல்கலைக் கழகங்களிலும், கல்லூரிகளிலும், அலுவலகங்களிலும் சோதனைக்கூடங்களிலும் தலித் பகுஜன்களின் திறமை பார்ப்பனனின் திறமையைவிட எந்தவிதத்திலும் குறைவானதாய் இல்லை. பல மடங்கு உயர்வாகத்தான் உள்ளது. தவிரவும் திறந்த மனம் என்கிற மகத்தான ஆற்றலை அவர்கள் பெற்றுள்ளனர். நம்மில் ஒவ்வொருவரும் கிராமத்து ஓராசிரியர் பள்ளியில் வட்டார வழக்கு பேசி பள்ளிக்கல்வி பெற்றது தொடங்கி, பல்கலைக்கழக பட்ட மேற்படிப்புக் கல்வி பெறுகிறவரை நம் பிரயாணத்தில் நாம் மிகுந்த அறிவைச் சேகரித்து வந்திருக்கிறோம். இந்த நீண்ட பயணத்தில் கிராமப்புறத்தில் இருந்து நகர்ப்புறம் வரை கடந்தபோது நாம் பல்வேறு கலாச்சாரங்களைச் சந்திக்கவும்,பல முரண்பாடுகளை எதிர்கொள்ளவும்

*பல புதிய கருத்துக்களை ஜீரணித்துக்கொள்ளவும் நம் மக்களைப் பலிகொண்டிருந்த புராணக்கருத்துக்களை மறக்கவும் கற்றுக் கொண்டோம். இவையெல்லாம் எமக்கு எவ்வாறு சாத்தியமானது என்றால் நாம் எப்போதும் இந்து முட்டாள்தனத்திற்கு அடிமையாகாமல் இருந்ததால் தான். தலித் பகுஜன் உடலானது ஒரு சர்க்கஸ்காரனின் உடலைப்போல வளைந்து நெளிந்து கொடுக்கக் கூடியதாய் உள்ளது. ஒரு தலித் பகுஜன் மனம் எந்தச் சூழ்நிலையிலும் எதையும் கற்றுக்கொள்ள ஆயத்தமாக இருக்கிறது. இந்த மாதிரி மனோபாவம் தலித் பகுஜன்களுக்கு இல்லாமல் இருந்திருந்தால் கல்விச் சூழ்நிலையில் பல எதிர்ப்புகள் இருந்தபோதும் எங்கள் முதல் தலைமுறையினர் கல்வியில் இந்த நிலையை எட்டியிருக்க முடியாது.*

*இவ்விதமாக தலித் பகுஜன்கள் எந்த நிறுவனத்தில் நுழைந்தாலும் (இட ஒதுக்கீடு மூலமாகவோ அல்லது வேறு வழிகளிலோ) அந்தஅமைப்புகள் இந்துக்களுடைய முட்டாள்தனத்திற்கும், தலித் பகுஜன்களின் பகுத்தறிவிற்குமான போராட்ட மையங்களாகவே இருந்து வந்திருக்கின்றன. இந்துக்களின் மூடிய மனப்பான்மைக்கும் தலித் பகுஜன்களின் திறந்த மனப்பான்மைக்கும், இந்துக்களின் அமைதியான வன்முறைக்கும் தலித் பகுஜன்களின் உரத்த தற்காப்பிற்குமான முரண்பாடுகளின் களமாகவே இவை அமைந்துள்ளன. இத்தகைய போராட்டங்களின் காரணமாக வேறுபட்ட கலப்புக்குழுக்கள் பணியாற்றுகிற இந்நிறுவனங்கள் மிக முக்கியமானதாகவும் திறம்படவும் காணப்படுகின்றன. எதிர்கால இந்தியாவின் நம்பிக்கைக் கீற்றுகள் இதன் மூலமே வெளிப்படுகின்றன. அப்படிப்பட்ட நிறுவனங்களில் உயிரற்ற கல்விக் கலாச்சாரம் சவாலுக்கு உள்ளாக்கப்படுகிறது. மேல்சாதி அதிகாரம் உடைக்கப்படுவதும் நிகழ்கிறது. பல தென்னிந்திய நிறுவனங்களில் அட்டவணை சாதியினர், இதர பிற்படுத்தப்பட்ட சாதியினர், மலையின மக்கள் மற்றும் சிறுபான்மையினர் இவர்களோடு மேல் சாதியினரும் சேர்ந்து பணியாற்றுகின்றனர். இந்த நிறுவனங்கள் புதிய கருத்துக்களின் கொதிகலன்களாக மாறி யிருக்கின்றன. ஒன்றை நாம் நினைவில் கொள்ள வேண்டும். சாதி அமைப்பின் விளைவாகப் பல்வேறு கலாச்சாரங்களை உடையவர்கள் இங்கே அருகருகே இருந்த வந்தாலும், தனித்தனியேதான் வாழ்ந்து வருகிறார்கள். பார்ப்பனீயம், மனித சிந்தனையை, வருணாசிரம அடிப்படையில் மேல் கீழாகப் பிரித்தது; மனித அனுபவம் சிதைவுற வழிவகுத்து; சிந்தனைப் பரிமாற்றத்திற்கு வழியில்லாமல் செய்தது. முதலாளித்துவ சாதி அமைப்பினால் நகர்ப்புற மையங்களிலும் இந்த நிலைமை இன்னும் மோசமாகவே இருக்கிறது.*

## பார்ப்பனியக் காலனிகள்

நான் முன்பு குறிப்பிட்டதைப் போல பார்ப்பன உணவுவிடுதிகள், ரெட்டி உணவு விடுதிகள், பனியாக் கடைகள், கம்மாக்கடைகள் என்று மாத்திரம் இல்லாமல் சாதித் தெருக்களும் சாதிக் குடியிருப்புகளும் கூட இருக்கின்றன. தலித் பகுஜன்கள் தன்னம்பிக்கை யற்றவர்களாய் இருந்ததனால் யாரும் ஒரு மாடிகா உணவு விடுதியோ சக்காலி, கொல்லா உணவு விடுதியோ ஆரம்பிக்க முன்வரவில்லை. தலித் பகுஜன்கள் இந்த மேல்சாதி தெருக்களிலும், குடியிருப்புகளிலும் வேலைக்காரர்களாக, பால் விற்பவராக, காய்கறி விற்பவராக, தச்சராகத்தான் நுழைய முடியும். அவர்கள் தம் தொழிற் திறனை விற்பவர்களாக இருந்தார்கள். திறனற்ற மேல்சாதியினரே நுகர் வோர்களாக இருந்து வந்தார்கள்.

பொதுவாக, தலித் பகுஜன்கள் அசுத்தமான இடங்களில் வாழும்படியாக நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கிறார்கள். தங்களுடைய சமூக, பொருளாதார நிலையை உயர்த்த நினைக்கும்போதும் முயற்சிக்கும்போதும், தங்களுடைய வாழ் நிலைமையைப் பார்ப்பன பனியாக்களுக்கு இணையாக வளர்த்தெடுக்க முயற்சிக்கும் போதும் அவைகள் தடைசெய்யப்படுகின்றன. முதலாளித்துவ நகர்ப்புற சந்தையைக்கூட பார்ப்பன பனியாக்கள், சாதி அடிப்படையிலேயே வரையறுத்தார்கள். பகுத்தறிவின்மையும் சுரண்டலும் மரியாதைக்கு உரியனவாயின. அதே நேரத்தில் புதிய படைப்பாற்றல் என்பது வெட்கப்படத் தக்கதாக உணரப்பட்டது.

முதலாளித்துவச் சந்தை சீரழிந்த சாதிச்சந்தையாக மாறிவிட்டது. பம்பாய், தில்லி, கல்கத்தா ஐதராபாத் போன்ற பெரு நகரங்களில் கூட எந்த தலித் பகுஜனும் தொழில் தொடங்கத் துணிவதில்லை. சென்னை மட்டும் விதிவிலக்கு. தி.மு.க. ஆட்சியில் இருந்ததன் விளைவாக இருக்கலாம். தன்னுடைய சாதி நலன்களை மனதில் கொண்டு இந்த முதலாளித்துவப் பொருளாதார நடவடிக்கைகளைத் தங்களுடைய கருத்தியல் கலாச்சாரத்திற்கேற்ப மாற்றியமைப்பது தேசிய நலனுக்கு எதிரானது என்பதைப் பார்ப்பன பனியாக்கள் உணர்ந்ததில்லை. சாதிய மூலதனம் மேலும் மேலும் திறனற்றதாகி வருகிறது. இந்தியப் பொருளாதாரத்தில் ஏகபோகம் செலுத்தி வருகிற பார்ப்பன பனியாக்களை உலக முதலாளியம் கையாளுவது எளிது என்பது பலருக்கும் புரிவதில்லை. அவர்கள் உலகச் சந்தைக்கு ஏற்பவே நடந்து கொள்கிறார்கள். பார்ப்பன பனியாக்கள் மக்களைப் பற்றியோ நாட்டைப் பற்றியோ கவலைப்பட்டதே இல்லை. அவர்கள் சுயநலத்தின் அடிப்படையில் எதையும் செய்யக் கூடியவர்கள்.

## மூலதனம் சாதிமயமாதல்

. இன்றைய சோசலிச காலத்திலும்கூட இந்து மதம் தன் படிநிலை வரிசையை நகர்ப்புற நிர்வாகப் பதவிகளில் தக்கவைத்துக் கொண்டுள்ளது. ஒவ்வொரு தொழில் அமைப்புகளிலும் தலித் பகுஜன்கள் உடல் உழைப்பாளர்களாகவே இருந்து வருகிறார்கள். அவர்களுடைய வாழ்க்கை மற்றும் உழைப்பு பற்றிய கண்ணோட்டங்கள் இந்துத் தன்மையானவையல்ல. தொழில்முனைவோர், தொழில் அமைப்புகளில் மேலாளர்கள், இயக்குனர்கள், கண்காணிப்பாளர்கள், எஞ்சினீயர்கள் போன்ற அனைவரும் பார்ப்பன - பனியா - புதிய சத்திரியர்கள் ஆவர். இதன் விளைவாக நிர்வாகப் பிரிவினருக்கும் உழைக்கும் பிரிவினருக்கும் இடையில் பெரும் கலாச்சார வேறுபாடுகள் காணப்படுகின்றன. ஒரு தொழிலாளி பட்டினி கிடந்தாலோ அல்லது ஆபத்தில் காயம்பட்டாலோ, இறந்தாலோ நிர்வாகத்தில் உள்ளவர்கள் அவர்களுக்காக வருந்துவதில்லை. ஏனென்றால் அவர்களுக்கிடையே சமூக உறவுகள் கிடையாது. அவர்கள் வர்க்கத்தாலன்றி சாதியாலும் வேறுபட்டவர்களாய் உள்ளார்கள். எனவே உழைப்பவரின் சிரமங்கள், சாவுகள் என்பவை கூட ஏதோ அயலாருக்கு ஏற்பட்ட தென்று கருதப்படுகிறது. இவ்வாறு தொழிலாளரும், நிர்வாகத்தினரும் இருநிலைகளில் பிரிந்து கிடக்கிறார்கள். நிர்வாகத்தினரின் குடும்பத்தையும் உழைப்பவர்களின் குடும்பத்தினரையும் சந்திக்க வைக்கிற அமைப்புகளும் வாய்ப்புகளும் இங்கு ஏதும் இல்லை. ஐரோப்பாவிலும் மற்ற நாடுகளிலும் தொழிலாளரும் முதலாளியும் சந்திக்கும் வாய்ப்பு குறைந்த பட்ச அளவிலாவது இருக்கிறது. அங்கே கிறித்தவக் கோயில்களும் மத சம்பந்தமான அமைப்புகளும் இந்த குறைந்தபட்ச சந்திப்பை வழங்குகின்றன. ஆனால் இந்தியக் கோயில்களில் இம்மாதிரியான சந்திப்பிற்கே இடம் இல்லை. பார்ப்பனக் கலாச்சாரம் மாலா, மாடிகாக்களை ஆலயங்களில் நுழைய அனுமதிப்பதில்லை.

இவ்வாறு முதலாளித்துவ உற்பத்தியில் கூட, சாதி ஆதிக்கம் செலுத்துகிறது. இதையே சாதிமயமான மூலதனம் என்கிறோம். இவ்வகையான சாதிமயமாக்கப்பட்ட மூலதனம் மனிதத் தன்மையற்ற சுரண்டலிலேயே முடியும். மூலதனத்திலிருந்து தொழிலாளர்கள் சாதி ரீதியாக விலகியிருப்பதால் இந்தியத் தொழிற்சாலைகளில் காணப்படும் சுரண்டல் மேல்நாட்டில் இருப்பதைவிட நூறுமடங்கு அதிகமானது. எந்தப் பார்ப்பன பனியா தொழிலதிபரும், தொழிலாளர் களை இந்துமதக் கலாச்சாரத்தின் அங்கம் என்று கருதியதில்லை. நகர்ப்புறக் கடைகளில் வேலை செய்கிற தலித் பகுஜன் தொழிலாளர்

களைத் தங்களுடைய இந்துக் கலாச்சாரத்தின் ஒரு அங்கமாகக் கடைக்காரர்கள் கருதியதில்லை. நகர்ப்புறக் கோயில்களில் பணியாற்றும் புரோகிதர்கள் கிராமப்புறக் கோயில் புரோகிதரைப் போலல்லாது கால்சட்டை அணிகிறார். தம் வீட்டிலிருந்து கோயிலுக்கு ஸ்கூட்டர், கார் மூலம் பயணம் செய்கிறார். அவர்களுடைய வீட்டில் பல வெளிநாட்டுப் பொருட்கள் பயன்படுத்தப் படுகின்றன. இருந்தும்கூட கலாச்சார உணர்வு மட்டத்தில் அவர்கள் பார்ப்பன புரோகிதர்களாகவே இருக்கிறார்கள். இந்த மாதிரியான நவீன உலகியல் வாழ்விலும் ஒரு பார்ப்பனப் பெண் கூட புரோகிதராக முடியாது. தலித்களைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. கோயில்கள் என்பன பார்ப்பன ஆண்களின் தனி உரிமை. மேற்சாதிகளைச் சேர்ந்த தொழில் நிர்வாகிகள், பொறியாளர்கள் மற்றும் அதிகார வர்க்கத்தினர் எல்லோரும், நகர்ப்புறப் புரோகிதர்கள். இவ்வாறு நவீனமாக வாழ்ந்து கொண்டே சாதீயத்தைக் கடைபிடிப்பதை ஏற்கிறார்கள்.

நகர்ப் புறத் தொழிற்சாலைகள், பல்கலைக்கழகங்கள், வங்கிகள், நிர்வாக அலுவலகங்கள் அனைத்தும் பார்ப்பன புதிய சத்திரியர்களின் ஆதிக்கத்தில் உள்ளன. தலித் பகுஜன் சாதியைச் சேர்ந்த அலுவலர்கள், தொழிலாளர்கள், அலுவலக காவலர்கள், பெண்கள், பெண் ஊழியர்கள் அல்லது ஆண்கள், பேராசிரியர்கள், மருத்துவர்கள், எஞ்சினீயர்கள் மற்றும் அதிகாரிகள் யாராயிருந்தாலும் அவர்கள் நகர்ப்புறத்திற்குத் தேவையற்றவர்கள் என்றே கருதப்படுகிறார்கள். ஏனெனில் பார்ப்பனீய கலாச்சாரத்திற்கு இவர்கள் எ்திரிகள் என்று பார்ப்பன பனியா புதிய சத்திரியர்கள் கருதுகிறார்கள். இந்த நவீன நிறுவனங்களில் வேலை செய்யும் தலித் பகுஜன்கள் தங்களுடைய விசுவாசத்தைப் பார்ப்பன பனியாக்களிடம் நிமிடத்திற்கு நிமிடம், மணிக்கு மணி நிரூபிக்க வேண்டும். எப்படி இராமனுக்கு விசுவாசமாக அனுமன் இருந்தானோ, அப்படிப் பணிந்து வணங்கி நிரூபிக்க வேண்டும். ஆனால் படித்த தலித் பகுஜன் அனுமார்கள் தாங்கள் எவ்வாறு பல வழிகளில் கொடுமையான சுரண்டலுக்கு ஆட்பட்டிருக்கிறோம் என்று உணர்கிறார்கள். அதாவது ராமனுடைய நலன் அனுமனின் நலனுக்கு எதிரானது என்று அவர்கள் உணர்கிறார்கள். இந்த உணர்வு, முரண்பாட்டையும் அவநம்பிக்கையையும் ஏற்படுத்துகிறது. தலித் பகுஜன்களின் எழுச்சி தங்களுக்கு ஆபத்தானது என்று உணர்ந்து பார்ப்பன பனியாக்கள் நாடு விடுதலை பெற்ற பின்னரும் கூட, திட்டமிட்டு எல்லாவகையான சந்தைகளையும் தொழிற்சாலைகளையும் மூலதன அமைப்பு மற்றும் பலவகையான நிர்வாக நிறுவனங்களையும் தங்களுடைய கட்டுப்பாட்டிலேயே வைத்திருக்கிறார்கள். இந்திய முதலாளித்துவம் ஒரு சாதீய முதலாளித்துவமாக மாற்றப்பட்டு

விட்டது. குடியேற்ற ஆட்சி அகற்றப்பட்ட இந்தியாவில் அரசியல், பொருளாதார நிறுவனங்கள், கலாச்சார நிறுவனங்கள், கல்வி நிறுவனங்கள் மற்றும் நிர்வாக அமைப்புகள் அனைத்திலும் சாதி ஒழிந்து சம உரிமை ஏற்படும் என்று எதிர்பார்த்தோம். ஆனால் அப்படி ஏதும் நடக்கவில்லை. கிராமப்புறத்திலிருந்து நகர்ப்புறத்திற்கு மாறினாலும் அவர்களுடைய சமூகப் பொருளாதார நிலையில் எவ்வித மாற்றமும் நிகழவில்லை. ஒவ்வொரு அமைப்பிலும் சாதீய ஏற்றத்தாழ்வு தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்பட்டே வந்திருக்கிறது.

எங்களுடைய தலித் பகுஜன் சாதியினர் பேராசிரியர்களாக, அதிகாரிகளாக, மருத்துவர்களாக, எஞ்சினீயர்களாக இருந்தாலும் பார்ப்பன பனியாக்கள் வசிக்கும் பகுதிகளில் ஒரு வீடு கூட வாடகைக்குப் பெற முடியவில்லை. மேல் சாதி வீட்டு உரிமையாளர்கள் “சைவர்களுக்கு மட்டுமே வீடு வாடகைக்கு விடப்படும்” என்று வீட்டின் முன் ஒரு பலகை வைத்திருக்கிறார்கள். சைவ உணவு சாப்பிடுபவர்கள் என்பது பார்ப்பனர்களையே மறைமுகமாகக் குறிக்கும். தலித் அந்தப்பகுதியில் ஒரு வீட்டைக்கட்டினாலும் அல்லது ஒரு வீட்டை விலைக்கு வாங்கினாலும் அந்த வீட்டில் இருப்பவர்களோடு பார்ப்பனர்கள் எந்தத் தொடர்பும் வைத்துக்கொள்வதில்லை. தங்களுடைய குழந்தைகளைக் கூட அந்த வீட்டுக்குழந்தைகளோடு சேரவிடாமல் செய்து விடுகிறார்கள். பார்ப்பனப் பகுதிகளில் வீடு கட்டியவர்களின் அனுபவத்தைக் கொண்டு நகர்ப்புறங்களில் சாதிவெறி எந்த அளவிற்கு இருக்கிறது என்று நாம் தெரிந்து கொள்ளலாம்.

## சமஸ்கிருதமயமாதல் பயனளிக்கவில்லை

தலித் பகுஜன்கள் பலர் தங்களை சமஸ்கிருதமயமாக்கிக் கொண்டார்கள். தங்களுடைய சொந்தப்பெயரை மாற்றிப் பார்ப்பனியப் பெயரைச் சூட்டிக்கொண்டார்கள். முத்தையா மூர்த்தியானார். கோபய்யா கோபாலகிருஷ்ணன் ஆனார். அவர்களுடைய குழந்தைகளில் ஆண்களுக்கு விஷ்ணு, அஜய், விஜய் என்றும் பெண் குழந்தைகளுக்கு ஸ்வப்னா, சந்தியா, லெட்சுமி, சரஸ்வதி என்றும் பெயரிட்டார்கள். ஆனால் இந்த மாற்றங்கள் நகர்ப்புறப் பார்ப்பனர்களின் அணுகு முறையை மாற்றவில்லை. ஒருவன் என்ன பெயர் வைத்திருந்தாலும் ஒரு சில நாட்களுக்குள் அந்த நபரின் சாதியைத் தெரிந்து கொண்டு அதற்கு ஏற்றவாறு பார்ப்பனர்கள் நடந்து கொள்கிறார்கள்.

பல தலித் பகுஜன் சாதியினர் தமது குழந்தைகளை ஆங்கில (மொழி) வழிப் பள்ளிகளில் படிக்கவைத்தார்கள். அந்தப்

பள்ளிகளின் பெயர்களோ செயின்ட் ஆன்ஸ், செயிண்ட் தாமஸ், செயிண்ட் மேரி என்றிருக்கின்றன. இந்தப் பள்ளிகளில் தலித் பகுஜன் குழந்தைகளும், பார்ப்பன பனியாக் குழந்தைகளும் சமத்துவமாகக் கல்வி கற்பார்கள் என்று பலர் எதிர்பார்த்தார்கள். ஆனால் அந்தப் பள்ளிகளில் பெரும்பாலான ஆசிரியர்கள் பார்ப்பன சாதியைச் சார்ந்தவர்களாக இருப்பார்கள் என்று யார் நினைத்தார்கள்?. ஆயினும் அந்தப் பள்ளிகளில் பெரும்பாலான ஆசிரியர்கள் பார்ப்பன சாதியைச் சார்ந்தவர்களாகத் தான் இருந்தார்கள். அங்கிருந்த பாடநூல்கள் எதிலும் தலித் பகுஜன் கலாச்சாரம் என்பது இந்தியக் கலாச்சாரத்தின் ஒரு பகுதிதான் என்று எங்கும் குறிப்பிடப்படவில்லை. மேலும் பள்ளியிலிருந்து குழந்தைகள் வீடு திரும்பியதும் அவர்கள் தமது வீட்டில் உள்ள சாதிக் கலாச்சாரச் சூழ்நிலைக்கு இழுத்து வரப்படுகிறார்கள். ஒரு சில தலித் பகுஜன்கள் மேல் சாதிக் கலாச்சாரத்தை அல்லது நடைமுறைகளைப் பின்பற்றிப் பார்த்தார்கள். தலித் பகுஜன் அதிகாரிகள், அரசியல்வாதிகள், கல்வியாளர்கள் பலர் உண்மையான இந்துக்களை விட, தம்மை மேலான இந்துக்களாகக் கருதிக்கொண்டு நடந்து வர முயற்சித்தார்கள். அவர்கள் வெட்கமின்றி, மானமின்றி இந்துப் பார்ப்பன விழாக்களையும் பண்டிகைகளையும் கொண்டாடிப் பார்த்தார்கள். மற்றவர்கள் மத்தியில் தமது பெற்றோரின் பண்பாடு தாழ்வானதென்று பேசினார்கள். பொச்சம்மா, மைசம்மா போன்ற தலித் பகுஜன் தெய்வங்களோடு தமக்கு எந்தத் தொடர்புமில்லை என்றார்கள். அவற்றைச் சூத்திர தேவதைகள் என்று முகம் சுழித்தார்கள். இரு பிறப்பாளர்களாக ஆகமுடியவில்லையே தவிர, மற்ற எல்லா நிலைகளிலும் பார்ப்பன சமஸ்கிருதக் கலாச்சார நடைமுறைகளையே பின்பற்றினார்கள்.

ஆனால் இவைகள் எல்லாம் நகர்ப் புறங்களில் உள்ள சாதி வேற்றுமைகளை எந்த அளவிலும் குறைத்துவிடவில்லை. ஒரு சிலர் சமஸ்கிருதமயமாகும் முயற்சியில் மேல் சாதி மருமகள்களை, மருமகன்களைப் பெறமுடிந்தாலும், ஒருவர்கூட தமது குழந்தைகளுக்கு பூலே, அம்பேத்கர், பெரியார் போன்றோர் தங்கள் வாழ்நாள் முழுவதும் போராடி வாங்கித்தந்த இடஒதுக்கீடு இல்லாமல் வேறு வழிகளில் ஒரு நல்ல வேலை பெற்றதாகச் சொல்லமுடியாது. சமஸ்கிருதமயமாகும் செயல்கள் சாதி அடையாளத்தையோ, சாதி அடிப்படையிலான அவமானத்தையோ எந்த அளவிலும் குறைத்துவிடவில்லை. தலித் பகுஜன்களின் சமஸ்கிருதமயமாகும் போக்கு இந்துக்களின் காட்டு மிராண்டித்தனத்திற்குத் தீர்வு அல்ல என்பதைப் பின்னாளில் உணர்ந்தார்கள். இதே காரணத்திற்காகத்தான் டாக்டர் அம்பேத்கர்

அவர்கள் இந்துக் கலாச்சாரத்திற்கு எதிரான கலாச்சாரத்தை உருவாக்க முயன்று ஐந்து லட்சம் தலித் மக்களோடு பவுத்தத்தைத் தழுவினார். ஈ.வெரா. பெரியாரும் ஒரு மாற்றுக்கலாச்சாரமாக திராவிடக் கலாச்சாரத்தை உருவாக்கி பார்ப்பனீயத்தையும், இந்துக் கலாச்சாரத்தையும், இந்துக்கடவுள்களையும் அம்பலப்படுத்தினார்.

*அத்தியாயம் 5*

## இந்துக் கடவுள்களும் நாமும் : நமது பெண் தெய்வங்களும் இந்துக்களும்

இந்துக்கடவுள்களுக்கும் நமக்கும் என்ன தொடர்பு? இந்துப் பார்ப்பனக் கடவுள்கள் நம்மை இந்துக்களின் ஒரு பகுதியினர் என்று நடத்துகின்றனவா? நியாயமான பக்தர்களாகவாவது ஏற்கிறார்களா? இந்துமதம் ஏன் ஒரே கடவுள் என்ற உலகளாவிய கோட்பாட்டிற்கு எதிராகப் பல கடவுள்களை உருவாக்கியது? பார்ப்பனப் பல கடவுள் கொள்கை தலித் பகுஜன் மக்கள் நலனுக்காகப் பயன்பட்டதா? அல்லது விரல்விட்டு எண்ணக்கூடிய பார்ப்பனச் சிறுபான்மையினர் நலனுக்குப் பயன்பட்டதா? மேலும் தலித் பகுஜன் கடவுள்களுக்கும் இந்துக்களுக்கும் என்ன தொடர்பு? இந்துக்கள் என்போர் இந்த தலித் பகுஜன் கடவுள்களுக்கு மரியாதை காட்டுகிறார்களா? அல்லது வணங்குகிறார்களா? தலித் பகுஜன் கடவுள்களின் சமூகப் பொருளாதார பண்பாட்டுக்கூறுகள் எவை? பெரும்பான்மை மக்கள் தலித் பகுஜன் கடவுள்களோடு தொடர்புடையவர்களாக இருப்பதால் அந்தக் கடவுள்களின் கதையைப் பார்ப்பனக் கடவுள்களின் கதைபோல் எழுதி வெளியிட வேண்டாமா? இந்த அத்தியாயத்தில் இது குறித்து நான் விவாதிக்க இருக்கிறேன்.

தலித் பகுஜன்களின் உணர்வுகளை நுணுக்கமாகத் தகவமைப்பதற்கு உரிய சமூகப் பொருளாதார வடிவத்தை இந்து மதம் பெற்றுள்ளது. பார்ப்பன அதிகாரத்தை நிலைநிறுத்துவதற்கு அது பல அமைப்புகளை, நிறுவனங்களை உருவாக்கியுள்ளது. காலங் காலமாக இருவழிகளில் இதை அது நடைமுறைப்படுத்தி வருகிறது.

1. பல்வேறு கடவுள் பிம்பங்களின் வழியாக எல்லோரும் கருத் தொருமித்து ஏற்கும் நிலை ஒன்றைக் கட்டமைத்து நிலை நிறுத்துவது. இந்தக் கடவுளர்களில் பலர் தாம் சுரண்ட விரும்பும் மக்கள் பகுதியின் கடவுளராக இருந்து வந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.
2. அந்த முறை பெரும்பான்மை மக்களிடம் தோல்வியடையுமானால் வன்முறையின் மூலமாக அதை நடைமுறைப்படுத்துவது.

உண்மையில் வன்முறை என்பது இந்துத்துவத்தின் முக்கியச் சாதனம். இந்துக் கடவுள்கள் ஆயுதபாணிகளாக இருப்பதற்கு இதுவே காரணம். மற்ற மதத்தினரின் கடவுள்கள் அவ்வாறு இருப்பதில்லை. தனக்கு உடன்படாத மக்களைத் தன்பக்கம் இழுத்துக்கொள்ள உலகில் எந்த மதமும் இத்தனைக் கடவுள்களை உருவாக்கி வன்முறையால் அவர்களைச் சேர்த்துக் கொண்ட தில்லை. இவ்விதமாக இந்துக் கடவுள்களுக்கும் தலித் பகுஜன் களுக்கும் உள்ள உறவு ஒடுக்குகிறவனுக்கும் ஒடுக்கப்படுபவனுக்கும், தகவமைப்பவர்களுக்கும் தகவமைக்கப்படுபவர்களுக்குமான உறவாய் உள்ளது. இந்துத்துவத்தின் ஒரே பெருமை, அது ஒடுக்கப்பட்டவர்களின் மனதையும் உடலையும் இணைத்தே அடிமைப்படுத்துகிறது என்பதுதான்.

பார்ப்பனக் கோட்பாட்டாளர்கள் மக்களுடைய உணர்வுகள் பற்றிய கோட்பாடு ஒன்றை உருவாக்கியுள்ளனர். பெரும்பான்மைப் பிரக்ஞை என்பது ஏதேனும் ஒரு குறிப்பான செயலுக்குள் முடங்கி விடுகிறது. இந்த உணர்வைக் கவனமாகக் கண்காணித்து, வளரவிடாமல் தடுப்பது என்பதுதான் அக்கோட்பாடு. எனினும் ஒரு உணர்வை இன்னொரு உணர்வு அடக்கி வந்தால் ஏதோ ஒரு கட்டத்தில் அது எதிர்த்துக் கலகம் செய்யும். எல்லா மதங்களும் இது போன்றதொரு சூழ்ச்சியைக் கையாண்டு தெய்வீக ஒழுக்கம் அல்லது தெய்வக் கட்டளை எனும் பேரால் அடிமைத் தனத்தைத் திணித்து அதை மீறுவது பாவம் என்றும் போதித்து வந்துள்ளன. அந்தப் போலி ஒழுக்கத்தின் பேரால் பெரும் பாலானவர்கள் அடக்கி ஒடுக்கப்பட்டார்கள். ஆனால் எந்த மதமும் அடிமைகளைத் தொடர்ந்து அடிமைகளாக வைத்திருப்பதில் வெற்றியடையவில்லை.

மற்ற மதங்கள் அடிமைகளைத் தங்களோடு சேர்த்துக் கொண்டன. அவர்கள் அரசியல் பொருளாதார ரீதியில் ஒடுக்கப் பட்டிருந்தாலும் மத அடிப்படையில் விலக்கப்படவில்லை. ஆனால் தலித் பகுஜன்கள் என்றைக்குமே இந்துத்துவத்தின் ஒரு பகுதியாக ஏற்றுக்கொள்ளப் பட்டதில்லை.

இந்துத்துவா கடவுள்களை வடிவமைப்பதில் கூட மற்ற மதங்களிலிருந்து வேறுபடுகிறது. எல்லாக் கடவுளரும் தலித் பகுஜன் கலாச்சாரத்திற்கு எதிராக வடிவமைக்கப்பட்டு நிறுவனப் படுத்தப் பட்டுள்ளனர். இந்துத்துவா தலித் பகுஜன்களையும் இந்துக்கள் என்றே கூறிக்கொண்டிருக்கிறது. ஆனால் அதே நேரத்தில் அந்தக் கடவுள்கள் எல்லாம் வெளிப்படையாகவே தலித் பகுஜன்களுக்கு

எதிரானதாக இருக்கின்றன. எனவே தொடக்கத்திலிருந்தே இந்துமதம் ஒரு பாசிச அமைப்பாக இருந்து வருகிறது. அதை தலித் பகுஜன்களின் அனுபவத்திலிருந்துதான் புரிந்துகொள்ள முடியும். இவ்வாறு உணர்வுகளைத் திருத்தியமைத்தலும் சுரண்டலும் இயற்கையானதுதான் எனக் கருதுகிற ஒரு பார்ப்பனனுக்கு இது புரியாது. ஆனால் ஒவ்வொரு மேல்சாதிக்காரனும் இந்துத்துவ சதிகளில் பங்கெடுத்துக் கொள்வதோடு அந்தக் கலாச்சாரத்தை நடைமுறைப்படுத்துவதற்கும் துணைபோகின்றான். பல்வேறு வகையான இந்துக் கடவுள்களை உருவாக்கி நிலை நிறுத்தியது அந்தக் கலாச்சாரத்தின் ஒரு பெரும் சாதனையாகும்.

தலித் பகுஜன்கள் எதிர்க்கும் போதெல்லாம் இந்தியப் பார்ப்பன சக்திகள் தங்கள் கடவுள் உணர்வுகளைக் கிளப்பி அதனை ஒடுக்குகின்றன. 1990ல் மண்டல் அறிக்கை நடைமுறைபடுத்தப் பட்டபோது அகில இந்திய அளவில் இந்துக்கள் நடத்திய கலகம் இதற்கு ஒரு தெளிவான எடுத்துக்காட்டாகும். மேல்சாதியினர் தங்களது முழுபலத்தையும் அதிகாரத்தையும் பயன்படுத்திப் பிற்படுத்தப் பட்ட சமூக மக்களுக்கு வழங்கப்பட்ட இட ஒதுக்கீட்டைக் கடுமையாக எதிர்த்தார்கள். இந்துத்துவ அமைப்புகள் எல்லாம் அந்த இட ஒதுக்கீட்டிற்கு எதிராக அணி திரண்டன. எனவே எவ்வாறு இந்துக் கடவுளர் எல்லோரும் தலித் பகுஜன்களைக் கொல்பவர்களாகவும், ஒடுக்குபவர்களாகவும் உள்ளார்கள் என்பதையும் தலித் பகுஜன்கள் எவ்வாறு தமக்கான கலாச்சாரப் பாரம்பரியத்தைக் கொண்டுள்ளார்கள் என்பதையும் ஆராயாமல் தலித் பகுஜன்களை விழிப்படையச் செய்ய இயலாது.

## பார்ப்பனக் கடவுளர்களும் கடவுளச்சிகளும்

பார்ப்பனக் கடவுள்களின் தலைவன் இந்திரன், தேவாதிதேவன் என்று அறியப்படுகிறான். சிந்து சமவெளியில் வாழ்ந்து வந்த இந்தியாவின் ஆதிக்குடிகளான ஆதிதிராவிடர்களை அழித்த அன்னிய ஆரிய நாடோடிகளின் தலைவனான இந்திரன் வேதங்களில் சிறப்பிக்கப் படுகிறான். ஆயிரக்கணக்கான தலித் பகுஜன்களைக் கொன்று குவித்த வீரனாக இந்திரன் புகழப்படுகிறான். தலித் பகுஜன்களை வெற்றி கொண்டு ஒரு பார்ப்பன ஆட்சியை அவன் அமைத்தான். அந்த ஆட்சியில் உற்பத்தியை நோக்கி அவன் மக்களைத் திரட்டவில்லை. அதற்கு மாறாக இந்திரன் தனக்கொரு பெரிய அந்தப்புறத்தைத்தான் நிறுவினான். அங்கு ஆடுவதும் குடிப்பதும் கும்மாளம் போடுவதும்தான் அவனுடைய முக்கிய வேலையாக இருந்தது. இந்துக் கருத்தியலில்

அந்தப்புரத்தை அலங்கரிக்கக்கூடிய ரம்பா, ஊர்வசி, திலோத்தமை ஆகிய மூவரும் அழகுக்கு உதாரணமாக அடிக்கடி உருவகப்படுத்தப் பட்டார்கள். இந்திரன் தலித் பகுஜன் பெண்களையும் தனது பாலியல் வேட்கைக்கு ஆட்படுத்தியவனாக இருந்திருக்க வேண்டும். அதனால் தான் பார்ப்பனர்கள் அவனை ஒரு சக்திவாய்ந்த காமுகனாக (காம அபிமானி) காட்டுகிறார்கள். அதன் முக்கிய அம்சம் என்ன வென்றால், அவன் ஆரியர்களின் முக்கிய அரசியல் தலைவனாக இருந்தான் என்பதுதான். இவன் தலைமையில்தான் சிந்து வெளியில் ஆரியக் கூட்டம் வெற்றி கொண்டது. இந்திரன்தான் தலித் பகுஜன் மக்களை முதன்முதலில் கொலை செய்பவனாகவும் சுரண்டுபவனாகவும் இருந்திருக்கிறான்.

## பிரம்மா மற்றும் சரஸ்வதி

மும்மூர்த்திகளில் முதல்வனும் மிக முக்கியமான இந்துக் கடவுளாகவும் கருதப்படுகிறவன் பிரம்மா. உடல் அமைப்பில் மாநிற மேனி உடைய ஆரியனாக இவன் முன்னிறுத்தப்படுகிறான். அறிவு என்று பொருள்படும் பிரம்மா என்ற பெயரைத் தாங்கியுள்ளான். சில நேரங்களில் இரண்டு கைகளும் சில நேரங்களில் நான்கு கைகளும் உடையவனாகக் காட்டப்படுகிறான். இந்த அறிவுக் கடவுள் தலித் பகுஜன் மக்களைத் தாக்குவதற்குரிய ஆயுதம் உடையவனாக இருக்கிறான். ஆதி தலித் பகுஜன்களைத் தோற்கடிப்பதற்கான திட்டங்களை ஆரியர்களுக்கு வகுத்துக் கொடுத்தவன் இவன் தான். அவனே பார்ப்பன சமூகத்தைக் கட்டமைத்தவன். இவனுடைய முகத்தில் பிறந்தவர்கள் பார்ப்பனர்கள் என்றும் மார்பில் பிறந்தவர்கள் சத்திரியர்கள் என்றும், தொடையில் பிறந்தவர்கள் வைசியர்கள் என்றும், பாதத்தில் பிறந்தவர்கள் சூத்திரர்கள் என்றும் சொல்லிக் கொண்டு பார்ப்பனர்கள் சாதிய ஏற்றத்தாழ்வை உருவாக்கினார்கள். நான்கு வருணம் எனும் இந்த விளக்கம் வருண சமூக அமைப்பிற்கு தெய்வீகச்சாயம் பூசியது. அதன் விளைவாக, சூத்திர அடிமை வகுப்பு எண்ணற்ற சாதிகளாகப் பிரிக்கப்பட்டது. இந்தப் பிரிவுகளை வைத்தே ஒடுக்கப்பட்ட மக்களின் எழுச்சி அடக்கப்பட்டு விடுகிறது. கௌடில்யர், மனு, வேதவியாசர், வால்மீகி போன்றவர்கள் பார்ப்பன சக்திகளின் நலனுக்காக இந்தச் சாதி அமைப்பை நியாயப்படுத்தி வேதங்களையும் விளக்கங்களையும் எழுதினார்கள். இந்தக் கருத்தியலே வேதகாலம் தொடங்கி இன்று வரை தத்துவமாகவும் அரசியல் பொருளாதாரக் கோட்பாடாகவும் கடைபிடிக்கப்படுகிறது.

பிரம்மாவின் மனைவி சரஸ்வதி, கல்விக்கு அரசியாகக் கருதப் படுகிறாள். பிரம்மா சரஸ்வதிக்கு இடையிலான உறவு இறுக்கமான

ஆணாதிக்கத் தத்துவக் கோட்பாட்டுக்குள் கட்டமைக்கப்பட்டுள்ளது. இந்திய மக்களைச் சிதைப்பதற்காக உருவாக்கப்பட்ட பார்ப்பன பிரம்மா, வேதங்களில் அறிவின் ஊற்று என்று காட்டப்படுகிறான். வேதங்கள் பார்ப்பனியத்தின் பல்வேறு விதமான கொடூரமான உணர்வுகளின் வெளிப்பாடாக உள்ளன. ஆரம்ப காலப் படித்த ஆரியப் பார்ப்பனர்களால் எழுதப்பட்ட இந்தப் பார்ப்பன இலக்கியங்கள் அனைத்தும் தலித் பகுஜன்களுக்கு எதிரானது தான். இந்த நூல்கள் அனைத்திலும் பார்ப்பன ஆணாதிக்கத்தின் ஆசாபாசங்கள் தெளிவாக வெளிப்படுகின்றன. பார்ப்பனர்கள் பெண்களைப் படிக்க எழுத அனுமதிக்காதபடியால் கல்விக்கரசி என்ற அழைக்கப்படுகிற சரஸ்வதி எந்த நூலும் எழுதவில்லை. எந்த இடத்திலும் அவள் பெண்களுக்கு கல்வி அளிக்க வேண்டும் என்ற அவசியத்தைப் பற்றிப் பேசவேயில்லை. அப்படியானால் அறிவின் மூலமாகக் கருதப்படுகிற ஒருவர் எப்படிப் படிக்காத பெண்ணாக இருக்க முடியும்?. இது முரண்பாட்டின் உச்சக் கட்டமாகும். பார்ப்பனீயம் பெண்கள் கல்வி பெறுவதை என்றுமே வரவேற்றதில்லை. எல்லாப் பெண்களுக்கும் கல்வி கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மகாத்மா பூலே அவர்களின் மனைவி சாவித்திரி தான் பெண்கள் கல்வி பெறுவதற்கான வேலையைச் செய்தார். தலித் பகுஜன் நோக்கில் சாவித்திரிபாய் பூலேயோடு சரஸ்வதியை ஒப்பிடுவதற்கு எந்த நியாயமும் கிடையாது. சாவித்திரிபாய் பூலே அவர்கள் தான், தன் செயல்பாடுகள் மூலம் உண்மையான பெண்ணியத்தின் வடிவமாக இருக்கிறார். அவர் சுதந்திரமாகச் செயல்பட்டு வந்தார். சில வேலைகளில் மகாத்மா பூலே கூறிய கருத்துக்களைக்கூட எதிர்த்திருக்கிறார். கல்விக் கடவுளான சரஸ்வதி இது போல பெண்கள் முன்னேற ஏதாவது செய்திருக்கிறாரா? சரஸ்வதியின் கணவனாகிய பிரம்மா எல்லாவிதத்திலும் (ஆடைகள் மற்றும் உடல்நிறம்) பார்ப்பனன் என்பதோடு எல்லாவிதமான உற்பத்தி நடவடிக்கைகளிலிருந்தும் விலகியிருந்தவன். உற்பத்தியாளர் களாகிய தலித் பகுஜன் அடிமைகளாவதற்குப் பிரம்மாவே பொறுப் பாகிறான். தேவைப்பட்ட போதெல்லாம் தலித் பகுஜன்களுக்கு எதிராக ரத்தக்களறி நடத்த அவன் தயங்கியதேயில்லை.

புராதன மத்திய காலங்களைத் தவிர்த்து இன்றைய இருபதாம் நூற்றாண்டில்கூட தலித் பகுஜன்களின் முதல் விரோதியான பிரம்மாவை நம்முடைய மூல முதற்கடவுளாக ஏற்றுக்கொள்ளும் படி இந்துத்துவவாதிகள் நிர்ப்பந்தப் படுத்துகிறார்கள். அறிவை மழுங்கடிக்கிற பிரம்மா அறிவின் வடிவமாகக் காட்டப்படுகிறான். அறிவு இரண்டு வகையானது. ஒன்று ஒடுக்குகிறவனின் அறிவு;

மற்றொன்று ஒடுக்கப்பட்டவனின் அறிவு. பிரம்மாவின் அறிவு ஒடுக்குகிறவனின் அறிவு. தலித் பகுஜன்களின் சொந்த அறிவானது புராதனக்கால சார்வாகர் (தலித் பகுஜன் பொருள் முதல் வாதி) களிடம் வெளிப்படுகிறது. பிரம்மாவை அடிப்படையாகக் கொண்டு பார்ப்பன ஆதிக்கச் சாதியினர் தலித் பகுஜன் சார்வாகர் அறிவை ஒதுக்கப்பட்ட அறிவாகப் புறக்கணித்தனர். பிரம்மா என்பவன் பார்ப்பன ஆதிக்கத்தை நடைமுறைப் படுத்துகிறவனாகவும், சரஸ்வதி அவனுக்குக் கட்டுப்பட்டவளாகவுள்ள பார்ப்பனப் பெண்ணாகவும் அவனுடைய பாலியல் இன்பத்திற்கு ஆனவளாகவும் உள்ளாள்.

சரஸ்வதி ஒரு முரண்பாடான வடிவம். அவள் கல்விக்கு ஆதாரமானவள் என்று சொன்னாலும் கல்வியறிவு மறுக்கப்பட்ட பார்ப்பனப் பெண்ணுக்காக அவள் என்றைக்குமே பரிந்து பேசிய தில்லை. தலித் பகுஜன் பெண்களைப்பற்றி அவள் நினைத்துக்கூடப் பார்த்தது இல்லை. அவளே பிரம்மாவின் கையில் ஒரு ஆயுமாகத்தான் இருக்கிறாள். பிரம்மாவின் விருப்பப்படியே அவள் ஆடுகிறவளாக இருக்கிறாள். அவன் விருப்பத்திற்கு அவள் வீணை வாசித்து இசையில் அவனை மகிழ்விக்கக்கூடியவளாக இருக்கிறாள். பிரம்மா என்றுமே ஆடு மேய்ப்பவனாகவோ, ஏர் உழுபவனாகவோ காட்டப்படவில்லை. அவ்வாறே சரஸ்வதியும் பயிர்களைக் காப்பவளாகவோ களை எடுப்பவளாகவோ காட்டப்படவில்லை. எவ்வளவு மென்மையானவளாக இருந்தால் அவள்தாமரைப் பூவின் மீது நிற்க முடியும்? அம்சா என்ற ஒரு மென்மையான அன்னத்தின் மீது பிரயாணம் செய்யக்கூடியவளாய் இருப்பாள்? இது ஒரு வகையான எதிர்மறை மென்மைத் தன்மையாகும். இவையெல்லாம் எதைக் காட்டுகிறது என்றால் சரஸ்வதி இயற்கையிலிருந்து முழுமையாக முரண்பட்டிருந்ததைத்தான்!. பார்ப்பனர்கள் ஒரு ஒடுக்கும் கலாச்சாரத்தைக் கட்டமைத்தார்கள். அதனை எல்லோரும் ஏற்கும்படிச் செய்தார்கள்.

## விஷ்ணு மற்றும் லெட்சுமி

யுகம் யுகமாகப் பார்ப்பன மேலாதிக்கம் செலுத்திய இரண்டாவது கடவுள் விஷ்ணு. விஷ்ணு ஏன் நீல நிறக் கடவுளாகக் காட்டப்படுகிறான்? அதற்கான காரணம் மிகவும் தெளிவானது. அவன் ஒரு கலப்புக் கடவுள். பார்ப்பனர்களையும் சத்திரியர்களையும் ஒன்றுபடுத்தி அவர்களைப் பாதுகாப்பவனாக அவன் இருக்கிறான். சத்திரியர்கள் பார்ப்பனர்களுக்கு எதிராகக் கிளம்பியபோது இந்தக் கடவுள் உருவாக்கப்பட்டிருக்கலாம். வெள்ளை நிற ஆரியர்

களுக்கும் கறுப்புநிற தலித் பகுஜன்களுக்கும் பிறந்த கலப்புச்சாதியாக சத்திரியர்கள் இருந்திருக்க வேண்டும். ஜைனமும், பவுத்தமும், பார்ப்பனீயத்தை எதிர்த்த கலகங்களில் கடைசியானவையாக இருக்கலாம். பிரம்மா உருவாக்கிய எல்லாக் கொள்கைகளையும் பாதுகாப்பவனாக விஷ்ணு இருக்கிறான். பார்ப்பன தர்மத்தை நிலைநாட்டுவதும் பரப்புவதுமான வேலை விஷ்ணுவுடையது. அவன் விஷ்ணு சக்கரம் என்கிற ஆபத்தான ஆயுதத்தைத் தாங்கியவனாகவும் பார்ப்பனர்களை எதிர்ப்பவர்களை அந்தச் சக்கரத்தின் மூலமாக அழிப்பவனாகவும் காட்டப்படுகிறான். பாம்பின் விஷத்தை விடக் கொடியவனாகவும் மனிதத் தன்மையை மீறியவனாகவும் காட்டப்படுகிறான். கலகங்களை ஒடுக்குவதில் இரக்கமற்றவன் அவன். பாம்பின் மீது படுத்துறங்குபவனாக அவன் சித்திரிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

தலித் பகுஜன்களுக்குப் பாம்பு என்பது தீண்டாமையைக் குறிப்பதாகவும் நன்மையற்றதாகவும் உள்ளது. விஷ்ணுவின் பல மனைவிகளில் லெட்சுமியும் ஒருத்தி. லெட்சுமிக்கும் விஷ்ணுவிற்கும் உள்ள உறவு பிரம்மாவிற்கும் சரஸ்வதிக்கும் உள்ள உறவைவிட எந்தவிதத்திலும் வேறுபட்டதல்ல. தலித் பகுஜன்களுக்கு எதிரான திட்டங்களில் விஷ்ணுவிற்கு உதவி செய்பவளாக லெட்சுமி இருக்கிறாள். லெட்சுமியின் பங்கு மிகத் தெளிவானது. அவள் செல்வத்தைக் கொடுப்பவளாகவும் பார்ப்பன - பனியா சத்திரியர்களுக்கு வெற்றியைத் தருபவளாகவும் காணப்படுகிறாள். பார்ப்பனர்களின் செல்வச் செழிப்பு பற்றியும் தலித் பகுஜன்களின் அழிவைப்பற்றியும் விஷ்ணு சிந்தித்துக்கொண்டு படுத்திருக்கும்போது லெட்சுமி அவனுடைய பாதங்களை அமுத்திக்கொண்டேயிருக்க வேண்டும். பார்ப்பன, சத்திரிய, வைசியர்களுக்கு வெற்றியையும் செல்வத்தையும் அளிக்கும் அவள் தலித் பகுஜன்களைக் கண்காணித்தவாறே இருக்கிறாள். இவர்களில் யாராவது செல்வம் சேர்த்திருந்தால் அதை விஷ்ணுவின் கவனத்திற்குக் கொண்டுவந்து அவன் மூலம் செல்வம் சேர்த்த தலித் பகுஜன்களை அழித்து நிர்மூலமாக்கிவிடுகிறாள். பார்ப்பன சத்திரியப் பெண்களுக்குக் கூட தலித் பகுஜன்களை ஒடுக்கிவைப்பதற்கான பாத்திரங்களைக் கொடுத்திருப்பதின் மூலம் பார்ப்பனியம் ஒரு பேய்த்தனமான அமைப்பாகவே உள்ளது.

தலித் பகுஜன்கள் படிக்காதவாறும், பார்ப்பன சதித்திட்டங் களைப் புரிந்து கொள்ளாதவாறும் சரஸ்வதி பார்த்துக்கொள்ள வேண்டும். தலித் பகுஜன்கள் தனிச்சொத்து, தங்கநகை ஏதும் பெற்றுவிடாதபடி லெட்சுமி பார்த்துக்கொள்ள வேண்டும். அதாவது

தலித் பகுஜன்கள் கல்வி கற்காதவாறு பார்த்துக்கொள்வது பார்ப்பனப் பெண்களின் வேலையாகவும், சொத்து சேர்த்துவிடாதபடி பார்த்துக் கொள்வது சத்திரியப்பெண்களின் வேலையாகவும் நியமித்தது பார்ப்பனீயம். இத்தகைய செயல்கள் தலித் பகுஜன்களைப் பார்ப்பனீய அமைப்பிற்குள் உள்வாங்கி அதே நேரத்தில் இழிவானவர்களாக வைத்துக்கொள்ள மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையாகும். உண்மையில் மகாத்மா பூலே அடிக்கடி சொன்னது போன்று லெட்சுமியைச் செல்வத்திற்கு அதிபதி என்று சொன்ன பார்ப்பனர்கள் மிகத் தந்திரமாகப் பார்ப்பனப் பெண்களுக்குச் சொத்துரிமை தராதவாறு பார்த்துக்கொண்டார்கள். சரஸ்வதியைப் போன்றே செல்வத்தின் கடவுளான லெட்சுமியும் மற்றவர்களை நம்பி வாழ்கிற கடவுளாகக் காட்டப்பட்டிருக்கிறாள்.

இருவிதமான வேலைகள் இப்பெண் கடவுளருக்கு ஒதுக்கப் பட்டிருக்கின்றன. சாதிய அமைப்பிற்குள் ஆண் பெண் வேறுபாடு களைப் பாதுகாக்கவும், ஒடுக்கப்பட்ட பெண்கள் ஆதிக்க சாதி வர்க்கத்திற்கெதிராக எழுந்துவிடாதபடியும் இவர்கள் நியமிக்கப் பட்டிருக்கிறார்கள். உற்பத்தியிலிருந்து விலகிய பார்ப்பன, சத்திரிய ஆண்கள் உற்பத்திக்குப்பயன்படாத அறிவை உருவாக்கு வதிலும், அதன் மூலம் பார்ப்பனீயத்திற்கு எதிரான உணர்வைக் கட்டுப்படுத்துவதிலும் முனைகிறார்கள். எனினும் தலித் பகுஜன் உணர்வு அவர்களின் கட்டுப்பாட்டிற்கு உட்படாதபோது, அவர்களுக்கு எதிராக சத்திரியக்கடவுளான விஷ்ணுவை வேண்டிக் கொள்கிறார்கள். விஷ்ணு அவர்களை அடக்கி ஒடுக்குகிறான். இந்திரன், பிரம்மா, சரஸ்வதி, லெட்சுமி, விஷ்ணு போன்ற கடவுள் பிம்பங்களை உருவாக்கிய பார்ப்பனீய அமைப்பு சிதைவது பல்வேறு அம்சங்களில் தடுக்கப்பட்டது. அறிவு,சொத்து, போர் என்பன இவற்றில் சில அம்சங்கள்.

தலித் பகுஜன் எழுச்சியை அடக்குவதற்குப் பிரம்மா அல்லாமல் விஷ்ணு ஏன் பல்வேறு நேரங்களில் பல்வேறு அவதாரம் எடுத்துவரவேண்டும் என்பது தெளிவாகத் தெரியவில்லை. ஒருவேளை சத்திரியர்கள் அரசியல் அதிகாரங்களைக் கையில் வைத்திருந்த போதிலும் அவர்கள் பார்ப்பனர்களுக்குக் கீழானவர்கள் தான் என்பதை உணர்த்துவதற்காக இருக்கலாம். சத்திரியக் கடவுளர்கள் மட்டத்திலிருந்து இது உணர்த்தப்படுமானால், சத்திரியர்கள் மீது பார்ப்பன மேலாதிக்கத்தை நிலைநாட்டுவது சுலபம். பெருமளவில் அந்நோக்கம் நிறைவேறியது. விஷ்ணு லெட்சுமி ஆகிய படிமங்களின் மூலமாகப் பார்ப்பனர்கள் தங்களின் கருத்தியல்

மேலாண்மையை சத்திரியர்கள் மீது நிறுவ முடிந்தது. அரசாங்கத்தை நடத்துவது போன்ற பொறுப்பான பதவியில் இல்லாதவன் ஆனாலும் பார்ப்பனன் கேட்கிற செல்வத்தை எல்லாம் கொடுத்தேயாக வேண்டும் என்பதை நிலை நாட்ட லெட்சுமியின் படிமம் பயன்படுகிறது. இதைவிட முக்கியமானது தலித் பகுஜன் மக்கள் காலம் காலமாக, யுகம் யுகமாக அடக்கி ஒடுக்கப் பட்டிருந்தார்கள் என்பதுதான்.

பார்ப்பன மயமான சரஸ்வதி, லெட்சுமியின் செல்வாக்கு இந்தியாவிலுள்ள மேல்சாதிப் பெண்களிடத்தில் அதிகமாக உள்ளது. லெட்சுமி செல்வத்தின் ஆதாரம் என்று கருதப்படுவதால் அவளின் உருவம் ஒவ்வொரு நாளும் பிரபலமாகிக் கொண்டிருக்கிறது. 1990களில் ஏற்பட்ட மண்டல் பிரச்சினையின்போது பல பெண் எழுத்தாளர்கள் சாதி எதிர்ப்பு இயக்கங்களுக்கு எதிரானவர்களாக, அதாவது மண்டல் அமுலாக்கத்திற்கு எதிரானவர்களாகச் செயல்பட்டார்கள். லெட்சுமி சீதை என்ற பிம்பங்களை உலகமயமாக்கியதன் மூலம் ‘மேல்’ சாதிப் பெண்கள் தலித் பகுஜன் இயக்கத்திற்கும் பெண்ணிய இயக்கத்திற்கும் பல பிரச்சினைகளை உண்டாக்கிவிட்டார்கள். சாதிமயமான ஆணாதிக்கச் சமூகத்தில் தலித் பகுஜன் இயக்கமும் பெண்கள் இயக்கமும் இணைந்து செயல்பட வேண்டும். ஆனால் பார்ப்பனீயச் சிந்தனையி லிருந்து மேல்சாதிப்பெண்கள் விடுபட்டால்தான் இத்தகைய இணைப்பு சாத்தியமாகும். துரதிஷ்டவசமாக பெண் எழுத்தாளர்கள், பெண்ணிய வாதியாக இருந்தவர்கள்கூட சமூக அரசியல் ரீதியாக செல்வாக்கு செலுத்திவந்த இந்தக் கடவுளர் மீது எந்தவொரு விமர்சனமும் வைக்கவில்லை, குறிப்பாகப் பார்ப்பனீயப் பெண்கள்.

## சிவன் மற்றும் பார்வதி

மும்மூர்த்திகளில் மூன்றாவதாகவும் சக்தி குறைந்தவனாகவும் எளிதில் முட்டாளாகக்கூடியவனாகவும் சிவன் (மகேஸ்வரன்) காட்டப்படுகிறான். நிறத்திலோ ஆடையணிவதிலோ, சிவன் பிரம்மாவைப் போன்றோ அல்லது விஷ்ணுவைப் போன்றோ, பார்ப்பனர்களைப் போன்றோ அல்லது சத்திரியர்களைப் போன்றோ இல்லை. தடித்த தோலுடன் மலைசாதி மக்களைப் போல் தோற்றம் உடையவனாக இருக்கிறான். பிரம்மாவுடனும் விஷ்ணுவுடனும் இணைக்கப்பட்டவனாக இருந்தாலும் மூன்றாவது இடமே இவனுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இவனுடைய பாத்திரம் திட்டவட்டமாக வரையறுக்கப்படவில்லை. இவனும் திரிசூலம் கொண்டு சக்தி உள்ளவனாக இருந்தாலும் பார்ப்பன சத்திரியக் கடவுள்களிடமிருந்து வேறுபட்டவனாக இருக்கிறான். பிரம்மாவுக்கும் விஷ்ணுவுக்கும்

தாழ்ந்தவனாகவே சித்திரிக்கப்படுகிறான். அவன் நடனத்தை விரும்புகிறான். பல இன்னல்களில் மாட்டிக்கொண்டு பிரம்மா, விஷ்ணுவின் உதவியை நாடுகிறான். இதனை சிவன், விஷ்ணுவின் உதவியை நாடியதற்கு உதாரணமாக சொல்லலாம்.

சிவனுடைய மனைவி கௌரி என்றும் அழைக்கப்படும் பார்வதி. லெட்சுமி, சரஸ்வதியைப் போல் குறிப்பிட்ட பாத்திரம் ஏதும் பார்வதிக்கு ஒதுக்கப்படவில்லை. அவள் தன் கணவனுடைய நடவடிக்கைகள் பலவற்றில் பங்கு கொள்கிறாள். அவர்கள் நடனமாடு கிறார்கள், உலகைச் சுற்றி வருகிறார்கள். சரஸ்வதி, லெட்சுமியைப் போல் அல்லாமல், பார்வதி தன் கணவனுடைய நடவடிக்கைகள் பற்றி பல கேள்விகள் கேட்கிறாள். அவள் செய்கின்ற பல காரியங்கள் இந்துத்துவச் சடங்குகளுக்கு உட்பட்டதல்ல. ஒரு வேளை இவர்கள் மலை இன மக்களின் கலாச்சாரத்திலிருந்து வந்தவர்களாக் இருக்கலாம். எப்படியிருந்தாலும் தலித் பகுஜன்களுக்கு எதிரான காரியங்களில் லெட்சுமியையும், சரஸ்வதியையும் போலவே பார்வதியும் இருக்கிறாள். அதனால் எந்தக் காரியத்திற்காக சிவன் பார்வதி உருவங்கள் உருவாக்கப்பட்டது என்ற கேள்வி எழுகிறது. ஆனாலும் அதற்கொரு நோக்கம் உள்ளதாகவே நான் கருதுகிறேன். பிரம்மா, விஷ்ணு, சரஸ்வதி, லெட்சுமி ஆகியோருடைய உருவங்கள் முன்பே ஆரியமயமாகிவிட்ட வைசிய, சத்திரிய மற்றும் தலித் பகுஜன் மனங்களைக் கட்டுப் படுத்துவதற்குப் போதுமானவைகளாகும். தேவையான பொழுது அவர்களை அடக்கிவைக்கவும் இவை போதுமானவை. இவர்கள் கர்மவினைக் கோட்பாடுகளை ஏற்றுக் கொண்டவர்கள். தலித் பகுஜன்கள் இந்தக் கடவுளரை அறியாவிட்டாலும் கர்ம வினைக் கோட்பாடுகள் அவர்களிடம் ஊடுருவிவிட்டது. இவ்வாறு ஊடுருவிய கர்ம வினைக் கோட்பாடுகள் அவர்களை எதிர்ப்பேதும் இல்லாது பணிந்து செல்பவர்களாக ஆக்கியது. பெரும் பிரச்சினைகளுக்கு மத்தியில் மலையின மக்களும் பார்ப்பன சிவில் சமூகத்திற்குள் கொண்டுவரப்பட்டனர். இருந்தும் அவர்கள் தங்களைப் பிரம்மாவோடும் விஷ்ணுவோடும் தொடர்பு படுத்திக் கொள்ள வில்லை. மலைசாதி மக்கள் இந்துமதத்தை ஏற்றுக்கொள்ளச் செய்ய பிரம்மா, விஷ்ணு போன்ற கடவுள்கள் போதுமானதாக இல்லை. எனவே சிவனையும் பார்வதியையும் கடவுளாக உருவாக்கிவிட்டார்கள். பார்ப்பனர்களின் ஆதிக்கத்தை எந்த எதிர்ப்புமில்லாமல் மலையின மக்கள் ஏற்றுக்கொள்ள இந்த இரு கடவுளரும் பயன்படுத்தப்பட்டனர். எதிர்ப்புகளை உள்வாங்கித் தன் வயப்படுத்தும் பார்ப்பனத் தந்திரத்திற்கு ஒரு எடுத்துக்காட்டு இது. ஆனாலும் இது வேறு சில பிரச்சினைகளையும் ஏற்படுத்தியது.

காலப்போக்கில் தென்னிந்திய மலையின மக்கள் இந்துத்துவத்துக்குள் கட்டாயமாக இழுத்துவரப்பட்டார்கள். விஷ்ணுவைவிட சிவன் அதிக மலை சாதிப் பண்புடையவன் என்பதால் இந்துத்துவத்துக்குள் சிறிய உராய்தல் ஏற்பட்டது. பார்ப்பனியத்திற்குள் இழுத்து வரப்பட்ட மலையின மக்கள் சுய ஆதிக்கம் கோரினார்கள். வைணவ மதம் இறுக்கமான பார்ப்பனியமாக இருந்தபோது சைவம் சற்றுத் தாராளத் தன்மையுடையதாக இருந்தது. பசவாவின் வீர சைவ இயக்கம் உருவானபோது அது இந்துப் பார்ப்பனியத்திற்குச் சவாலாக இருந்தது. ஆனால் தேசியப் போராட்டத்தின்போது இந்துத்துவக் கோட்பாட்டாளர்கள் திட்டமிட்டு அவர்களுக்கிடையே இருந்த முரண்பாடுகளை ஒன்றுபட்ட இந்துத்துவக் கோட்பாடு மூலம் தீர்க்க முனைந்தார்கள். இத்தகைய சூழ்நிலையில் சைவ இந்துக்களும் வைணவ இந்துப் பாரம்பரியத்தைப் போன்றே தலித் பகுஜன்களுக்கு எதிரானதாக மாறினர்.

எண்பது, தொண்ணூறுகளில் இந்துத்துவா மறுபடியும் உயிரூட்டப்பட்டு இந்துவெறியர்கள் இந்துமதத்தை ஒன்றுபட்ட அரசியல் சக்தியாகக் காட்டிக்கொண்டார்கள். சிவசேனாவுக்கும், பாரதீய ஜனதாவுக்குமிடையே உள்ள பிரிவு என்பது சைவ, வைணவப் பிரிவுகளின் வெளிப்பாடாக இருந்தாலும் இராமன் உருவத்தைக் காட்டி, ஓட்டுப்பெறுவதில் இருவரும் ஒன்றுபட்டே நிற்கிறார்கள். தலித் பகுஜன்களை எதிர்கொள்ள சைவ இந்துத்துவமும், வைணவ இந்துத்துவமும் ஒன்றுபட்ட சக்தியாக வருங்காலத்தில் மாறுவது உறுதி. தலித் பகுஜன்கள் இந்துத்துவ சக்திகளுக்குச் சவாலாக இருப்பதால் அவர்களிடத்தில் இந்துத்துவ நம்பிக்கையை ஏற்படுத்த அல்லது அவர்களை அடக்கி ஒடுக்க இந்துமதத்தின் எல்லாப் பிரிவுகளும் ஒன்றுபட்டு நிற்கும். பல்வேறு வகையான கடவுள் உருவங்கள் பலதரப்பட்ட மக்களைத் திருப்திப்படுத்த உதவலாம். பார்ப்பனர்கள் உருவாக்கிய மும்மூர்த்திகளும் இதர பல கடவுளரும், அவைகளின் உருவங்களும் பெரும்பாலான ஒடுக்கப்பட்ட மக்களைச் சுரண்டவும் அடிமைப்படுத்தவுமே பயன்படுகின்றன. கடவுள் வடிவத்தில் எல்லா மக்களையும் ஒன்றிணைக்கிற அதே நேரத்தில் அவர்களை இந்து மதக் கட்டுமானத்திலிருந்து ஒதுக்கி வைப்பதன் மூலம் இதனை அவர்கள் பெரிய அளவில் நிறைவேற்றுகிறார்கள்.

## அவதாரக் கடவுள்கள்

மும்மூர்த்திகளும் அவர்களின் மனைவிகளும் பார்ப்பனீயத்தின் அடிப்படை நோக்கங்களை நிறைவேற்றியிருந்தாலும் தலித் பகுஜன்

எதிர்ப்புகள் தொடர்ந்து கொண்டேயிருந்தன. அதன் விளைவாகப் பார்ப்பனர்கள் தங்களுடைய வழக்கமான சூழ்ச்சியைப் பயன்படுத்தி பல்வேறு அவதாரங்களை உருவாக்கினார்கள். அவதாரங்களில் வாமனன், கிருஷ்ணன், இராமன், சீதை ஆகியோர் முக்கியமானவர்கள். பூலேயும், அம்பேத்கரும் இந்த அவதாரங்களைப் பற்றி 'சூத்திர' விமர்சனத்தை உருவாக்கியிருந்தாலும், விடுதலைக்குப் பிந்திய இந்துத்துவா குறித்தும் இது போன்ற விமர்சனங்கள் வளரவேண்டும். விஷ்ணுவின் பத்து அவதாரங்களில் புத்தரும் ஒருவராகப் பிற்காலத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டார். இந்து மதத்தின் உள் வாங்கல் தந்திரத்திற்கு இது ஒரு உதாரணம். இதை ஓரளவு படித்தவர்கள் கூட அறிவார்கள் என்பதால் இந்நூலில் அது குறித்து நான் எழுதப் போவதில்லை. (மேற்கொண்டு புத்தர் பற்றி அறிய வேண்டுமானால் எனது முனைவர் பட்ட ஆய்வைப் பார்க்கலாம்.)

### வாமனன்

அவதாரங்களில் மூவர் முக்கியமானவர்கள்; வாமனன், கிருஷ்ணன், ராமன். மற்ற வரலாற்று ஆசிரியர்களைப் போன்று நானும் இராமாயணம் மகாபாரதத்திற்குப் பின் எழுதப்பட்டது என்ற கருத்துடையவன். பிரம்மாவிற்குப் பிறகு வாமனன் என்ற கடவுள் தான் பார்ப்பனக் குடும்பத்தில் பிறந்ததாகச் சொல்லப்படுகிறது. இந்தக் கடவுளுடைய ஆரம்பக்கதையை அமைத்ததில் பார்ப்பனர்கள் புத்திசாலித்தனமாகச் செயல்படவில்லை. இந்தக்கதையின்படி இந்து, பார்ப்பனீயத்தில் நம்பிக்கையற்று ஒரு சாதியற்ற சமுதாயத்தைப் படைக்க விரும்பிய தலித் பகுஜன் அரசனான பாலி சக்கரவர்த்தியைக் கொல்வதற்காகவே வாமன அவதாரம் எடுத்ததாகக் காட்டப்படுகிறது. பாலியினுடைய நடவடிக்கைகளைக் கண்டு அரண்டுபோன அந்தப் பகுதிப் பார்ப்பனர்கள், ஒரு குள்ளமான பார்ப்பனப் பையனை விஷ்ணுவின் அவதாரமாக நிறுத்தினார்கள். அந்தப் பகுதியில் வசித்த பிராமணரிடத்திலே நம்பிக்கையூட்டவும், தலித் பகுஜன்களை அச்சுறுத்தவும் வாமனனுடைய திறமையைப் பற்றிப் பெருமளவு பிரச்சாரம் செய்யப்பட்டது. மேலும் ஒரு குறிப்பிட்ட நாளன்று வாமனன் பாலியைச் சந்திப்பார் என்றும் அறிவிக்கப்பட்டது. இந்தப் பிரச்சாரத்தினால் தலித் பகுஜன் மக்களையும், பாலி மன்னனையும் அச்சுறுத்தினார்கள். ஒரு நாள் காலை எல்லாப் பார்ப்பனர்களும் வாமனனுடன் பாலி இருந்த இடத்திற்குச் சென்றார்கள். பாலியினுடைய குரு சுக்கிராச்சாரி அந்தக் குள்ளன் மாறுவேடம் போட்ட பார்ப்பனப் பையன் என்பதை பாலி சக்கரவர்த்தியிடம் கூறியிருந்தார். உடன் வந்த பார்ப்பனர்கள் அவன் கடவுள்தான் என்று பாலியை நம்பவைத்தார்கள்.

உடன் வந்த பார்ப்பனர்கள் சுக்கிராச்சாரியாருடைய கண்களில் திராவகத்தை ஊற்றச் செய்தார்கள். பாலி அரசன் ஆதரவற்ற நிலையிலானான்.

வாமனன் பாலியிடம் மூன்று வரங்கள் கேட்கிறான். பாலியும் கொடுப்பதாக ஒப்புக்கொள்கிறான். பிறகு அவன் மூன்றடி நிலம் வேண்டும் என கேட்கிறான். அவன் வார்த்தைகளின் உள் அர்த்தத்தைப் புரிந்து கொள்ளாத பாலி அதற்கும் இசைந்தான். வாமனன் தன் பார்ப்பனத் தந்திரத்தை வெளிப்படுத்தினான். ஒரு கட்டிடத்தின் மாடிக்குச் சென்று அங்கிருந்தவாறே தன் பாதத்தை ஆகாயத்தை நோக்கிக் காட்டுகிறான். பிறகு அந்த ஆகாயம் முழுதும் அந்த மூன்றடிக்கு உட்பட்டது என்கிறான். அதன்பிறகு தனது மற்றொரு பாதத்தைப் பூமியை நோக்கி அசைக்கிறான். பிறகு பூமி முழுதும் அதற்குள் அடங்கும் என்கிறான். இந்த வஞ்சகச் செயலுக்குப் பாலி எதிர்ப்பு தெரிவித்த போதும் அங்கிருந்த பார்ப்பனர்கள் சத்தம்போட்டு அவன் வாயை அடக்கிவிட்டார்கள். கட்டிடத்திலிருந்து இறங்கி வந்த வாமனன் தனது மூன்றாவது அடிக்கு நிலம் கேட்கிறான். தெய்வீகப் பொய்களின் அதிர்ச்சியிலிருந்து பாலி விடுபடுவதற்கு முன் தன்னுடைய மூன்றாவது அடிக்கு இடம் இல்லாததால் தனது இரும்பு ஆணிகள் பொருந்திய பாதக் குறட்டைப் பாலியின் தலையில் மிதித்து நெறித்துக் கொன்றுவிடுகிறான். இவ்விதமாக ஒரு தலித் பகுஜன் ராஜ்ஜியம் இந்துத் துரோகத்தால் வெல்லப்பட்டது. மனிதாபிமானம் மிக்க பாலி மன்னன் கொல்லப்பட்டான். பார்ப்பனர்களால் பாலிக்கு இழைக்கப்பட்ட அநீதியை பூலே அவர்கள் தன் எல்லா எழுத்துகளிலும் எடுத்துரைத்து பாலி அமைத்தது போன்ற ஒரு பரந்த சமத்துவ சமூகத்தை நிறுவும் படி தலித் பகுஜன்களைக் கேட்டுக்கொள்கிறார். பார்ப்பனர்களின் மனிதத் தன்மையற்ற துரோகச் செயலைத் தோலுரித்துக் காட்டுகிறார்.

## கிருஷ்ணன்

கிருஷ்ணன் யார்? இப்படி ஒரு கடவுளைப் பார்ப்பனர்கள் ஏன் உருவாக்கினார்கள்? அவன் ஒரு சத்திரியனாகப் பிறந்த போதிலும் ஒரு யாதவக் குடும்பத்தினரால் வளர்க்கப்பட்டவன் என்று ஏன் கூறப்படுகிறது? திடீரென்று கிருஷ்ணன் விஷயத்தில் மட்டும் ஏன் ஒரு சமரசம் செய்யப்பட்டது? (மற்றக் கடவுள்கள் எல்லாம் பார்ப்பனர், சத்திரியர்களாக இருக்கும்போது) சத்திரியனாகப் பிறந்திருந்தாலும் கூட கர்ணன் ஒரு தலித் பகுஜன் குடும்பத்தினரால் வளர்க்கப்பட்டது கண்டனத்திற்கு உள்ளானபோது, இதே பின்னணியில் வளர்ந்த கிருஷ்ணன் ஏன் கண்டிக்கப்படவில்லை? யாதவக் குடும்பங்களில்

அவன் நிகழ்த்திய குழந்தைப் பருவக் குறும்புகள், அவனுடைய இன்பலீலை தொடர்புடைய கதைகள், ராதையுடனும் மற்ற யாதவப் பெண்களுடனுடமான அவனுடைய கள்ளச்செயல்கள் அனைத்தும் தெய்வீகமானவைகளாகக் காட்டப்படுகின்றன. பெரும்பான்மை யினரான பாண்டவர்களுக்குக் குருவாகவும், தலைவனாகவும், போருக்கான திட்டம் வகுப்பவனாகவும் கிருஷ்ணன் காட்டப்படுகிறான். முடிவில் பார்ப்பனிய நூலான இந்துக்களின் வேதமாகக் கருதப்படும் பகவத்கீதையைக் கிருஷ்ணன் தான் எழுதினான் என்று சொல்லப் படுகிறது. கிறித்தவர்களின் வேதமான பைபிளைப் போலவும் முஸ்லிம்களின் வேதமான குரானைப்போலவும், அது கருதப்படுகிறது. சூத்திரர்கள் கல்வி கற்க உரிமை இல்லாத அந்தக் காலத்தில் எப்படி ஒரு யாதவன் கீதையை எழுதினான்? தலித் பகுஜன்களைக் கூட விட்டு விடுவோம். யாதவர்களைப் பற்றிக்கூட அதில் அவன் எழுதவில்லையே ஏன்? யாதவர்களின் சமூகம் அதில் சித்திரிக்கப்படாதது எப்படி? இவற்றிற்கெல்லாம் விரிவான விளக்கங்களும் விவாதங்களும் தேவை.

பார்ப்பனர், சத்திரியர், தலித் பகுஜன்கள் ஆகியோருடைய மையக் களமாக இருந்தது இன்றைய பீகாரும், உத்திரப்பிரதேசமும் என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும். யாதவர்கள் அந்தப் பகுதியில் தனிப்பெரும் சாதியாக இருக்கிறார்கள். பார்ப்பன சத்திரியர்களுக்கு எதிராக அங்கே அவர்கள் பல கலகங்களை நடத்தியுள்ளார்கள். தலித் பகுஜன்களை யாதவர்கள் காட்டுமிராண்டித் தனமாகப் பலமுறை தாக்கி, அடக்கி ஒடுக்கி வைத்திருக்கிறார்கள். மகாபாரதத்தில் அவர்கள் நடத்திய கலகம் மிகப் பிரம்மாண்டமானது. அதன்படி கீழ்நிலையிலுள்ள சாதியினரிடையே அவர்கள் நிறுவிய மேலாண்மை அமைப்பு பலமான அச்சுறுத்தலுக்கு ஆட்பட்டதாகப் பார்ப்பன சத்திரிய சக்திகள் உணர்ந்தன. ஒருமுறை இந்த மேலாண்மை சிதைந்தால் பின் எத்தனை பேர் முயன்றாலும் அதை நிறுவுவது சிரமம். உதாரணமாக 1990-1993ல் நடந்த மண்டல் அறிக்கை அமுலாக்கப் போராட்டத்தையும் ராமராஜ்ஜிய எதிர்ப்புப் போராட்டத்தையும் சொல்லலாம். இவற்றை மையமாக வைத்து பார்ப்பனியம் ஆதிக்கம் செலுத்தும் மையப்பகுதியில் தலித் பகுஜன்கள் பெருங் கலகங்களை நடத்தினார்கள். யாதவர்கள் முன்னின்று நடத்திய இப்போராட்டத்தின் வாயிலாகத் தாழ்த்தப்பட்ட சாதிகளுக்கும், பிற்படுத்தப்பட்ட சாதிகளுக்கும் இடையே ஒரு கூட்டணி உருவானது. இந்தப் போராட்டத்தில் மண்டல் அறிக்கையைத் தயாரித்த மண்டல் (ஒரு யாதவர்) முலாயம்சிங் யாதவ், ராமராஜ்ஜியத்தை எதிர்த்து மண்டல் ராஜ்ஜியத்தை ஆதரித்த லல்லுபிரசாத் யாதவ் ஆகியோர் இந்து

பார்ப்பனியம் உருவாக்கிய மேலாண்மையை உடைக்க எடுத்துக் கொண்ட முயற்சிகள் யாவரும் அறிந்ததே. இதற்கு எதிராக லோத்தா சாதியைச் சார்ந்த கல்யாண்சிங், உமாபாரதி என்ற இரு தலைவர்களைப் பார்ப்பனிய பாரதீய சனதா கட்சி தன் பக்கம் சேர்த்துக்கொண்டது. தேர்தல் மூலம் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. கல்யாண்சிங் முதல்வரானாலும் உண்மையான அதிகாரம் பார்ப்பனப் பண்டிதர்களிடமே இருந்தது.

எப்படியாவது தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் இடையே இருந்த உறவை உடைப்பதற்குப் பார்ப்பன இந்துத்துவ சக்திகள் சிந்தித்து ஒரு பயங்கரமான நிலையை எடுத்தார்கள். அதன்படி பகுஜன் சமாஜ் கட்சியின் தலைவி மாயாவதிக்கு ஆதரவளித்து, தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட மக்களின் அரசியல் கூட்டை உடைத்தார்கள். மாயாவதி நல்ல அமைப்பாளரும் சக்தி வாய்ந்த பேச்சாளரும் ஆவார். முலாயம்சிங் யாதவை முதல்வர் பதவியிலிருந்து விலக்க பாரதீய சனதா மாயாவதியின் உறவை நாடியது. அதன்படி 1995 ஜூலை மாதம் மாயாவதி முதல்வராவதற்குப் பாரதீய சனதா ஒத்துழைத்தது. யாதவர்கள் மிகவும் ஆபத்தானவர்களாகச் சித்திரிக்கப் பட்டார்கள். யாதவர்களின் தலைமையிலான பிற்படுத்தப்பட்ட சாதியினருக்கும் அட்டவணைச் சாதியினருக்கும் இடையிலான கூட்டைச் சிதைப்பதற்கும் பாரதிய சனதா பெரு முயற்சிகளை மேற்கொண்டது. பார்ப்பனர்களால் வரலாற்று ரீதியாகப் பாதிக்கப் பட்ட அட்டவணைச் சாதியினரை உள்வாங்கிக் கொள்வதாக அது காட்டிக்கொண்டது. அவர்களின் அரசியல், சமூகம், பொருளாதார நிலைகளில் எந்த மாற்றங்களையும் செய்யாமல் இத்தகைய 'உள்வாங்கலை' அது முன் மொழிந்தது.

மாயாவதியும் பகுஜன் சமாஜ் கட்சியின் தலைவர் கன்சிராமும் பி.ஜே.பியின் சந்தர்ப்பவாதப் போக்கைப் புரிந்துகொண்டார்கள். மாயாவதி முதலமைச்சரானதும் மதுராவில் உள்ள ஆலயம் பற்றியும், பாபர் மசூதி பற்றியும் பார்ப்பனர்களின் திட்டத்திற்கு எதிரான நிலை எடுத்தார். பார்ப்பனர்களின் எதிர்ப்பைப் பொருட்படுத்தாமல் பெரியார் ஈ.வே.ராவின் சிலையை லக்னோவில் நிறுவுவதில் வெற்றி கண்டார். தலித் பகுஜன்களுக்கு எதிரான இந்துக் கடவுள்களின் தன்மைகளை யாரையும் விட பெரியார் அதிகமாகத் தோலுரித்துக் காட்டியவர். கன்சிராம் கட்சியினர் உத்திரப்பிரதேசத்தில் பெரியார் விழாக்கள் பலவற்றை நடத்தினார்கள். சமர் சாதியைச் சார்ந்த மாயாவதியும் கன்சிராமும் ஒன்றுபட்டுச் செயல்பட்டு பார்ப்பனீய உள்வாங்கலுக்கு ஆட்படாமல் இருந்தார்கள். மாயாவதியை ஆதரித்த

போது கூட பார்ப்பனீயம் எல்லோரையும் ஏற்றுக்கொண்டுவிட்டது என்று அர்த்தமல்ல. அது ஏற்கனவே தாழ்த்தப்பட்டவர்களையும் பிற்படுத்தப்பட்டவர்களையும் இணைத்திருந்த அரசியல் கூட்டை உடைத்து வெற்றி கண்டது. தலித் பகுஜன்களை வீழ்த்துவற்கான செயல்களை அது தொடர்ந்து செய்யும். அதற்குப் பயன்படக்கூடிய தலித் பகுஜன்களை அது தேடிக் கொண்டே இருக்கும். இதுவே இன்றையப் பார்ப்பனீயம்.

இதைப் போலவே மகாபாரத காலத்திலும் யாதவருடைய எதிர்ப்பை அடக்குவதற்குத் தனது மேலாண்மையைத் திருத்தியமைக்கும் படியான ஒரு நபரைப் பார்ப்பனீயம் தேடியது. அப்படித்தான் யாதவரிடையே பிறந்து வளர்ந்தவனாகக் கிருஷ்ணனை உருவாக்கினார்கள். அதே சமயத்தில் யாதவர் சமூகம் அனைத்தையும் தங்களுடன் சேர்த்துக் கொள்வது இல்லை என்பதிலும் கவனமாக இருந்தார்கள். சத்திரியர்களைப் போல யாதவர்களையும் முழுமையாக ஏற்றுக்கொள்ள பார்ப்பனீயம் தயாராக இருக்கவில்லை. அவ்வாறு ஏற்பட்டால் அது பார்ப்பன சாதிகளின் எண்ணிக்கையையும் வாய்ப்பையும் அதிகரிக்கும். ஆனால் அதுவே பார்ப்பன பனியாக்களின் ஆதிக்கத்தை ஆபத்துக்கு உள்ளாக்கும். இந்தப் பிரச்சினையை வெல்லவே அவர்கள் சத்திரிய குலத்தில் பிறந்து, யாதவகுலத்தில் வளர்ந்த நீல நிறமுடைய கிருஷ்ணனை உருவாக்கினார்கள். ஆனால் அந்தக் கதையாடல் தந்திரமாகக் கட்டமைக்கப்பட்டிருக்கிறது. இளைஞனான கிருஷ்ணன் யாதவ கலாச்சாரத்தில் வளர்ந்தவன். ஆனால் வளர்ந்து பெரியவனான 'அரசியல்' கிருஷ்ணனோ தன்னை யாதவனாக அடையாளம் காட்டிக் கொள்வதில்லை. அவனது செயற்பாடுகள் சத்திரியனுக்கு உரியதாக இருந்தது. பார்ப்பன தர்மத்தைப் பாதுகாப்பதாகவே இருந்தது.

எந்த ஒரு நிகழ்ச்சியிலும் கிருஷ்ணன் தலித் பகுஜன்களுக்கு உதவியாக இருந்தது இல்லை. அவனால் நேசிக்கப்பட்ட ராதையும் இதர கோபிகையரும் யாதவராக இருந்தனரா என்பது முக்கியமல்ல. அவனுடைய சட்டப்படியான மனைவிகள் அனைவரும் சத்திரியப்பெண்களாகவே இருந்தார்கள். அது பார்ப்பனீய ஆணாதிக்கக் கலாச்சாரத்திற்குப் பொருத்தமானதாக இருந்தது. அவன் தலித் பகுஜன் பெண்களோடு பாலியல் உறவுகள் கொண்டாலும் தனது சாதிப் பெண்களை மட்டுமே திருமணம் செய்து கொண்டான். கிருஷ்ணன் அவதாரம் மட்டும் தான் பலதார முறையை நம்புகிற அவதாரமாகக் காட்டப்படுகிறது. கிருஷ்ணனுடைய எட்டு மனைவிகளும் சத்திரியப் பெண்களே. தலித் பகுஜன் (யாதவர்)

கலாச்சாரத்தின் ஒரு சில அம்சங்களை மட்டும் கிருஷ்ணன் ஏற்றுக்கொண்டான். அது அவனுடைய தலித் தன்மைக்கு அடையாளமாகச் சொல்லப்படுகிறது. அவனது மற்ற செயல்கள் எல்லாம் அவனுடைய சத்திரியத் தன்மைக்கு எடுத்துக்காட்டாகக் கொள்ளப்படுகிறது. கிருஷ்ணா அவதாரம் என்பது பார்ப்பன அரசியலுக்கு ஒரு மிகச் சிறந்த எடுத்துக்காட்டு.

கிருஷ்ணனின் திட்டம் என்பது பலமான வருணாசிரம உடன் பாட்டு முறையை உருவாக்கவும், தலித் பகுஜன்கள் பார்ப்பனியத்தை ஏற்றுக்கொண்டு அதைப் பாதுகாக்கவுமான திட்டமுமாகும். மகாபாரதக் கதை கௌடில்யக் கற்பனையை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டது. பெரும்பான்மை மக்களான பகுஜன்கள், சிறுபான்மையினர் தங்கள் நிலத்தைப் பறித்துக்கொள்ள முனைந்த போது கலகம் நடத்திய காலமாக அது இருக்கலாம். பொதுச்சொத்து தனிச்சொத்தான காலம் அது. சிறுபான்மையினரான பாண்டவர்கள் (பார்ப்பனர், சத்திரியர், வைசியர் கூட்டு என்பது மொத்தத்தில் பதினைந்து சதவிகிதம் தான்) பெரும் பான்மையினரான கௌரவர்களை எதிர்த்து நடத்திய யுத்தம். ஐந்து பாண்டவர்கள் நூறு கௌரவர்களை எதிர்த்த யுத்தம். நூறு கௌரவர்களும் பார்ப்பனியத் தர்மத்துக்கு எதிராக பெரும்பான்மை தலித் பகுஜன்களுக்கு ஆதரவாகவும் அதே சமயத்தில் ஐந்து பாண்டவர்களும் சிறுபான்மையினரான பார்ப்பனர் களின் தர்மத்திற்கு ஆதரவாகவும் நின்று நடந்த போராட்டம். நிலத்திற்காகவும் அரசாட்சிக்காகவும் நடத்திய போராட்டத்தில் கிருஷ்ணன் சிறுபான்மையினருக்கே ஆதரவாகப் போரிடுகின்றான். அது மட்டுமல்ல, பெரும்பான்மையினருக்கு எதிராகச் சூழ்ச்சியையும் நயவஞ்சகத்தையும் நெறியற்ற பார்ப்பன தர்மங்களையும் பயன் படுத்துகிறான். சிறுபான்மையினரை வெற்றியடையச் செய்கிறான். பெரும்பான்மையான கௌரவர்கள் தோற்கடிக்கப்படுகிறார்கள்.

இந்தப் போராட்டத்தில் கர்ணனும், கிருஷ்ணனும், எதிரெதிர் நிலைகளில் நிற்கிறார்கள். கர்ணன் சத்திரியப் பெண்ணான குந்திக்குப் பிறந்தவன்; தலித் பகுஜன் குடும்பத்தில் வளர்க்கப்பட்டவன். தலித் பகுஜன் கலாச்சாரத்தை உடையவன். அதே நேரத்தில் யாதவர்களால் வளர்க்கப்பட்ட கிருஷ்ணன் சத்திரிய கலாச்சாரத்தை உடையவனாக இருக்கிறான். இந்தப் போராட்டத்தில் கர்ணன் பெரும்பான்மையினரையும் கிருஷ்ணன் சிறுபான்மையினரையும் பிரதிநிதித்துவப் படுத்துகின்றனர். கிருஷ்ணன் எப்போதும் ஆயுதம் வைத்திருக்கும் கடவுள். அவன் சிறுபான்மையினரின் ரதசாரதி, தேரோட்டி. சிறுபான்மை கௌடில்யனின் அரச சூழ்ச்சிகள் யாவும்

கிருஷ்ணனால் கையாளப்படுகின்றன. அவனைப் பொறுத்தவரை யுத்தத்தின் முடிவு எல்லா முரண்பாடுகளையும் தீர்த்துவிடும். ஒரு நல்ல முடிவிற்காக எந்தவிதமான வழிமுறைகளையும் கையாளலாம் என்பது அவன் கொள்கை. சிறுபான்மையினரின் தர்மத்தை ஆதரிப்பதன் மூலம் வன்முறை, காட்டுமிராண்டித்தனம், துரோகம் ஆகியற்றை கிருஷ்ணன் நியாயப்படுத்துகிறான். துரோகத்தனத்தால் தான் கர்ணன் கொல்லப்படுகிறான்.

கிருஷ்ண தூதுக் (ராயபாரம்) கதையின்படி பார்ப்பன உடன்பாட்டு அமைப்பின் மூலம் பெரும்பான்மையினரது சம்மதத்தைப் பெற அவன் தவறினான். பெரும்பான்மையினர் வியர்வையும் ரத்தமும் சிந்தி உருவாக்கிய தமது நிலத்தை விட்டுக் கொடுக்கத் தயாராக இல்லை. இறுதியாக கிருஷ்ணன் வன்முறையைக் கையாளுகிறான். அவனுடைய கூடாரத்தைச் சேர்ந்த அர்ச்சுனன் போன்ற நண்பர்கள் இந்த மாதிரி முட்டாள்தனமாக ரத்தக்களறி ஏற்படக்கூடிய வன்முறைப்போர் வேண்டாம் என்று மறுத்தபோதும், கிருஷ்ணன் எதிர்த்தரப்பினர் யாராக இருந்தாலும் அவர்களைக் கொல்ல வேண்டும் என்று வற்புறுத்துகிறான். ஏனெனில் அவர்கள் பார்ப்பனீயத் தர்மத்திற்கு எதிராகக் கலகம் செய்தவர்கள். பார்ப்பனக் கோட்பாட்டை ஆதரிக்கும் முகமாக அவன் வன்முறையையும் வர்ணதர்மத்தையும் கர்மவினைக் கோட்பாட்டையும் கீதையில் போதித்தான். இந்தக் காரணத்தினால் தான் பார்ப்பன சக்திகள் கிருஷ்ணனை ஏற்றுக்கொண்டன. நிலத்திற்காகவும் அரசதிகாரத்திற்காகவும் நடந்த இந்தப் போராட்டத்தில் பெரும்பான்மையினரைத் தோற்கடித்த பிறகு கீதையின் மூலம் ஒரு பலமான பார்ப்பனிய அமைப்பை உருவாக்கி, தலித் பகுஜன் எழுச்சியும் எதிர்ப்பும் வராமல் பார்த்துக் கொள்ளப்பட்டது. எப்போதாவது யாதவர்களாலோ தலித்துக்களாலோ எதிர்ப்புகள் கிளம்புகிறபோது கிருஷ்ணனுடைய கீதையைப் பயன்படுத்தி எதிர்ப்புகள் மழுங்கடிக்கப்பட்டன. சுதந்திரப் போராட்டக் காலத்தில் பார்ப்பன இந்துத்துவ சக்திகள், குறிப்பாக காந்தி கீதையைப் பிரச்சாரம் செய்து, இந்த முதலாளித்துவ ஜனநாயக சகாப்தத்தில் கூட பார்ப்பன அதிகாரம் நீடித்திருக்க வழிவகுத்தார்.

நல்ல வேளையாக, அம்பேத்கர் அவர்கள் நவீனப் பார்ப்பனீயத்தின் அரசியல் சூழ்ச்சிகளைப் புரிந்துகொண்டு இந்துத் துவத்தை விமர்சனத்தின் மூலம் அம்பலப்படுத்தினார். அவருடைய 'ராமன், கிருஷ்ணன் கீதை: இவற்றின் புதிர்கள்' என்ற நூலில் அம்பேத்கர் அவர்கள் மேற்கொண்டுள்ள விமர்சனத்தைப் பின்னணியாகக் கொண்டு இந்நூலில் கிருஷ்ணன் பற்றிய எனது விமர்சனத்தைப் புரிந்துகொள்ள

வேண்டும். அம்பேத்கரின் மதிப்பீடு மட்டும் இல்லாதிருந்தால் கிருஷ்ணனும் கீதையும் பார்ப்பனக் கருத்தியலின்படி நடந்துகொண்ட விதத்தை நாம் புரிந்து கொண்டிருக்க முடியாது. எப்படியோ விடுதலை பெற்ற இந்தியாவில் எழுச்சி கொண்ட தலித் பகுஜன் கருத்தியலுக்குப் பார்ப்பனிய காந்தியமும், நம்பூதிரிபாட்டின் கம்யூனிசமும் பிரச்சினையானது. செத்துக்கொண்டிருந்த இந்துத் துவத்தை நவீனப்படுத்தி உயிர்ப்பித்தவர் காந்தி. பார்ப்பன கம்யூனிஸ்ட்டுகள் தம், பங்கிற்கு தலித்துக்கள் கிளர்ந்தெழுந்து விடாமல், அடக்கிவைத்தார்கள். வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால் ஏகாதிபத்திய எதிர்ப்பு தேசீயத்தை காந்தி இந்துமயமாக்கினார். இந்து மயமாக்கப்பட்ட தேசியத்தைப் பார்ப்பன கம்யூனிஸ்ட்டுகள் பார்க்கத் தவறினர். ஆகையால் 'வேற்றுமையில் ஒற்றுமை கண்டவர்களான' கிருஷ்ணன், சீதை, மற்றும் காந்தி, நம்பூதிரிபாட் போன்றோர்களுக்கு இடையிலான தொடர்பு பற்றி நாம் முறையான மறுமதிப்பீட்டை உருவாக்க வேண்டியிருக்கிறது. சுருக்கமாகச் சொல்வதென்றால் அவர்களது உணர்வு வடிவத்தில் வேற்றுமைகள் இருந்த போதிலும் உள்ளடக்கத்தில் ஒற்றுமை இருந்தது. இப்போது வேறொரு கதையாடலுக்குத் திரும்புவோம். தலித் பகுஜன்களிடமும் இந்தியப் பெண்களிடமும் பெரும் பாதிப்பை ஏற்படுத்திய நாசசக்திகளான இராமன் சீதை என்ற கடவுள் வடிவங்களைப் பற்றிப் பார்ப்போம்.

## இராமனும் சீதையும்

பார்ப்பனர்கள் கடைசியாகப் படைத்த மிகவும் சக்தி வாய்ந்த காவியப் படிமங்களான ராமனும் சீதையும் ஒரு தார மணத்தில் உறுதியாக இருந்தவர்கள். சீதையும் இராமனும் சத்திரியக் குடும்பங்களில் பிறந்ததாகச் சொல்லப்படுகிறது. இராமன் நீல நிறம் உடைய விஷ்ணுவின் அவதாரம் என்றும் சீதை வெளுத்த நிறம் உடைய லட்சுமியின் அவதாரம் என்றும் சொல்லப்படுகிறது இராமாயணத்தின் மூலம் பார்ப்பனர்கள் ஏன் இந்தப் பிம்பங்களை உருவாக்கினார்கள்? இந்தக் காவியக் கதையிலிருந்து அவர்கள் சாதிக்க விரும்புவது என்ன?

வட இந்தியாவில் தலித் பகுஜன்களின் கலகங்கள் போரின் மூலமாகவும் தந்திரத்தின் மூலமாகவும் அடக்கப்பட்ட பிறகு, அந்தப் பகுதியில் வசித்த தலித் பகுஜன்கள் முற்றிலுமாக அடங்கிப் போனார்கள். வருணாசிரமக் கோட்பாடு நடைமுறைப்படுத்தப்பட்டுப்

பெரும் பாலானவர்கள் ஏற்றுக்கொள்ளும்படி ஆயிற்று. பார்ப்பனீயத்திற்கு எதிரான ஜைன, பவுத்தப் பாரம்பரியங்கள்கூட பார்ப்பனக் கருத்தியலால் அடக்கப்பட்டன. கௌடில்ய அரசு உருவாக்கப்பட்டு, மனுவின் சட்டம் முறைப்படி நடைமுறைப் படுத்தப்பட்டது. அந்த அமைப்பில் பார்ப்பனர்கள் தங்களுடைய கட்டுப்பாட்டில் அரசர்கள் முதற்கொண்டு அனைவரையும் வைத்திருந்தார்கள். கிருஷ்ணனையும் கீதையையும் உருவாக்கிய பிறகு சத்திரியர்களுடைய ஆதிக்கமும் கூடத் தொடர இயலவில்லை. பார்ப்னர்களுக்கு எதிராக ஒருவர்கூட சுட்டுவிரலை நீட்ட முடியாதபடிக்கு வருணாசிரமம் கோலோச்சியது. வட இந்தியாவில் எல்லாப் பிரிவினரும் நம்பிக்கை இழந்த நிலையில் அடிமைகள் ஆக்கப்பட்டார்கள்.

பார்ப்பனர்கள் தலித் பகுஜன்கள் ஆட்சி செய்து கொண்டிருந்த தென்னிந்தியாவிலும் தங்களுடைய ஆதிக்கத்தைப் பரப்ப நினைத்தார்கள். தாடகை, சம்புகன், வாலி, இராவணன் ஆகியவர்கள் தலித் பகுஜன்களின் தலைவர்களாக இருந்து வந்தார்கள். சில பார்ப்பனர்கள் இராவணனும் ஒரு பார்ப்பனனே என்று சொல்லுகிறார்கள். இது முட்டாள்தனமானது. இராவணன் ஒரு பேராற்றல் மிக்க திராவிட தலித் பகுஜன் அரசன். மேலும், அவன் ஒரு தீவிர சைவப் பற்றாளன். பார்ப்பனீயத்திலிருந்து சைவத்தைப் பிரிக்கவும் தனித்துவமான தலித் பகுஜன் சைவத்தை உருவாக்கவும் இராவணன் முயற்சித்தார். இதையே பசவாவும் நடைமுறைப்படுத்தினார். இலங்கையில் இராவணனின் ஆற்றல் மிக்க ஆட்சியைத் தோற்கடித்துப் பார்ப்பன ஆட்சியை உருவாக்கத் திட்டமிட்டார்கள். எனவே தென்னிந்தியா மீது படையெடுக்க, தாக்குதல் நடத்த முனைந்தார்கள். தலித் பகுஜன் ஆட்சியை வீழ்த்து வதற்கான சூழ்ச்சியை ரிஷிகள் வகுக்கவும், ராமன் அந்தப் பொறுப்பை நிறைவேற்றவும் முடிவெடுக்கப்பட்டது. விஸ்வாமித்திரனும், வசிஷ்டனுமே இராமாயணக் கதையை இயக்கிய முக்கிய சக்திகளாவர். இவர்கள் இராமனின் குலகுருக்கள். அவர்களது வார்த்தைகளை யாரும் மீறக் கூடாது.

தென்னிந்தியாவில் பார்ப்பனியத்தைப் பரப்புவதோடு, பெண்களை அடிமையாக்குவதற்கும் ராமாயணக் கதை அடிப்படையாக இருக்கிறது. அப்படி அடிமைப்பட்ட பெண் பாத்திரத்திற்கு ஒரு மாதிரியாகவும் அக்கதை உள்ளது. கணவன் எந்தச் சாதியாக இருந்தாலும், வர்க்கமாக இருந்தாலும், மனைவி அவனுக்குக் கீழானவள் என்று அக்கதை உறுதிப்படுத்துகிறது. இந்தத் துணைக்கண்டத்தில்

எந்தப் பெண்ணும் ஆட்சியாளராக இருக்கக் கூடாது; தலித் பகுஜன் உட்பட இது பார்ப்பன ஆணாதிக்கக் கோட்பாடாகும். வட இந்தியாவைப் போலவே தென்னிந்தியாவிலும் பார்ப்பனீயம் ஆணாதிக்க நடைமுறைகளை உருவாக்க விரும்பியது. ராதா, திரௌபதையின் நடப்புகள் பார்ப்பனீயத் தன்மையற்றவை என்பதால் அதைக்கூடப் பார்ப்பனர்களால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. திரௌபதி ஐந்து கணவன் களைக் கொண்டிருந்தாலும் அவள் பிரபலமாக இருந்தாள். ராதா கிருஷ்ணனோடு உறவு வைத்திருந்ததாகச் சொல்லப்பட்டாலும் அவள் கிருஷ்ணனைத் திருமணம் செய்து கொள்ளவில்லை. இந்துக்கள் தங்களுடைய குழந்தைகளுக்கு திரௌபதி என்று பெயர் சூட்டாமல் ராதா என்று பெயரிடுவது ஆச்சரியமானதாக இருக்கிறது. திரௌபதி ஐந்து பேருக்கு மனைவியாக இருந்தது தான் அதற்குக் காரணம். எட்டு மனைவியை வைத்திருந்த கிருஷ்ணனுக்கு மக்களிடம் இருந்த மரியாதை ஐந்து கணவனை வைத்திருந்த திரௌபதிக்கு இல்லை. பல மனைவியரை ஏற்றுக்கொள்ளும் இந்துமதம் பல கணவர்களை ஏற்றுக் கொள்வதில்லை.

இராமயண காலத்தில் இந்துமதம் ஆணாதிக்க ஒருதார மணத்தை ஏற்றுக்கொள்ளத் தொடங்கியிருந்தது. திராவிடப் பகுதிகளில் தாய்வழிச் சமூகம் நிலை பெற்றிருந்ததால் அங்கே ஆணாதிக்கத் தந்தை வழி ஒருதார மணமுடைய சமூகத்தைப் பார்ப்பனர்கள் புகுத்த முனைந்தார்கள். தென்னிந்திய திராவிட தலித் பகுஜன் சமூகத்தில் ஆண் பெண் சமத்துவம் இருந்தது. இருவரும் சுதந்திரமாகச் செயல்படும் முறை இருந்தது. பெண் தெய்வத்தை மையப்படுத்தியே சடங்குகளும் விழாக்களும் நடைபெறுவது இன்றும் இங்கே நடைமுறையில் உள்ளதை நாம் அறிவோம்.

தென்னிந்தியாவில் வாழ்ந்த தலித் பகுஜன் சமூகத்தைப் பார்ப்பன மயமாக்க மேற்கொண்ட நடவடிக்கைகளின் கதையே இராமாயணம். அது மட்டுமல்லாமல், பார்ப்பன ஆணாதிக்கத்தையும் உருவாக்க முனைந்த கதை. இந்த நோக்கத்தோடுதான் பார்ப்பன ரிஷிகள் ராமன், சீதை, லெட்சுமணனோடு வந்து இங்குள்ள மலைவாழ் பழங்குடி மக்களின் பலராட்சியையும், சுதந்திர தலித் பகுஜன்களின் அரசுகளையும் அழித்துச் சிதைத்தார்கள். புகழ்பெற்ற தலித் பகுஜன் தலைவியாகிய தாடகையைக் கொன்று அவளது அரசைப் பார்ப்பனமயமாக ஆக்கினார்கள். புகழ்பெற்ற சம்புகனைக் கொன்று அவனது ஆட்சியைப் பறித்துக் கொண்டார்கள். கிஷ்கிந்தாவை ஆண்டுவந்த மலைவாழ் பழங்குடி இன அரசன் வாலி இராமனுடைய

*ஆதிக்க நடவடிக்கைகளுக்குக் கடுமையாக எதிர்ப்புத் தெரிவித்தார். பார்ப்பனர்களோ வாலியின் சகோதரன் சுக்கிரீவனையும், வாலியின் மருமகன் ஆஞ்சனேயனையும் நண்பனாக்கிக் கொண்டு அவர்களுடைய துரோகத்தால் சக்திவாய்ந்த வாலியைக் கொன்றார்கள். அதுவும் இராமன் திருடனைப்போல் மறைந்திருந்து வாலியின் மீது அம்பெய்து கொன்றான். சூர்ப்பனகை என்ற அழகான தலித் பகுஜன் பெண், இராமனை மணக்க விரும்பினாள். இராமன் அவளை லெட்சுமணனிடம் அனுப்பி வைத்தான். இலட்சுமணனோ அவளுடைய மூக்கையும் காதுகளையும் துண்டித்து அனுப்பி விட்டான். இந்நிகழ்ச்சி சூர்ப்பனகையின் சகோதரர் இராவணனுக்குக் கோபத்தை மூட்டியது. இராவணன் இராமனுக்குப் பாடம் புகட்ட எண்ணிச் சீதையைக் கவர்ந்து சென்றார். மனைவியைக் கடத்திச் சென்றுவிட்டார் என்பதை வைத்துக்கொண்டு இராமன் அதே மலைசாதி தலித் பகுஜன்களை ஒன்று சேர்த்து எப்படியோ இலங்கையை அடைந்து, இராவணனைத் தாக்கிக் கொன்றான். தலித் பகுஜன்களின் அரசு இராவணனோடு வீழ்ச்சியுற்று தென்னிந்தியா, பார்ப்பன ஆரியர்களால் வெற்றிகொள்ளப்பட்டது. இராவணன் இறந்த பிறகு பல பார்ப்பன ரிஷிகள் வட இந்தியாவிலிருந்து தென்னிந்தியாவிற்குக் குடிபெயர்ந்தார்கள். சாதியற்ற சமூகமாக இருந்த தென்னிந்தியாவில் பார்ப்பனர்கள் நுழைந்து அதைச் சாதி அடிப்படையிலான சமூகமாக மாற்றி, பார்ப்பனீய ஆணாதிக்கக் கருத்தியலைப் புகுத்தி, தங்களுடைய அதிகாரத்தை நிலை நிறுத்தினார்கள்.*

*இவ்விதமாகத் தென்னிந்தியாவில் பார்ப்பனீயம் மேலிருந்து புகுத்தப்பட்டது. நீண்ட காலமாகப் பார்ப்பன சாதியமைப்பை ஏற்றுக் கொள்ளாதிருந்த தென்னிந்தியச் சிவில் சமூகத்தில் பார்ப்பனீயத்திற்குக் கடுமையான எதிர்ப்பு இருந்தது. தென்னிந்திய வரலாற்றில் சாதியமைப் பிற்கும் பார்ப்பனீயத்திற்கும் எதிரான கலகங்கள் ஒரு முக்கியமான அம்சமாகும். பார்ப்பன எதிர்ப்பு இயக்கத்தை (13-ம் நூற்றாண்டில்) பசவா நடத்தினார். பதினேழாம் நூற்றாண்டில் வேமனாவின் இயக்கமும் வீரப்பிரம்மாவின் இயக்கமும் பின்னர் பூலேயின் இயக்கமும், நாராயணகுருவின் இயக்கமும், இருபதாம் நூற்றாண்டில் அம்பேத்கர், பெரியார் இயக்கங்களும் உருவாயின. பார்ப்பன எதிர்ப்புணர்வு தென்னிந்தியாவிலிருந்து பரவியது. வடஇந்தியாவில் உருவான பகுஜன் சமாஜ் கட்சி என்பது தென்னிந்தியாவில் இருந்து பரவிய பார்ப்பன எதிர்ப்பு அரசியல் கலாச்சாரத்தின் நீட்சியாகும்.*

*நான் முன்பே விவாதித்ததைப் போல பார்ப்பன எதிர்ப்பு இயக்கங்கள் தவிர, சிவில் சமூகத்திற்குள்ளேயே பார்ப்பன அரசியல்,*

பொருளாதார, கலாச்சாரப் பாரம்பரியங்களை ஏற்காத பல போக்குகள் இருந்தன. அதன் விளைவாகப் பார்ப்பனப் பாரம்பரியம் தென்னிந் தியாவில் ஆழப் பரவவில்லை. மேலோட்டமாகவே இருந்தது. வட இந்தியாவில் பார்ப்பனீயம் இசுலாமியக் கலாச்சாரத்தைச் சிவில் சமூகத்திற்குள் ஊடுருவ அனுமதிக்கவில்லை. மதம் மாறியவர்களோடும் அரசு நிறுவனங்களோடும் அது முடக்கப் பட்டது. தென்னிந்தியாவில் தலித் பகுஜன்கள் இதே போல் பார்ப்பனியத்தை ஒதுக்கிவைத்தனர். ஒரு காலகட்டத்தில் தென்னிந்திய தலித் பகுஜன்கள் பார்ப்பனர்களைக் கொண்டு சடங்குகள் செய்யத் தொடங்கினார்கள். பார்ப்பனர்களும் தட்சணை என்ற பெயரில் திருமணம் மற்றும் இறப்பு தொடர்பான சடங்குகளில் பணமாகவும், உணவுப் பொருட்களாகவும், பசுவாகவும், நிலமாகவும் பெற்றார்கள். பார்ப்பனப் புரோகிதர்கள் தலித் பகுஜன்களைச் சடங்குகள், சாத்திரங்கள் மூலமாகச் சுரண்டி வருகின்றனர். ஆனாலும் தலித் பகுஜன்கள் தங்கள் கலாச்சாரக் கூறுகளை முற்றிலுமாக இழந்துவிடவில்லை. அவர்களுடைய வேறுபட்ட அரசியல் பொருளாதார விஞ்ஞானச் சிந்தையை விட்டுவிடவில்லை.

தென்னிந்திய தலித் பகுஜன்களுடைய மாற்றுக்கலாச்சாரம், பொருளாதாரம் மற்றும் அரசியல் தனித்துவத்தை நாம் புரிந்துகொள்ள வேண்டுமானால் தலித் பகுஜன் கடவுள்களின் தன்மைகளை நாம் அறிந்துகொள்ள வேண்டும். எங்களுடைய வாழ்க்கை முறையும் தத்துவ தரிசனமும் பெரும்பாலும் இந்தக் கடவுளரின் படிமங்களோடு தொடர்புடையவையாக உள்ளன. இந்தப் பன்மைக் கலாச்சாரக் கூறுகளின் அடிப்படையில் தான் வருங்காலத்தில் தலித் பகுஜன்கள் தங்களுடைய எதிர்காலக் கலாச்சார நெறிமுறைகளை வகுக்க முடியும்.

## தலித் பகுஜன் கடவுளர்

ஏராளமான சாதி அடையாளமும் பிரதேச அடையாளமும் உள்ள ஆண், பெண் கடவுள்கள் தலித் பகுஜன்களுக்குஉண்டு. ஆனால் அவர்களிடத்திலே ஒரு பொதுவான குணமுண்டு.

உற்பத்தி நடவடிக்கைகளிலிருந்து உணர்வைப் பெற்று தலித் பகுஜன் பெண், ஆண் தெய்வங்களின் வடிவங்கள் அமைக்கப் பட்டிருக்கின்றன. இந்த வடிவங்களை உருவாக்கியதில் தலித் பகுஜன்களின் கற்பனையாற்றல் முக்கிய இடத்தை வகிக்கிறது. மனித இருப்பையும், உற்பத்திக்கும் இயற்கைக்குமான உறவையும் மையப் படுத்தியே இத்தகைய கடவுள்களின் வடிவங்கள் உருவாக்கப்பட்டன.

தலித் பகுஜன்களின் பெண், ஆண் கடவுளரின் தத்துவ அடிப்படையும் வித்தியாசமாக அமைகின்றது. இந்தக் கடவுள்கள் சமூகத்தின் ஒரு பிரிவினரை வெற்றி கொள்ளும்படியாக இல்லை. சமூகத்தில் உள்ளவர்களில் ஒரு சிலரைச் சுரண்டும்படியாகவும் இல்லை. ஒரு பொதுவான கலாச்சார நெறி முறைகளை உருவாக்குவதற்காக இக் கடவுளர் உள்ளனர். மக்களின் உற்பத்தி ஆற்றலை உசுப்பி விடுபவர்களாக உள்ளனர். தலித் பகுஜன் பன்முகக் கலாச்சாரத்திற்கும், பார்ப்பன கலாச்சாரத்திற்கும் உள்ள வேறுபாடுகளை யோசித்துப் பார்க்க வேண்டும். அதில் முக்கியமானது என்னவெனில் தலித்பகுஜன்களுக்கு ஆண் கடவுளர்களை விடப் பெண் கடவுளரே அதிகமாக உள்ளனர்.

## பொச்சம்மா

பொச்சம்மா ஆந்திரப்பிரதேசத்தில் தலித்பகுஜன் பெண் கடவுள்களில் பிரபலமான தெய்வம். (இதைப்போல் தன்மையுடைய தலித் பகுஜன் பெண் கடவுள்கள் இந்தியா முழுவதும் உள்ளன என்று நம்புகிறேன்) ஒவ்வொரு கிராமத்திலும் பொச்சம்மா கோயில் இருக்கிறது. இந்த தேவதையைப் பொறுத்த மட்டில் கோயில் என்ற கருத்தே வேறுபட்டது. கோயில் என்பது கடவுள் இருக்கும் ஒரு இடம். ஆனால் அதற்குத் தினமும் பூசை செய்யவேண்டியதில்லை. பூசாரியும் அதற்குத் தேவையில்லை. வருடத்திற்கு ஒரு நாள் பார்ப்பன பனியாக்களைத் தவிர அந்த கிராமத்தில் இருக்கும் மற்ற அனைவரும் பொங்கல்படைத்த பானைகளுடன் சென்று பொச்சம்மாவின் சிலையையும் அந்தப் பகுதியையும் தூய்மைப் படுத்திப் பொச்சம்மாவுக்குப் பூசை செய்கிறார்கள். பூசாரியின் தயவின்றி இந்தத் தேவதையிடம் நேரடியாகப் பேசலாம் “தாயே நாங்கள் வயலில் விதை விதைத்திருக்கிறோம், நீ தான் அந்தப் பயிர் வளர உதவ வேண்டும்; எங்கள் குழந்தையில் ஒன்று நோய்வாய்ப் பட்டுள்ளது, நீ தான் அதைக் குணப்படுத்த வேண்டும்'' என்பது போன்ற வேண்டல்களை அந்தத் தேவதையிடம் வைப்பார்கள். இவற்றை உற்றுக் கேட்டால் இவை மிகச் சாதாரணப் பிரச்சினைகள் என்பது தெரியவரும். அவை எதுவும் அசாத்தியமானவை அல்ல. சிறிதளவு 'போனாலு' (பொங்கல்) என்ற உணவை இலையில் அந்த தேவதையின் முன்னால் மக்கள் வைக்கிறார்கள். இறுதியாகக் கோழியோ, ஆடோ பலியிடப்படுகிறது. தலித் பகுஜன்கள் பறையடிக்க, இளைஞர்கள் கூடி ஆடிப்பாடி மகிழ்கிறார்கள்.

பொச்சம்மா பற்றிய கருத்து என்ன? பொச்சம்மா என்பது எல்லா வியாதிகளையும் தீர்க்கக்கூடிய ஒரு நபர். சீதையைப் போன்று

இல்லாமல் அந்த அம்மனுக்குக் குறிப்பிட்ட வேலை ஏதும் நிர்ணயிக்கப்படவில்லை. அந்த அம்மனின் கணவரைப் பற்றி யாருக்கும் தெரியாது. கணவர் இல்லை என்பதற்காக இந்த அம்மனை இழிவாக யாரும் கருதுவதும் இல்லை. சரஸ்வதி, லெட்சுமி போன்ற கடவுள்களுக்கும் பொச்சமாவுக்கும் இடையிலான வேறுபாடு தெளிவானது. பொச்சம்மா சுதந்திரமானவர். அவர் எந்த ஒரு மனிதனுக்கும் சேவை செய்வதாய் பாசாங்கு செய்வதில்லை. அவருக்கும் மக்களுக்கும் இடையேயான உறவு ஆண் பெண் என்ற வேறுபாடற்றது; சாதிய உணர்வற்றது; வர்க்கமற்றது. கிராமத்திலிருக்கிற எல்லோருடைய நலனிலும் அக்கறை உள்ளவராக பொச்சம்மா உள்ளார். இயற்கையோடு அவர் தொடர்புள்ளவர். எல்லா மொழிகளையும் அறிந்து கொள்ளக் கூடியவர் என்ற நம்பிக்கையிலிருந்தே மக்களுக்கும் அந்தத் தேவதைக்கும் இடையில் உள்ள நெருக்கமான தொடர்பை அறிந்து கொள்ளலாம். மக்கள் தங்கள் மொழியிலேயே அந்தத் தேவதையிடம் பேசலாம். ஒரு பார்ப்பனர் சமஸ்கிருதத்திலும், ஒரு ஆங்கிலேயர் ஆங்கிலத்திலும் அவரோடு பேசலாம்.

பொச்சம்மாவின் கோயிலுக்குச் செல்வதற்கு முன்பு ஒவ்வொருவரும் குளித்துப் புதிய ஆடையை அணிந்து கொள்கிறார்கள். அங்கே போகும்போது யாரும் பட்டு வஸ்திரம் அணிய வேண்டும் என்றோ அல்லது நாள் முழுவதும் விரதம் இருந்துதான் அந்த ஆலயத்திற்குப் போகவேண்டும் என்றோ அவசியம் இல்லை. மக்கள் தமது வீடுகளில் கிடைத்ததை உண்ணலாம். கள்ளோ சாராயமோ குடிக்கலாம். அதனால் பொச்சம்மா சைவ உணவுக்காரர்களை வெறுக்கிறார் என்று பொருளல்ல. ஆனால் இந்துக் கடவுள்கள் மாமிசம் உண்பவர்களை வெறுக்கின்றன. புராதன இந்தியாவில் இவை சைவர்களை வெறுத்தது வேறு கதை. பொச்சம்மா ஆலயத்திற்குக் காய்கறி உணவுடனும் செல்லலாம். அது மக்கள் தேவதையாக இருப்பதால் மக்களுடைய பழக்கவழக்கங்களை அனுதாபத்துடன் நோக்குகிறது. தலித் பகுஜன்களிடத்தில் புரோகிதக் கோட்பாட்டிற்கு இடம் இல்லையாதலால் ஒவ்வொருவரும் தன்விருப்பப்படி அந்தத் தேவதையை வழிபடலாம். முஸ்லிம்களும் கிறித்தவர்களும் அங்கே சென்று கும்பிடலாம். மதவேறுபாடுகள் அதற்குக்கிடையாது. சாதி வேறுபாடும் அங்கே இல்லை. குறிப்பிட்டப் பொருள்களைத்தான் அந்த அம்மனுக்குப் படைக்கவேண்டும் என்கிற நடைமுறை இல்லை. காணிக்கை என்பது அவரவர்களின் பொருளாதார நிலையைப் பொறுத்தது. வசதியானவர்கள் ஒரு புடவை, ரவிக்கை மற்றும் 'போனலு' என்ற உணவுடன் கோயிலுக்குச் சென்று அந்த

தேவதையின் முன்வைத்து வழிபட்டு, பின் அந்த உணவைத் தத்தம் வீடுகளுக்கு எடுத்துச் சென்றுவிடுவார்கள். எதையும் கொடுக்க வசதியில்லாதவர்கள் வெறுங்கையோடு சென்று அந்த அம்மனை வணங்கலாம். பொச்சம்மா ஆலயம் இராமன், கிருஷ்ணன், வெங்கடேஸ்வரா ஆலயம் போல மையப்படுத்தப் பட்டு ஒரு குறிப்பிட்ட ஊரில் அமைந்திருக்கவில்லை. ஒவ்வொரு கிராமத்திலும் அந்த அம்மனுக்குக் கோயில் உண்டு. மக்கள் அதை வணங்க நீண்ட தூரம் பயணம் செய்யவேண்டியதில்லை. இவை யாவும் மக்களுடைய சமூக, பொருளாதார வாழ்க்கையோடு தொடர்புடைய விசயங்களாக உள்ளன. பொச்சம்மா என்ற தேவதையைச் சுற்றிக் கட்டப்படுகிற ஆன்மீகம் மக்களைப் பிரிப்பது இல்லை. முரண்பாடுகளை உருவாக்குவது இல்லை. ஒருவரை நண்பராகவும் மற்றவரை விரோதியாகவும் இது கருதுவதில்லை.

பொச்சம்மா இன மத முரண்பாடுகளில் நம்பிக்கை உடைய தேவதை அல்ல. அந்த ஆலயத்தில் மக்கள் கூடியிருக்கும் போது அங்கு ஒரு பன்றி செல்லுமேயானால் அதற்கு யாரும் மறுப்பு தெரிவிப்பதில்லை. தலித் பகுஜன் கலாச்சாரத்தில் பன்றி உட்பட எந்த மிருகமும் புனிதமற்றதாகக் கருதப்படுவது இல்லை. பொச்சம்மா ஆலயத்தின் காரணமாக ஒரு சிறு இனக்கலவரம் கூட தோன்றியதாகச் சொல்லமுடியாது. இந்த மாதிரி கலகங்கள் இராமன், கிருஷ்ணன், நரசிம்மன் ஆலயங்களில் இருந்து தான் ஆரம்பமா கின்றன. அதே போல முஸ்லிம்களின் மசூதியிலிருந்தும் தோன்றி யிருக்கின்றன. பொச்சம்மா என்ற தேவதை தாந்திரீகக் கலாச்சாரத்தில் தோன்றியதா? அல்லது பொருள் முதல்வாதக் கலாச்சாரத்தி லிருந்து உருவானாதா? அந்தக் கிராமத்தில் பல மந்திரவாதிகள் இருக்கிறார்கள். அவர்களும் பார்ப்பனர்களைப் போன்று வேறுலக சக்தியை நம்புகிறார்கள். ஆனால் இந்தக் கிராமத்து மந்திரவாதிகளுக்கும் பொச்சம்மாவுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. அவர்கள் தேவதைகளை அழைத்து மக்களுடைய நிலைமைகளை மாற்றுவதாகச் சொல்லிக் கொள்கிற தனிப்பட்ட மனிதர்கள். ஆனால் எந்த மந்திரவாதியும் இந்த பொச்சம்மா என்ற தேவதையைக் கட்டுப்படுத்தி வைத்திருப்பதாகச் சொன்னதேயில்லை. பொச்சம்மாவுக்கும் மக்களுக்கும் இடையில் எந்தத் தரகும் கிடையாது. அங்கு ஆண் பெண் அருளாடிகள் உண்டு. இந்த கிராமத்து மந்திரவாதிகள் குதிப்பார்கள், நடனமாடுவார்கள்; தங்களின் நீண்ட தலைமுடியை அவிழ்த்து விட்டுக் கொள்வார்கள். சக்தி வாய்ந்த மரங்கள் மற்றும் மூலிகைகளின் பெயர்களையும், அவற்றைக் கண்டு பிடித்த மூதாதையர்களின் பெயர்களையும் உரத்துக்

கூவுவார்கள். இந்தச் சாமியாட்டத்தை 'சிவமுத்துலுதா' என்றும், இந்தச் சாமியாடிகளை 'சிவசாதுலு'க்கள் என்றும் அழைப்பார்கள். சில சமயங்களில் இவர்கள் குறிப்பான ஒரு தேவதைக்குச் சாமியாடுவார்கள். பொச்சம்மாவுக்குச் சாமியாடும் சிவசாதுக்களும் உண்டு. நாள் முழுக்க உற்பத்தி வேலைகளில் ஈடுபடும் இவர்கள் இரவில் இப்படிச் சன்னதம் கொள்வார்கள். இந்நிலையைச் 'சிவம்' என்று அழைப்பதுண்டு. பெண் சாமியாடிகளும் உண்டு. பெரும்பாலும் இவர்கள் விதவைகளாக இருப்பர். நாள் முழுக்கவுமான வேலைக்குப் பிறகு இவர்களும் சன்னதம் கொள்வார்கள். இந்தப் பெண் சாமியாடிகளை 'சிவசாதி'கள் என்று அழைப்பர். சிவசாதி நிலை என்பது விதவைகளுக்கான ஒரு சமூக வெளிப்பாடு எனலாம். அவர்கள் யாரும் பணத்திற்காக மக்களை ஏமாற்றுவதில்லை. வியாதிகளைக் குணப்படுத்தமுடியும் என்று அவர்களில் யாரும் கூறுவதில்லை. பொச்சம்மா படித்தவரா, படிக்காதவரா என்ற வினாவிற்கு யாருக்கும் பதில் தெரியாது. ஆனால் அந்த அம்மையாரைக் கல்வியோடு தொடர்புபடுத்தி யாரும் பேசுவது இல்லை அந்தக் கிராமத்து மக்களுடைய தேவைகளின் அடிப்படையில் உற்பத்தி, மறுஉற்பத்தி மற்றும் வியாதி போன்றவையோடு தொடர்புடையவராக உள்ளார். பொச்சம்மா ஒரு பொருள் முதல்வாதி, அன்றாட மனித வாழ்வோடும் அவர்களின் தேவைகளோடும் தொடர்புடைய தேவதை.

### கட்டமைசம்மா

பொச்சம்மாவுக்கு அடுத்ததாகச் சிறப்பு வாய்ந்த தேவதை கட்டமைசம்மா. இது ஒரு நீர்க் கடவுள். அதனால் அதன் உருவம் குளக்கரையில் அமைந்துள்ளது. அதற்குப் பெரிய ஆலயம் எதுவும் கிடையாது. குளம் நிரம்புவதற்கு அவரே பொறுப்பு என்று கிராமத்து மக்கள் நம்புகிறார்கள். இந்தத் தேவதை நீர் ஆதாரங்களை ஒழுங்கு படுத்துகிறது. விதை விதைத்த நாள் முதல் கதிர் அறுக்கும் நாள்வரை பயிர்களைப் பாதுகாப்பது அந்தத் தேவதைதான் என்றும் மக்கள் நம்புகிறார்கள். அந்த அம்மனின் கிருபையில் பயிர்கள் செழித்து வளர்கின்றன. இப்போது அந்த நம்பிக்கை சிறிது சிறிதாகக் குறைந்து வருகின்றது. இப்போது பயிர்களின் தரம் ரசாயன உரங்களையும், பூச்சிமருந்துகளையும் பொறுத்ததே என்று மக்கள் நம்பத் தொடங்கி விட்டார்கள். அதனால் ஒரு சராசரி படிக்காத விவசாயி கூட பயிர்களுக்கு உரமிடத் தவறுவதில்லை. அந்த வகையில் தலித் பகுஜன்களின் எண்ணம் விஞ்ஞானத்தை நாடுவதாகவும், வளர்ந்து வரும் தொழில் நுட்பத்தையும், விஞ்ஞானத்தையும் தனக்குச் சாதமாகப் பயன்படுத்திக் கொள்ளத் தயாராவதாகவும் இருக்கிறது. இருந்தும்

கட்டமைசம்மா இன்றும் அவர்களின் உணர்வுகளில் முக்கிய இடம் வகிக்கிறார்.

ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை கட்டமைசம்மாவுக்காக ஒரு பெரிய திருவிழா நடத்தப்படுகிறது. சில கிராமங்களில் செம்மறி ஆடுகள், வெள்ளாடுகள், கோழிகள் பலியிடப்பட்டு ஒரு பெரிய விருந்துக்கு ஏற்பாடு செய்யப்படுகிறது. பொங்கலிட்டுப் பலியிட்ட பிராணிகளின் இரத்தத்தை அதில் கலந்து வயல்களில் தெளிக்கிறார்கள். இந்தக் காணிக்கையின் விளைவாகக் கட்டமைசம்மா வயல்களில் நல்ல பலனைத் தருவாள் என்றும் அந்தப் பயிர்கள் சமுதாயத்திற்கும் மக்கள் அனைவருக்கும் உபயோகமானதாக இருக்கும் என்றும் நம்புகிறார்கள். 'பரகதி' அதாவது வளமான பயன்பாடு என்று இதற்குப் பெயர்.

கட்டமைசம்மாவினுடைய உண்மை வரலாறு என்ன? சமூகத் தோற்றம் என்ன? மேலோட்டமாக ஒரு ஆய்வைச் செய்தோமானால் கட்டமைசம்மா ஏரிப்பாசனத் தொழில் நுட்பத்தைக் கண்டுபிடித்த ஒரு தலித் பெண் என்பது விளங்கும். ஏரிகளைச் சுற்றி விவசாய நிலங்களைக் கண்டறிந்து அவற்றைப் பயன்படுத்த முனைந்தவராகவும் ஏரியை எப்படி அமைப்பது, எப்படிக் கரைகட்டுவது, நீரை எப்படித் தேக்கிவைப்பது என்று அறிந்தவராகவும் அவர் உள்ளார். இத்தகைய கண்டுபிடிப்புகள் விவசாய வளர்ச்சியைப் பெருமளவில் அதிகரிக்கும் என்பதில் ஐயமில்லை.

## பொலிமேரம்மா

தலித் பகுஜன்கள் உருவாக்கிய மற்றொரு பிரபலமான கடவுள் பொலிமேரம்மா என்ற எல்லைப்புறப் பெண் தெய்வம். கிராமத்திற்கு வெளியிலிருந்து வருகிற தீமைகளையெல்லாம் அந்தத் தெய்வம் தடுத்து நிறுத்திவிடுவதாக நம்பப்படுகின்றது. சாதி சமய வேற்றுமையின்றி கிராமத்திலுள்ள அனைவரையும் பாதுகாப்பதே தமது கடமை என அந்தத் தேவதை கருதுகிறார். இந்தத் தெய்வத்திற்கு ஐந்து அல்லது பத்து ஆண்டுகளுக்கு ஒரு முறை எருமையைப் பலியிட்டு அதைச் சமைத்துச் சாப்பிடுகிறார்கள். குறிப்பாக மாலா, மாடிகா மற்றும் முஸ்லிம்கள். இந்தச் சடங்குகளிலிருந்து முஸ்லிம்கள் ஒதுக்கி வைக்கப்படுவதில்லை. எருமையின் ரத்தத்தைப் பொங்கலோடு சேர்த்து ஒவ்வொரு வீட்டுக் கூரையிலும் தெளிக்கப்படுகிறது. விவசாயக் குடும்பங்கள் அனைத்தும் இந்தப் பலியை விரும்புகிறார்கள். ஆகையால் பார்ப்பனர்களும் பனியாக்களும் இதில் கலந்து கொள்வதில்லை. முஸ்லிம்கள் அங்கு கிராமத்தில் விவசாய அமைப்புக்கு

உட்பட்டவராக இருப்பதால் அவர்களும் அந்தப் பலியில் பங்கு பெறுகிறார்கள்.

முஸ்லிம் ஆண் பெண்கள், தலித்பகுஜன் ஆண் பெண்களோடு கலந்து நாற்றுநடவும், களை எடுக்கவும், அறுவடை செய்யவும் போகிறார்கள். தலித் பகுஜன்கள் வயலுக்குக் கொண்டுவரும் உணவைப் பகிர்ந்து கொள்கிறார்கள். அவர்கள் செய்கின்ற ஒவ்வொரு வேலையிலும் பங்கு கொள்கிறார்கள். பீரிலா எனப்படும் மொகரம் திருவிழாப்பண்டிகை எந்த அளவிற்கு முஸ்லிம்களுக்கு உரியதோ, அப்படியே தலித் பகுஜன்களுக்கும் உரியதாக உள்ளது. மொகரம் ஊர்வலத்தை தலித்பகுஜன்கள் முன்னின்று நடத்துகிறார்கள். அவர்களும் 'பீரி'யைத் தோளில் சுமந்து செல்கிறார்கள். 'பீரி' என்பது தாமிரத் தகடுகள் பதிக்கப்பட்டு வண்ணத் துணிகளால் அலங்கரிக்கப்பட்ட மரத்தாலான ஒரு பெரிய வடிவம். முக்கியப் பண்டிகைகளின்போது முஸ்லிம்கள் வீட்டில் தயாராகும் பிரியாணி, தலித் பகுஜன் வீடுகளுக்கும் பகிர்ந்தளிக்கப்படுகிறது. இந்த உறவின் அடிப்படையில் தலித் பகுஜன்களுடைய விவசாயச் சம்பந்தமான விழாக்களில் முஸ்லிம்களும், முஸ்லிம்களுடைய விழாக்களில் தலித்பகுஜன்களும் கலந்து கொள்வது இயல்பாக இருக்கிறது. இந்த நெருக்கமே பலியில் பங்கு கேட்பதற்கு இட்டுச் செல்கிறது. இந்தப்பலி வீடுகளின்மீது தெளிக்கப்பட்டபிறகு அந்தக் கிராமம் ஒரு வாரத்திற்கு அந்நியர்கள் நுழையமுடியாதபடி தடுக்கப் படுகிறது. இதன் கருத்து என்னவெனில் வெளிக்கிராமத்திலிருந்து வியாதியும் தீங்கும் வந்துவிடக்கூடாது என்பதாகும். அதே போல இந்தக் கிராமத்து மக்களும் வெளியே செல்வது தடுக்கப்படுகிறது. இந்தக் காலத்தில் கிராம நலம் மற்ற நல்லது கெட்டதுகள், உற்பத்தி, மறு உற்பத்தி, வியாதிகள் எனப் பல விடயங்கள் இங்கே விவாதிக்கப் படுகின்றன.

## மற்ற அம்மன்கள்

கிராமத்துக்கேயுரிய; ஒரு பகுதிக்கேயுரிய, சாதிக்கேயுரிய பல அம்மன்கள் இங்கே உண்டு. எல்லம்மா, மங்களம்மா, மாறம்மா, உப்பளம்மா, சம்மக்கா, சரக்கா போன்றவை அவற்றில் சில. இதில் முக்கியமான அம்சம் என்வெனில், அந்த அம்மன்கள் பெண்களுக்கான குறிப்பான வேலை ஏதும் செய்வது இல்லை. அவர்கள் தங்கள் கணவன்மார்களுக்குக் கட்டுப்படவோ அவர்களைக் கட்டுப் படுத்துவதோ இல்லை. மேலும் அவர்கள் ஆண்களுக்கு அடிமையாகவும் இல்லை. ஆண்களை அடிமைப்படுத்தவும் இல்லை. இந்த அம்மன்கள்

யாரும் மென்மையான பெண்மைக் குணங்களைப் பிரதிபலிப்பதாகவும் காட்டப்படுவதில்லை. அவர்களில் யாரும் தாமரை மலரில் அமர்ந்திருப்பதாகவோ, மயிலின்மீது பிரயாணம் செய்வதாகவோ, அன்னத்தின் மீதேறிப் போவதாகவோ கதை சொல்லப் படுவதில்லை. லெட்சுமி, சரஸ்வதியைப் போல தன் கணவர்களின் கால்களை அழுத்திப் பணிவிடை செய்து கொண்டிருப்பதாகவும் காட்டப்படவில்லை. தலித்பகுஜன் ஆண்களும் இந்த அம்மன்களை வணங்குகிறார்கள். இந்த அம்மன்கள் சக்திவாய்ந்த சுதந்திரமான பெண்கள். வங்காளத்தில் இருக்கிற காளியம்மன் பயங்கரமான அடங்காப் பிடாரியாகவும், மண்டை ஓடுகளை மாலையாக அணிந்து கொண்டு பிணங்களின் மீது நடனமாடுபவளாகவும் சொல்லப்படுகிறது. ஆனால் தென்னிந்திய தலித் பகுஜன் தெய்வங்கள் இதுபோன்ற கொடியவர்களாக இல்லை.

அவர்கள் கிராமத்தின் நலனுக்காகப் பலவற்றைக் கண்டுபிடித்த அறிவாளிகளாக அறியப்படுகிறார்கள். கிராமத்தை ஆபத்திலிருந்து காப்பது, பயிர்களையும் செல்வத்தையும் பாதுகாப்பது போன்றவை அவர்களின் கடமைகளாகும்.

இன்னும் சில அம்மன்கள் யுத்தங்களில் ஈடுபட்டு ஒரு பகுதியையே காப்பாற்றுகின்றவர்களாக இருக்கிறார்கள். உதாரணத்திற்கு தெலுங்கானா மாவட்டத்தில் மிகவும் பிரபலமான ‘சம்மக்கா’ மற்றும் ‘சரக்கா’ என்ற மலைவாழ் பழங்குடி இன தெய்வங்களைக் குறிப்பிடலாம். இந்த தெய்வங்களின் கதைகள் வீரஞ்செறிந்தவை. 12,13ம் நூற்றாண்டுகளில் காகதீய அரசர்கள் ‘முலுகு’ பழங்குடிப் பகுதியில் படையெடுத்து வந்தபோது இவர்கள் எதிர்த்துப் போரிட்டவர்கள். காகதீய படைகள் இவர்களை வெற்றிகொண்டன. சம்மக்காவின் சகோதரன் ஜம்பண்ணா, சம்மக்கா மற்றும் சரக்கா ஆகியோர் வாரங்கல் மாவட்டத்தில் உள்ள சம்பணவாகு என்ற இடத்தில் கொல்லப்பட்டார்கள். அந்தநாள் முதற்கொண்டு சம்மக்காவும் சரக்காவும் அந்த மழைவாழ் பழங்குடியினரின் தெய்வங்கள் ஆனார்கள். பிறகு இந்தத் தெய்வங்களுக்குத் திருவிழா கொண்டாடும் பழக்கத்தை ஏற்படுத்தினார்கள்.

இந்துக்கடவுள்களைப் போல் இல்லாமல் சம்மக்காவும் சரக்காவும் யுத்தக்களத்திலிருந்து தேவதைகளாக உருவெடுத்தார்கள். அவர்கள் யாரையும் அனாவசியமாகப் போரிட்டு வெற்றி கொண்டவர்கள் அல்ல. மற்றவர்களை அடக்கநினைத்தவர்களும் அல்ல. அவர்கள் தங்களுடைய மக்களைப் பாதுகாக்கப் போரிட்டு மாண்ட தியாகச் செம்மல்கள். பொதுவாகப் போரில் உயிர்நீத்த

தியாகிகளைத் தெய்வமாக்கிவிடுவது வழக்கம். இயேசுகிறிஸ்துவி னுடைய கதையும் இதை எடுத்துக்காட்டுகிறது. அவர் மக்களுக்காகப் போராடி சிலுவையில் அறையுண்டு மாண்டுபோய் பின்னர் தெய்வமாக்கப்பட்டவர். இந்து ஆண் பெண் கடவுளரில் ஒருவர்கூட மக்களுக்காகப் போராடி உயிர் நீத்தவர் இல்லை. அவர்களெல்லாம் இந்தி மற்றும் பிரதேச மொழிகளில் காணப்படும் சினிமாக் கதாநாயகர்களைப் போலவே இருந்தார்கள். எந்தக் கதையாக இருந்தாலும் இறுதியில் வெற்றிபெறுகிற கதாநாயகனோ, கதாநாயகியோ செய்யும் வன்முறை நியாயப்படுத்தப்படுவது மட்டுமல்லாமல், அது ஒரு கலாச்சார நெறி என்றும் போற்றப்படுகிறது. இதுவே இந்துக் கலாச்சாரத்திற்கும் இதர கலாச்சாரங்களுக்கும் உள்ள வேறுபாடு. தலித்பகுஜன் பாரம்பரியத்தில் இந்துக்கதைகளில் இருப்பது போன்ற வன்முறைகள் நியாயப்படுத்தப்படுவதில்லை.

## பொத்தராஜு

தலித் பகுஜன் ஆண் கடவுளர் பற்றிய கதையாடல்களுக்கும் இது பொருந்தும். இதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு பொத்தராஜு பற்றிய கதை. கிராமத்தின் பொதுவான கடவுள் இவர். விவசாயி களிடத்தில் பிரபலமானவர். வெள்ளையடித்து மஞ்சள் தெளித்து இந்தக் கடவுளை ஒவ்வொரு விவசாயியும் வீட்டில் வைத்திருக்கிறார். இந்தத் தெய்வம் கோயிலோடு சம்பந்தப்பட்டது இல்லை. ஒரு சதுர அடி நிலம்கூட அதற்குத் தேவை இல்லை. அதே சமயத்தில் இந்துக் கடவுள்கள் விவசாயத்திற்குப் பயன்படக்கூடிய, குடியிருப்புக்கு உதவக்கூடிய பல ஏக்கர் நிலங்களை ஆக்கிரமித்து, கோயில்களும் பிரம்மாண்டமான மதிற்சுவர்களும் எழுப்பிக் கொண்டுள்ளனர். பொத்தராஜு வணக்கத்தில் எந்தவிதமான சடங்குகளும் கிடையாது. பயிர்களைத் திருடர் களிடமிருந்தும் ஆடுமாடுகளிடமிருந்தும் காப்பாற்றுகிறார் என்பது மக்களின் நம்பிக்கை. இந்த நம்பிக்கையில் விவசாயிகள் நிலத்தை காவல்காக்கப் போவதில்லை. யாரும் தானியங்களைத் திருடுவதும் இல்லை. ஏனெனில் பொத்தராஜுவின் கோபத்திற்கு ஆளாக நேரிடும் என்கிற அச்சம். ஒரு திருடன், வயலில் பொத்தராஜு உருவத்தைப் பார்த்தவுடன் அங்கு எதையும் திருடுவது இல்லை. இதற்காக இந்த மக்களிடமிருந்து பொத்தராஜு எதை எதிர்பார்க்கிறார்? அறுவடை முடிந்தபிறகு ஒரு கோழியைப் பலியிடுகிறார்கள். இதனால் பொத்தராஜு திருப்தியடைவதாக மக்கள் நம்புகிறார்கள். இந்தக் கோழிக்கறியை எல்லோரும் பங்கிட்டுக் கொள்கிறார்கள். சாமிக்கு என்று எதையும் ஒதுக்குவது இல்லை.

எந்தக் கிராமத்துக் கடவுளர்க்கும் புரோகிதர் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

கிராமத்துக் கடவுள்கள் யாகங்களோடும் தொடர்பு உடையவை யல்ல. புளியோதரை, தயிர்சாதம், பொங்கல் இன்னபிற பலகாரங்கள் போன்றவை அந்தத் தெய்வங்களுக்குப் படைக்கப்படுவது இல்லை. கடவுளைத் திருப்திப் படுத்த நெய்யைத் தீயில் ஊற்றுவதும் இல்லை. சமீபகாலமாகப் பார்ப்பனீயப் பாதிப்பினால் கடவுளுக்குத் தேங்காய் உடைக்க ஆரம்பித்திருக்கிறார்கள். விவசாயிகள் சில நேரம் தாம் உடைத்த தேங்காயையும் அறுத்த எலுமிச்சைப் பழத்தையும் தெரு முனைகளில் வீசி, பேயை விரட்டிவிடுவதாக நம்புகிறார்கள். மற்றபடி தலித் பகுஜன்கள் சாமி கும்பிடும்போது எந்த ஒரு உணவுப் பொருளையும் வீணடிப்பதில்லை.

## பீரப்பா

நிறைய கடவுள்கள் குறிப்பிட்ட சாதிக்குரியவைகளாக இருக்கின்றன. பீரப்பா யாதவர் கடவுள்; கட்டமராஜு கௌடா கடவுள். அந்தந்த சாதிக்குரிய தொழிலை நிலைநாட்டும் பொருட்டு இந்த சாதிக்கடவுள்கள் உருவாக்கப்பட்டதாக இவற்றின் கதைகள் கூறுகின்றன. அந்தந்த சாதியின் கலாச்சாரத்தை நிலை நிறுத்தப் போராடியதாக இந்தக் கதைகள் அமைகின்றன. உதாரணமாக, பீரப்பாவின் நீண்ட கதையை ஒவ்வொரு திருவிழாவின் போதும் நாடகம் போலச் சொல்லுகிறார்கள். இந்தக் கதைசொல்லும் முறைக்குத் தனி இசைக்கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன. இந்தக் கதை சொல்லி பீரப்பா மாதிரி உடையணிந்து கொள்கிறான். இந்தக் கதையினூடே நளினமான நடனமும் இடம் பெறுகின்றது. இந்தக் கதையைத் தெரிந்த ஒரு பார்ப்பனனை அல்லது பனியாவை இதுவரை நான் சந்தித்தே இல்லை. ஆனால் எங்கள் வாழ்வின் ஒரு கூறாகவே இந்தக் கதை உள்ளது. குருமா, கொல்லா இளைஞர்கள் பலர் பீரப்பாவைத் தங்களது இலட்சிய வீரனாக நினைத்துக் கொண்டாடுகிறார்கள். அதே போன்று அந்த சமூகத்து இளம் பெண்கள் பீரப்பாவின் சகோதரியான அக்கம்மன் காளியை ஒரு இலட்சியப் பெண்ணாகக் கருதுகிறார்கள்.

பீரப்பாவின் கதை இதுதான். அவர் ஒரு திறமையான ஆடு மேய்ப்பவராக இருந்தவர். இருபது வயது வரை திருமணம் செய்துகொள்ள வில்லை. இளமையிலேயே தாய் தந்தையரை இழந்தவர். அவரை வளர்ப்பதற்காகவே அவரது சகோதரி அக்கம்மன் காளியும் திருமணம் செய்து கொள்ளவேயில்லை. இருவரும்

திறமையாக ஆடு வளர்த்தார்கள். அந்தக் குடும்பம் அக்கம்மன் காளியினுடைய கட்டுப் பாட்டில் இருந்தது. யாதவர் குடும்பங்களில் பெண் தலைமை இருந்தது என்பது இதிலிருந்து புரியும். பீரப்பாவின் மாமாவுக்கு ஒரு பெண் இருந்தாள். அவள் பெயர் காமரதி. பீரப்பா, காமரதியைத் திருமணம் செய்துகொள்ள விரும்பினார். ஆனால் அவருடைய மாமா அதற்கு இசையவில்லை. ஏனெனில் பீரப்பா ஒரு ஏழை. தாய் தந்தையற்ற அனாதை. மேலும் அவரிடம் ஒரு சில ஆடுகளே இருந்தன. ஆனால் அவருடைய மாமாவிடம் ஒரு ஆட்டு மந்தையே இருந்தது. இந்தநிலையில் பீரப்பா அந்தப் பெண்ணையே திருமணம் செய்து கொள்வது என்று உறுதியாக இருந்தார். தான் பெரியவனாகி, தன்னுடைய ஆடுகளை வளர்த்துப் பெருக்கி, தன்னுடைய மாமாவைத் தோற்கடித்து அவளைத் திருமணம் செய்யவேண்டும் என்று எண்ணினார். அவருடைய அக்காள் அக்கம்மன் காளி இந்த முயற்சியைக் கைவிட்டுவிடும்படி அவரைக் கேட்டுக்கொண்டாள். ஏனெனில் அவர் மாமன் ஒரு கொடியவன், அவனை வெல்வது கடினமானது என்பதை அவள் உணர்ந்தாள். ஆனால் பீரப்பாவோ பிடிவாதமாக இருந்தார்.

ஒரு நாள் பீரப்பா தன் த்மக்கையைச் சம்மதிக்க வைத்தார். அவருடைய மாமாவின் கிராமத்திற்குச் சென்று காமரதியைச் சந்தித்து இருவரும் ஒடிவிடலாம் என்று திட்ட மிட்டார்கள். இதையறிந்த அவர் மாமா தனது அடியாட்களுடன் வந்து பீரப்பாவைத் தாக்கினார். ஆனால் பீரப்பா தன்னுடைய மாமாவைத் தோற்கடித்து, காமரதியை அழைத்துக்கொண்டு வந்துவிட்டார். அக்கம்மன்காளி தன்னுடைய கிராமத்து மக்கள் உதவியுடன் இருவருக்கும் திருமணத்தை நடத்தி வைத்தார்.

இந்தக் கதையில் அக்கம்மன்காளி, பீரப்பா, காமரதி ஆகியோரது காட்சிகள் தனித்தனியாக விவரிக்கப்படுகின்றன. அக்கம்மன் காளி தன்னுடைய சகோதரன் இல்லாத நேரத்தில் ஆடு மேய்ப்பது, ஆடுகளின் ரோமத்தைக் கத்திரிப்பது, ஆடுகளில் பால்கறப்பது போன்றவற்றைக் காண்கிறோம். அக்கம்மன்காளி ஆடு வளர்ப்பது சம்மந்தமான எல்லா நடவடிக்கைகளிலும் திறமையானவர். இங்கே உடலுழைப்பில் ஆண் பெண் என்ற வேறுபாடுகள் பிரித்துக் காட்டப்படவில்லை. பீரப்பா குடும்பத்தில் அக்கம்மன்காளியின் பாத்திரம் பார்ப்பன குடும்ப அமைப்பிற்கு முற்றிலும் வேறுபட்டது. குருஜடா அப்பாராவின் 'கன்னியாசுல்கம்' நாவலில் வரும் பார்ப்பன விதவை புக்கம்மாவிற்கும், அக்கம்மன் காளியின் பாத்திரத்திற்கும் நிறைய வேறுபாடுகள் உள்ளன.

இந்துப் பார்ப்பனக்கதைகளில் உள்ள லெட்சுமி, சரஸ்வதி, சீதாவின் கதைகளுக்கும் இது எதிரானது. அக்கம்மன்காளி திருமணம் செய்யாமல் இருக்கிறாரே என்று பீரப்பா ஒரு போதும் கடிந்து கொண்டதேயில்லை. அக்கம்மன்காளியும் ஒரு ஆதரவற்ற பெண்ணைப் போல் என்றுமே நடந்து கொண்டதில்லை. அந்தக் குடும்பத்தின் முக்கியமான நிகழ்வுகளில் எல்லாம் அக்கம்மன் காளி பங்கெடுக்கிறார். பீரப்பாவும் தன் தமக்கை அக்கம்மன் காளியிடம் கலந்து ஆலோசிக்காமல் எதையும் செய்வது இல்லை. இக்கதை முழுமையாகக் காதல் கல்யாணம் என்ற கருத்தை வலியுறுத்துவதற்கும், ஆண் பெண் சமத்துவத்தை ஆதரிப்பதற்கும், ஆடு வளர்ப்பதை ஒரு தொழிலாகக் காட்டவுமே பயன்படுகிறது.

தலித் பகுஜன்களின் இத்தகையக் கடவுள் படிமங்கள் எதை உணர்த்துகின்றன? இவைகளின் கலாச்சார, பொருளாதார, அரசியல் நெறிமுறைகள் முற்றிலும் இந்துக் கடவுள்களுடைய ஆதிக்கத் தன்மையிலிருந்து வேறுபட்டவை. தலித் பகுஜன் கடவுளர் அனைவரும் பண்பாட்டு அடிப்படையில் உற்பத்தி, மறு உற்பத்தி, பாதுகாப்பு இந்தப் பின்னணியில் உருவானவர்களே. தங்கள் சமுதாயத்தின் உட்சாதிகளுக்கு இடையே அவர்கள் வேறுபாடு காட்டுவது இல்லை. இந்தக் கதைகளில் எதிரிகளின் உருவாக்கமுமில்லை. போரும் சமாதானமும் இந்தக் கதைகளில் முக்கியம் இல்லை. சடங்குகள் சாதாரணமானவை, அதனால் பொருளியல் இழப்பு ஏற்படுவதில்லை. உற்பத்தியில் தொடர்பற்ற எந்தவொரு புரோகிதருக்கும் அங்கு இடமில்லை. இதனால் கடவுளுக்கும் மக்களுக்கும் இடையே இடைவெளிகள் ஏதும் இல்லை. உண்மையில் மக்கள் இந்தக் கடவுளரை நம்பியவர்களாக இருப்பதுமில்லை. கடவுளுக்கும் மக்களுக்கும் இடையில் இருக்கிற பாதை நேரானது; மொழியோ மந்திரமோ அங்கு தடையாக இருப்பதில்லை.

இந்துக் கடவுள்களையும் தலித் பகுஜன் கடவுள்களையும் எவ்வாறு ஒப்பிடுவது? இந்துக் கடவுள்கள் யுத்தத்திலிருந்து தோன்றும் வீரர்களாக இருக்கிறார்கள். அவர்கள் தலித் பகுஜன்களை எதிர்த்துக் கொன்ற கதாநாயகர்கள். சாதி அமைப்பையும் சுரண்டலையும் கட்டிக்காக்கப் போராடுகிறவர்கள். சுரண்டல், சமத்துவமின்மை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட சாதியை நிலைநாட்டுவதற்கு இந்துக் கடவுள்கள் உதவுகிறார்கள். ஆண்களை மையமாகக் கொண்ட இந்துக் கடவுள்களின் கதையாடல்கள் பெண்களை இழிந்த பிறவியாக, பாலியல் இன்பம் தருபவர்களாக மட்டுமே கருதுகின்றன. பார்ப்பனப்

பாரம்பரியம் அகிம்சையை வேராகக் கொண்டுள்ளது என்று பார்ப்பன இந்துக்கள் வாதிட்டாலும் உண்மை அதற்கு மாறாகவே இருக்கிறது. எல்லா இந்துக் கடவுள்களும் வன்முறை வழியிலான போரை நியாயப் படுத்துபவர்களாகவே இருந்தார்கள். அவர்களது தர்மம் சாதி வருண தர்மம், அவர்களுடைய வாழ்க்கை முறை செழிப்பானது. உற்பத்தி நடவடிக்கை என்பது அவர்களுக்கு விரோதமானது. இந்துக் கடவுள்களைப் புரோகிதர் மூலமாகத்தான் அணுகமுடியும். சமஸ்கிருதத்தில் பேசினால்தான் அவர்கள் புரிந்துகொள்வார்கள். இவையெல்லாம் இந்துக்கடவுள்கள் ஒடுக்கப்பட்ட மக்களுக்கும் உழைக்கும் மக்களுக்கும் அன்னியமானவை என்பதையே காட்டுகின்றன.

தலித் பகுஜன் கடவுளரின் பாரம்பரியம் பார்ப்பனக் கடவுள்களின் பாரம்பரியத்திற்கு எதிரானவை. இந்த வேறுபாடுகளை நாம் உயர்த்திப் பிடிக்க வேண்டிய தருணம் இது. தலித் பகுஜன் பாரம்பரியத்தில் வந்த அறிஞர்கள் பார்ப்பனியக் கோட்பாட்டை உயர்த்திப் பேசுவோரிடம் கருத்துப் போர் புரிய வேண்டும். இந்துத்துவத் தலைவர்கள் இந்து மதமே எல்லோருக்குமான மதம் என்று சொல்லும்போது தாழ்த்தப்பட்ட மற்றும் மலைவாழ் பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர் ஆகியவர்களுக்குப் பொதுவான அம்சம் இந்து மதத்தில் என்ன இருக்கிறது என்று கேட்க வேண்டும். பல நூற்றாண்டுகளாகத் தலித்பகுஜன்கள் எல்லாச் சாதியினரையும் ஒன்றுபடுத்த முற்பட்டபோது பார்ப்பனர்களும் பனியாக்களும் எதிர்த்தார்கள். இன்றும்கூட எந்தப் பார்ப்பானும் நம் கடவுளரின் பெயர்களை வைத்துக்கொள்வதில்லை. மனிதாபிமானமுள்ள , சமத்துவ வாழ்வு வாழ்கிற, ஆண் பெண் வேறுபாடற்ற பாரம்பரியமாக தலித்பகுஜன் பாரம்பரியம் உள்ளது என்பதை அவர்கள் உணர்ந்து கொள்வதும் இல்லை. பார்ப்பன, பனியா, சத்திரிய, புதிய சத்திரியர்கள் வேற்றுமையில் ஒற்றுமை காண விரும்பினால் அவர்கள் இந்த நாட்டை இந்துமயமாக்குவதற்குப் பதிலாக தலித் பகுஜன்களோடு இணைந்து தலித்தியமயமாக வேண்டும்.

அத்தியாயம் 6

# இந்துக்களின் மரணமும் நம்முடைய மரணமும்

பிறப்பு என்பது எல்லோருக்கும் ஒன்றுதான். ஆனால் அவரவர்கள் சாதிச் சூழ்நிலைகளுக்கேற்ப அதிலும் கூடப் பெண்கள் குறைவாகவோ கூடுதலாகவோ சிரமப்படவேண்டியுள்ளது. நாம் ஒரு குறிப்பிட்ட சாதியில் பிறப்பதென்பது எதிர்பாராதது. சாதிக் கலாச்சாரத்திற்குள் நம்முடைய குழந்தைகளை நம் விருப்பப்படி நாம் வளர்க்க முடிவதில்லை. ஒரு குறிப்பிட்ட வயதிற்குப்பிறகு உணர்வு பூர்வமாக நம்முடைய சாதிக்கலாச்சாரத்திற்குள் நாம் வாழ வேண்டியவர்கள் ஆகிறோம். ஒரு சாதியில் பிறந்துவிட்ட பிறகு நம்மில் மிகச் சிலரே சாதிக்கலாச்சாரத்தை விட்டு உணர்வோடு வெளியேறுகிறோம்.

நாம் இங்கே பிறக்க வேண்டும் என்பது நம்முடைய கையில் இல்லை என்றாலும் நம்முடைய சாவு எப்படியிருக்கவேண்டும் என்பது நம்முடைய கைகளில் இருக்கிறது. சாவு தவிர்க்கமுடியாதது என்பது உண்மை. ஆனால் அந்தச்சாவை நம்முடைய கருத்து மற்றும் விருப்பத்தின் அடிப்படையில் அமைத்துக்கொள்ளலாம். இறப்பு பற்றிய கருத்தும், இறப்பின் அனுபவமும் தலித் பகுஜன்களுக்கும் இந்துக்களுக்கும் வேறாக உள்ளன. அப்படியே பனியா, சத்திரியர்களின் இறப்பு என்பதும் தலித் பகுஜன்களிடமிருந்து வேறுபடுகின்றது. இந்த வேறுபாடு என்பது இசுலாமிய, கிறிஸ்துவ மதங்களைக் காட்டிலும் அதிகமாக உள்ளது.

## இந்து பார்ப்பன மரணம்

இந்து பார்ப்பனர் சாவுக்கும், தலித் பகுஜன் சாவுக்கும் உள்ள வேறுபாடு இறப்பு பற்றிய கோட்பாட்டிலேயே அமைந்துள்ளது. வாழ்வு, சாவு பற்றி பார்ப்பனர் கருத்து என்ன? ஒரு பார்ப்பனன் என்பவன் உயிர்வாழ்வது என்பது சாவதற்கே என்று எண்ணுகிறான். சாவே முக்தியைக் கொடுக்கும் என்று நம்புகிறான். இந்த வழியில் வாழ்வு என்பது பார்ப்பனனுக்கு சாவைப்பற்றி நினைவைச் சதா ஏற் படுத்துகிறது. இந்த உலகியல் வாழ்க்கை சொர்க்கத்தில் ஒருவனுக்கு நிரந்தர வாழ்வைக் கொடுக்கவேண்டும் என அவன் எதிர்பார்க்கிறான் அவன் வணங்குகிற கடவுள் அவனுக்கு இரண்டு நன்மைகள் தரவேண்டும். ஒன்று இவ்வுலகில் வாழ்கிற இன்ப வாழ்க்கை. ‘கணநேர

வாழ்க்கை' (ஷண பங்குறம்) இது தற்காலிகமானது. அதே சமயத்தில் இவ்வுலகக் குறுகியகால வாழ்க்கையே மேலுலகத்தில் இன்பமும் சுகமும் ஏற்படுத்தக்கூடியதாக இருக்கவேண்டும். இந்துக்களுக்குச் சாவு என்பது இந்தக் கணநேர வாழ்க்கையிலிருந்து சொர்க்கத்துக்குப் போகிற இடமாற்றமாகும். இந்தக் குறுகிய கால வாழ்வை ஒருவன் எவ்வாறு வாழ்கிறான்? தனக்குப் பேரின்ப வாழ்வையளிக்கக்கூடிய கடவுளின் பேரால் சாப்பிட வேண்டும். இவ்வுலகில் கிடைக்கக்கூடிய சிறந்த வகை உணவைச் சாப்பிடுவதன் மூலம் மேலுலகக் கடவுளைத் திருப்திப்படுத்த வேண்டும். அன்றாடம் இறப்பை எதிர்பார்த்துக் காத்திருக்கிற இந்த உடம்பு அரிசி, பருப்பு, பால், நெய், காய்கறிகள், தானியங்கள் போன்ற அனைத்தையும் உண்ண வேண்டும். அவை வெவ்வேறு விதமாக சர்க்கரைப் பொங்கல், புளியோதரை, தயிர்ப்பட்டை போன்ற பெயர்களில் இருக்கலாம். பல்வேறு கறி வகைகளுடன் சாப்பிடலாம். சில இனிப்பாகவும் சில புளிப்பாகவும் இருக்கின்றன. எல்லாவகைப் பண்டங்களிலும் நெய் முக்கியமானதாக இருக்கிறது. சமையலறையில் நெய் வைக்கும் பாத்திரமும் இடமும் மிகவும் முக்கியமானது. இந்த நிரந்தரமற்ற வாழ்வில் லட்டு, சிலேபி, பழச்சாறு போன்ற இனிப்பு வகைகள் முக்கியமானவை. இவைகளிலும் நெய் முக்கியமான இடத்தை வகிக்கிறது. வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால் இந்த 'ஷணபங்குற', உடம்பு கூடுமானவரை கொழுத்து, தொந்தி சரிந்து, உழைக்காத சதை தொங்கும்படியாக இருக்கவேண்டும்.

இந்த நிரந்தரமற்ற வாழ்வில் பாலியல் இன்பமும் முக்கியமான அங்கம் வகிக்கிறது. வேறுலகத்தில் இன்பம் அனுபவிக்கிற கடவுள்களுக்கு மிக அழகான ரம்பா, ஊர்வசி, திலோத்தமை, மேனகை போன்ற பெண்கள் உள்ளார்கள். இந்த 'ஷணபங்குற' வாழ்வில் ஒரு சில இன்பங்களை அனுபவிப்பதற்கும் வேறுலகில் நிரந்தர வாழ்வை அடைவதற்கும் ஒரு மகன் முக்கியத் தேவையாக இருக்கிறான். எனவே அம்மகன் தனக்குப் பிறந்தவன், தனக்கு மட்டுமே பிறந்தவன் என உறுதி செய்யும் பொருட்டு பூப்பெய்தாத பெண்ணை அவன் திருமணம் செய்து கொள்கிறான். இவனை மேலுலகத்திற்கு அனுப்புவதற்காக ஒரு பிள்ளையைப் பெற்றுத் தரவேண்டும். பழங்காலங்களில் ஒரு பார்ப்பனன் இறந்தால் அவனுக்கு சொர்க்கத்தில் சென்று பணிவிடை செய்யும் பொருட்டு அவன் மனைவியும் அவனோடு சாகவேண்டும். இதுவே உடன்கட்டை எனப்படும் 'சதி' யாகும்.

இத்தகையப் புனிதச் சாவுக்கு இரண்டு விடயங்கள் தேவையாக உள்ளன: (1)ஓய்வு (2) ஓதுதல். ஓய்வு என்பது இங்கே ஒரு வித தெய்வீக ஓய்வைக் குறிக்கிறது. பரலோக நிரந்தர சுகத்தை நோக்கி அவன்

மனதைக் குவிக்கும் பயிற்சியை அளிக்கும் ஓய்வு அது, இந்த ஓய்வு என்பது மற்றவர்களை மறுக்கும் ஓய்வாகவும் அமைவது குறிப்பிடத்தக்கது. அதாவது இவனது 'ஷணபங்குற' வாழ்வுக்குத் தேவையான பொருட்களைத் தனது உழைப்பின் மூலம் உற்பத்தி செய்கிற 'மற்றவர்களை' மறுக்கும் ஓய்வு. பூமியில் அவனது நாட்களை அதிகரிப்பதற்கு உதவுவதும் தலித் பகுஜன்களின் உழைப்பில் உருவானவையுமான பொருட்களை அவன் ஏன் உண்ண வேண்டும்? பார்ப்பனன் தனக்காகச் சாப்பிடவில்லை எனவும், தனக்கு மோட்சமளிக்கும் கடவுளுக்காகவே சாப்பிடுவதாகவும் நம்புகிறான். தான் துறக்க விரும்புகிற 'ஷணபங்குற' வாழ்வைத் தனது மகனுக்கு ஏற்படுத்தக்கூடியதாக உள்ள புணர்ச்சியில் ஒரு பார்ப்பனன் ஏன் ஈடுபட வேண்டும்? இதையும் அவன் கடவுளுக்காகவே செய்கிறான்.

நான் முன்பே குறிப்பிட்டது போல அவன் சொர்க்கத்தில் நுழைவதற்கு ஒரு மகன் தேவை. இந்த மகன் கடவுளின் கொடை. இத்தகைய புண்ணிய ஆத்மாவையே அந்தக்கடவுள் மோட்சத்திற்கு அழைத்துச் செல்ல விரும்புகிறார். எப்படி ஒரு பார்ப்பனன் புண்ணிய ஆத்மாவாக இருக்கிறான்? தலித் பகுஜன்களால் உற்பத்தி செய்யப்பட்ட அனைத்தையும் அவன் தின்றிருக்கிறான் என்பதும், அவர்களைத் தீண்டத்தகாதவர்களாகவே வைத்திருக்கிறான் என்பதும் தான் அவனை புண்ணிய ஆத்மாவாக்குகிறது. இவ்விதமாக ஒரு பார்ப்பனனுக்கு, அதாவது ஒரு இந்துவிற்கு உணவும் பாலியல் இன்பமும் சாவுக்கான முன் தேவையாகிறது. ருசியான உணவும் பாலியல் இன்பமும் இணைந்த இவ்வுலக வாழ்க்கை அவனுக்கு இரண்டு விஷயங்களை அளிக்கிறது. ஒன்று ஷணபங்குறம்: அதாவது தலித்பகுஜன்களின் 'புனிதமற்ற' வாழ்வைவிட நீண்ட வாழ்க்கைக்கு உத்தரவாதம். எப்படியெனில் அது மிக உயர்ந்தவகை உணவை உண்பதன் மூலமாக ஏற்படுகிறது. அடுத்தது பாலியல் இன்பம். இது அவனுக்கான வாரிசைத் தந்து இந்த வாழ்க்கையை நீடிக்கச் செய்கிறது. இந்த உண்மைகள் இரண்டாவது கருவியாகிய ஓதுதல் மூலம் திட்டமிட்டு மறைக்கப்படுகின்றன. இந்த ஏமாற்றத்திற்குப் பிரார்த்தனை ஒரு நியாயப்பாட்டை வழங்குகிறது. பூஜை (பிரார்த்தனை - ஓதுதல்) என்பது பார்ப்பனன் கையில் இருக்கும் ஒரு ஆயுதமாகும். அந்த பூஜைதான் அவனை மற்றவர்களிடம் இருந்து பிரித்து உயர்த்தி வைக்கிறது. இந்தப் பூஜையின் மூலம் பார்ப்பனன் சமுதாயத்தில் உள்ள மற்ற சமூகத்தினரிடையே ஆதிக்கம் செலுத்துகிறான். உற்பத்தியிலிருந்து நிரந்தரமாகப் பார்ப்பனர்கள் விலகியிருப்பதால் வாழ்க்கை என்பது அவர்களுக்கு அர்த்தமற்றதாகத் தோன்றுகிறது. இந்தப் பைத்தியக்காரத்தனத்தை அவர்கள் தவ வாழ்க்கை என்கிறார்கள்.

எப்படியோ வாழ்நாள் முழுவதும் தவம் செய்து, ஒரு மகனுக்கும் தந்தையாகி சொர்க்கத்தில் இடம்பிடிக்க முயலும் பார்ப்பனன், இறக்கும் நாளே அவன் சொர்க்கத்திற்குச் செல்லும் நாளாகிறது. சாவுகுறித்த இந்தக் கோட்பாடு தலித் பகுஜன் கோட்பாட்டிலிருந்து வேறுபட்டது. நட்சத்திரங்கள், கோள்களின் இயங்குநிலையைப் பொறுத்தே ஒரு பார்ப்பனனின் சாவு தீர்மானிக்கப் படுகிறது. அதனால் இறப்பின்போது யாரும் அழவேண்டிய தில்லை. இறந்தவுடன் சுற்றியிருக்கிற பார்ப்பனர்கள் அந்த வீட்டுக்கு வருகிறார்கள். சிலர் பூஜை செய்கிறார்கள். சிலர் வேதம் ஓதுகிறார்கள். சுற்றியிருக்கிற சனங்கள் சத்தம்போட்டு அழுவதற்கு அனுமதிப்ப தில்லை. அமைதியாகவே அழவேண்டும். பிணம் வெளியேறிய பிறகு ஆண்கள் அந்தப் பிணத்தைப் பின் தொடர்ந்து செல்கிறார்கள். பெண்கள் அவ்வாறு செல்ல அனுமதிக்கப்படுவதில்லை.

ஒரு பார்ப்பனன் இறந்த நாள் தொடங்கி அடுத்த பன்னிரண்டு நாட்கள் வரை அழுவதற்குப் பதிலாக, துக்கமின்றிவிருந்து நடக்கிறது. உயிரோடு இருக்கும்போது அவன் உடம்பு புனிதமானதாகக் கருதப்படுகிறது. அதனால் அவன் உடம்பை யாரும் தொட அனுமதிப்பதில்லை. ஒரே ஒரு சமயத்தில் மட்டும் விதிவிலக்கு உண்டு. பாதபூஜை செய்யும்போது மட்டும் அவன் பாதத்தைத் தொடலாம். இறப்பிற்குப் பிறகு அவன் ஆன்மா சொர்க்கத்திற்குச் செல்கிறது. எனவே அவன் உடல் தீண்டத்தகாததாக ஆகிவிடுகிறது. (இந்தக் கருத்து தற்போது தலித்பகுஜன்கள் மத்தியிலும் திணிக்கப் பட்டுள்ளது.) புரோகிதர்கள் தங்கள் சகாவிற்கு மேலுலகில் ஒரு நிரந்தர இடம் கிடைக்கவேண்டும் என்று பிரார்த்திக்கிறார்கள். ஒரு பார்ப்பனனின் சாவு கூட தலித் பகுஜன் மக்களுக்கு மேலும் ஒரு துன்பச் சுமையாகி விடுகிறது. மற்ற பார்ப்பனர்கள் விருந்து சாப்பிடத் தொடங்கி விடுகின்றனர். ஆரம்பத்தில் ஒவ்வொரு நாளும் நடைபெறும் விருந்து அப்புறம் மாதவாரியாக மாற்றப்பட்டு, கடைசியாக ஆண்டுக்கு ஒரு முறை என்று நடைபெறுகிறது. இத்தகைய ‘சிரார்த்தங்கள்’ தலித் பகுஜன்கள் மீதான சுரண்டலாகவே உள்ளன.

இன்றைய பார்ப்பனர்களிடத்தில் வாழ்க்கை மற்றும் சாவு பற்றிய கருத்தில் ஏதேனும் மாற்றம் ஏற்பட்டு இருக்கிறதா?. பண்பு ரீதியான மாற்றம் ஏதும் இல்லை. ஆனால் அளவு ரீதியில் சிறிய மாற்றம் ஏற்பட்டுள்ளது. அடிப்படை அப்படியே தான் உள்ளது. இன்றும் கூட நகர்ப்புற சராசரிப் பார்ப்பனன் ஒருவன் தன் முன்னோர் போலவே சிந்திக்கிறான். சுதந்திர இந்தியாவில் பார்ப்பனர்கள் தங்களைப் பெரும் அளவில் நகர்ப்புறவாசியாக மாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

சொர்க்கம் என்ற கருத்து அவர்களின் அன்றாட வாழ்வில் பிரதானமாக இல்லாமல் இருக்கலாம். இந்த வாழ்க்கைக் கோட்பாட்டில் சிறிது மாறுபாடுகள் இருக்கலாம். ஏனென்றால் விரைவாக வளர்ந்து வரும் தொழில்நுட்ப யுகத்தில் சாதாரண பார்ப்பன பனியாக்கள் கூட இவ்வுலக வாழ்க்கையை இன்பமாக வாழவேண்டும் என்று வெளிப்படையாக ஒத்துக்கொள்கிறார்கள். ஆனாலும் அவன் சொர்க்கத்தில் உள்ள நிரந்தர வாழ்வைப் பற்றிய முக்கியத்துவத்தைக் குறைத்துக் கொள்வது இல்லை. இந்நிலையில் அவர்கள் தர்மவினைக் கோட்பாட்டை விட்டுவிட்டு தகுதிக் கோட்பாட்டை வலியுறுத்தத் தொடங்கிவிட்டார்கள். அரசும் சமுதாயமும் இன்று 'தகுதி'யை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்படுகிறது. அன்றோ தர்மத்தை நிலைநாட்ட என்று சொல்லப்பட்டது.

முன்னொரு காலத்தில் 'ஷணபங்குறம்' என்ற குறுகிய கால வாழ்க்கை இயற்கையில் கிடைத்த உணவையே உண்பதாக இருந்தது. இக்காலப் பார்ப்பனர்களும் பனியாக்களும் இந்தியாவின் மிக உயர்ந்த நவ நாகரீக உணவையே உண்கின்றனர். மேலும் அவர்கள் நல்ல வீடுகளில் வசிக்கிறார்கள். அவர்கள் வாழ்க்கை முறை நவீனமயமாக்கப் பட்டுவிட்டது. குஷன் மெத்தைகளுடன் கூடிய இருவர் படுக்கை; குளிர்சாதனம் உள்ள குளு குளு வீடு (அதுவும் சீதோஷ்ண நிலைக் கேற்ப மாறக்கூடியது) ஆடம்பரமிக்க அலங்காரங்கள். இதிலும் கூட நவீனத்துவம் என்பது பார்ப்பனமயமான நவீனத்துவமாகவே இருப்பது குறிப்பிடத்தக்கது. அலங்கரிக்கப்பட்ட அறையின் மையப்பகுதியில் அசாதாரணமான வண்ணங்களால் வடிவமைக்கப்பட்ட இந்துக் கடவுள்களின் பழைய மாதிரியான உருவங்கள் காணப்படுவதில்லை. அதற்குப் பதிலாக பார்ப்பன வீடுகளில் கிருஷ்ணன் ரதசாரதியாக காட்சியளிக்கும் படம் இன்று எல்லா வீடுகளிலும் காணப்படுகிறது. மற்றொரு படம் கிருஷ்ணன் அர்ச்சுனனுக்குக் கீதை உபதேசம் செய்யும் காட்சி. கலை என்று இவை முத்திரை குத்தப்படுகின்றன. பெரும்பாலான வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் பார்ப்பன பனியாக் குடும்பங்களாலேயே வாங்கப்படுகின்றன. தனி நபருக்குச் சொந்தமான கார்களில் எழுபது சதவீதம் பார்ப்பன பனியாக் களுடையது. இந்தியாவில் விமானத்தில் பிரயாணம் செய்யும் பெரும்பான்மையோர் பார்ப்பன பனியாக்களே. குளிர்சாதன வசதியுடைய பேருந்து, தொடர்வண்டி ஆகியவைகளில் பயணிப்பதில் பெரும்பாலானவர்கள் பார்ப்பன பனியாக்களே. அவர்கள் இவைகளை யெல்லாம் மக்களுக்குச் சேவை செய்வதற்கென்றே பயன்படுத்துவதாகக் கதைவிடுகிறார்கள். முன்பு இதைக் கடவுள் சேவை என்று சொன்னார்கள். தேசியம்

பார்ப்பனக் கோட்பாட்டைத் திருத்தியமைத்தது. அதனால் தெய்வீகம் இருந்த இடத்தில் இன்று 'மக்கள் நலன்' வந்து விட்டது.

கடவுள் சேவை என்பதை 'மக்கள் சேவை' என மாற்றியதே வியாபாரத் தந்திரம் தான். அவர்கள் இவ்வுலகில் அனுபவிக்கும் இன்பத்தின் எல்லை விரிவடைந்து கொண்டே போகிறது. முதலாளித்துவச் சந்தைகளில் விற்பனையாகும் இன்பங்கள் இவர்களுக்கு அத்தியாவசியமான முன் தேவைகளாகும். எனவே பார்ப்பனீயத்தை இன்றைய சூழலுக்குத் தகுந்தவாறு மாற்றியமைப்பது இன்றையத் தேவையாகிறது. 1947-க்குப் பிறகு அரசியலதிகாரத்தை அனுபவிப்பது என்பதே வாழ்க்கையின் இன்பங்களில் ஒன்றாக ஆகிவிட்டது.

இது எப்படியிருந்த போதிலும் இந்துக்களின் குறிக்கோளான சொர்க்கத்தில் கிடைக்கக்கூடிய நிரந்தர வாழ்வு குறித்த கோட்பாட்டு முக்கியத்துவம் குறைந்துவிடவில்லை. அரசியலதிகாரம், நிர்வாக அதிகாரம், தொழில் மற்றும் சந்தை ஆகியவற்றின் மூலம் தலித் பகுஜன்களைச் சுரண்டிவாழும் பார்ப்பன பனியாக்களின் 'பாவம்' கூடிக்கொண்டே இருப்பதாக அவர்கள் அஞ்சுகின்றனர். அதனாலேயே அவர்கள் சீக்கிரமாகச் செத்துப் போவார்கள் என்றும் கருதுகின்றனர். இறந்த பிறகு இந்தப் பாவம் வேறுலகிலும் அவர்களைத் தொடருமே. எனவே இதற்குப் பரிகாரமாக அவர்கள் ஆடம்பரமான ஆலயங்கள் கட்டுவது, தமது நவநாகரீக வீடுகளில் பூஜை அறைகள் அமைப்பது போன்றவற்றில் இப்போது கவனம் செலுத்தி வருகிறார்கள். அவர்களது கோவில்களிலும் பூஜை அறைகளிலும் பார்ப்பனக் கடவுள்களான இராமன்,கிருஷ்ணன், சிவன், கணபதி, லெட்சுமி, சரஸ்வதி, பார்வதி போன்றவை நவீனமாக வடிவமைக்கப்பட்டு புதிய வடிவங்களாக உள்ளன. இவை அனைத்தும் தொடர்ந்து சுரண்டுவதற்கான வசதியையும் அவர்களின் சுகபோக வாழ்வை இம்மையிலும் மறுமையிலும் நீடிப்பதற்கான வழியையும் செய்துகொடுக்கின்றன.

இன்றைய நவீன உலகிலும் கூட இறப்பு என்பது தங்களின் சொந்த சாதிகளுக்குள்ளேயே அழவும் சாப்பிடுவதற்குமான விருந்து என்பதாகத்தான் உள்ளது. இறப்பிற்குப்பிறகு மூன்றாம் நாள் விழாக்கொண்டாட்டம், பதினோராவது நாள் விழாக் கொண்டாட்டம், மாதவிழா மற்றும் ஆண்டுவிழா அனைத்தும் விருந்திற்குரிய சந்தர்ப்பங்களாகிவிட்டன. சாப்பிடுவதையும் ஏமாற்றுவதையும் தவிர வேறு ஏதேனும் சிறிய காரியங்கள் செய்திருந்தால் கூட அதன் மூலம் அவர்கள் வரலாற்றில் முக்கியமானவர்

களாகிவிடுகிறார்கள். செத்தவுடன் அவர்களின் வாழ்க்கை வரலாறு எழுதப்படுகிறது. அவர்களின் புகைப்படங்கள் ஊடகங்கள் வழியாக விளம்பரப் படுத்தப்படுகின்றன. இவையெல்லாம் ஆதிக்க சாதிக்காரர்கள் சாவைக் கொண்டாடும் இக்கால நடைமுறைகளாகும். சாவைக் கொண்டாடும் போக்கின் ஊடாக இறந்தவனுடைய நினைவை நிலைநிறுத்துகிறார்கள். இதற்காகச் செலவழிக்க அவர்கள் கோடிக் கணக்கில் சம்பாதித்துள்ளார்கள். இந்து ஒருவன் இறந்தபிறகு உயிரோடிருக்கும் மற்ற இந்துக்கள் அவனுக்காக சமூக வளத்தை வீணடிக்கின்றனர். சமூகச் சொத்து என்றால் இந்துச் சொத்துதான் என்பதே அவர்களின் கருத்து.

## தலித் பகுஜன் மரணம்

தலித் பகுஜன்களின் வாழ்க்கை இருக்கும்போதும் சரி, இறந்த பிறகும் சரி, இந்துக்களின் வாழ்க்கையை விட அர்த்தம் மிகுந்ததாகும். தலித் பகுஜன்களுக்கு வாழ்க்கை என்பது ஒரு முறை தான். அது இவ்வுலக வாழ்க்கை மட்டுமே. இந்தத் தத்துவம் ஒரு பழமொழியின் மூலம் வெளிப்படுகிறது (புட்டின்டோகசாரே சாசின் தோகசாரே). நாம் ஒரு முறை தான் பிறக்கிறோம். ஒரு முறை தான் இறக்கிறோம். தலித் பகுஜன் குடும்பத்தில் ஒருவர் இறக்கிறார் என்றால் அது உற்பத்தி அடிப்படையில் ஒரு இழப்பாகும். ஒவ்வொருவரும் பல்வேறு வகையான உற்பத்தித் திறமை உடையவர்களாக இருக்கிறார்கள். உற்பத்தியை அதிகரிப்பதற்கான சில கருவிகளை வைத்திருக்கிறார்கள். ஒரு குருமா இளைஞன் ஆடு வளர்ப்பதற்கான புதிய பகுதிகளைக் கண்டுபிடிக்கிறான். ஆட்டு உரோமத்தை வெட்டுவதில் அதிகத் திறமை கொண்டவனாக இருப்பான். அதைப்போலவே ஒரு குருமா பெண் ஆட்டு உரோமத்தைக் கம்பளி நூலாக்குவதில் தனித்திறமை உடையவளாக இருப்பாள். அவர்களில் பலர் தமது தொடையில் வைத்து ரோமத்தை உருட்டி நூலாக்குகின்றனர். இந்தநுட்பத்தைத் தெரிந்த பல பெண்கள் இப்போது இறந்து விட்டார்கள். அதனால் சில இடங்களில் அவர்கள் சந்ததிக்கு இந்தமுறை தெரியாத காரணத்தால் இத்தகைய தொழிலே இன்று அழிந்து போய்விட்டது.

தலித் பகுஜன்களின் வாழ்க்கைக் கோட்பாட்டில் சொர்க்கத்திற்கு இடமில்லை. இந்துக் குடும்பங்களில் அன்றாடம் நடைபெறும் சொர்க்கத்தைப் பற்றிய வியாக்கியானம் தலித் பகுஜன் குடும்பங்களில் இடம் பெறுவதில்லை. தலித் பகுஜன் கருத்துப்படி வாழ்க்கை வாழ்வதற்கே. இவ்வுலக வாழ்வு வேலை சம்பந்தப்பட்டது. எவ்வளவுக்

கெவ்வளவு உழைக்கிறோமோ அவ்வளவுக்கவ்வளவு வாழ்க்கைத்தரம் உயர்கிறது 'பணி பிராதானா' (செய்யும் தொழிலே தெய்வம்) 'பணிலீனி பாபி' (உழைக்காதவன் பாவி) போன்ற பழமொழிகள் உழைப்பே வாழ்வை உயர்த்தும் என்பதை எடுத்துக்காட்டுகின்றன. தலித் பகுஜன்கள் உண்பதை இவ்வுலக வாழ்க்கையின் தேவையெனவும், அதுவும் உயிர்வாழ முக்கியமானது என்றும் கருதுகிறார்கள். தலித் பகுஜன் பெண் உண்பதை உழைப்பின் ஒரு பகுதியாகத்தான் காண்கிறாள். இது பார்ப்பனக் கருத்துக்கு முற்றிலும் எதிரானது. தலித் பகுஜன்கள் சொல்லும்போது "அன்னிபானுலு தைரினாயி ஒக்க தினீ பணிதாப்பா." (எல்லா வேலையும் முடிந்து விட்டது. ஒரு வேலையைத் தவிர; அது தான் சாப்பிடுவது) என்பார்கள். வழக்கமாக உணவு உண்ணும் செயல் என்பது கடவுளோடு தொடர்புடையது அல்ல; அல்லது புனிதமானது மல்ல. நான் 1, 2 அத்தியாயங்களில் சொன்னதைப் போல் சமைப்பதும் சாப்பிடுவதும் உலக நடைமுறை. அதில் தெய்வீகமில்லை. மதத் தன்மை ஏதுமில்லை.

மனிதன் உயிர்வாழச்சாப்பிடுவதா? அல்லது சாப்பிடுவதற்காக உயிர்வாழ்வதா? என்ற கேள்வி தலித் பகுஜன்களிடையே விவாதிக்கப் படுகிறது. இந்தக் கருத்துப் பரிமாற்றத்தில் உயிர்வாழ்வதற்கே சாப்பிடுகிறோம் என்ற முடிவுக்கு அவர்கள் வருகிறார்கள். உழைப்பு அவர்கள் வாழ்வுக்கு ஆதாரமாக இருப்பதால் எல்லா உரையாடல்களும் தொழில் மற்றும் உழைப்பு சார்ந்ததாகவே இருக்கிறது. இது போன்ற கேள்வி அவர்கள் வாழ்க்கை முறை சம்பந்தமான சந்தேகங்களுக்கு விடைகாண உதவுகிறது. தலித் பகுஜன் வாழ்க்கை உழைப்போடு தொடங்குகிறது. 'பெட் காபி' அல்லது 'பெட் டீ' யோடு தொடங்குவது இல்லை. மாறாக, அது சுத்தம் செய்கிற வேலையோடு தொடங்குகிறது. தங்களது சுற்றுப் புறத்தைக் கூட்டுவது, கழுவுவது, கால்நடைகளை வயலுக்கு ஓட்டிச் செல்வது, நிலத்தை உழுவது போன்ற வேலைகளோடே காலை மலர்கிறது. ஒவ்வொரு நாள் வாழ்விலும் சாப்பிடுவது என்கிற நினைப்பே மிகவும் தாமதமாகத்தான் வருகிறது. ஒரு குருமாவின் வாழ்வு ஆடு மாடுகளைக் கவனிப்பது அல்லது வயல்வேலைக்குச் செல்வது என்று தொடங்குகிறது. ஒரு கௌடா, கள் இறக்கும் மரத் தடியில் தன் வாழ்வைத் தொடங்குகிறான். ஒரு மாடிகா காலணிகள் செய்ய உதவும் கருவிகளைக் கையில் எடுத்துக் கொண்டுதான் தன் நாளைத் தொடங்குகிறான். வழக்கமாக அவர்கள் காலையில் எழுந்ததும் முகம், கை கால்களைச் சுத்தம் செய்யாமலேயே உழைப்பில் ஈடுபடுகிறார்கள். காலைப் பத்து மணியளவில் உண்ணப்போகும்

போதுதான் தலித் பகுஜன்கள் முகம் கை, கால்களைக் கழுவுகிறார்கள். உயிர் வாழவே சாப்பிடுகிறோம் என்ற கருத்தின் அடிப்படையிலேயே அவர்களின் அன்றாட வாழ்க்கை அனுபவங்கள் அமைகின்றன. அவர்கள் உழைப்பது முதலில்; உண்பது பின்னரே.

தலித் பகுஜன்களின் உணவு மிகவும் எளிமையானது. ஒரு பெண் காலையில் வீட்டில் உள்ள பழைய சோற்றுப் பானையிலிருந்து சோற்றையும், கறி சட்டியிலிருந்து கறியையும் எடுத்துத் தன் குழந்தை களுக்குச் சாப்பிடக் கொடுக்கிறாள். தானும் சாப்பிடுகிறாள். அதே உணவைக் கணவனுக்காக வயலுக்கும் எடுத்துச் செல்கிறாள். கணவன் தன் வேலையை நிறுத்திவிட்டு வந்து சாப்பிடுகிறான். பிறகு மீண்டும் வேலையில் ஈடுபடுகிறான். இதுவே அன்றாட நடைமுறை. எனவே சாப்பிடுவது என்பது உயிர்வாழ்வதற்காகவே உள்ளது. அது சாப்பிடுவதற்கே உயிர்வாழ்கிறோம் என்ற பார்ப்பனீயக் கோட் பாட்டிற்கு எதிரான கோட்பாடாகும். அரிதாக அவர்கள் சாமி கும்பிடுகிறார்கள். அவர்கள் வணங்கும் கடவுளரான பொச்சம்மா, மைசம்மா, பொத்தராஜு போன்றவர்கள் தினமும் அவர்களை வணங்கச் சொல்வது இல்லை. தெய்வீக விருந்து படைக்கும்படிக் கேட்பதில்லை. திருவிழாக்காலங்களில் கூட பார்ப்பனக் கடவுள் களுக்கும் படைக்கப்படுகிற உணவில் பத்தில் ஒரு பகுதி கூட தலித் பகுஜன் கடவுள்களுக்குப் படைக்கப்படுவது இல்லை. மனிதர்கள் விரும்பி உண்ணும் உணவே கடவுள்களுக்கும் படைக்கப்படுகிறது.

திருவிழாக்காலத்தின்போது தலித்பகுஜன்கள் ஒரு வெள்ளாட் டையோ அல்லது செம்மறியாட்டையோ அல்லது கோழியையோ பலிகொடுத்து அதில் ஒரு பகுதியைக் கடவுளுக்குப் படைக்கிறார்கள். அது எப்போதாவது ஒரு நாள் நடக்கிறது. அதுவும் வளமான வாழ்க்கை வேண்டியோ, சொர்க்கத்துக்குப் போகவேண்டும் என்ற தேவையின் அடிப்படையிலோ நடப்பதல்ல. பயம் என்பது முற்றிலும் கிடையாது என்பதல்ல. ஆனால் பயம் குறித்து தத்துவ நியாயம் ஏதும் தலித் பகுஜன்களிடம் இல்லை. பயத்திலிருந்து விடுதலை அடைய கடவுளின் ஆசி தேவையில்லை. பூஜை என்பது மேலுலக வாழ்வுக்கு முதலீடாக இல்லை. ஒரு இந்து தனக்கான உரிமைகளை எதிர்பார்க்கிற ஓய்வு, ஓதுதல் ஆகிய இரண்டும் தலித் பகுஜன்களிடத்தில் இல்லை.

நிலம், நீர், காடுகள், விலங்குகள் போன்றவைகளுடனான தலித் பகுஜன்களின் தொடர்பு இவற்றிலிருந்து புதியவைகளை உருவாக்கிப் பயனளிக்கிறது. இது விஞ்ஞானபூர்வமான படைப்பாக்கத் தொடர்பு. ஒவ்வொருநாளும் இந்தப் பூமியில் வாழும் வாழ்வை

நினைத்து அவர்கள் இந்த மண்ணைத் தாய்மண் (தல்லி பூ தேவி) என்றும், காடுகளை காட்டுத்தாய் (அடவி தல்லி) என்றும், தண்ணீரை கங்கைத்தாய் (கங்கம்மா தல்லி) என்றும் அழைக்கிறார்கள். இவை எதுவும் தம்மைத் துதிக்கச் சொல்வதில்லை. இவை தலித் பகுஜன்களோடு ஏற்பட்ட தொடர்பினால் உருவானவை. அவை சமூகத்திற்கு உபயோகமுள்ள உற்பத்திப் பொருளாகின்றன. ஆனால் இந்த உபயோகமான பொருள்களைப் பயன்படுத்துகிற ஒரு இந்து இவை எப்படி உருவாயின என்பதை அறியமாட்டான். அது ஏதோ பிரார்த்தனையில் கிடைத்தது என்று அவன் நம்புகிறான். ஆனால் ஒரு தலித் பகுஜன் அது உழைப்பினால் உருவாக்கப்பட்டது என்று அறிந்துள்ளான். எனவே தலித்பகுஜன் வாழ்வில் உழைப்பு மதிக்கப்படுகிறது. ஓய்வு மதிக்கப்படுவதில்லை; கண்டிக்கப்படுகிறது.

இவ்வாறு உழைப்பு சமூகத்தோடு நிரந்தரமான உறவு கொண்டிருப்பதால் அது மொழி, இலக்கணம், இலக்கியம் ஆகியவற்றை உருவாக்குகிறது. பாடல் இல்லாமல் உழைப்பு முழுமைப் பெறுவதில்லை. எந்தவொரு தலித் பகுஜனும் உழைப்பில் ஈடுபடாமல் இருந்தால் அவனை 'பணி பாத லீனாடு' (பாடலற்றவன் வேலையற்றவன்) என்றே கூறுகிறார்கள். இதற்கு இணையான பார்ப்பனப் பழமொழி 'சடுவு சந்தியா லீனாடு' (படிக்காதவன் அதாவது ஓதாதவன் வேலையற்றவன்) என்பதாகும். தலித் பகுஜன்களின் பாடல் உழைப்பில் நாம் படைப்பாக்கத் திறனையும் அறிவியலையும் காணலாம். ஆனால் பார்ப்பனர்களின் ஓதலில் உழைப்பே இல்லாத ஓய்வு நடவடிக்கையைத்தான் காண்கிறோம். அதுவே மனிதச் சீரழிவுக்கும் காரணமாகிறது. தலித் பகுஜன்களின் உழைப்புக் கோட்பாடு அல்லது வாழ்க்கைத்தத்துவம் எந்தவித தெய்வீகத்தன்மையும் உடையதல்ல. இந்து சமூகத்தின் சீரழிவுக்குக் காரணம் இந்த நவீன உலகில் கூட ஓய்வு, ஓதுதல் என்றிருப்பது தான். ஓய்வு, பிரார்த்தனை என்பது தலித்பகுஜன் வாழ்வில் வேறுவகையான பொருளைத் தருவதாக உள்ளன. அவர்களுடைய சமூக அரசியல் உருவாக்கத்தில் அவை மிகக் குறைந்த பங்கையே வகிக்கின்றன.

தலித் பகுஜன்களுக்கு பாலியல் இன்பம் என்பதன் பொருள் என்ன? அவர்கள் வாழ்வில் உடல்உறவு என்பது ஓய்வை அடிப் படையாகக் கொண்ட இன்ப விளையாட்டல்ல. அது ஒரு சமூக நடவடிக்கை. இதனால் அவர்கள் இன்பத்திற்கு எதிரானவர்கள் என்பதல்ல. பார்ப்பன பனியாவைப் போல் ஓய்வை அடிப்படையாகக் கொண்ட இன்பத்திற்கு இங்கே இடமில்லை. அவ்வளவே. ஏராளமான

கலைகளை வியக்கும்படி உருவாக்கிய நம் மக்கள் வாத்ஸ்யாயனர் செய்தது போல் இன்பக் கலையை வளர்த்தெடுப்பதில் நாட்டம் காட்டவில்லை. அவருடைய கலையின்படி உடல்உறவு என்பது ஓய்வை அடிப்படையாகக் கொண்ட ஆபாசமான விளையாட்டு. அதற்கு சமூக அடிப்படை ஏதும் கிடையாது. அதனால் தான் வாத்ஸ்யாயனனுடைய காமக்கலைகள் தலித் பகுஜன்களின் வாய்மொழி இலக்கியங்களில் கூட இடம் பெறவில்லை. உதாரணமாக, இந்துக் கோயில்களில் உள்ளதைப் போல வாதசாயனரின் கொக்கோகச் சிற்ப அலங்காரங்களைத் தலித் பகுஜன்களின் பொச்சம்மா, மைசம்மா, கட்டராஜு, பீரப்பா கோயில்களில் காணமுடியாது.

பார்ப்பனக்கருத்துக்கு எதிராக தலித் பகுஜன்களின் பாலுறவு பற்றிய கருத்து உள்ளது. ஆண் பெண் உறவு என்பது தலித் பகுஜன்களுக்கு உற்பத்தியிலும், மறு உற்பத்தியிலும் ஈடுபடுவதற்கான ஒரு சமூக நடவடிக்கை. குழந்தை பெறுதல் என்கிற சமூக நடவடிக்கை உற்பத்திச் செயல்களுக்குக் கிடைக்கிற கூடுதலான சக்தி. இங்கே பெண்ணை விட ஆண் குழந்தை உயர்வாக நடத்தப்படுவதில்லை. அப்பாவோ அம்மாவோ இறந்து போனால் மகளே இறுதிச் சடங்குகளை முன்னின்று செய்கிறாள். இறந்தவர் உடல் முன் தண்ணீர் எடுத்துச்செல்வது ஒரு வழக்கம். அது முக்கியமான நிகழ்வாகும். அதைக்கூட பெண்ணே செய்கிறாள். இங்கே மகன் என்பவன் வயதான பெற்றோர்களைப் பாதுகாக்க வேண்டியவனாகக் கருதப்படுகிறான். சொர்க்கத்தில் இடம் தேடித் தருபவனாக அல்ல. சொர்க்கம் என்கிற கருத்துக்கே இங்கு இடம் இல்லை. இறப்பிற்குப் பிறகு உள்ள வாழ்க்கை என்பது முக்கியத்துவமற்றது. ஒருவன் சமூகத்துக்குப் பயனுள்ள வாழ்க்கை வாழ்ந்தால் அதற்குப் பெருமையுண்டு. இறப்பு என்பதோடு எல்லாம் முடிந்து விடுகிறது. ஒருவன் சமூகத்திற்குப் பயனுள்ள வாழ்க்கை வாழவில்லையென்றால் அவன் செத்தபிறகு பேயாக அலைந்து துன்புறுத்துவான். 'புண்ணியம்' செய்தவன் வாழ்வு இறப்போடு முடிகிறது. 'பாவம்' செய்தவன் வாழ்வு இறப்புக்கு பின் பேயாகிறது.

தலித் பகுஜன்கள் இறப்புக்கு அடுத்த மூன்றாம் நாளும், பதினோராவது நாளும் கிரியைகள் நடத்துகிறார்கள். அதன் பிறகு இறந்தவர்களுக்கு எந்தக் கிரியையையும் செய்வதில்லை. இறந்தவர்களை அவர்களுக்கு முன்பு இறந்தவர்களோடு கணக்கிட்டுக் கொள்கிறார்கள்; அவ்வளவே. இறந்தோரின் நினைவாக சிரார்த்த

கிரியை செய்ய புரோகிதன் வந்தாலும் அவன் தலித் பகுஜன்களைச் சமமாக நடத்துவ தில்லை. சிரார்த்த கிரியை செய்வதால் தலித் பகுஜன்களுக்குச் சொர்க்கத்தில் நுழையும் உரிமை கிடைக்கிறதென்று அவன் கூறியதுமில்லை. உண்மையில் தலித் பகுஜன் குடும்பத்தில் ஒருவன் இறந்துவிட்டால் புரோகிதனுக்கு அது ஒரு பணம் சம்பாதிக்கும் வழி மட்டுமே. சமீப காலங்களில் நகர்ப்புற தலித்பகுஜன்கள் இறந்தவர் உடலைத் தொட்டுக்கூடப் பார்ப்பது இல்லை. இது பார்ப்பனக் குடும்பங்களைப் பார்த்து பழகிக் கொண்ட பழக்கம். அவர்கள் உள்ளூர பார்ப்பனமயமாகி இருக்கிறார்கள்.

பெண்ணின் சாவு குறித்த கருத்துக்களும் தலித் பகுஜன்களுக்கும் இந்துக்களுக்கும் எதிரெதிராக உள்ளன. இந்துக்களின் படிநிலைச் சடங்குகளில் இந்துப் பெண்களுக்கு எந்த முக்கியத்துவமும் கிடையாது. ஒரு இந்துப் பெண் இறந்தால் முணுமுணுக்கிறார்களே ஒழிய, அழுது புலம்பி ஆரவாரம் செய்வது இல்லை. மேல் சாதிப் பெண் இறப்புக்காகச் சத்தம்போட்டு ஒரு ஆண் கதறினால் அவனை ஆண்மையுள்ளவனாகக் கருதுவ தில்லை. ஆனால் தலித்பகுஜன்களிடம் சத்தம் போட்டு அழுவதென்பது இயல்பானது. இறந்தவர் உடலைச் சுற்றிலும் ஆண்களை விடப் பெண்கள் மிகுதியாக அமர்ந்து அழுவார்கள். என் தாய் இறந்தபோது என் தந்தை தேம்பி அழுததை நான் கண்டேன். நீ ஒரு ஆண்மகன், இவ்வாறு அழலாமா? என்று என் தந்தையைக் கேட்டார்கள். அவரை அழவிடுங்கள்; இப்போது அழாவிட்டால் எப்போதும் அழப்போகிறார் என்று சுற்றியிருந்த பெண்களில் ஒருவர் குறுக்கிட்டுப் பேசினார்.

இத்தகைய சுயேச்சையான தன்மையும் பொது வெளியில் பெண்ணுக்குள்ள முக்கியத்துவமும் தலித்பகுஜன்களின் ஆண் பெண் உறவை நிர்ணயிக்கின்றன. இறப்புச் சடங்குகளிலும் இது வெளிப் படுகிறது. இது போன்ற நிகழ்ச்சிகள் தலித் பகுஜன் பெண்களுக்கு ஒரு சமூக அங்கீகாரத்தை வழங்குகின்றன.

பெண் இறந்தாலும் கூட, இறப்பிற்குப் பிறகு மூன்றாம் நாளும், பதினோறாவது நாளும் மாத இறுதியிலும் இறந்தவர் நினைவாக 'மாஷிகம்' என்ற துக்கம் கடைப்பிடிக்கப்படுகிறது. அதன்பிறகு இறந்தவர்கள் முன்னோர்களின் பட்டியலில் சேர்க்கப்படுகிறார்கள். தலித் பகுஜன்களில் திருமணமானவர்கள் இறந்தால் அவர்களின் உடலை உடனே எரித்து விடுகிறார்கள். திருமணமாகாதவர்கள் எனில் உடலைப் புதைத்து விடுகிறார்கள். உடலை எரித்தல் என்பது பார்ப்பனீயத்தின் நீட்சியாகும். இறந்தவர் உடலை எரிப்பது என்பது

விஞ்ஞானமுறை ஆகாது. ஏனெனில் அந்த இடத்தில் சிதைந்த உடற்கூறுகள் இல்லாதபடியினால் வரலாற்று ஆதாரங்கள் கிடைக்க வர்ய்ப்பில்லாமல் போய்விடுகிறது. பார்ப்பன முறையை உலக மக்கள் எல்லோரும் பின்பற்றினால் வரலாற்று ஆராய்ச்சிக்கு ஆதாரம் ஏதுமின்றிப் போகும்.

இடைக்கால வரலாறு பற்றியும் ஏராளமான நிகழ்வுகள் பற்றியும் அறிந்து கொள்ள மனித எலும்புக்கூடுகளே ஆதாரமாகப் பயன்பட்டன. பல ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முந்தைய வரலாறு மனித எலும்புக்கூடுகளை வைத்தே கண்டறியப்பட்டது. தலித் பகுஜன்கள் சவ அடக்கத்திற்கும் ஒரு புதிய முறையைப் பின்பற்ற வேண்டும் என விரும்புகிறேன். இப்போது அரசு எந்திரங்களான காவல்துறை மற்றும் ராணுவங்களே கொலைக்குற்றத்தை மறைப்பதற்காக உடல்களை எரித்துவிடுகிறார்கள். இதிலிருந்து ஒரு ரகசிய உண்மையை யூகிக்க முடியும். அதாவது பழங்காலத்தில் ஆரியர்களை எதிர்த்த தலித் பகுஜன் மக்களை ஆரியர்கள் கொன்று அவர்கள் உடலை எரித்து அதன் மூலம் வரலாற்று ஆதாரம் கிடைக்காதபடி செய்திருக்கலாம். இத்தகைய பழக்கத்தைத்தான் அவர்கள் இன்றும் வைத்துள்ளார்கள் என்றும் நாம் அனுமானிக்கலாம்.

தலித் பகுஜன்கள் குறிப்பாக வயதானவர்கள் தம்மை நிழற்படம் எடுப்பதை விரும்புவதில்லை. ஏனெனில் முற்காலத்தில் பார்ப்பனர்கள் தலித்பகுஜன் மக்களை எவ்விதமான வரலாற்றுச் சான்றுகளும் வைத்துக்கொள்ள அனுமதிக்கவில்லை. கட்டிடக்கலை, ஓவியக்கலை, சிற்பக்கலை, ஆகியவற்றைத் தொழிலாகக் கொண்டிருந்த தலித்பகுஜன் கலைஞர்களில் ஒருவர் கூட தம்மைப்பற்றி வரலாற்றுச் சான்றுகளாகவும், தம் குடும்பம் பற்றிய செய்திகளாகவும் எதையும் கலையாக வடித்து வைக்க வில்லை. பார்ப்பனர்கள், சத்திரியர்களின் குடும்ப வரலாற்றை ஓவியமாக, சிற்பமாக வடித்த தலித்பகுஜன்கள் தம்மைப் பற்றிய பழங்கால வரலாற்றை அறியும்படியான எதையும் வைக்க அல்லது வடிவமைக்க பார்ப்பன சத்திரியர்கள் அனுமதிக்க வில்லை. ஒரு தலித்பகுஜன் இறக்கும்போது அவன் தடயமே இல்லாதவனாகி விடுகிறான். இதை நாம் மாற்றியமைக்க வேண்டும். நம்முடைய மூதாதையர்களைப் பற்றி அறிவு மறைக்கப்பட்டதுபோல் இப்போதும் ஆகிவிடக்கூடாது. அவர்கள் வாழ்ந்ததற்கான தடயங்களைக் கலை, இலக்கியம், சிற்பம் ஆகிய வடிவங்களில் பதிவு செய்து வைக்கவேண்டும்.

தலித் பகுஜன்கள் உயிரோடிருக்கும் போதும் சரி, இறந்த போதும் சரி இந்துத்துவா அவர்களது அறிவை, நம்பிக்கையை, உணர்வுகளை,

வரலாற்றுப் படிமங்களை ஒன்றுவிடாமல் அழித்தொழித்தது. இந்துப் பார்ப்பனீயத்தின் இத்தகைய மனிதாபிமானமற்ற செயலுக்கு ஈடு இணை ஏதுமில்லை. வாழும்போதும் தலித் பகுஜன்களுக்கும் இந்துக்களுக்கும் பொதுவாக ஏதுமில்லை. சாவிலும் பொது என ஒன்று மில்லை.

நம்மை இந்து மயமாக்கிக் கொள்ளாமல், நாம் இந்த உறவை மாற்றியமைத்துக்கொள்ள வேண்டும். பார்ப்பனிய சக்திகளைத் தலித் மயமாக்குவதன் மூலம் தான் அந்த உறவைச் சரிசெய்ய முடியும். இந்திய வரலாறு முழுக்கவும் தலித் பகுஜன்களின் கோட்பாடும் பார்ப்பன சக்திகளின் கோட்பாடும் எதிரெதிர் கோட்பாடுகளாக இருந்து வந்துள்ளன. இந்த இரண்டும் சேர்ந்து உருவான கூட்டுக் கோட்பாடோ சிதைந்து முழுமையற்றதாகவே உள்ளது. ஒரு குறிப்பிட்ட மக்கள் கூட்டம் எதிர்க் கோட்பாட்டாளர்களாகவே எப்போதும் செயல்பட்டு வருவதும் இயற்கைக்கு முரண்பட்ட செயலாகும். மனித சக்தி என்பது கோட்பாடாகவும், இயற்கையை அது எதிர்க் கோட்பாடாக எதிர் கொள்வதுமே சரியானது, எதார்த்தமானது. இந்தியாவில் மனிதர்களுக்கு மத்தியில் ஒருபடித்தன்மை உருவாவதென்பது இத்தகைய பன்மைத் தன்மையை ஏற்பதாக இருக்க வேண்டும். பன்மைத் தன்மையை அழிக்கும் எதிர்மறையான ஒற்றுமை இங்கே தேவையில்லை.

*அத்தியாயம் 7*

# நமது குறிக்கோள்: தலித் மயமாதல் இந்துமயமாதல் அல்ல

*நான் முந்தைய அத்தியாயங்களில் விவாதித்தைப்போல் இந்திய தலித் பகுஜன்களுக்கும் இந்துப் பார்ப்பனியத்துக்கு இடையே சமூகக் கலாச்சார மற்றும் அரசியல் சூழ்நிலை ஏதும் பொதுவானதாக இல்லை. தலித் பகுஜன்கள் கிராமங்களிலும் நகர்ப்புறங்களிலும் இந்துக்களோடு ஒரே சிவில் சமூகமாகத்தான் வாழ்கிறார்கள். ஆனால் அவர்களுடைய பண்பாட்டு உலகங்கள் ஒன்றுக்கொன்று எதிரானவை. இந்துக்களின் சிந்தனை தலித்பகுஜன்களின் நலனுக்கு எதிரானது. தலித் பகுஜன்களின் பண்பாட்டு நெறிமுறைகளை அழித்து அதன் மீது கட்டப்பட்டது தான் இந்துப் புராண இதிகாசக் கதைகள். நவீன வாழ்க்கைக்கும் சமத்துவ வாழ்க்கைக்கும் உரியவர்களாக தலித் பகுஜன்கள் வளர்ந்து வர இவர்கள் எப்போதும் அனுமதித்ததில்லை. இவர்களின் வன்முறை வழிவந்த பார்ப்பனக் கலாச்சாரம் தலித் பகுஜன்களின் உற்பத்தி அமைப்புகள், கலாச்சாரம் பொருளாதாரம், அரசியல் அமைப்புகள் ஆகியவற்றை அழித்து ஒழிப்பதிலேயே நோக்கமாக இருந்தது. இவை ஒவ்வொன்றும் தாக்கப்பட்டு அமுக்கி வைக்கப்பட்டது. இந்நிலை சுதந்திரத்துக்குப் பிந்திய இந்தியாவிலும் தொடர்கிறது.*

*சுதந்திரப் போராட்டத்தின் போது பார்ப்பனத் தலைவர்களும் அவர்கள் கருத்தியல்களும் சாதிக்கு எதிரான சமத்துவக் கருத்தினை உருவாக்க முயற்சிக்கவில்லை. மாறாக, கொடுமையான இந்து நிறுவனங்களை அவர்கள் புகழ்ந்து பேசினார்கள். மொகலாயர் காலத்திலும் ஆங்கிலேயர் காலத்திலும் ஆட்டங்கண்ட பார்ப்பன சாதிவெறி சக்திகளை மறுபடியும் நிர்மாணிக்கத் தேவையான கருத்தியலையும் உதவிகளையும் செய்தார்கள். பார்ப்பனிய தேசியத்தைக் கட்டியெழுப்புவதின் ஊடாக ராசாராம் மோகன்ராய், காந்தி ஆகியோரும் வெவ்வேறு கால கட்டங்களில் மேல்சாதி ஆதிக்கத்தை நிறுவுவதற்குத் தம்மால் இயன்ற பங்காற்றினார்கள். 1947க்குப் பிறகு ஜனநாயகம் என்ற பெயரால் பார்ப்பனர்கள், பனியாக்கள், புதிய சத்திரியர்கள் இங்கு அதிகாரத்திற்கு வந்தார்கள். விடுதலைக்குப் பிறகு இந்த ஆதிக்கச் சக்திகளே அனைத்து வகையான*

அதிகாரங்களையும் சுற்றி வளைத்துக் கொண்டார்கள். பார்ப்பனர்கள், அரசியல் நிர்வாகத்துறையிலான அதிகாரத்தைக் கைப்பற்றுவதில் கவனத்தைக் குவித்தார்கள். பனியாக்கள் முதலாளித்துவச் சந்தையில் தங்களுடைய அதிகாரத்தைக் குவித்துக் கொண்டார்கள். புதிய சத்திரியர்கள் வேளாண்மைத்துறையில் தங்களுடைய அதிகாரத்தை நிறுவிக் கொண்டார்கள். இந்த நவீன முக்கூட்டணி, அரசையும் சமூகத்தையும் தங்கள் மேலாதிக்கத்தின் கீழ் கொண்டு வந்தது.

பல்வேறு அதிகார அமைப்புகள் நவீன பார்ப்பனியத்தின் கையில் குவிந்து கிடந்த போதிலும், கல்வியில் இட ஒதுக்கீட்டின் விளைவாக தலித் பகுஜன் அறிவு ஜீவிகள் எழுச்சியுற்று நவீனப் பார்ப்பனியத்தைப் பல்வேறு நிலைகளில் சிதறடிக்க முயன்றார்கள். பார்ப்பனிய மேட்டிமைச் சக்திகள் இதனை உணர்ந்து கொண்டு, தம்மை வெறி கொண்ட இந்துத்துவ அமைப்பாக வடிவமைத்துக் கொண்டு, மண்டல் எதிர்ப்புக் கருத்தியலைப் பரப்பின. அயோத்தியை மையமாகக் கொண்ட இராமன் பெயரிலான ஆரவாரமும் சங் பரிவாரின் அகண்ட பாரதக் கோட்பாடும் சிறுபான்மையினருக்கு எதிரான முழக்கங்களும் இந்துத்துவக் கருத்தியலை வலுப்படுத்தின. இவை அனைத்தும் தலித் பகுஜன்களுக்கு எதிரான செயல்பாடுகளாயின.

காலனியத்திற்குப் பிந்திய முதலாளித்துவக் கட்டமைப்பிற்குத் தகுந்த வகையில் இந்து சனாதன வருணாசிரமத்தை நவீனப்படுத்தும் நோக்கில் இத்தகைய தலித் விரோதக் கோட்பாடுகள் முன் வைக்கப் பட்டன. இதன் மூலம் நவீனத்துவ மாற்றங்கள் ஏற்பட்ட போதிலும் பார்ப்பன மேலாண்மைக்குப் பங்கம் வராமல் பார்த்துக் கொள்ளப் பட்டது. இந்துமயமாதல் என்பது நகர்மயமாதல் மற்றும் நவீன மயமாதல் என்ற எல்லைக்குள்ளேயே நடைபெறுதல் வேண்டும் என்று அவர்கள் சொல்வதன் பொருள் இதுதான். இந்துமயமாக்கும் கொள்கையை நாம் இரண்டு வழிகளில் முழுமையாக எதிர்க்கிறோம். ஒன்று: இந்துத்துவா ஒரு நாளும் மனிதத் தன்மையான தத்துவமாக இருந்ததில்லை. மதங்களின் வரலாற்றிலேயே மிகக் கொடூரமான நிறுவனமாக இந்து மதம் இருந்து வந்துள்ளது. இந்தியாவில் உள்ள தலித் பகுஜன்களின் வேதனை மிக்க வாழ்வே இந்தக் கொடூரத் தன்மைக்கும் சான்றாக அமைகிறது. இரண்டு: எதிர்காலத்திலாவது இந்து மதம் மனிதத் தன்மை உடையதாக மாறப்போவதாக அறிவித்தாலும் அதற்கான சாத்தியமே இல்லை. ஏனென்றால் மதங்களின் வரலாறே இன்று முடிவுக்கு வந்து கொண்டுள்ளது. எனவே நாம் மொத்த இந்திய சமூகத்தையே தலித் மயமாக்க வேண்டியுள்ளது. அது ஒன்றே சமத்துவத்தை அடைவதற்கான ஒரே வழி.

## தலித் மயமாக்குதல் என்றால் என்ன?

தலித் மயமாவதற்குத் தேவையானது என்னவென்றால் இந்திய சமூகம் முழுமையும் தலித்குடியிருப்புகளில் இருந்து எல்லாவற்றையும் கற்றுக்கொள்வதுதான். குறிப்பாக அட்டவணைச் சாதியினர் வாழ்கிற பகுதிகளைச் சொல்கிறேன். ஒரு புதிய பிரக்ஞையைப் பெறவேண்டும் என்றால் தலித் குடியிருப்புகளை நாம் பார்க்க வேண்டும். தலித் குடியிருப்புகளில் வாழ்ந்து பார்த்து அங்கு காணப்படும் நல்ல அம்சங்களைப் பாராட்டி அங்கே வெளிப்படும் மனிதத்தன்மை, சமத்துவ உணர்வு ஆகியவற்றை இந்தியச் சமூகம் முழுமைக்கும் கொண்டு செல்ல வேண்டும்.

தலித் பகுஜன் சமூக அமைப்பின் தொடக்கப்புள்ளி என்பது சேரிகள் எனப்படும் தீண்டப்படாத மக்களின் குடியிருப்புகளிலிருந்து தொடங்குகிறது. எங்கள் பகுதியில் அது மாலா, மாடிகா சாதிகளாக உள்ளன. இதே போல சாதிகள் இந்தியா முழுவதும் எல்லா மாநிலங்களிலும் இருக்கின்றன. தமிழகத்தின் பள்ளர், பறையர், அருந்ததியர் என்பது போல் மாலா, மாடிகா சமூகத்திலிருந்து அறிந்து கொள்ள வேண்டியது என்னவென்றால் கூட்டு வாழ்க்கை மற்றும் கூட்டு உணர்வு. தலித் குடியிருப்புக்களில் வாழும் மனிதர்கள் என்போர் வெறும் கூட்டு உயிரிகள் மட்டுமல்ல, மதச் சார்பற்ற சமூக உயிரிகளாகவும் உள்ளனர். இங்கே மனித உறவு என்பது மனிதத் தேவைகளின் அடிப்படையில் அமைந்துள்ளது. தலித் பகுஜன் சமூகத்திலும் பல முரண்பாடுகள் உள்ளன. ஆனால் அது பகை முரண்பாடல்ல; அதை நட்போடு தீர்த்துக் கொள்கிறார்கள். அவர்கள் சமுதாய அமைப்பு உற்பத்தி மற்றும் விநியோக நடைமுறைகளின் அடிப்படையிலானது. சமத்துவம் என்பது உள்ளார்ந்த பலம். அதன் சமூக அமைப்பில் காணப்படும் ஒடுக்குமுறைக்கு எதிராக தலித் பகுஜன்கள் தான் உற்பத்தி உயிரிகளாகத் தொடர்ந்து வாழும் வல்லமை பெற்றுள்ளனர். தலித் பகுஜன் உணர்வு என்பது தனிநபர் உணர்வல்ல; அது சமுதாய உணர்வு; கூட்டு உணர்வு.

மனிதர்கள் ஒருவரோடு ஒருவர் உறவு கொள்வது மனிதத் தன்மையின் அடிப்படையில் மட்டுமே. தலித் சமூகத்தின் பொருளியல் அடிப்படை என்பது, சொத்தின் அடிப்படையில் இல்லாமல் உழைப்புச் சக்தியின் அடிப்படையில் அமைந்துள்ளது. எப்படி இருந்தபோதும் தலித்பகுஜன் உழைப்பு சக்தி மூலம் வருகிற வருவாய் குறைந்து வரும் மதிப்பையே கொண்டுள்ளது. இது அவர்களைச் சமூகத்திலிருந்து அந்நியப்படுத்துகிறது. மூன்று வகைகளில் இது தலித் பகுஜன் குடியிருப்புகளில் ஏற்படுகிறது.

ஒன்று: கிராம உற்பத்தியிலிருந்தும், சந்தையிலிருந்தும் அவர்கள் அந்நியமாகிறார்கள். இரண்டு: கிராமத்தின் சமூக அமைப்பிலிருந்து அந்நியமாகிறார்கள். மூன்று: தங்களிலிருந்தே அவர்கள் அந்நிய மாகிறார்கள். இந்த வகையில் மேலை நாட்டிலிருக்கக் கூடிய உழைக்கும் வர்க்கத்தை விட தலித்பகுஜன்கள் இன்னும் மோசமான நிலையில் இருக்கிறார்கள். ஆனாலும் வாழ்க்கை பற்றிய நம்பிக்கை அவர்களிடம் சிறப்பாகவும் உறுதியாகவும் உள்ளது. எங்கிருந்து இந்த நம்பிக்கை வருகிறது? தலித்பகுஜன் பண்பாட்டிலிருந்தும் உணர்வுகளில் இருந்தும் வெளிப்படும் இந்த பலம், தலித் பகுஜன்களின் மனஉறுதியிலிருந்து வருகிற நம்பிக்கையாகும். இது கூட்டு உணர்வின் வெளிப்பாடு.

தலித் குடியிருப்புகளில் தனிநபர் என்பவர் பொதுமைக்கு உட்பட்டவராகவே இருக்கிறார். கூட்டுத்தன்மையில் அங்கம் வகிப்பதால் அந்தந்த தனிநபரின் தனித்தன்மை அழிக்கப்படுவதில்லை. இயற்கையோடு இணைந்த இந்த வாழ்வு அவர்களைச் சோர்வடைய விடுவதில்லை. தலித்குடியிருப்புகளில் அவர்கள் வாழ்வு சுதந்திரமாக இல்லை. ஒவ்வொரு கிராமங்களிலும் மேல் சாதிக்காரர்கள், குறிப்பாக பார்ப்பன பனியாக்கள் பல்வேறு குட்டி அரசுகளைத் திட்டமிட்டு உருவாக்கி வைத்துக்கொண்டு தலித் பகுஜன்களை உடல்ரீதியாகவும் உளரீதியாகவும் ஒடுக்குகிறார்கள். இருந்த போதிலும் தங்களுடைய வாழ்க்கையை உயர்த்திக் கொள்வதற்கு தலித் பகுஜன்கள் தங்களைப் புத்துணர்ச்சியூட்டிக் கொண்டு போராடி வருகிறார்கள். அவர்களது கூட்டுணர்வு இதை அவர்களுக்குச் சாத்தியமாக்குகிறது.

தலித் பகுஜன்களின் கூட்டுணர்வு உணர்த்துவது என்ன? நன்மையோ தீமையோ தலித்பகுஜன் குடியிருப்புகளில் நடக்கும் எல்லாச் சம்பவங்களிலும் ஒவ்வொரு தலித்பகுஜனும் கலந்து கொள்கிறார். இன்பம், துன்பம் மற்றும் எந்த ஒரு சமூக நிகழ்வும் எல்லோராலும் பகிர்ந்து கொள்ளப்படுகிறது. ஒரு வீட்டில் குழந்தை பிறந்தால் அந்த இன்பமும் துன்பமும் சமூகத்தின் இன்ப துன்பங்கள் ஆகிவிடுகின்றன. தாயின் பிரசவ வேதனையை எல்லாப் பெண்களும் உணர்வுபூர்வமாகப் பகிர்ந்து கொள்கின்றனர். ஒரு குழந்தை பிறக்கும்போது ஏற்படுகிற மகிழ்ச்சி அந்த சமூகம் முழுவதற்கும் ஆனதாக இருக்கிறது. ஒரு குழந்தை பிறந்தபோது உள்ள மகிழ்ச்சி என்பது உழைப்பதற்குக் கூடுதலாக இரண்டு கைகள் கிடைத்திருக்கின்றன என்கிற அடிப்படையில் உருவாகிறது. குழந்தை என்பது தலித்துகளுக்கு என்றுமே பாரமாக இருந்தது இல்லை. ஒரு இறப்பு ஏற்படுமானால் அனைவரும் உணர்வுபூர்வமாகத் துக்கம் கடைப்பிடிக்கிறார்கள்.

இறுதி ஊர்வலத்திலும், தகனம் செய்யும் போதும் அல்லது அடக்கம் செய்யும்போதும் ஆண்களும் பெண்களும் சேர்ந்து பங்கெடுத்துக் கொள்கிறார்கள். தங்களோடு சேர்ந்து உழைத்தவர், தங்களோடு உண்டு, குடித்து, புகைத்து உறவாடி மகிழ்ந்த ஒருவர் இறந்துவிட்டால் அந்தச் சமூகம் முழுவதும், ஆண் பெண் அனைவரும் துக்கம் கடைபிடிக்கிறார்கள். கிராமத்திலுள்ள மேல் சாதிக்காரர்கள் இறந்தால் கூட அங்கும் சென்று துக்கம் விசாரிக்கிறார்கள், இறந்தவர் செய்த நன்மைகள் அன்று பேசப்படுகின்றன. தீமைகள் பேசப் படுவதில்லை. அதே சமயத்தில் மேல் சாதிக்காரர்கள் செய்கிற கொடுமைகள் பற்றி நாள்தோறும் பேசாமல் இருப்பதில்லை.

சமீபத்தில் ஒரு கிராமத்தில் இளைஞர் ஒருவர் தற்கொலை செய்து கொண்டார். நான் அங்கு துக்கம் விசாரிக்கச் சென்றிருந்தேன். இருபது வயதுடைய அந்த இளைஞன் ஒரு பணக்கார ரெட்டியாரின் ஒரே மகன். பணப் பேயான ரெட்டியார் தன் மகனின் கல்விக்குச் செலவு செய்ய மறுத்துவிட்டார். அதனாலேயே அந்த இளைஞன் தற்கொலை செய்து கொண்டான். அந்த ரெட்டியாரின் வீட்டிற்கு முதன்முதலில் சென்று ரெட்டியாரைத் திட்டியவர்கள் 'மாடிகா'க்களே. அப்பனைத் திட்டிய மக்கள் தற்கொலை செய்து கொண்ட மகனைப் புகழ்ந்து பேசினார்கள். அவனுக்காக மிகவும் துக்கப்பட்டார்கள். தலித் பகுஜன்கள் அனைவரும் பங்குகொண்ட அந்த துக்கத்தில் மேல் சாதியினர் மட்டும் இது தகப்பனுக்கும் பிள்ளைக்கும் உள்ள விவகாரம் இதில் நாம் தலையிடத் தேவையில்லை என்று ஒதுங்கிக் கொண்டார்கள். அந்த ஒரே மகனுக்காகத்தான் அவர் சொத்து சேர்த்து வைத்தார். இறுதியாக தலித் பகுஜன்கள் ஒரு அர்த்தமுடைய கேள்வியைக் கேட்டார்கள். சொத்துக்காக மனிதனா? மனிதனுக்காக சொத்தா? என்பதே அந்தக் கேள்வி. தலித் பகுஜன்களின் இந்தக் கேள்வியை நாம் புரிந்து கொள்ள வேண்டுமானால், சொத்து பற்றி அவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்று புரிந்து கொள்ள வேண்டும்.

## தனிச்சொத்து பற்றிய தலித் பகுஜன் கருத்து

மாலா, மாடிகா சமூகம் தனிச்சொத்தால் அமைக்கப்பட்ட சமூகமாக இல்லை. தனியுடைமைக் கோட்பாடு அவர்கள் சிந்தனையில் இடம்பெறுவதில்லை. சிறிதளவு கூட தனித்துவம் மற்றும் சொத்து குவிப்பு ஆகியவற்றின் அடிப்படையிலான பெருமைகளை இந்துக்களைப் போல தலித் பகுஜன்கள் கொண்டிருப்பதில்லை. தலித் பகுஜன்கள் ஒரு ஆட்டையோ மாட்டையோ வெட்டினால் அதன்

இறைச்சியை அனைவரும் பங்கிட்டுக் கொள்கிறார்கள். அதைத் தராசில் வைத்து எடை போடாமல் சிறு சிறு கூறுகளாகப் பிரித்து எல்லோருக்கும் பங்கிடுகிறார்கள். இந்தப் பங்கீட்டு முறையே தலித்பகுஜன் உணர்விற்கு அடிப்படையானது. அரசாங்கம் வழங்கும் நலத்திட்டப் பணம் கூட (எல்லோராலும்) சமமாகப் பங்கிட்டுக் கொள்ளப்படுகிறது. இதுவே நலத்திட்டத்திற்கான பங்கீடுகள் நொடிப்பொழுதில் மறைந்து போவதற்கான முக்கிய காரணமாகிறது.

அடுத்த நாளைக்குச் சேமிக்க வேண்டும் என்ற உணர்வற்றவர்களாக அவர்கள் ஏன் உள்ளனர்? நாளைக்கு அல்லது இரண்டு நாளைக்கு அல்லது இரண்டு மாதத்திற்கு, இரண்டு வருடத்திற்கென்று சேமிக்கும்போது அது தனிவுடைமைக்கு வழிவகுக்கும். தமது உழைக்கும் சக்தியில் நம்பிக்கை உடையவர்களாக இருப்பதால் சேமிப்பு பற்றி அவர்கள் கவலைப்படுவதில்லை. தலித் பகுஜன்கள் தான் கிராம சமுதாயத்தில் கடினமாக உழைக்கக்கூடியவர்கள். அவர்களுக்கு உழைக்கும் சக்தியே சொத்தாகும். அவர்கள் உழைக்காது இருப்பார்களேயானால் கிராமப் பொருளாதாரம் என்றோ நசிந்து போயிருக்கும். வேளாண்மையாக இருந்தாலும் சரி, வேறு தொழிலாக இருந்தாலும் சரி அவற்றில் முதலீடு செய்யப்படும் தம் உழைப்பு என்பது மிகக் குறைந்த வருமானமாகவே திரும்பி வருகிறது என்கிற உண்மையைத் தலித்துக்கள் அறிந்துள்ளனர். ஒவ்வொருநாளும் அவர்கள் தமது உழைப்புச்சக்திக்குத் தேவையான அளவைவிடக் குறைவாகவே உண்ணுகிறார்கள். இப்படியாக அவர்கள் தன்னிலிருந்தே அந்நியமாகின்றனர். இருந்தும் கூட வாழ்க்கையை, மாயை என்று சொல்லுவதில்லை. வாழ்க்கையையே ஒரு போராட்டமாக்கிக் கொண்டு உற்பத்தியிலும் மறு உற்பத்தியிலும் ஈடுபடுகிறார்கள். சமுதாயத்திற்குச் சுமையாக இல்லாமல் அவர்கள் சமுதாயத்தைத் தாங்கும் உற்பத்தித் தூண்களாகவும், ஒட்டு மொத்தச் சமுதாயமும் இயங்குவதற்குத் தேவையான ரத்த ஓட்டமாகவும் இருக்கிறார்கள்.

இதற்கு மாறுபட்ட நிலையில் மேல்சாதியினர் உற்பத்தி சாராத சோம்பேறிகளாக உள்ளனர். என்றென்றைக்கும் சொகுசான வாழ்க்கை பற்றிய அவர்களுடைய கண்ணோட்டத்தின் விளைவாக அவர்களின் வாழ்க்கை மதிப்பீடுகள் சிதைந்து போனவையாக உள்ளன. அவர்களுடைய தனியுடைமைக் கோட்பாடு மனிதத்தன்மை அற்றதாகவும் சுரண்டல் மயமானதாகவும் உள்ளது. அவர்கள் குவிக்கும் சொத்தின் அடிப்படையிலேயே நாளைய வாழ்வு குறித்த அவர்களின்

சிந்தனை அமைகிறது. அந்தச் சொத்தைப் பெறுவதற்கு அவர்கள் எத்தகைய கொடூரமான செயலையும் செய்வார்கள். இது தான் இந்து தர்மம், பார்ப்பன சக்திகளிடம் வேலைபற்றிய கருத்தாக்கம் கிடையாது. உழைப்பதென்பதை அவர்கள் மறுக்கின்றனர். அவர்களது எல்லா உறவுகளும் தனிச்சொத்தின் அடிப்படையிலான பரஸ்பர அவ நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டுள்ளன. மனிதப்பண்பு முழுமையாக மறைந்துவிட்டது. உண்பதும், உறங்குவதும் தான் அவர்களின் இரண்டு முக்கியப் பணிகளாகிவிட்டன. பார்ப்பன பனியாக்கள் எல்லோருமே பணக்காரர்கள் அல்ல, அவர்களிலும் ஏழைகள் உண்டு. இருந்தும் கூட அவர்கள் உடல் உழைப்பின் மூலம் கடினமாக வேலை செய்து வாழ்வதில்லை.

அதே நேரத்தில் தலித் பகுஜன்கள், மேல்சாதியினர் நன்றாக வாழ்வதற்காக ஒவ்வொரு நிலையிலும் உழைக்கிறார்கள். தலித் பகுஜன்களைச் சுரண்டி அதன் மூலம் சொத்து சேர்த்து வைத்திருக்கிற மேல் சாதிப் பண்பாடு மாற்றப்படவேண்டும் என்பது தெளிவு. பார்ப்பன பனியா உட்பட எல்லா மக்களும் தலித் பகுஜன்கள் போன்று நம்பிக்கையோடு வாழக் கற்றுக் கொள்ளவேண்டும். நமது நாளைய வாழ்வு உழைப்பால் உறுதிப்படுத்தப்படுகிறது என்கிற நம்பிக்கையைப் பெற வேண்டுமெனில் அதற்கு ஒரே வழி பார்ப்பனீயமயமாகிக் கிடக்கும் சமூகத்தைத் தலித் மயமாக்குவது தான்.

உற்பத்தி சார்ந்த வேலையிலிருந்து விலகியிருப்பதால் தான் பார்ப்பனிய இந்து சமூகம் தனிவுடைமைக் கோட்பாடுகளில் ஆழ்ந்த நம்பிக்கை வைத்திருக்கிறது. உற்பத்தியில் ஈடுபடாத மேல்சாதிக்காரர்களின் வாழ்வு தனிவுடைமையால்தான் நீடித் திருக்கிறது. சாதிகளற்ற சமூகங்களைப் போல் அல்லாது, பார்ப்பனிய இந்துமதம் குவித்துள்ள தனியுடைமைச் சொத்துக்கள் எல்லாம் உழைப்பு, மூலதனம், சுரண்டல் ஆகியவற்றின் கலப்பினால் மட்டும் உருவாகவில்லை. இங்கே ஏற்பட்டுள்ள தனியுடைமைச் சொத்துக் குவிப்பு என்பதில் சாதியமைப்பின் பங்கு முக்கியமானது. பூஜை வழிபாடுகள் என்பது கூட ஒரு வகையான பார்ப்பனிய முதலீடு தான். பார்ப்பனர்கள் கடின உழைப்பைக் கண்டு பயப்படுவார்கள் என்பதும், வேலை என்றால் முகம் சுழிப்பார்கள் என்பதும் உலகறிந்த விஷயம். பார்ப்பனர்களுடைய பேராசையையும் அவர்கள் பெருந்தீனி தின்பதையும் பார்த்தால் சுரண்டல் மூலமே அவர்கள் சொத்து சேர்த்துள்ளார்கள் என்பது புரியும். தவிரவும் இவ்வாறு சுரண்டல் மூலம் சேர்த்த சொத்துக்கு உயர்ந்த சமூக அங்கீகாரமும் வழங்கப்பட்டிருக்கிறது.

பார்ப்பன இலக்கியங்கள் எல்லாம் வசதியானவர்களைப் பற்றியே பேசும். பார்ப்பன இந்து சமுதாயம் பணகாரர்களைப் புகழவும், ஏழையை இகழவுமே செய்கிறது. எனக்குத் தெரிந்தவரை மற்ற மதங்களில் உள்ள சமய குருமாரின் பண்பு இத்தகையதாக இல்லை. சுருங்கச் சொல்வதானால் தனிவுடைமை மற்றும் உற்பத்தி சாராத வாழ்க்கையின் அடிப்படையிலேயே இங்கு 'மேல்' சாதிப் பண்பாடு அமைந்துள்ளது. சொத்துகுவிப்பதென்பது உழைக்காமல் உண்ணுகிற வாய்ப்பை உண்டு பண்ணுகிறது. இந்து சமூகத்தில் தனியார் சொத்து என்பது சமுதாயம் முழுமைக்கும் தேவை ஏற்படும்போது பயன்படுத்திக் கொள்ளும் சமுதாயச் சொத்து அல்ல; சமுதாயச் சேமிப்பும் அல்ல. அது தனியார் மட்டுமே பயன்படுத்தக்கூடியது. காந்தி தவறு செய்த இடங்களில் இதுவும் ஒன்று. பார்ப்பனர்கள் கையகப் படுத்தியுள்ள எல்லாம் புனிதமானவை. அதை மற்றவர்கள் தொடக் கூடாது. ஒரு பார்ப்பனன் அதிகப்படியாக அரிசியை வைத்திருந்தால் அது மற்றவர்களுக்குத் தரப்படமாட்டாது. பனியா சொத்தும் புனிதமான சொத்து. இத்தகைய சாதிமயமாக்கப்பட்ட சொத்து என்பது சொத்தின் சமுதாய அடிப்படையையே தகர்த்துவிடுகிறது. இந்தச் சாதிமுறையும் அதனடிப்படையிலான சொத்தும் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியில் எந்த நிலையிலும் எந்த ஒரு முற்போக்கான பாத்திரத்தையும் வகிக்கவில்லை.

## உழைப்பே வாழ்க்கை

தலித் பகுஜன்களுக்கு உழைப்பே வாழ்க்கை. வயிற்றுக்கு உணவு எப்படியோ அவ்வாறே உடலுக்கு உழைப்பு என்பது பழக்கமாகி விட்டது. உண்மை என்னவெனில் ஒவ்வொரு தலித்பகுஜன் உடலும், தான் உட்கொள்ளும் அளவைவிட அதிகமாகவே உற்பத்தி செய்கிறது. இதன் விளைவாக தலித் பகுஜன் வாழ்க்கை அதிக உழைப்பின் மூலமே தன்னை புத்துயிர்ப்பாக்கிக் கொள்கிறது. சாப்பிடும்போதும் பருகும்போதும் ஏற்படுகிற இன்பத்தை விட, உழைப்பில் அது இன்பம் காண்கிறது. வேலையில் ஈடுபடும்போது தலித் பகுஜன் மனம் சிந்தித்துக் கொண்டேயிருக்கிறது. இப்படி உருவாகிற கருத்துக்கள் உழைப்பையே இன்பமயமாக்குகிறது. தலித் பகுஜன் மனத்திற்கு உழைப்பு என்பது இன்பமாக இல்லாவிட்டால் அல்லது அந்த உழைப்பிலிருந்து தலித் பகுஜன்களின் உள்ளங்கள் இன்பத்தைப் பெறாமல் உழைப்பை அவர்கள் துன்பமாகக் கருதியிருந்தால், அவர்கள் என்றோ மடிந்துபோயிருப்பார்கள். உழைத்த உழைப்பிற்கு மாறாக அவர்களது உழைப்புக்கேற்ற உணவு கிடைக்குமானால் தலித் பகுஜன் உடல் என்பது 'மேல்'சாதி உடலைக் காட்டிலும்

நீண்ட நாள் வாழும். உழைக்காமல் வாழ்கிற மேல்சாதி வர்க்கத்தினரின் உடலைவிட தலித் பகுஜன்களின் உடல் ஆரோக்கியமானது.

உழைப்பின் போது தலித்பகுஜன்கள் நிலத்தோடு நெருங்கிய நிரந்தரமான தொடர்பு கொண்டுள்ளனர். இதனால் நிலத்தின் உற்பத்தித்திறன் பற்றியும் அதன் கலவை பற்றியும் எவ்வாறு உற்பத்தியைப் பெருக்க முடியும் என்பது பற்றியும் ஒரு தலித் பகுஜன் நன்கு அறிந்து வைத்திருக்கிறார். அதிக விளைச்சலுக்கு அவரே பொறுப்பேற்கிறார்.

நகரத்தை மையமாகக் கொண்ட தொழில்நுட்பம் சார்ந்த வேளாண் அறிவு இங்கே புகுத்தப்படுவதற்கு முன்பாக, உற்பத்தியை அதிகரிக்கப் பல விஞ்ஞானப் பூர்வமான முறைகளில் நிலத்திற்கும் விதைக்குமான உறவை தலித் பகுஜன்கள் அறிந்துவைத்திருந்தார்கள். விதைக்கும் மனித உடற்கூறுக்கும் உள்ள தொடர்பையும் கூட அவர்கள் அறிய முயற்சித்தார்கள். இனக்கலப்பு வருவதற்கு முன்பே இவர்கள் கலப்பின விதைகள் பற்றித் தெரிந்துவைத்திருந்தார்கள். தலித் பகுஜன் பெண்கள் நல்ல விதைகளைத் தேர்ந்தெடுத்துப் பயிரிடுவதற்குப் பாதுகாப்பாக வைத்திருப்பார்கள். செடிகளின் உயிர்மத்தைப் பாதுகாத்து வைத்திருப்பார்கள். இத்தகைய அறிவு அவர்கள் உழைப்பாலும், நிலத்தோடும் இயற்கையோடும் உள்ள உறவின் மூலமும் வந்ததாகும்.

வேளாண்சாராத தாவரஅமைப்புக்களோடும் தலித் உழைப் பாளிகள் நெருக்கமான தொடர்புடையவர்களாக இருந்தார்கள். கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டிருந்த தலித் பகுஜன்கள் மூலிகைகள் பற்றி இடைவிடாது ஆராய்ந்தனர். தலித் பகுஜன் அறிவு உடல் உழைப்பையும் மூளை உழைப்பையும் தனித்தனியே பிரித்து அணுகுவதில்லை. இந்தியாவில் சாதி, வர்க்கம் என்கிற அடிப் படையில் இத்தகைய வேலைப் பிரிவினை உருவாக்கப்பட்டது. தலித் பகுஜன்களுக்கு உடல் உழைப்பும் மூளை உழைப்பும் ஒருங்கிணைந்தே செயல்படுகிறது. சீனச் சூழலில் உடல் உழைப்பிற்கும் மூளை உழைப்பிற்குமான முரண்பாட்டைத் தீர்த்தது போல இங்கு நாம் செய்ய வேண்டுமானால் மூளை உழைப்பையும் உடல் உழைப்பையும் இணைத்துச் செயல்படும் இந்திய தலித்துக்கள் பற்றி நாம் மறுபடியும் கவனமாகப் படித்தறிய வேண்டும். நமது 'அறிவாளிகள்' கூட்டத்தைச் சற்றே ஒதுக்கி வைத்து விட்டு உழைப்பையும் அறிவையும் ஒருங்கிணைக்கும்படியாக ஒரு புதிய முறையைக் கண்டுபிடிக்க வேண்டும்.

தலித் பகுஜன்களிடத்தில் அபாராமான தொழில்நுட்ப அறிவு உள்ளது. அது அவர்கள் உழைப்பிலிருந்து விலகிவிடாதபடி உள்ளது. இறந்த மாட்டின் தோலை எடுத்து அதைப் பதப் படுத்திச் செருப்புகளும் 'ஷு'வும் செய்வது எப்படி என்று அவர்களுக்குத் தெரியும். இந்த வேலைகள் முழுவதிலும் உடல் உழைப்பும் மூளை உழைப்பும் சம்பந்தப்பட்டுள்ளது. இந்தக் கடின உழைப்பு வேதம் ஓதுவதைப் போலவோ, பள்ளியில் பாடம் நடத்துவதைப் போலவோ எளிமையானதல்ல. வேதம் படிப்பதற்கும் பள்ளியில் பாடம் நடத்துவதற்கும் உடல் உழைப்பும் படைப்பாக்கத் திறனும் தேவையில்லை. பொதுவாக இது போன்ற மூளை உழைப்பிற்கு உடல் உழைப்பு தேவையில்லை. ஆனால் எல்லா உடல் உழைப்போடும் உழைப்பு சம்பந்தப்பட்டுள்ளது. இரண்டு வகையான உழைப்பிலும் தலித் பகுஜன்கள் ஆற்றல் மிக்கவர்களாக இருக்கிறார்கள். 'கௌடா' சமூகத்தைச் சேர்ந்தவர்களைப் பாருங்கள்: மரம் ஏறும்போது தங்களின் மனோ சக்தியையும் உடற்பயிற்சியையும் கொண்டு அவ்வேலையில் ஈடுபடுகிறார்கள். மரத்தில் ஏறும்போது அவன் தனது உடல்பலத்தைப் பயன்படுத்துகிறான். கிளைகள் இல்லாத உயர்ந்த மரங்களில் ஏறுவதற்கான வழிமுறையையும் அவன் யோசிக்க வேண்டும். மரத்தில் ஏறும் போது ஒவ்வொரு அடியையும் அவன் சிந்தித்து எடுத்து வைக்காவிடில் விளைவு மரணம்தான். ஒரு பார்ப்பன நடன ஆசிரியர் தனது உடல் பலத்தையும் மனோசக்தியையும் ஒரு முகப்படுத்தி அந்த நடனத்தை ஆட வேண்டும். ஆனால் அதில் கவனக்குறைவு ஏற்பட்டால் ஆபத்தில் முடிவதில்லை. இதை விடுத்து மற்றொரு விஷயத்தைதையும் நாம் இங்கே சிந்திக்க வேண்டும். பார்ப்பனப் பெண்கள் நடனத்திற்கு ஏன் அதிக விளம்பரமும் முக்கியத்துவமும் கொடுக்கப்படுகின்றன? ஒரு கௌடாப் பெண்ணின் அழகையும் திறமையையும் ஏன் பாராட்டுவதோ விளம்பரம் செய்வதோ இல்லை? மரமேறுவது ஒரு கலை என்பதோடு விஞ்ஞான மாகவும், உற்பத்தி மதிப்போடு கூடிய செயலாகவும் இருக்கிறது. நான் முன்பே சொன்னதைப் போல மரத்தில் ஏறி, கள் இறக்கும் வேலையை யாரும் எளிதில் செய்துவிட முடியாது. அதற்கு உடற்பயிற்சியும் மனப்பக்குவமும் தேவை. அதில் பயிற்சி பெறுவது வேதபாராயணம் செய்வதைவிட ஆபத்தானது. வேதம் ஓதுகிற வனுக்கு இருக்கிற மரியாதையும் வருமானமும் கள் இறக்குகிறவனுக்கு இல்லை. உழைப்பை மதிக்காதது இந்துச் சமூகம்.

இந்துப் பார்ப்பனீயம் எல்லாப் பொருளாதாரக் கோட் பாடுகளையும் மறுத்ததோடு பெண்ணியப் பொருளாதாரக் கோட் பாட்டையும் நிராகரித்தது. சந்தையை மையமாகக் கொண்ட எல்லாச்

சமூகங்களும் சந்தை நுகர்வுக்குத் தேவையான பண்ட உற்பத்திக்கு அடிப்படையான உழைப்பையே மதித்தன. குடும்பத்தில் பெண்களின் உழைப்பு, பொருளாதாரத்திற்குரிய பங்காற்றுகிறது என்றபோதும் அதற்குச் சமூக மரியாதையும் பொருளாதார ஈடும் தருவது கிடையாது என்பதைப் பெண்ணியக் கோட்பாட்டாளர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள். (ஆண், பெண்) உழைப்பிற்குரிய மரியாதை இல்லை. இதற்கு மாறாக பார்ப்பன பனியாக்களின் மந்திரம் ஓதுதல் மற்றும் தரையில் உட்கார்ந்தது சம்பாதிக்கிற தொழிலுக்கு சமூகப்பொருளாதாரத் துறையில் அதிக மதிப்பு கொடுக்கப் பட்டிருக்கிறது. இதிலிருந்து இந்துக்கள் உடல் உழைப்பு மற்றும் உற்பத்தி சார்ந்த தொழிலைப் புறக்கணிக்கிறார்கள் என்பது புரியும். பார்ப்பனப் பொருளாதாரக் கோட்பாடு உற்பத்தியைக் கேவலமான தாகவும் மந்திரம் ஓதுவதை மேம்பட்டதாகவும் கருதுகிறது.

அறிவமைப்புக்குள் வராத ஓய்வு, மந்திரம், பூஜை, குறி சொல்லுதல் போன்றவற்றிற்கு இந்து பார்ப்பன அமைப்பு அறிவுத்துறைகள் என்கிற மரியாதையையும் ஏற்பையும் வழங்கியுள்ளன. அதே சமயம் தலித் பகுஜன்களிடத்தில் விஞ்ஞான அறிவுக்குப் பஞ்சமில்லை. ஒரு மண்பாண்டம் செய்யும் தொழிலாளியின் அறிவு விஞ்ஞானப் பூர்வமானது. ஏற்ற மண்ணைத் தேர்ந்தெடுத்து அதைப் பிசைந்து சக்கரத்தில் வைத்துச் சுற்றி, பானையாக வடிவமைத்துப் பின்னர் சூளையில் வைத்துச் சுட்டு எடுத்து விற்க வேண்டும். இதில் பல நுட்பங்கள் உள்ளன. ஒவ்வொரு செயல் முறையிலும் நேர்த்தியான உழைப்பு தேவை. அதைப்போலவே பொற்கொல்லர்கள், ஆசாரிகள், நெசவாளர்கள் தங்கள் தொழிலில் ஈடுபடும்போது விஞ்ஞான அறிவோடு செயல் படுகிறார்கள். இந்த அனைத்து வகையான கலைகளும், விஞ்ஞானமும், அறிவுச் செயல்பாடுகளும் அங்கீகரிக்கப் பட்டதில்லை. மந்திரத்திற்கும் சோதிடத்துக்கும் கிடைக்கும் சமூக மரியாதை இந்தக் கலைகளுக்குக் கிடைக்கவில்லை. இந்த அறிவுத் துறைகளுக்கு உரிய மரியாதை கொடுத்தால் தான் அவற்றிற்குச் சமூக ஏற்பு கிடைக்கும்.

தலித் பகுஜன்களின் சொந்த அறிவுமுறையிலிருந்தே இந்துத்துவ அறிவமைப்பு, தன்னை வடிவமைத்துக் கொண்டது. ஏற்கனவே குறிப்பிட்டதைப் போல தலித் பகுஜன்களுக்கு உழைப்பே வாழ்க்கையாக இருக்கிறது. இந்துக்கள் இதைத் தலைகீழாக்கி ஓய்வுக்குப்பிறகு தான் உழைப்பு என்றார்கள். ஓய்வே வாழ்க்கை என்கிற பழைய கோட்பாடு வாத்ஸ்யாயனனின் காமசூத்திரம் என்ற நூலில் முன்மொழியப்பட்டுள்ளது. இந்தக் கருத்தைக் ஏற்றுக்

கொள்ளுகிறவனே சிறந்த குடிமகன் (நாகரீகன்) என்கிறார் அவர். இந்து மதத்திற்குப் பிரச்சினை வந்தபோதெல்லாம், தலித் பகுஜன்கள் எழுச்சியுற்று பார்ப்பனீயத்தைக் கடுமையாக எதிர்த்த போதெல்லாம் இந்தக் கோட்பாடு திரும்பத் திரும்ப எடுத்துரைக்கப்பட்டது. 1990ல் நடந்த மண்டல் எதிர்ப்பு இந்துத்துவப் போராட்டத்தின் போது உழைப்பே வாழ்க்கை என்கிற தத்துவத்திற்கு எதிராக ஓய்வே வாழ்க்கை என்கிற கருத்தைப் பார்ப்பனர்கள் உயிர்ப்பிக்க முனைந்தார்கள். மண்டல் இயக்கமோ உழைப்பே வாழ்க்கை என்பதை உலகப் பொதுவாக்கியது. சாதிகள் என்னவான போதிலும் ஒவ்வொருவரும் அலுவலகத்தில் வேலை செய்வதோடு உடலுழைப்பையும் செய்ய வேண்டும். வேறு வார்த்தைகளில் சொல்வதானால் இந்தியச் சமூகத்தை தலித் மயமாக்குவதற்கு அது முனைந்தது.

உலக சமுதாயம் முழுமையும் ஓய்வை விட உழைப்பிற்கே முக்கியத்துவம் தருகிறது. சீனா, ஜப்பான் போன்ற நாடுகளிலும் மேற்கத்திய நாடுகளிலும் சமூக, பொருளாதாரத்துறைகளில் உழைப்பு பெரிதும் போற்றப்படுகிறது. அங்கெல்லாம் உழைக்காமல் உண்போருக்கு மரியாதை கிடையாது. இந்தியா மண்டல் மயமாகி யிருந்தால் உலக சமுதாயத்திற்கு இணையானதாகி இருக்கும். ஆனால் இந்து மதமும் பார்ப்பனியமும் அந்த வரலாற்று மாற்றத்திற்கு எதிராக, பிற்போக்குத் தனமானதும் புரட்சிக்கும் சமூக மாற்றத்திற்கும் எதிரானதுமான இந்துத்துவா இயக்கத்தை முடுக்கிவிட்டன. அதன் மூலம் மாயம், மந்திரம், நரகம், மோட்சம், மறுவாழ்வு போன்றவை மீண்டும் அழுத்தம் கொடுக்கப்பட்டு இந்தியப் புரட்சி பகற்கனவாகியது. பெரும்பாலும் ஓய்வை மறுத்த உழைப்பையும், தொழில் வளர்ச்சியையும் முதன்மைப் படுத்தும் போதே இந்திய சமூகம் வளர்ச்சி பெறும். இந்திய சமுதாயத்தைத் தலித் மயாக்குவதன் மூலம் தான் அந்த இலட்சியத்தை அடைய முடியும்.

## தலித் பகுஜன் சனநாயகம்

தலித் பகுஜன் சமூக அமைப்பு இயற்கையிலேயே சனநாயகத் தன்மையுடையது. சமூக ஒற்றுமையும் கூட்டு உணர்வும் இதற்கு அடிப்படையானது. இந்தக் கூட்டுவாழ்க்கையிலும் கூட்டுணர்விலும் தனியுடைமைக்கு இடமில்லை. அது உழைப்பில் அபார நம்பிக்கை வைத்துள்ளதால் தனியுடைமைக்கு அதிக முக்கியத்துவம் தருவதில்லை. அவர்கள் கோட்பாடெல்லாம் உழைப்பே வாழ்க்கை என்பது தான்.

அரசியல் நோக்கில் தலித் பகுஜன் சனநாயகம் பல வழிகளில் வெளிப்படுகிறது. கணவன் மனைவிக்கும் இடையிலான உறவு தந்தைவழி ஆதிக்கத் தன்மையாக இருந்தபோதிலும், சனநாயகத் தன்மையுடையதாகவும் உள்ளது. மனைவியின் பெயரோடு சேர்த்து கணவனின் பெயரையும் சொல்ல வேண்டியதில்லை. மனைவி தனக்கு வேண்டிய திறமைகளையும் பயிற்சியையும் தன் முயற்சியிலேயே கற்றுத் தெரிந்து கொள்கிறார். மனிதர்களின் எல்லா பலமும் பலவீனமும் தலித் பகுஜன்களிடத்திலும் உண்டு. ஒருவரை யொருவர் திட்டிக்கொள்வதும் ஒருவரை ஒருவர் அடித்துக் கொள்வதும் இங்கு உண்டு. மனைவியே இங்கும் அதிகமாக அடி வாங்குகிறாள். கணவனுக்கும் மனைவிக்குமான காதலுறவு வேலையைப் பகிர்ந்து கொள்வதன் அடிப்படையில் அமைகிறது. வேலையே உறவுக்கு அடிப்படையாக உள்ளது. திருமணம் பெற்றோர்களால் நிச்சயிக்கப் படுகிறது. குழந்தை மணமும் நடைமுறையில் உள்ளது. மணவிலக்கும், மறு திருமணமும் சமூகம் ஏற்றுக் கொண்டுள்ள நடைமுறையாகும். கணவன் மனைவி மணவிலக்குப் பெறும்போது அது தலித் பகுஜன்கள் மத்தியில் விவாதிக்கப்பட்டு முடிவுக்கு வருகிறது. இதில்சாதிப் பஞ்சாயத்து, கிராமப்பஞ்சாயத்து, பெண்கள் அமைப்பு போன்றவை கலந்து பேசித் தக்க முடிவை எடுக்கிறார்கள். கணவனோ, மனைவியோ யார் வேண்டுமானாலும் மணவிலக்கு கோரலாம். அதுவே நடைமுறை. இருவரும் இணைந்து வாழமுடியாத பட்சத்தில் மணவிலக்கு அளிக்கப்படுகிறது. இந்துக்களுக்குள்ள விதவைப் பிரச்சினை தலித் பகுஜன்களுக்கு இல்லை. தலித் பகுஜன்களின் குடியிருப்புகளில் நிலவும் சனநாயகம், செயல்படுகிற சனநாயமாகும்.

குழந்தைகளுக்கும் பெற்றோருக்குமான உறவு இந்துக் குடும்பங்களில் இருப்பதைவிட, தலித் பகுஜன் குடும்பங்களில் சனநாயகத் தன்மையுடையதாக உள்ளது. ஒரு மகனோ அல்லது மகளோ பெற்றோரை அம்மா, அப்பா என்று ஒருமையில் தான் வழக்கமான முறையில் அழைக்கிறார்கள். பெற்றோர்களுடன் தான் உண்ணுகிறார்கள்; பருகுகிறார்கள். மிகச்சிறிய அளவிலேயே தலித் குடியிருப்புகளில் படி நிலை ஏற்றத்தாழ்வுகள் அமைந்துள்ளன. நன்மை, தீமை, வெற்றி, தோல்வி அனைத்தும் குடும்பங்களில் விவாதிக்கப்படுகிறது. இந்துக் குடும்பங்களைக் காட்டிலும் திறந்த மனது இங்கே காணப்படுகிறது. பார்ப்பன அமைப்பின் விளைவாக அவர்களில் பெரும்பாலோர் கல்வியறிவற்றவர்களாக இருந்த போதிலும், அதன்விளைவாக அவர்களின் அறிவெல்லைகள் குறுக்கப்பட்டிருந்த போதிலும் தமக்குத் தெரிந்த உற்பத்தி அறிவை அவர்கள் எல்லோரும் பகிர்ந்து கொள்கின்றனர்.

அவர்களிடையே சமத்துவமும் சகோரத்துவமும் நிலவுகிறது. எல்லோரும் ஏழைகளாக இருப்பதால் அவர்கள் வீடு குடிசை வீடுகளாகவே இருக்கும். அங்கே ஒரு புறம் மாட மாளிகைகளும் மறுபுறம் குடிசைகளும் என்கிற நிலை இருக்காது. எல்லோரும் சாதாரண உணவு உண்டு, எளிமையான ஆடையணிந்து ஒற்றுமையோடு வாழ்வதால் போட்டி பொறாமைக்கு அங்கு இடமில்லை.

மனிதர்கள் இயல்பிலேயே சுயநலக்காரர்களாகவும் கொடுமைக் காரர்களாகவும் இருப்பதற்குக் காரணம் சமத்துவமின்மையே. சமத்துவமின்மை அதிகரிக்கும்போது சுயநலப் போக்கு மேலோங்குகிறது. சமத்துவம் நிலைநாட்டப்பட்ட சமூகங்களிலேயே சுயநலம் அழியும். முன்னாள் சோசலிச நாடுகள் சிலவற்றை இதற்கு உதாரணமாகச் சொல்லலாம். ஏற்றத்தாழ்வு ஒழிக்கப்பட்டு சமத்துவ சமுதாயம் ஏற்படுமானால் உலகம் நீடிக்காது, என்றொரு கோட்பாடும் இங்கே நமக்கெதிராக முன்வைக்கப்படுகிறது. மனிதன் சுயநலவாதியாக இருப்பது இயற்கை என்பது இன்னொரு கோட்பாடு. தலித் குடும்பங்களை நோக்கினால் இவை உண்மையல்ல என்பது விளங்கும். இங்கே தேவையற்ற போட்டி இல்லை. அது போலவே தானுண்டு, தன் சுகம் உண்டு என்று விலகியிருக்கும் போக்கும் நிலவாது. ஒருவனுக்கு மூன்று நாளைக்கு வேலை கிடைக்குமானால் அந்த வேலையை இன்னும் இரண்டுபேரைச் சேர்த்துக் கொண்டு ஒரே நாளில் முடித்துவிடுவான். இவ்வாறு செய்வதால் தனக்கு மீதமுள்ள இரண்டு நாள்களின் வேலை போய் விட்டதே என்று அவன் கவலைப்படுவதில்லை. தன்னோடு வாழும் இருவருக்கும் ஒரு நாள் வேலை கொடுத்தோமே என்று மகிழ்கிறான். மனிதநேயம் கலந்த சனநாயகம் இருப்பதால் தான் இது சாத்தியப்படுகிறது. இங்கே ஏழ்மையில் மனிதம் துளிர்க்கிறது. இந்தியச் சமூகத்திற்குத் தலித் பாரம்பரியம் அளிக்கக் கூடிய கொடை இதுவே ஆகும்.

இதற்கு நேர் எதிரான போக்கை இந்து பார்ப்பன பனியாக் குடும்பங்களில் காணலாம். அங்கே சுயநலம், கடுமையான போட்டி, சமத்துவமின்மை போன்றவை ஒவ்வொரு குடும்பத்திலும் காணப்படும். இது எதனால் ஏற்படுகிறதென்றால் இந்துக்கள் உற்பத்தி சாராதவர் களாகவும் உழைப்பின் எதிரிகளாகவும் இருப்பதால் இயல்பாகவே இந்துக்குடும்பம் என்பது மேலாதிக்கம் போட்டி இவற்றிலிருந்து மீளமுடியாது இருக்கிறது. அங்கே போட்டியே அதிக இன்பத்தையும் உயர்ந்த வாழ்க்கையையும் அமைத்துத் தருகிறது. அதனாலேயே சாதி இந்துக்களிடையே கூட சமத்துவம் பாராட்டப்படுவதில்லை. சுய நலத்திலும் ஏற்றத்தாழ்விலும் ஒய்யார வாழ்க்கை வாழும் அவர்களுக்கு

சமத்துவம் என்பதே இயல்பிற்கு முரண்பட்டது. சுயநலமே இயற்கை யானது என்ற கோட்பாடு இந்துமதத்தின் அடிப்படைத் தத்துவம். அதனால் தான் இந்து மதம் உள்ளார்ந்த ஆற்றலும் பலமுமிக்க ஒரு சமுதாயத்தை உருவாக்க முடியவில்லை.

மேல்சாதி அரசியல்அமைப்பு அடிப்படையில் சர்வாதிகார மானது. பார்ப்பனக் குடும்பங்களில் தொடங்குகிற சர்வாதிகாரம் சமுதாயம் முழுமைக்கும் பரவியிருக்கிறது. பார்ப்பனக் குடும்பங்களில் காணப்படும் சமூக அரசியல் ஆணாதிக்க அமைப்பே இந்திய சமுதாயம் முழுமைக்குமான அமைப்பாக எடுத்துக்காட்டப்படுகிறது. இதற்கு நேரெதிரான தலித் பகுஜன் குடும்ப அமைப்பு இருப்பதாகவே காட்டிக்கொள்வதில்லை. இதன் காரணமாக வெளிநாட்டு வரலாற்று ஆசிரியர்களும் சமூக விஞ்ஞானிகளும் பார்ப்பனியக் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டே இந்தியப் பண்பாட்டையும், வரலாற்றை யும் மதிப்பீடு செய்கிறார்கள். அவர்கள் பார்ப்பனக் கோட்பாடுதான் இந்திய மக்களின் கோட்பாடு என்ற முடிவுக்கு வந்து விடுகிறார்கள். அவர்கள் பார்ப்பனியத்தை அதற்கு எதிரான மதச்சார்பற்ற சனநாயகப் பண்புள்ள தலித்பகுஜன் கோட்பாட்டுடன் ஒப்பாய்வு செய்வதில்லை. அவ்வாறு தலித் பகுஜன் கலாச்சாரம் வரலாற்றில் பதிவு செய்யப் பட்டிருக்குமானால், இரண்டு கலாச்சாரங் களும் வரலாறுகளும் இருக்கின்றன என்று அன்னிய நாட்டவர் அறிந்திருப்பார்கள். ஆனால் இந்த உண்மை திட்டமிட்டே மறைக்கப் பட்டுவிட்டது.

இந்தியாவில் தலித் பகுஜன் சனநாயகமும் பார்ப்பன சர்வாதிகாரமும் இரண்டு முரண்பட்ட அம்சங்களாகச் சிவில் சமூகத்தில் வெளிப்படுகின்றன. பார்ப்பன அமைப்புகள் சமுதாயத்தையும் அரசியல் அதிகார அமைப்பையும் தன் ஆதிக்கத்திற்குள் கொண்டு வராதிருந்தால் தலித்பகுஜன் சனநாயக அமைப்புகள் மேலோங்கி உற்பத்தியை ஆதாரமாகக் கொண்ட ஒரு வலுவான சமூகத்தை உருவாக்கி யிருக்கலாம். இந்தியப் பொருளாதாரம் முற்றிலும் வேறுபட்ட திசையில் வளர்ந்திருக்கும். அதே நேரத்தில் காலனி ஆதிக்க ஆங்கிலேயே ஆட்சியினால் அமைப்புக்களைச் சிதைத்திருக்கவும் முடிந்திருக்காது. சிதைவிலிருந்து புதுப்பித்துக் கொள்ளும் அதன் ஆற்றலும் ஆயிரம் மடங்கு அதிகமாக இருந்திருக்கும். இந்த நாட்டின் சோக முடிவிற்கு இந்துமதமே காரணம்.

தலித் பகுஜன்களின் கலாச்சாரத்தையும் நாகரீகத்தையும் அழிக்க இந்துத்துவா எவ்வளவோ முறை முயன்றும் அதனால்

வெற்றி காண இயலவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. மகாத்மா ஜோதிபா பூலேயும், டாக்டர் அம்பேத்கர் அவர்களும் தலித் பகுஜன் நாகரீகத்திற்கும் கலாச்சாரத்திற்கும் உயர்ந்த சமூக அங்கீகாரம் கிடைப்பதற்காகக் கடுமையாகப் போராடினார்கள். 1990ல் மண்டல் போராட்டத்தின் போது தலித் பகுஜன்களின் மேலாண்மையை நிறுவ முயற்சி தொடங்கப் பட்டது. அது பல கேள்விகளை எழுப்பியது. சனநாயக சக்திகளும் (தலித் பகுஜன் மற்றும் சிறுபான்மையோர்) பார்ப்பன சர்வாதிகாரமும் எதிரெதிர் துருவங் களாகக் குவிந்து வருகின்றன. இந்த முரண்பாடே சமூகத்தைத் தலித் மயமாவது என்பதைத் தேசியத் திட்டத்தின் ஓரங்கமாக்கியுள்ளது.

## தலித் ஆண் பெண் உறவுகள்

தலித் பகுஜன்களின் ஆண் பெண் உறவுகள் இந்துச் சமூகத்தில் இருப்பதைவிட அதிக சனநாயகப் பண்பும் மனிதநேயமும் உடையவை. இவை பற்றி ஏற்கனவே நான் குறிப்பிட்டிருந்தாலும் மறுபடியும் அதைச் செய்வது அவசியமாகிறது. தந்தை வழிச் சமூக அமைப்பின் தாக்கம் தலித் குடியிருப்புக்களையும் எட்டியிருந்தபோதிலும் பெண்களுக்கும் பல உரிமைகள் வழங்கத்தக்கதாக தலித் சமூக அமைப்பு உள்ளது. தலித் பகுஜன்களிடம் சொத்துக் குவிப்பு இல்லை என்பதால் ஒவ்வொருவரும் குடும்பத்தின் பொது நன்மைக்கு உழைக்க வேண்டியுள்ளது. எனவே பெண்கள் தலித்பகுஜன்களின் உற்பத்தி சார்ந்த தொழிலமைப்பில் முக்கிய அங்கம் வகிக்கிறார்கள். அது மட்டுமின்றி பெண்கள், முக்கிய இயங்கு சக்தியாகத் திகழ்கிறார்கள். தலித் பகுஜன் சமூக அமைப்பிலுள்ளவர்கள் பெரும்பாலும் ஏழைகளாக இருப்பதால் குழந்தைகளும் வேலைக்குச் செல்ல வேண்டியுள்ளது. இது, மிகச் சிறந்த 'பணி அறம்' ஒன்றை அவர்கள் மத்தியில் உருவாக்கியுள்ளது. எப்படியிருப்பினும் தலித் பகுஜன்களின் சமுதாய நலம் கருதி அந்தக் குழந்தைகளுக்குக் கல்வியளிப்பது அவசியம். கல்வி வாழ்வின் ஒரு முக்கியமான அம்சமாக இருப்பதால் தலித் பகுஜன் ஆணும் பெண்ணும் கல்வி கற்க வேண்டியது முக்கியமாகும்.

தலித் பகுஜன் பெண்கள் கடின உழைப்பாளிகளாகவும் உழைப்பில் திறமையானவர்களாகவும் இருக்கிறார்கள். மண் பரி சோதனை, நடவு, ஆடுமாடு வளர்ப்பு, விதைகளைத் தேர்வு செய்தல் போன்ற பல வேலைகளை மிகத் திறமையாகச் செய்கிறார்கள். அவர்களிடம் ஏராளமான மருத்துவ அறிவு உண்டு. மேல் சாதிப் பெண்களிடம் இந்தத் திறமைகள் காணப்படுவதில்லை. பார்ப்பனிய

சமூகம் பெண்ணை வெறும் போகப் பொருளாக மட்டுமே வைத்திருக்கிறது. இந்துக் குடும்பங்களில் கடைப்பிடிக்கப்படும் தீட்டு முறை பெண்களுடைய ஆக்க சக்திகளை அழித்துவிடுகிறது. அந்த ஆக்க சக்தியைத் திரும்பப் பெற ஆவன செய்ய வேண்டும். தலித் பகுஜன் பெண்களின் அனுபவங்களை மற்ற சமூகப் பெண்களும் பின்பற்ற வேண்டும். அதே சமயத்தில் தலித் பகுஜன் ஆண்களும் உற்பத்தியில் ஆர்வமுள்ளவர்களாக இருப்பதால் அவர்களிடமும் இயற்கை அறிவு ஏராளம் உள்ளது. பயிர்கள், பிராணிகள், விதை, கருவிகள் போன்றவற்றில் அவர்களுடைய அறிவு இந்நாட்டின் விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்பத்திற்கு அவசியமானதாகும். அறிவு அமைப்புகளின் மையமாக விளங்குகிற இத்தகைய அடிப்படை அறிவு இல்லாமல், மேல்மட்ட அறிவு அமைப்பு வளர்ந்திருக்க முடியாது.

## எதிர்காலம்

வருங்கால இந்தியா, தலித் பகுஜன்களின் இந்தியாவாக இருக்கும். தலித்மயமாக்கும் திட்டத்தில் தலித் பகுஜன் தலைமை பெரும் பங்காற்ற வேண்டி உள்ளது. பலம் எது பலவீனம் எது என்று கண்டறிந்து செயல்பட வேண்டும். வரலாறு நெடுக தலித்பகுஜன்கள் துன்பங்களையே அனுபவித்து வந்துள்ளார்கள். நவீன சனநாயக சோசலிசப் புரட்சிகள் அவர்கள் விடுதலையைப் பெறுவதற்கான பலவாய்ப்புகளைக் காட்டியுள்ளன. தலித்துகள் விடுதலையடைவதன் மூலம் தான் மற்றவர்கள் அதாவது மேல்சாதியினரும் விடுதலையடைய முடியும் ஆனால் இந்தப் போராட்டம் துன்பமும் துயரமும் நிரம்பியதாகவே இருக்கும். நிகழ்ந்துள்ள இரண்டு வரலாற்றுப் போராட்டங்களிலிருந்து இது தெளிவாகத் தெரிகிறது. முதல் நிகழ்வு: 1990 ல் நடந்த மண்டல் போராட்டம். இரண்டாம் நிகழ்வு : 1993ன் உத்திரப் பிரதேசத் தேர்தல். 1990ல் நிர்வாகம் தலித் மயமாவதை ஆதிக்கசக்திகள் வன்முறையால் எதிர்த்தார்கள். மண்டல் குழுவின் ஒரு சில பரிந்துரைகளை நடைமுறைப் படுத்திய காரணத்திற்காக ஜனதா தள அரசைப் பார்ப்பன சக்திகள் கவிழ்த்தன. 1993ல் மாநில அளவில் தலித்பகுஜன் அரசு பதவியேற்றதும் உத்திரப் பிரதேச சட்டசபையைப் பார்ப்பன சக்திகள் ரத்தக்களறி ஆக்கின. 1993 டிசம்பர் 16ல் சட்டசபை கூடியதும் பார்ப்பன ஆதிக்க வெறியர்கள் தலித் பகுஜன் உறுப்பினர்கள் மீது செருப்புகளை வீச ஆரம்பித்தார்கள்; இதுவரை ராட்சதர்கள், மிலேச்சர்கள், திராவிடர்கள், சண்டாளர்கள் என்றெல்லாம் ஒதுக்கிவைக்கப்பட்டிருந்தவர்கள் ஆட்சிக்கு வந்து

விட்டார்களே என்ற ஆத்திரம் அவர்களை வெறி பிடித்தவர்களாக ஆக்கியது. ஆனால், தலித் பகுஜன் சக்திகள் இந்திய வரலாற்றில் முதன் முறையாக தமது நிலையில் உறுதியாக நின்று அதை எதிர்கொண்டார்கள். பார்ப்பனர்கள் தலித் பகுஜன் சக்தி என்றால் என்னவென்று சுவைத்தார்கள். செய்தித் தாள்களில் இவற்றை நாம் வாசித்தோம். இதுவே வருங்கால வரலாற்றுக்கு முன் மாதிரியாக அமைந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

குடிமைச்சமூகம், அரசு நிர்வாகம் என்பனவற்றைத் தலித் மயமாக்குவது அவ்வளவு எளிமையான காரியமல்ல. தலித் பகுஜன்கள் இவைகளைக் கூடுமான வரை அமைதியாகவே சாதிக்கவேண்டுமென்று நினைக்கிறார்கள். அவர்கள் என்றுமே வன்முறையை விரும்பியது இல்லை. ஆனால் நமது எதிரிகள் எப்போதும் வன்முறையோடு தான் வாழ்ந்து வந்துள்ளார்கள். இந்துத்துவத்தால் பாதிக்கப் பட்டவர்கள் என்கிற வகையில் மேல்சாதி பெண்கள் மீது தலித்பகுஜன்கள் அனுதாபம் கொண்டுள்ளனர். ஆனால் அவர்களோ சாதியமைப்பில் பார்ப் பனியத்தை உள்வாங்கிக் கொண்டவர் களாக இருக்கிறார்கள். எனவே பிரச்சினை சிக்கலாகிறது. பார்ப்பனப் பெண்ணுகளும்கூட தலித் பகுஜன்களை மற்றவர்களாகப் பார்க்கிறார்கள்.

எனினும் தலித் மயமாக்குவதை மேல்சாதி இல்லங்களில் புகுத்த வேண்டுமானால் இந்தப் பெண்கள் மூலம் அணுகுவதே சிறந்த வழியாகும். சமீபகாலப் பெண்ணிய இயக்கங்கள் தலித் பகுஜன் பிரச்சினைகளைக் கவனத்தில் எடுத்துக் கொள்கின்றன. பெண்களும் தலித்துகளும் பார்ப்பனிய அடக்குமுறைக்குப் பலியானவர்கள் என்கிற போது இந்து மேல்சாதிப் பெண்களும் தம்மீதான அடக்குமுறையைச் சிந்துத்துப் பார்க்கிறார்கள். அவர்களும் ஒடுக்கு முறைக்கு எதிராகத் திரள்கிறார்கள். படித்த தீவிர உணர்வுள்ள பெண்கள் தலித் மயமாதலின் அவசியத்தை உணர்கிறார்கள். பார்ப்பன மேலாதிக்க, ஆணாதிக்க உறவுகளை விட தலித் பகுஜன் ஆண் பெண் உறவுகளையே மேல்சாதிப் பெண்கள் அதிகமாக வரவேற்கிறார்கள். அவர்கள் மனைவியைக் கொலை செய்யவும் தயங்காத மேல்சாதி அரசியலைவிட விவாகரத்து, மறுமணம் போன்ற தலித் பகுஜன் கருத்துக்களையே விரும்புகிறார்கள். குடும்பம் என்பது நான்கு சுவர்களுக்குள் மறைவாக இருக்கவேண்டும் என்கிற மேல்சாதி ஆண்களின் விருப்பத்திற்கு மாறாக, குடும்பமென்பது ஆண் பெண் சமத்துவத்துடன் அடக்குமுறையற்ற சனநாயகத் தன்மையுடன் வெளிப்படையாக இருக்க வேண்டும் என்று படித்த பெண்கள் விரும்புகிறார்கள்.

இந்து ஆலயங்களைத் தலித் மயமாக்கவேண்டும் என்கிற கோரிக்கையும் எழுந்துள்ளது. இந்து சமூகத்தை சனநாயகப் படுத்துகிற விசயத்தில் இது பெரிய தாக்கங்களை ஏற்படுத்தி விடாது என்ற போதிலும் இந்தக் கோரிக்கை இன்று மேலெழுந்துள்ளது. இதைப் பார்ப்பன சக்திகள் பெருமளவு எதிர்த்து வருகிறார்கள். பார்ப்பனர்களை விரட்டிவிட்டு விட்டு இந்து ஆலயங்களைக் கைப்பற்ற வேண்டும். அங்கு தங்கம், வெள்ளிநகைகளும், நிலங்களும் ஏராளம் இருக்கின்றன. இந்தச் செல்வங்களைப் பறிமுதல் செய்யவேண்டும். அதே சமயம் பார்ப்பனக் கடவுள் வணக்கக் கலாச்சாரம் தலித் பகுஜன்களிடம் புகுந்து விடாமலும் பார்த்துக் கொள்ள வேண்டும். பார்ப்பனிய மயமாக்கப் பட்ட உணர்வுகளுடன் உள்ள தலித் பகுஜன்களிடம் பார்ப்பனியத்தின் ஆபத்தை எடுத்துக் கூற வேண்டும். உற்பத்தியை மையமாகக் கொண்ட தலித் பகுஜன் கலாச்சாரத்திற்கு எல்லாவற்றையும் அழித்தொழிக்கும் 'ஸ்வாஹா' கலாச்சாரத்திற்கு மேம்பட்டதாக முன்னுரிமை அளிக்க வேண்டும். ஆயிரக்கணக்கான கோயில்களைப் பள்ளித் தலங்களாக மாற்றி அங்கே மேல்சாதியினருக்குத் தலித் பகுஜன்களின் பண்பாட்டைப் பயிற்றுவிக்க வேண்டும்.

இதன் பொருள் அவர்கள் ஏற்கனவே கற்றுள்ள பலவற்றையும் மறக்க வேண்டும் என்பது தான். இந்தப்பணி புதிய சத்திரியர்களை விட பார்ப்பன- பனியாக்களிடம் கடினமாகயிருக்கும். நமது மற்றொரு பணி பார்ப்பன பனியாக்களை நகர்ப்புறத்திலோ கிராமப்புறத்திலோ உற்பத்தி சார்ந்த தொழிலில் ஈடுபடுத்துதல் ஆகும். இதை மேல்சாதி ஆண் பெண் அனைவரும் தங்கள் முழு ஆற்றலையும் கொண்டு எதிர்ப்பார்கள். என்ன செய்வது, மனிதர்களிடம் இயல்பாகக் காணப்படும் பல நல்ல குணங்களை பார்ப்பனீயம் அழித்தொழித்து விட்டது. அதனால் அவர்கள் எளிதில் வளைந்து கொடுக்க மாட்டார்கள். காலனியத் துக்குப் பிந்திய இந்தியாவில் அவர்களின் ஆற்றல், கல்வி, வேலை வாய்ப்பு, உற்பத்தி என்று பலதுறைகளையும் தங்கள் நலனுக்கு ஏற்றாற்போல் தகவமைப்பதில் செலவிடப்படுகின்றன. உற்பத்தி சார்ந்த தொழில் இழிவானது, உற்பத்தியில் ஈடுபட்டுள்ள சாதிகள் கீழானவர்கள் என்கிற கருத்து அவர்கள் சிந்தனையை நஞ்சாக்கி விட்டது. உலகில் உள்ள எந்த ஆளும் வர்க்கமும் இந்திய பார்ப்பனியச் சாதிகளைப் போல மனிதத் தன்மையற்றதாக இல்லை. அவர்களை உற்பத்தி சார்ந்த தொழில்களில் தள்ளி அவர்களுடைய கவனத்தை ஆலயம், அதிகாரம், அலுவலகம் போன்றவற்றிலிருந்து திசை திருப்புவதன் மூலம் அவர்களிடம் மனிதத்தன்மையை மீளுருவாக்கம் செய்யவேண்டும்.

இவ்வகையில் புதிய சத்திரியர்கள் சற்றுச் சாதகமான நிலையில் இருக்கிறார்கள். அவர்களது வேர்கள் இன்னும் உற்பத்தி வேலைகளிலேயே உள்ளன. எனினும் அரசியலில் மேல்நிலைக்குப் போய்க் கொண்டிருப்பதன் விளைவாக மேலும் மேலும் அவர்கள் உற்பத்தி உறவுகளிலும் கூட பார்ப்பனிய மயமாகிக் கொண்டிருக்கிறார்கள். சமூக அரசியல் ரீதியாக அவர்களை முதலில் நடுநிலைப்படுத்திப் பின்னர் தலித் மயமாக்க வேண்டும். பார்ப்பன பனியாக்களைவிட அவர்களை எளிதில் மாற்றிவிடலாம். ஏனெனில் புதிய சத்திரியர்களின் சமூக அரசியல் வேர்கள் தலித் பகுஜன் கலாச்சாரத்திலேயே உள்ளன.

ஒன்றை நாம் நினைவில் கொள்ளவேண்டும். எப்படியிருந்த போதும் இந்தியாவில் சாதி எதிர்ப்புப் புரட்சி என்பது சீனாவில் நடந்த கலாச்சாரப் புரட்சியை விட அதிக சிக்கலானதாக இருக்கும். உற்பத்தி சார்ந்த உடலுழைப்பான வேலையைச் செய்யச் சொல்லும் போது பார்ப்பனர்கள் அதைப் பலமாக எதிர்ப்பார்கள். தங்கள் கூரைகளின் மீது ஏறி நின்று' அறிவாளிகள்' மீது இழைக்கப்படும் கொடுமைகள் அதிகரித்துக் கொண்டே போகிறதென்று கூச்சல் போடுவார்கள்.

'இந்தியாவில் வசிக்காத இந்தியர்கள்' எனப்படும் அயல்நாடுகளில் வாழும் இந்தியர்களில் பெரும்பாலானவர்கள் மேல் சாதியினரே. அவர்கள் பங்குவகிக்கும் பின்னை-முதலாளித்துவச் சந்தை அவர்களைச் சாதி நீக்கம் செய்யவில்லை. அவர்கள் சாதியைத் துறக்கவில்லை. அவர்கள் இந்தியாவிற்கு வெளியிலிருந்து கொண்டு இந்துத்துவத்திற்கு ஆதரவாகச் செயல்படுவதிலிருந்து இது வெளிப்படுகிறது. இவர்கள் இந்துத்துவ அமைப்புகளுக்குப் பெருமளவு நிதியுதவி செய்கிறார்கள். டில்லியிலிருக்கிற 'படித்த அறிவு ஜீவிகள்' இந்துத்துவாவிற்கு ஆதரவாக இருப்பதும், உத்திரப்பிரதேசத்தில் உள்ள படிக்காத தலித்பகுஜன் மக்கள் பகுஜன் சமாஜ் கட்சியையும் சமாஜ் வாடிக் கட்சியையும் ஆதரிப்பதும் எதிர்கால அரசியல் போக்கின் திசை வழியைச் சொல்கின்றன.

ஆகையால் தலித் பகுஜன் இயக்கங்கள் இந்த நவீன பார்ப்பனப் படிப்பாளிகளது தலித் பகுஜன்களுக்கு எதிரான நடவடிக்கைகளை உன்னிப்பாகக் கண்காணித்து அவர்கள் வெற்றி பெறாதவாறு முறியடிக்க வேண்டும். தலித் மயமாக்கும் முயற்சிக்கு எதிராக சர்வதேச மையங்களில் இவர்கள் பெருமளவில் குரல் எழுப்பப் போகிறார்கள். எனவே உயிர்ச் சேதமில்லாத ஒரு கலாச்சாரப் புரட்சியை மனதில் கொண்டு நாம் செயல்பட வேண்டும். தலித் மயமாக்குதல் என்பது மிகவும் திறமையாகவும் நுட்பமாகவும் ஆராய்ந்து

செய்ய வேண்டிய வேலை. பார்ப்பனப் படிப்பாளிகள் தேசியம், நவீனத்துவம், மதச்சார்பின்மை மற்றும் ஜனநாயகம் என்கிற பெயரால் உருவாக்கியக் கோட்பாடுகளில் எல்லாம் பார்ப்பனிய இந்துத்துவ முத்திரை குத்தப்பட்டிருப்பதைக் காணலாம். விடுதலைப் போராட்டக் காலத்திலும், விடுதலைக்குப் பின்னும் தோன்றிய பார்ப்பனிய இலக்கியங்களைக் கட்டவிழ்த்துக் காட்ட, தலித் பகுஜன் இயக்கங்கள் போதுமான தலித் அறிஞர்களையும் திறனாய்வாளர்களையும் உருவாக்கவில்லை. சமூகத்தை இந்து நீக்கம் செய்து தலித் மயமாக்க வேண்டுமானால் இதுவரை பார்ப்பன படிப்பாளிகள் பார்ப்பன அரசியல்வாதிகள், பார்ப்பன எழுத்தாளர்கள், பார்ப்பன விமர்சகர்கள், பார்ப்பன வரலாற்றாசிரியர்கள் ஆகியோரால் எழுதப்பட்ட ஒவ்வொரு சொல்லையும் ஒவ்வொரு வாக்கியத்தையும் முழுமையாக மறு பரிசீலனை செய்யவேண்டும்.

இது அவ்வளவு எளிதான வேலை இல்லை. அதிகாரத்தைக் கைப் பற்றுவது கூட எளிது. ஆனால் தலித்மயமாக்குவதைத் தீவிரப்படுத்தா விட்டால் கைப்பற்றப்பட்ட அரசியலதிகாரத்தைத் தக்க வைத்துக் கொள்வது முடியாததாகி விடும். சம்புக ராஜ்ஜியத்தின் தோல்வியும் இராவண ராஜ்ஜியத்தின் தோல்வியும் புராதன கால நிகழ்ச்சி என்றால் தமிழகத்தில் திராவிடக் கட்சியின் அரசியலதிகாரம் ஒரு பார்ப்பனப் பெண்ணின் கைக்கு மாறியது சமீபகாலச் சான்றாகும். தமிழகத்தின் ஆட்சியைப் பார்ப்பன ஆண்கள் கைப்பற்றும் காலம் வெகுதூரத்தில் இல்லை.

கடந்த கால நிகழ்ச்சிகளை வரலாறாக்குவதற்கும், எதிர் காலத்தை நம்முடையதாக ஆக்குவதற்கும் உயிர்ப்பு மிக்க தலித் பகுஜன் ஆண்களும் பெண்களும் அடங்கிய அறிஞர்கள் படை ஒன்றை நிறுவ வேண்டும். அரசியல் பொருளாதார சமூக உறவுகளை மாற்றியமைக்க தலித் பகுஜன் அறிஞர்கள் நீண்டகாலம் உழைக்க வேண்டியிருக்கும். சமூக அரசியல் புலத்தைப் போலவே அறிவுப் பலமும் இன்று கொடுந்தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டு இருக்கின்ற தென்றால், அதற்கு பார்ப்பன அறிவுஜீவிகள் தலித் பகுஜன் அறிஞர்களின் புதிய கருத்துக்களை ஏற்க மறுப்பதே காரணமாகும். ஒவ்வொன்றும் இன்று தலைகீழாகக் காட்டப்படுகிறது. நாம் ஒன்றைச் சொன்னால் அதை அவர்கள் தங்களுக்குச் சாதகமான முறையிலேயே புரிந்து கொள்கிறார்கள். நாம் அவர்களிடம் எந்தக் கேள்வியையும் கேட்காதிருந்த போது அவர்கள் நமக்கு 'உண்மைகளை' உபதேசித்துக் கொண்டிருந்தார்கள். இப்போது நாம் கேள்வி கேட்கத் துவங்கியவுடன் அவர்கள் நேரான பதில்கூற முடியாமல் எதிர்க்கேள்வி

கேட்கிறார்கள். அவர்கள் நம்முடைய குறுக்கீடுகளையும், கருத்துக் களையும், நேர்மையையும் திறமையையும் போராடும் குணங்களையும் மதிப்பதில்லை. நமது நேர்மையை அவர்கள் சந்தேகிக்கிறார்கள். அவர்கள் தவறாக இருக்கலாம் என நாம் சுட்டிக் காட்டும் போது சந்தேகமே அவர்களது கொள்கையாகிறது. நமது நியாயங்களை அவர்கள் ஏற்றுக் கொள்வதில்லை.

இப்போது எங்கள் முறை, நாங்கள் அறிவிக்கிறோம்: அவர்களைச் சந்தேகிப்பதே எங்கள் கருத்தியலின் முக்கியக் கொள்கை. அதன்பிறகு அவர்கள் கேள்விகேட்பதை நிறுத்தி விடுவார்கள். அவர்கள் ஒரு முனையிலிருந்து வந்தால் நாம் மறுமுனையிலிருந்து தொடங்குவோம். பார்ப்பன அக்கிரகாரங்கள் அவர்களின் லட்சியத்தைப் பிரதிபலிக்கிறது என்றால் தலித் சேரிகள் நமது லட்சியத்தைப் பிரதிபலிக்கட்டும். அவர்கள் வீட்டின் மாடி களிலிருந்து (அவர்களுக்குப் பெரிய பெரிய மாளிகைகள் உண்டு) "இந்தியாவை இந்து மயமாக்குங்கள்" என்று குரல் கொடுத்தால் நாம், கள் இறக்கும் பனை மர உச்சிகளிலிருந்தும் வயல்களிலிருந்தும், மரக்கிளைகளிலிருந்தும் குரல் கொடுப் போம்: "இந்தியாவை தலித் மயமாக்குவோம்". சத்தம் போட்டுச் சொல்லுவோம். "நாங்கள் இந்துத்துவத்தை வெறுக்கிறோம். நாங்கள் பார்ப்பனீயத்தை வெறுக்கிறோம், எல்லாவற்றையும் விட அதிகமாக எங்கள் பண்பாட்டை நேசிக்கிறோம். நாங்கள் எங்களை நேசிக்கிறோம்."

நம்மை நாமே நேசிப்பதன் மூலம் தான், நமது பண்பாட்டைப் பற்றி நாம் பெருமைப்படுகிற போதுதான், நாம் எதிர்காலத்தில் சிறந்த வாழ்வு வாழ முடியும். ●

வாழும் தலித்திய சிந்தனையாளர்களில் முக்கியமானவர் காஞ்சா அய்லய்யா. தமது பிறப்பே இந்து மதத்திற்குள் நிகழவில்லை என அறிவிக்கும் அய்லய்யா தற்போது உஸ்மானியா பல்கலைக்கழகத்தில் அரசியல் அறிவியல் துறையின் பேராசிரியர். மிகவும் பிற்படுத்தப்பட்ட ஆந்திர குடும்பம் ஒன்றில் பிறந்தவர். இவர் தமது அனுபவங்கள், விரிவான கல்வி ஆகியவற்றின் துணை கொண்டு இந்துத்துவத்தின் அரசியலைக் கட்டவிழ்க்கிறார். இந்தியாவை இந்து மயமாக்குவோம் என்று இந்துத்துவ சக்திகள் உரக்கக் கூவுகையில் இந்தியச் சமூகம் சனநாயகம் அடைவதற்கான ஒரே வழி இந்தியாவைத் தலித் மயமாக்குவதே என ஆதாரப்பூர்வமாக நிறுவுகிறார். காத்திரமான விடயங்களைப் பேசும் இந்நூலின் சிறப்பு, யாரும் புரிந்துக் கொள்ளக்கூடிய எளிமை.

தொடர்ந்து ஒடுக்கப்படும் மக்களின் அரசியல், பண்பாட்டுக் கூறுகளைப் பதிப்பிக்கும் *அடையாளம்*, தனது மூன்றாம் வெளியீடாய் இந்நூலை அ. மார்க்ஸின் ஆய்வுரையோடு உங்கள் முன் வைக்கிறது.

ISBN 81 7720 002 X

